உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைத்திருவாயிரம்.

முருகதாச சுவாமிகளென்றும்

திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்

விளங்குகின்ற

ஸ்ரீமத் தண்டபாணிசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

வளவனூர்க் குமாரபுரிமடாலயம்

ஸ்ரீமத் சண்முக சுவாமிகளது

விருப்பமும்,

ஷெயூர் வாசம் பொய்கைப்பாக்கம்

அப்பாசாமி யுபாத்தியாய ரவர்கள்

முதலான சிலர் வேண்டுகோளும்

நிமித்தமாகக்கொண்டு

சென்னை:

ஊ. புஷ்பரதசெட்டியாரவர்களது

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சருவதாரிஸு பங்குனிமீ

ரிஜிஸ்த்தர் செய்திருக்கின்றது.

உ

சிவமயம்.

அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டுவோர் வளவனூர்க் குமாரபுரி மடாலயத்தும், ஷை யூர் அப்பாசாமி யுபாத்தியாய ரவர்களிடத்தும், புத்தக மொன்றுக்கு ரூபா ஐந்து கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். இந்நூலி னருமை யுணர்ந்தாருக்கு இந்த விலை யொரு பெரிதாகத் தோற்றமாட்டாது.

இதனாற் சேகரமாகும் பொருளைத் திருவாமாத்தூ ரென்னும் புராதனசிவக்ஷேத்திரத்திற் பிரதிஷ்டைசெய்ய உத்தேசித்திருக்கு மடாலயத்திற் குபயோகப்படுத்தப் படும்.

உ

திருவருள்வாழ்க.

சாத்துகவிகள்.

வளவனூர்க் குமாரபுரிமடாலயத்தி லெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீமத் சண்முகசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியன.

வெண்டளைக்கலிப்பா.

அம்பொற்சபையாற்கடற்றண்டபாணிநுவல்
செம்பொற்பார்தில்லைத்திருவாயிரப்பனுவற் [பார்
கொம்பொற்றையானனையார்கொன்றைமலர்த்தாரிதென்
தெம்பொற்றுமாணவநோய்ச்சிற்றறிஞர்தேர்வரிதே.

இரட்டையாசிரியவிருத்தம்.

ஓதியுணர்தற்கரியபரஞானவெளியிலரு
ளுமையம்மைகாணநின்றே
யுண்மையறிவானந்தவடிவாய்ச்சிருட்டிமுத
லோரைந்துதொழினடாத்தற்
காதிநடவேந்தமற்றொளிர்நடனமென்றுஞ்செ
யாடகசபேசனுக்கா
மாயிரங்கவிபாடியவன்முதற்குலவுமூ
வாயிரர்முனுரைசெய்திட்டா
னீதியுடனருள்கொண்டநிகமாகமங்களின்மெய்
நிலையுணர்ந்துயிர்கண்மீது
நேயமுறுவிரதமேதலையாமெனக்கண்டு
நெஞ்சிற்றரித்துமுற்றும்
பூதியணிகோலமுதலாயதிருவேடம்
புனைந்துமெய்யடியர்பாதப்
பூந்துகள்சுமந்துதவமுயலுந்திருப்புகழ்ப்
புனிதனெனுமொருபுலவனே.

சிவமயம்.

சோழவந்தானூர்க் கிண்ணிமங்கலமடம்

அருளானந்தசுவாமிகளாதீனம்

ஸ்ரீமத் கந்தசாமிசுவாமிகள்

அருளிச்செய்தன.

கழிப்பு.

தனத்தனதாந்தய்யத் தனனாதனனா.

அடத்தகைதோய்ந்தெள்ளப் புகுதீயவர்மே
லழற்றிரள்போன்றைதிற் சுடுபான்மையதே
நடத்தரசாந்தெய்வச் சபைநாயகனார்
நலத்தமிழீர்ஞ்சைவர்க் கமுதாகுவதே
குடத்தயனண்டெல்லிற் றருமாதவனோர்
குருத்துவர்கூண்டுள்ளிப் பகர்பீடுளதே
திடத்தருளோங்குள்ளத் தினர்தாயெனவாழ்
திருப்புகழோன்றில்லைத் திருவாயிரமே.

நேரிசைவெண்பா.

தவங்காக்கும்பொல்லாத்தருக்கேகமுதலா
மவம்போக்குஞ்சித்திமுத்தியாக்குஞ் - சிவஞ்சேர்
மருவாய்ந்தநெல்லைநகர்வாழ்வனையான்றில்லைத்
திருவாயிரத்தின்செயல்.

சிவமயம்.

திருவாவடுதுறையாதீனந் திருவாமாத்தூர்வாசம்

ஸ்ரீமத் சுப்பிரமணியத்தம்பிரான்சுவாமிக ளியற்றிய

நேரிசையாசிரியப்பா.

திருவளர்கமலமருமலர்ப்பொகுட்டிற்
செங்காலன்னமங்காப்பேட்டைச்
சிறைகொடுதழீஇமறைவறவிருத்த
றிசைமுகனவின்செல்வியைமணந்து
செந்தீவளர்க்குஞ்சிறப்பினைக்காட்டு
மல்லற்றடாகமருங்கெலாமொளிருங்

தில்லைப்பதியிற்றிருநடம்புரிந்தெம்
மூனமதகற்றுஞானசபேசன்
றஞ்சமென்றோர்க்குத்தண்ணருள்கொடுக்குங்
குஞ்சிதபதத்திற்குளிர்தாமமதாய்த்
தில்லைத்திருவாயிரமென்றுரைக்கு
மெல்லையிலிசைப்பாமாலையேற்றினன்
செந்தாமரைவாழ்செழுந்தகைத்திருவும்
வெண்டாமரையைவிரும்பியவனமுங்
கழுமலத்திறைவன்கழறியமொழிச்சீர்
பழுதுபடாதிருபயன்களும்பயக்குந்
திருநெல்வேலியெனுந்திருப்பதியிற்
கங்கைதன்மரபாங்காராளர்குலத்திற்
றகவுறத்தோன்றித்தமிழுணர்தவத்தோன்
குறப்பாவைமணந்தகுமரக்கடவுளை
யறத்தாதையாமென்றடிமைபூண்டொழுகுவோ
ருவினன்குடியருணையாதிகளிற்
பாவினமனந்தம்பரிவுடன்பகர்ந்தோன்
சிரங்கரம்பலதோய்திருமாலவற்கு
மரங்கத்திருவாயிரமுதலறைந்தோன்
சேலமண்டபத்திற்சிரத்தின்மேல்விழவரு
சிலையினைத்தவிர்த்ததோர்தெய்வத்துணையோன்
கருப்புகழ்தோற்றுத்திருப்புகழ்முனிவன்
கொண்டலைநிகர்க்குந்தண்டபாணியன்
பெருகருட்டிறத்தொருமுருகதாசனே.

சிவமயம்.

வளவனூர்க் குமாரபுரியில் வசிக்கும்

பொய்கைப்பாக்கம்

அப்பாசாமியுபாத்தியாயரவர்கள்

இயற்றியன.

அறுசீர்விருத்தம்.

இப்படியோர் செய்தவமோ மெய்யடியார் பெருந் தவமோ விசையார் வண்ணஞ், செப்பவல்லா ரருந்தவ மோ முத்தமிழால் வினைதவமோ திரண்டு நெல்லை, யெய்

ப்பருநன் னலம்பொருந்தத் திருப்புகழோ னெனத்தோன்றி யீச னன்பா, மெய்ப்பயனல் கிடுந்தில்லைத் திருவாயிரப்பனுவல் விளம்பிற் றன்றே.

நேரிசைவெண்பா.

நெல்லைத்திருப்புகழோனீடருணைக்கிள்ளையென்னுஞ்
சொல்லைத்தெரிக்குஞ்சுவையார்ந்த - தில்லைத்
திருவாயிரத்தைத்தெரிசித்தோர்தாமு
மருவார்பிறவியினில்வந்து.

சிவமயம்.

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்க

ளியற்றியது.

தனனதன தானதன தனனதன தானதன
தனனதன தானதன—தனதான.

அரியசிவ காமியிரு விழிகண்மிக வேமகிழ
வரிமுதலி னோர்பரவு புலியூர்வா
யணிநடமெ நாளுநவி லரன்மகிமை யேநிகழு
மதிமதுர மேவுமொரு பதுநூறும்
விரிகவிக ளாயிதழி நிகர்பனுவ லாமதனை
வியனறிவு ளார்பயில வருள்வோராம்
விறலருணை மேவியொரு கிளியெனமு ளில்வளர்
விரகினர்நெல் வேலிவரு புகழ்தோய்வார்
தெரிவருள்வி பூதியொளி யிலகவரு வாரமரர்
செயமுதவு மாமணிகொள் வடமோடே
திகழவணி காவியினர் சிகையவிழு மாவிரதர்
சிறியநகை காணவருள் பொழிநீரார்
திரியுமணு நேருடல்கொ ளுயிர்களையு மீனியதொர்
செழுமகவெ னுமகிழு நிலையோவார்
செறியுலக மேன்மைபெற வருளதனை நாடிமுயல்
சிவமுருக தாசரடி பணிவேனே.

சிவமயம்.

அஷ்டாவதானம்.

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

மாணாக்கர்

வல்லை - சண்முகசுந்தரமுதலியாரவர்க ளியற்றியது.

தந்ததான தனதன தனதன—தனதானா.

மஞ்சுலாவுபொழிலுறுபுலிசையி லருளாலே
மன்றமாடுமொருபரசிவனிரு பதமீதே
விஞ்சுசீர்மைபெறுதமிழினிலொரு பதுநூறாய்
விண்டபாடலிவணடியவருய வருள்வானே
செஞ்சொலோதுநயமுணர்புலவர்க ளுயிர்போல்வாய்
திண்கைவேலனணிதருகிளியென முனமானாய்
தஞ்சமாகுமெனவுனதடிதொழு மெனையாள்வாய்
தண்டபாணிமுனிவரனெனவளர் பெரியோனே.

சிவமயம்.

அஷ்டாவதானம்.

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

மாணாக்கர்

காஞ்சி - நாகலிங்கமுதலியார் இயற்றியது.

நேரிசைவெண்பா.

தண்டபாணிச்சிம்புள்சாற்றுந்திருப்புகழ்போற்
கண்டவராார்காசினிற்காட்டுவீ - ரண்டர்புகழ்
தில்லைத்திருவாயிரத்திற்றிகழ்வதுபோ
லில்லையுலகத்திலெங்குமே.

சிவமயம்.

அரன்வாயல்
அப்புப்பிள்ளையவர்கள் குமாரர்
தங்கவேலுப்பிள்ளையவர்கள்
இயற்றியது.

தனனதனதான தனனதனதான
தனனதனதான—தனதான.

விதியரிசுராதிபதியிவர்பராவ
மிளிர்கயிலையான புலியூர்வாய்
வியனருள்விலாசகனகசபைமேவி
விமலசிவகாமி மகிழ்வாலே

துதியினொடுகோணநடனமிடுநாதர்
துகளில்இருபாத மலர்மீதே
தொடையொர்பதுநூறுகவிகொடுசெய்தாய்பல்
சுபமுறுநெல்வேலி நகர்வாழ்வாய்

பொதியமுனியோதும்விதிவழிசெல்சீர்கொள்
புலவரவைசூழு மரியேறே
புனிதமுழுநீறுமணிவடமுமீடில்
பொலிவுறுகலாடை யொடுதோய்வாய்

திதியதிபனுணவுயிர்பலவும்வாழ்வு
செறியும்வகைநாளு நினைவானே
திருமுருகதாசகுரவமறவாது
தினமுன்வழிபாடு புரிவானே.

சிவமயம்.

திருமழிசை
கந்சாமிமுதலியாரவர்கள் குமாரரும்
சொர்க்கபுரம்
இராமலிங்கத்தம்பிரான்சுவாமிகள்
மாணுக்கருமாகிய

வடிவேலுமுதலியாரவர்கள்

இயற்றியது.

தந்ததான தய்யத்தன தானன
தந்ததான தய்யத்தன தானன
தந்ததான தய்யத்தன தானன—தனதான.

சந்தநீடுநெல்லைப்பதிமேவிய
வெந்தைமோகவல்லைத்துகள்காணுறு
சங்கராளுமுய்யத்திருமேனிய துறுவோனே

பந்தபாசவல்லற்பெறுமானிடர்
தங்களாசையெவ்வத்திரைமாகடல்
பங்கமாகவுள்ளத்தெணியாரருள் புரிகோவே

யிந்தநாளிலெள்ளத்தனையேனுமு
ளன்பிலாதபொய்யர்க்குமுளார்வம
தெங்குமாகநல்லற்புதமாமிசை மொழிவோனே

தந்தசீர்கொடில்லைத்திருவாயிர
மென்றமாலையுள்ளற்பொடுபாடிய
தண்டபாணிவள்ளற்றிறமேதென நவில்வேனே.

சிவமயம்.

ஆயுள்வேதியர்

ஆலந்தூர்

முத்துசாமிமுதலியாரவர்களாலியற்றியது.

சந்தவிருத்தம்.

தனனதான தய்யத்தனதானன தனதானா.

கருணைஞானமுள்ளத்தினிலாரகி கரிலாதே
மருவிநீடுகல்வித்திறனுயுளின் வளமோடே
பெருகுபோகமெய்திப்பெரிதாமிசை பெறுவாரான்
முருகதாசர்தில்லைத்திருவாயிர மொழிவோரே.

சிவமயம்.

அட்டவணை.

பக்கம்.		பாட்டு.
௧	காப்புமூர்த்திபஞ்சகம்.	௫
௩	திருச்சிற்றம்பலவெண்பாமாலை	௨௫
௬	ஆனந்தத்தாண்டவமாலை	௫௧
௰௩	திருநடனமாலை	௨௫
௰௬	வெண்பாவந்தாதி	௱
௨௮	கட்டளைக்கலித்துறையந்தாதி	௱
௪௨	பதிற்றுப்பத்தந்தாதி	௱
௫௭	அலங்காரபஞ்சகம்	௱
௮௫	கோயிற்பத்து	௰
௮௭	திருநீற்றுப்பத்து	௰
௮௮	கண்டிகைப்பத்து	௰
௯௰	பஞ்சாட்சரப்பத்து	௰
௯௧	கல்லாடைப்பத்து	௰
௯௩	கோளறுபத்து	௰
௯௪	ஐயமறுத்தபத்து	௰
௯௬	பொருள்வாதனைதீர்த்தபத்து	௰
௮௮	காமவாரிகடந்தபத்து	௰
௱	மண்மயல்களைந்தபத்து	௰
௱௨	கலிவாதனையற்றபத்து	௰
௱௩	அருள்வாக்குப்பத்து	௰
௱௫	பசுவினம்வாழ்கைப்பத்து	௰
௱௬	அந்தணர்வாழ்கைப்பத்து	௰
௱௮	மாதவர்வாழ்கைப்பத்து	௰
௱௯	அட்டமாசித்திப்பத்து	௰
௱௰௨	திருவிளையாட்டுப்பத்து	௰

௱௰௪	அருட்சத்திப்பத்து	௰
௱௰௬	நெஞ்சநிலைத்தபத்து	௰
௱௰௭	பிறவியிகழ்ந்தபத்து	௰
௱௰௯	பொன்வண்டுப்பத்து	௰
௱௨௰	கிளிப்பத்து	௰
௱௨௨	நாகணைவாய்ப்பத்து	௰
௱௨௩	அன்னப்பத்து	௰
௱௨௫	குயிற்பத்து	௰
௱௨௭	திரிவுமஞ்சரி	௨௫
௱௩௰	யமகமஞ்சரி	௨௫
௱௩௩	சிலேடைப்பத்து	௰
௱௩௫	அம்மானைப்பத்து	௰
௱௩௬	உந்திப்பத்து	௰
௱௩௭	குரவைப்பத்து	௰
௱௩௯	உண்மைப்பத்து	௰
௱௪௧	திருப்புகழ்	௱௨௫
௨௨௯	வகுப்பு	௨௫
	வண்ணவிருத்தம்	௧
	அநுபூதியுண்மைவெண்பா	௧

ஆக கவி - ௲௮.



ಸು. ಪ. ವೆಂಕಟಪ್ಪರಾಯರು

சிவமயம்.

தில்லைத்திருவாயிரம்.

காப்பு.

மூர்த்திபஞ்சகம்.

ஸ்ரீ நடேசர் துதி.

நேரிசைவெண்பா.

பொன்னம் பலவாநின் போதமுமென் புன்மதியு
முன்ன மறியவொரு முத்தனெதிர் - சொன்னபடி
யாயிரம் பாட லறைந்தபின்ன ரானலு
நீயிரங்க வேண்டு நினைத்து. (க)

சிவகாமியம்மன் றுதி.

கட்டளைக்கலித்துறை.

செந்தா மரைக்கண் ணிடந்தணிந்தாற்குத் திகிரியொன்று
தந்தாடுந் தில்லைப் பிரான்றனக்காயிரந் தண்டமிழ்ப்பாட்
டந்தாரணிய றியப்பகர் வேனுக் கருள்புரிவாய்
சந்தா கரக்கொங்கை தோய்சிவகாம சவுந்தரியே. (உ)

விநாயகர் துதி.

வெண்டளைக்கலிப்பா.

குன்றை வளைத்துக் கொடியார் புரமெரித்து
மன்றை யிடமாக்கும் வள்ளலருள் வாழ்த்தருள்வா
யென்றை யரவா லிறுக்குமக டேந்தியெழிற்
கொன்றை மலர்சூடிக் கூத்தாடுங் குஞ்சரமே. (௩)

முருகர்துதி.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பொய்ச்சமய மெய்ச்சமய மெனுமிரண்டும் போற்றிசைப்பப்
பொதுவி லாடும்
பிச்சரொன்சொற் றுடைக்காசை பெரிதடைந்த வாறுணர்ந்து
பேச லுற்றே
ணெச்சமில்பே ரானந்தத் தினருமகிழ் வுறத்தகுஞ்சீ
ரிசையச் செய்வாய்
நிச்சலுமென் மனத்தைவிட்டு நீங்காது விளையாடு
நிமல வேளே. (௪)

அடியார்துதி.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மண்ணினுற்செயு மிலிங்கமேற் றுதைதாள் வைத்தலு மதைக்கூறு
பண்ணினுன்முதற் பற்பல தொண்டர்தம் பதத்துகள் புனைகின்றே
ணெண்ணி லாமறைக் குலங்களுந் துதிசெயு மியல்புடைத் தெனுஞான
விண்ணி லாடிய பரமனைத் தமிழ்கொடு விளம்புபே றுறுமாறே. (௫)

முற்றிற்று.

உ

சிவமயம்.

தில்லைத்திருவாயிரம்.

நூல்.

திருச்சிற்றம்பலவெண்பாமாலை.

தெய்வப்புலமைத்திருவாழ்வைச்சிந்தைசெய்யுஞ்
சைவப்புனிதருள்ளிற்றங்குவது - மெய்வளமை
நீடுமறையாகமங்கணேராயநூல்பலவும்
பாடுதிருச்சிற்றம்பலம். (க)

தூயவுலகோருந்தொண்டரெனப்போற்றிசைத்தற்
காயபெருமையளித்தாளுமே - போயபின்னு
மற்றுமொருதாய்வயிற்றில்வாராதமாதவத்தோர்
பற்றுதிருச்சிற்றம்பலம். (உ)

பொய்வீடுவேட்டுப்புலையாடிப்பூரியராய்
கைவீணர்தங்கொடுங்கண்காண்பரிதே - மெய்வீட்டின்
மன்னுபுகழ்ச்சீர்குலவுவாதவூரான்முதலோர்
பன்னுதிருச்சிற்றம்பலம். (ங)

சித்தருக்குமுத்தருக்குந்தெண்டனிட்டுச்சிந்திக்கும்
பத்தருக்குமொன்றாயபற்றுக்கோல் - சத்தம்
விரவுதலமாமென்னமிக்கோருணர்ந்து
பரவுதிருச்சிற்றம்பலம். (ச)

எந்தச்சமயத்தெவரொவ்வாறெண்ணிடினு
மந்தச்சொருபமுற்றுமாகுமே - நந்தக்
குழையணியுங்கோலங்குறிப்பவர்வாய்கூறும்
பழையதிருச்சிற்றம்பலம் (ரு)

முற்றறிஞர்க்கன்றிமுதனான்முடிவுணராச்
சிற்றறிஞர்க்காகாதசெல்வமே - கொற்ற
மழுத்தகையார்பங்கிஞெருமங்கையுடன்வாழ்சீர்
பழுத்ததிருச்சிற்றம்பலம். (சு)

அண்டங்களத்தனைக்குமாதாரமாயளவில்
பிண்டங்களுடும்பிறங்குமே - கண்டத்
தடைத்தவிடத்தாதிநம்பராடுதலான்மேன்மை
படைத்ததிருச்சிற்றம்பலம். (எ)

வண்டமிழ்ச்சீர்நன்குணர்ந்தவாதவூரான்முதலாந்
தொண்டர்களைமீளாமற்றுய்த்ததே - பண்டருளாற்
றேகமொருபாதிபெற்றசெல்வச்சிவகாமி
பாகர்திருச்சிற்றம்பலம். (அ)

மட்டில்பரமானந்தவாழ்வடைந்தமாதவர்க்கு
மெட்டியுமெட்டாமலியங்குமே - கட்டியதா
ராங்கடுக்கைச்செஞ்சடையிலம்புலியுங்கங்கையுங்கொள்
பாங்கர்திருச்சிற்றம்பலம். (கூ)

நாடனைத்துமீன்றருளுநங்கையுமைசிந்தையிடத்
தூடலஞ்சுவார்தம்முருவமே - யாடல்வளஞ்
சீர்த்தபுகழ்ப்பாம்பொன்றுஞ்செம்புலியொன்றுந்தினமும்
பார்த்ததிருச்சிற்றம்பலம். (ய)

வேதாகமச்சீர்விரவுகின்றசட்சமயத்
தாதாரமாவதனையாயுங்கால் - போதாரு
நண்பன்புதல்வர்களாநால்வருக்குஞானநல்கும்
பண்பர்திருச்சிற்றம்பலம். (யக)

நெஞ்சாரநம்பிநெடுநாட்பணிபுரிவார்க்
கெஞ்சாதபேரின்பமீயுமே - யஞ்சாத
மாதரிக்கண்டொல்கிநிற்பவானகத்தின்மீதெடுக்கும்
பாதர்திருச்சிற்றம்பலம். (யஉ)

அஞ்ஞானவாரியதனூடமிழ்ந்திளைப்பார்க்
கெஞ்ஞான்றுங்காண்பரியதென்பதே - மெஞ்ஞான
வீட்டகத்திற்சென்றுமிளிர்கின்றநால்வர்தமிழ்ப்
பாட்டர்திருச்சிற்றம்பலம். (யங)

கன்னலம்பாகென்னக்கனிந்ததமிழ்க்கற்றுணர்வா
ரின்னமும்பல்வாறேத்தெடுப்பதே - யன்ன
மிரந்தலைவார்போன்றுமின்னாரீடழிப்பார்தஞ்சீர்
பரந்ததிருச்சிற்றம்பலம். (யச)

விண்ணாட்டமருடல்வெந்தபொடிப்பூசுநரோர்
பெண்ணாண்முன்னாடுநலம்பெற்றதே - கண்ணான்

மடுத்தவின்பமீறிவசமிழந்துமாயன்
படுத்ததிருச்சிற்றம்பலம். (௰௫)

சுற்றுசடைக்கங்கைத்துளிசிதறத்தொங்தோமென்
றற்றுநங்கோனாடுநிலமோவாதே - முற்று
நயந்தழைத்தசெந்தமிழ்ச்சொனால்வருக்குமின்பம்
பயந்ததிருச்சிற்றம்பலம். (௰௬)

வானவர்களென்பணிந்துமாமலரோன்சென்னியிலேற்
றீனமறுத்தாள்வானிடங்கண்டீர் - ஞான
வழகுமலிவெண்ணீற்றடியாரனேகர்
பழகுதிருச்சிற்றம்பலம். (௰௭)

தந்தையெனக்குகனுந்தந்திமுகனும்பரவு
மெந்தைநடிக்குமன்றத்தேற்றமே - நிந்தை
புரிந்தகொடும்பாவமும்போய்ப்புத்தருமுன்னுய்யப்
பரிந்ததிருச்சிற்றம்பலம். (௰௮)

பத்தரிறைஞ்சப்பலவாவிளங்குதெய்வ
மத்தனையுமஞ்செழுத்துள்ளாக்குமே - நித்தநித்தஞ்
சிட்டர்பலராரியத்தாற்செய்யதமிழாற்றுதிக்கப்
பட்டதிருச்சிற்றம்பலம். (௰௯)

பொற்றுடியுமக்கினியும்பூண்டசெங்கைப்புண்ணியன்றன்
முற்றுமொருதானாமுதற்கோலஞ் - சற்று
நிகர்ந்தபொருளில்லையெனநீடுமறைச்சென்னி
பகர்ந்ததிருச்சிற்றம்பலம். (௨௰)

மன்னான்மறையாவடிமூவிலைவேலான்
றன்னாரினத்திற்றலையாமே - தொன்னா
லணிந்தபதமுற்றும்வெறுத்தானந்தம்வேட்டோர்
பணிந்ததிருச்சிற்றம்பலம். (௨௧)

வேரிமலர்க்கொன்றையணிவேதியனையேவிரும்புஞ்
சீரியர்கணெஞ்சிற்சிறந்ததே - வாரியுடைப்
பூவுலகும்வானுலகும்போற்றப்பொலிந்தசெம்பொன்
பாவுதிருச்சிற்றம்பலம். (௨௨)

வையமயலொழிந்துவானகத்துவாஞ்சையும்போந்
துய்யமனத்தார்பலர்க்குஞ்சொந்தமே - செய்ய
கரமலரிற்றீயேந்திக்கன்னியெதிராடும்
பரமர்திருச்சிற்றம்பலம். (௨௩)

அந்தப்பிறவியடைந்திட்டளிகூரு
மைந்தர்க்கேவாஞ்சைவருவிக்குஞ் - சொந்தக்
கனகவளையேந்தியகைக்கங்கணமாப்பூண்ட
பனகர்திருச்சிற்றம்பலம். (௨௪)

எல்லாமுந்தானுகியாதொன்றுந்தன்னுருவ
மல்லாதுநின்றதனையாராயின் - மல்லாருஞ்
செம்புகர்வேழத்துரிவைச்சித்தனுர்தில்லையினிற்
பம்புதிருச்சிற்றம்பலம். (௨௫)

முற்றிற்று.

சிவமயம்.

ஆனந்தத்தாண்டவமாலை.

கட்டளைக்கலித்துறைகள்.

உருவானவனுமருவானவனுமொளிகடந்த
மருவானவனுமலரானவனுமறைப்பொருட்சற்
குருவானவனும்வரங்களெல்லாமுங்கொடுக்குமருட்
டருவானவனுந்தமிழ்த்தில்லையானந்தத்தாண்டவனே. (௧)

கொண்டலொப்பாமறை பல்கோடி யேத்தியுங் கோ
தொழிந்த,வண்டகை நால்வர் கவிமாலை சூடியு மங்கைநல்
லார், கண்டரு மோகக் கடலூ டழுந்திக் கலங்குறுமென்,
றண்டமிழ்க் காசைகொண் டோன்றில்லை யானந்தத் தா
ண்டவனே. (௨)

வானேமுதற்பகர்பூதங்களைந்திற்கும்வண்கமலக்
கோனேயெனத்திகழ்கின்றகதிர்க்குங்குளிர்மதிக்கு
நானேயனையபலகோடிசீவர்க்குநாயகமாய்த்
தானேயசைக்கவல்லான்றில்லையானந்தத்தாண்டவனே ()

கட்டாயபல்வகைப்பேதச்சமயக்கதைகளினு
மட்டாங்கயோகியர்நெஞ்சகத்தூடுமெனுவளவு
மெட்டாமலைந்தெழுத்தோதிப்பராவுமெளியவர்சொற்
றட்டாதுசெய்யும்பிரான்றில்லையானந்தத்தாண்டவனே ()

பங்கயமங்கையர்தம்பெருமாயையிற்பட்டுழலுஞ்
சங்கடந்தீர்ந்துன்சரணங்களேதொழுந்தன்மைதந்தாள்
பொங்கழன்மேனிப்புராதனனேமுப்புரமெரித்த
தங்கவிற்கைச்சிவனேதில்லையானந்தத்தாண்டவனே. (௫)

கனியாமிதழ்மடவார்படைசூழ்கொடுங்காளைசெய்யு
மனியாயந்தீர்த்துன்னடியாரிற்சேர்த்தென்னையாள்வதெ
பனிமால்வரைமகள்பாகாகருணைபழுத்தொழுகுந்[ன்றே
தனிஞானதேசிகனேதில்லையானந்தத்தாண்டவனே. (௬)

முத்துறும்பந்தர்நிழலுஞ்சிவிகைமுதற்பிறவு
நத்துமுன்னன்றொருதொண்டனுக்கீந்தனைநான்விரும்புஞ்
சித்துதவாமலிருப்பதென்னோபலதெய்வமுமாந்
தத்துவசிற்பரனேதில்லையானந்தத்தாண்டவனே. (௭)

மந்திரங்கட்கொருதாயாமைந்தக்கரவாஞ்சைகொள்ளார்
புந்தியுமென்னையிகழ்கொடுந்தீமைபொறுத்தனையே
யந்திவண்ணத்திருமேனியிற்போர்த்துநின்றாடவெனத்
தந்தியொன்றன்றுரித்தாய்தில்லையானந்தத்தாண்டவனே.

வேய்தந்ததோளியர்மோகவிகாரத்தில்வெம்புமனப்
பேய்தந்ததுன்பமெல்லாந்தணந்தோருண்மைபேசுவை
வாய்தந்தெலாம்பகரற்புதனேமுகமைந்துடையாய் [யோ
தாய்தந்தையில்லவனேதில்லையானந்தத்தாண்டவனே. ()

திங்கட்குலத்துதித்தோன்முன்னர்நின்றிருச்சேய்நிறுவுந்
துங்கத்தவளநன்னீற்றன்பரியாவருஞ்சோர்ந்துமிகப்
பங்கப்படுவதுகண்டயர்ந்தேனருள்பாலித்திடாய்
சங்கக்குழைத்தெய்வமேதில்லையானந்தத்தாண்டவனே. ()

சொற்பனத்துன்றிருத்தாடேக்குஞ்சேவைதுலங்கக்கண்டு
மற்பருக்கானவிதம்பேசுந்தீமையறப்பெற்றிலே [ந்
னற்பணியென்றளித்தாண்டருள்வாய்மறைநான்குமெச்சு
தற்பரமானவனேதில்லையானந்தத்தாண்டவனே. (௰௧)

பொங்காணவப்பிணியாற்பலதீமைபுரியும்வம்பர்
தங்காலனும்பெரும்பேறெனக்கீயத்தகாதுகொல்லோ
பங்காயவண்டங்களெல்லாம்பொடியப்பரிந்தொருக்காற்
சங்காரஞ்செய்பவனேதில்லையானந்தத்தாண்டவனே. ()

போதபரானந்தமெய்தினரியாரும்புகன்றதுதி
யேதமில்வீட்டைக்குறித்தேயிரங்குமியல்புகண்டுங்

காதகர்மேற்சினவும்பகைமேவிடக்கண்டனையே
தாதகிச்செஞ்சடையாய்தில்லையானந்தத்தாண்டவனே.()

இக்கணமேயெனக்குன்னருட்பேறளித்திச்சையென்னு
மைக்கடல்விட்டுக்கரையேறச்செய்தருண்மாமகத்தின்
மிக்கவர்சொன்னசொற்கேட்டுமஞ்சாதுவெறுத்திகழ்ந்த
தக்கனையீடழித்தாய்தில்லையானந்தத்தாண்டவனே.(யச)

எல்லாமுநீயெனப்பட்டினத்தையணியம்பியசொற்
கல்லாதமூடனைப்போற்பகைகோடிகருதிநொந்தேன்
வெல்லார்வநல்கிமெஞ்ஞானானந்தத்துள்விடுதியுமை
சல்லாபநாயகனேதில்லையானந்தத்தாண்டவனே. (யரு)

வாளாயகண்ணியர்மோகாந்தகாரத்தின்மாழ்குமென்னை
யாளாக்கித்தொண்டரிற்கூட்டலென்றோதொழுமந்தண
மாளாப்பெருவரநல்கியெதிர்த்தமறலிதனைத்   [ற்கு
தாளாற்றடிந்தவனேதில்லையானந்தத்தாண்டவனே.(யசா)

மைக்கோலவேல்விழியார்தருமோகவலையிடைப்பட்
டிக்கோனுக்கஞ்சுவதென்றொழிவேனறமியாவுஞ்செய்த
கைக்கோமளக்குயில்பாகாவிடாதகறைக்கண்டனே
தக்கோர்பலர்புகழ்சீர்த்தில்லையானந்தத்தாண்டவனே. ()

அக்கரமைந்தும்பகர்ந்தறியாதொத்தலமருநான்
றிக்கரஞ்சும்புகழ்தோய்வதென்றோகொழுந்தீயனைய
செக்கரவாந்திருமேனியனேதொழுஞ்சீதரற்குச்
சக்கரமீய்ந்தவனேதில்லையானந்தத்தாண்டவனே. (யஅ)

போகாந்தகாரமினிப்பாகத்தோற்றுமிப்புந்திகெட்டுத்
தேகாதியாவனவெல்லாங்கசக்குந்தினமுளதோ
வாகாயமாதியபூதங்களைந்துமழிந்திடினுஞ்
சாகாதமெய்த்தெய்வமேதில்லையானந்தத்தாண்டவனே.

கண்ணீர் பெருக மொழிசோர வுள்ளங் கசிந்துருகும், வண்ணீர்மை யாளருக் கெய்துநின் றுளென்னை வாஞ்சிக்குமோ, விண்ணீர்ச் சடைக்கற்றை யாய்தென்னை மேற்கெண்டை மீன்குதிக்குந், தண்ணீர்த் தடவயல் சூழ்தில்லை யானந்தத் தாண்டவனே. (உய)

நந்தார்செவித்துணையேதுணையாமெனநம்புமென்றன்
சிந்தாகுலங்களெல்லாந்தவிர்த்தாண்டருள்சேயிழையார்

பந்தாடும்வீதிகடோறுமனந்தம்பருப்பதம்போற்
றந்தாவளந்திரியுந்தில்லையானந்தத்தாண்டவனே. (உக)

கற்குகை தோறும் விளையாட நீதந்த காதலன்றன், சொற்குழு வாற்றய ருற்றுழன் றேன்சொற் றெருடைவி ழைந்தா, யெற்குவப் போரெள் ளளவேனு நல்கினன் றெ ன்செய்வையோ, சற்குரு தேசிக னேதில்லை யானந்தத் தாண்டவனே. (உஉ)

நின்வீட்டி னீநின் மனைமைந்த றொன்றுள்ள நீவிரிந் நாண், முன்வீட்டிற் புக்க சிலர்நாளிற் செய்த முறைமற ந்தீ, றொன்வீட்டில் வந்து தமிழ் கேட்கின் றீரிதென் னே யெறும்புந், தன்வீட்டிற் சேரக்கொண் டாய்தில்லை யான ந்தத் தாண்டவனே. (உங)

பற்றேது மற்றவர்க் கேயருள் வாயெனப் பாடுமறை, வெற்றேயென் றோர்ந்துகொண் டேன்றமிழ்ச் சுந்தரன் வேண்டியவா, றுற்றேகுந் தன்மை யுலகோத லாலெனக் கோர்செயலிற், சற்றேனு முண்டுகொல் லோதில்லை யா னந்தத் தாண்டவனே. (உச)

விடைமீது பாகத்து மங்கையி னோடென்னுண் மே லுலகோர், புடைசூழ வந்தொரு சீராட்டுப் பேசலும் பொய்த்திடுமோ, கடையேனை யாளவித் தாமத மேனின் கருணையினிற், றடையேது நேர்ந்ததுண் டோதில்லை யா னந்தத் தாண்டவனே. (உரு)

வந்தேனென் றன்றுசெங் குன்றூரிற் செங்கனி வாய் மலர்ந்த, தொன்றேமுன் னுட்டவ மாமென்ன நாடி யுவ ந்தபின்னு, நொந்தேத மெய்தவிட் டாலென்செய் வே னென்ற னெய்யமனஞ், சந்தேகி யாதுகொல் லோதில்லை யானந்தத் தாண்டவனே. (உசா)

பதிகமோவ் வொன்றிற்கு நால்வர்முன் வேண்டும் பரிசுதவி, யதிகமெய்க் கீர்த்தி புனைந்தாய்பல் பாட லறை ந்துமென்றன், மதியுவப் பெய்தப் புரிந்தாண்டி லாயருள் வாழ்க்கைநல்குந், ததியிதென் றோர்கிலை யோதில்லை யா னந்தத் தாண்டவனே. (உஎ)

அஞ்சனந் தீட்டிய கண்ணார்க் குருகு மவர்கவிக்கு, மிஞ்சருட் பேறளிப் பாயென்ன வேயுன்னை வேண்டுகின்

றேன், வஞ்சகஞ் செய்யலவ் வாரூரன் சொல்லிலென் வாக்கும்கொண்டு, சஞ்சலந் தீர்த்தருள் வாய்தில்லை யானந்தத் தாண்டவனே. (உஅ)

ஒருபதிகத்துக்குப்பொற்செய்கனல்கியவுள்ளநின்பான்
மருவியதெங்குமறைந்ததுவோவன்றிவண்டமிழ்ச்சீ
ரருகியதோவகிலத்துளெங்கேனுமொரன்பனின்றோ
சருவமும்வல்லவனேதில்லையானந்தத்தாண்டவனே. ()

நங்காதல் செந்தமிழ் நீதேயென் றன்று நவின்றமொழி, பொங்கார்வச் சுந்தரன் மட்டின்மெய் யாகிப்பின் பொய்த்ததுவோ, லிங்கா யிரங்கவிக் காவழக் காட லிருந்தல்லவோ, சங்காழி மால்புகழ் சீர்த்தில்லை யானந்தத் தாண்டவனே. (௩௰)

வடுத்தாங்கு கண்ணியர் மோகத்தி னுலவர் வாயிதழ்த் தேன், மடுத்தாட கக்கொடும் பேய்பிடித் தாடி மனைதொறும்போ, யெடுத்தார்கைப் பிள்ளையென் றேமாந்து நாட்கழித் தேங்குமென்னைத், தடுத்தாள வும்வல்லை யோதில்லை யானந்தத் தாண்டவனே. (௩க)

தென்கயி லைக்குறு மாமுனி நூற்சொல்லைச் செம்பவளத், தின்கனி வாய்க்கலை மங்கைதன் னுடலை யாவும் வல்ல, நின்கனற் கண்டரு சேய்சொன்ன வாற்றை நினைந்திடிலென், றன்கவி யொன்றுள தோதில்லை யானந்தத் தாண்டவனே. (௩உ)

பெண்ணு ருதரத்தி லின்னமுஞ் செல்லும் பிறப்பஞ்சினேன், கண்ணுரு மெய்யரு ளாலென்னை யாண்டு கதிதருவாய், விண்ணுரும் வெண்பிறைக் கீற்றணிந் தாய்வெள் விடையுகைத்தாய், தண்ணுருங் குல்லையொப் பாய்தில்லை யானந்தத் தாண்டவனே. (௩௩)

இடித்தன்ன பேரொலிச் செந்தமிழ்ப் பாட லியம்புமென்னை, மடித்தன்னை யார்வயிற் றின்னம்வி டேலன்பன் மாவடுவைக், கடித்தன்ன வாய்த்தொனி காட்டிக் கழனிக் கமரில்வந்தாய், தடித்தன்ன செஞ்சடை யாய்தில்லை யானந்தத் தாண்டவனே. (௩௪)

எஞ்சாத பேரன்பி னுலழு தேங்குகி லேனையுநீ, நஞ்சாரும் பண்புகொண் டாட்கொள்ள லாமின்ன நாட்கழி

யே, லஞ்சான ஸங்குறிப் பார்மனந் தோறு மநுதினமுஞ், சஞ்சாரஞ் செய்பவ னேதில்லை யானந்தத் தாண்டவனே.

கழுங்குமம் மானையுங் கொள்வார்தம் மையணி கண்மருட்சி, வழங்குந் துயரொழித் தாள்வதென் றேவரி மத்தளமு, முழங்கு மறையு மயன்கைம் மணியு முனிவர் பண்ணுந், தழங்குங் கழற்கொல்கு சீர்த்தில்லை யானந்தத் தாண்டவனே. (௩௬)

நீற்றணித் தொண்டர் களிகூர்ந்து மற்றைய நீசர் குலத், தேற்றமெல் லாங்கெட வேண்டுமென் றெண்ணியிடையுமென்பா, லாற்றலெண் சித்தியு ஞானமுந் தோய்வதற் காமொருசொற், சாற்றவொண் ணுதுகொல் லோதில்லை யானந்தத் தாண்டவனே. (௩௭)

ஏழ்வா ரமுமுனக் காவன வேயென் றினிதுணர்ந்து, சூழ்வாய்மைக் கஞ்சித் தொழுதெழுத் தோரைந்துஞ் சொல்லுமென்னைக், கூழ்வாய்ந்த பண்ணை மதுரைக் கரிய குருவியினுந், தாழ்வாகச் செய்குவை யோதில்லை யானந்தத் தாண்டவனே. (௩௮)

முகிற்றிரள்போலுங்குழலார்களாசையின்மூழ்கிமனத்
திகிற்படும்பாதகனுனுமானினஞ்செற்றருந்தி
யகிக்குலநாணுங்கொடியோர்களாம்வராண்மையினைச்
சகித்திடவல்லனல்லேன்றில்லையானந்தத்தாண்டவனே ()

மின்னெருக்கு மெல்லிடைப் பார்ப்பதி யார்தம் வியன் முலைப்பா, லென்னெருக்கு மெண்ணத் தொருவனிந் நாளுண் டிலங்கச்செய்வாய், பொன்னெப்ப தாஞ்சடைப் புண்ணிய னேயதள் போர்த்துநின்றாய், தன்னெப்ப தொன்றுமில் லாய்தில்லை யானந்தத் தாண்டவனே. (௪௰)

வாரணிக்கொங்கைமடவாரளிக்குமயல்விளைக்குங்
கோரணிக்காட்பட்டுவாடாதுகாக்குங்குறிப்பில்லையோ
நாரணிக்கின்னுயிராணுய்பல்கோடிநகம்பரிக்குந்
தாரணித்தேருகைத்தாய்தில்லையானந்தத்தாண்டவனே()

மண்டலமெங்கணுநின்னருட்பேற்றின்வலிவிளக்குந்
தொண்டனொருவனைவேண்டலுநீதருந்தோற்றமன்றே
புண்டரிகன்றலைகொய்தாய்மதனன்பொடியச்செய்தாய்
சண்டனுயிர்கவர்ந்தாய்தில்லையானந்தத்தாண்டவனே. ()

வண்டாருங் கொன்றை மலர்சூடி வெள்ளிய மால் விடைமேற், பெண்டாங்கும் பாகத் தினனுவந் தோர்மொழி பேசுதியே, லுண்டார்வ மெய்துற வூன்வேண்டிப் பற்ப லுயிர்வதைக்குஞ், சண்டாளர்க் கஞ்சிநில் லேன்றில்லை யானந்தத் தாண்டவனே. (சரு)

கவிமாலை யாலுய்ந்த நால்வர்க் களித்த கருணையுட, னவிர்வேலுந் தோகை மயூரமு மீந்தென்னை யாண்டுகொண்டாற், புவியூடெத் தேயத்தும் போய்மீண்டு மானிடர் புண்ணருந்தற், றவிராதுன் றுளடை யேன்றில்லை யானந்தத் தாண்டவனே. (சசு)

புனைகழலுக்கிறனூமைப்புலவன்புகலிப்பிரா
னனையவராகிச்சமயம்பல்கோடியமையும்வண்ணம்
வனைகடற்பாரில்விளையாடிநின்னிடம்வந்தவராந்
தனையருக்கெண்ணுளவோதில்லையானந்தத்தாண்டவனே.

நொந்தழுதுன்னருளால்விரற்பாலுண்டுநுண்ணியனு
மந்தணன்சீடனொருவனுக்காழியொடான்றசங்குஞ்
செந்தகைப்புட்பரியாதியவாம்பல்சிறப்புமுன்னூட்
டந்தவனீயல்லையோதில்லையானந்தத்தாண்டவனே. (சஅ)

நானறமேலிடப்பாவமெல்லாமுநசியச்செய்தற்
கானவைவேண்டிடிற்றுராய்கொல்லோதவத்தன்பர்களும்
வானவர்தாமுந்துயரெய்தச்செய்யவணங்கினராந்
தானவர்க்குங்கொடுத்தாய்தில்லையானந்தத்தாண்டவனே.

இங்கற்பராமவர்பல்லோரொனைமிகவேசுகின்று
ரங்கற்பந்தோறுமறையாமெய்க்கீர்த்தியளித்தினிதாள்
பங்கற்பநின்றநின்சத்தியென்னொஞ்சிற்பதியுமுன்னிச்
சங்கற்பம்வந்ததுண்டோதில்லையானந்தத்தாண்டவனே.

கலியால் வருந்துமென் மேனிந்தை யென்னுங் கனற் கொதிப்பும், புலியான காமமுஞ் சீறவிட் டாயருட் போதநல்காய், வலியார் தமக்கு மெளியார்க்குந் தக்க வரங் கொடுக்கச், சலியாத வாய்த்தெய்வ மேதில்லை யானந்தத் தாண்டவனே. (சக)

எம்மதத்தூடுநின்றன்னருண்மேயவியல்புணரு
மெய்ம்மதிநல்கிக்கொலைதீதெனலும்விளக்கினையே
பொய்ம்மகந்தன்னிற்சிலருனுங்கள்ளும்புசிப்பதினின்
சம்மதமுண்டுகொல்லோதில்லையானந்தத்தாண்டவனே.

இமிழ்வாரிநீரன்னபன்னூன்மயக்கிடையென்றனெஞ்ச
மமிழாமலுண்ணின்றருளாண்மைச்சீலமறிவித்தப்பாற்
றிமிராகரக்கன்மநோய்தீர்த்துனைத்துதிசெய்யச்செய்தாய்
த்மியேன்கைம்மாறுளதோதில்லையானந்தத்தாண்டவனே

முற்றிற்று.

ஆக கவி - எசு.

சிவமயம்.

திருநடனமாலை.

கொச்சகக்கலிப்பாக்கள்.

ஆராலுங்கண்டுதொழுற்கரியாயென்றருமறைகள்
போராடநின்றாய்நின்பொன்னடிகள்விழைகின்றே
னேராவந்தருள்புரியநினைவாய்கொலறிகில்லேன்
சீராருங்கனகமன்றிற்றிருநடனம்புரிவானே. (௧)

வில்லையெடுத் தடித்தாற்கும் விறற்பகழி யொன்றளி த்தாய், சொல்லையொரு மாலையெனத் தொடுத்தணிவேற் கியாதொன்று, மில்லையெனச் சொல்வாயோ விமயமயில் களிகூரத், தில்லைநகர்க் கோயிலிடந் திருநடனம் புரிவானே. (௨)

கூறரும்பேரின்பநல்குங்கோயின்மன்றம்போற்றுமன்
மீறவுநாட்கழித்தேனைவெறுத்திகழ்ந்துவிடுவாயோ
வாறலம்பநீறுதிரவரக்கனுளத்தகங்குன்றச்
சீறரவப்பணியாடத்திருநடனம்புரிவானே. (௩)

மற்சமணர்வாதொழிக்கவந்தான்போன்றொருதொண்டன்
றற்சமயத்திவ்வுலகந்தனில்விளங்கத்தருவாயோ
நற்சரபவடிவெய்திநரசிங்கந்தனையட்டாய்
சிற்சபையிலெந்நாளுந்திருநடனம்புரிவானே. (௪)

வேல்வழுதிபோலுமொருவேந்தன்வந்திம்மேதினியி
னுல்வகைத்தாநன்னெறியுநானறியநடவாதோ
மால்வழுத்துந்தாளானேவயங்குதில்லைமன்றகத்திற்
சேல்வளர்கண்ணுமைகாணத்திருநடனம்புரிவானே. (௫)

வண்டமிழாற் போற்றிசைத்துன் மலர்க்கடைக்கண் ணருணோக்கங், கொண்டவிர்வா ரொருவனைநான் குறித் தயர்வ தறியாயோ, விண்டலத்து ரத்தனைக்கு மேலாய தில்லைமன்றிற், றெண்டனிடு வார்களுய்யத் திருநடனம் புரிவானே. (௬)

எண்ணிலாமானிடரூடெவனேனுமொருவனுக்குன்
கண்ணினருட்சற்றுதவிக்காலியினம்புரவாயோ
விண்ணினருங்கண்டுமகிழ்வீருர்தென்புலியூரிற்
றெண்ணிலவார்சடையாடத்திருநடனம்புரிவானே. (௭)

பானிறத்துநீறணிந்தும்பத்தர்திருவேடமிட்டு
மானினத்துக்கின்நாள்வந்தடைந்ததுயர்க்குடையாம
ஞனிலத்திலூன்வளர்த்துநாயெனநாட்கழிப்பேனோ
தேனிழிபூம்பொழிற்றில்லைத்திருநடனம்புரிவானே. (௮)

அந்தணருங்கைகுவிக்குமான்வதைத்துண்டளிகூர்வார்
வெந்தகையபுன்குடைக்கீழ்மேனியெனக்களித்தாயே
யிந்தவிதத்துயர்தீராயெனிற்சிறிதுமகிழ்வேனோ
செந்தமிழ்ச்சீர்த்தில்லைமன்றிற்றிருநடனம்புரிவானே. (௯)

எல்லாநின் விளையாட்டென் றினிதுணரப் பெற்ற பின்னு, நல்லான்கன் றினைக்கொல்வார் நவைசகித்தற் கறி கில்லேன், வல்லாண்மைச் சித்தியெட்டும் வழங்கியரு ளிடல்வேண்டுஞ், செல்லார்பைம் பொழிற்றில்லைத் திரு நடனம் புரிவானே. (௰)

பத்திநெறிநிலைநின்றுபசுந்தமிழாலுனைப்போற்றி
முத்தியடைந்தவராயமுனிவர்பலரிகழ்ந்திட்ட
சித்திவிழைந்துள்ளேனைத்திரும்பிவரச்செய்துவிடே
றித்திமித்தெய்யெனத்தில்லைத்திருநடனம்புரிவானே. ( )

ஆன்கணத்தின்றுயர்நீங்கியளிகூரக்காணுநல [ன்
மியான்கதிபெற்றுய்வதினுமேற்றமென வெண்ணுகின்றே
வான்கடுக்கைத்தொடையாடமதியாடமறியாடத்
தேன்கலுழ்பூம்பொழிற்கோயிற்றிருநடனம்புரிவானே. ( )

நீயேறிப்பவனிவருநெடியமால்விடையேனு
நாயேன்போன்றதனினத்தினலமிரக்கவில்லைகொல்லோ
வேயேய்ந்ததோட்கவுரிமிகக்களிக்கும்விதம்பாடித்
தீயேந்தியம்பலத்திற்றிருநடனம்புரிவானே. (௰௩)

பொற்குவையும்பூவுலகும்பொல்லார்பாற் கொளவேண்டு
பற்குனனுக்கருள்செய்தாய்பரவுமெனக்கிரங்காயோ [ம்
தற்குறிப்பார்களிகூரத்தாளெடுத்துத்தனிமன்றிற்
றெற்குடையானுள்ளமஞ்சுந்திருநடனம்புரிவானே. (௰௪)

அங்கணிலமங்கையமுதலமரும்பண்பறிதன்மை
யிங்கடியேற்கேனளித்தாயிடரொழிக்கவல்லேனே
கங்கணமும்பாம்பாயகவின்றோன்றக்கனகமன்றிற்
செங்கமலக்கண்ணனன்மகிழ்திருநடனம்புரிவானே. (௰௫)

நித்தனெனச் சித்தர்பலர் நெடுங்கிரிதோ றுற்றுரைஞ்,
றித்தறையோர் சொல்லன்மெய்யேயெனக்கொருவனுத
வானே, முத்தமிழுங் கைப்பனவோ முதுபுகழ்த்தென்
புலியூரா, செத்தவிண்ணே ரென்பணிந்து திருநடனம்
புரிவானே. (௰௬)

பல்வகையாம்பதங்கடொறும்பகரும்பற்பலதொண்ட
ரொல்வகைமுற்றுணர்ந்துமிந்தவுறுகணெனக்களித்தாயே
நல்வரமுநல்காமனுட்கழிக்கைமுறையாமோ
செல்வமலிதருதில்லைத்திருநடனம்புரிவானே. (௰௭)

எக்கடவுளருநீயாயிருந்தவிதமுணராமற்
பொக்கமுறுசிலர்சொல்லாற்புலர்ந்ததுயர்போக்கியநீ
தக்கநலமொன்றெனக்குத்தரினலதுமகிழ்வேனே
செக்கரெனச்செம்பொன்மன்றிற்றிருநடனம்புரிவானே ()

கும்பமுனியோர்கனவிற்கொடுத்ததிருவெண்ணீறுங்
கம்பலைதீராக்கொடுமைகருதினைவதறியாயோ
வம்பலத்திற்றேவியெதிரமரர்குழாநனிவேண்டச்
செம்பவளக்குன்றமெனத்திருநடனம்புரிவானே. (௰௯)

நாயினேற்பொய்யனென்னுநானிலத்துமானிடரென்
வாயில்வாழ்மங்கையையும்வையுமட்டும்பாராம
னீயின்னேயாண்டருளாய்நீடுபுலியூரானே
சேயின்வாய்ப்பாடல்கொண்டுதிருநடனம்புரிவானே. ()

பார்வருந்துந்துயர்தீர்த்துப்பசுக்குலங்கண்முழுமைக்கு
மார்வமுறப்புரிவானிங்கடியேன்முன்னவிரானே
நீர்வளமைகுன்றுதநெடியவயற்புலியூரிற்
றீர்வரியதாங்கருணைத்திருநடனம்புரிவானே. (௨௧)

மாலாமென்றிவ்வுலகின்மகிழ்வெய்திவானுலகின்
மேலாநின்றிருவடிக்கீழ்மிளிருநலம்விழைகின்றே
னாலாலமுண்டோனேயமரருக்குமரியானே
சேலார்தண்புனற்றில்லைத்திருநடனம்புரிவானே. (உஉ)

மாணரும்பலபோகமதியாதமாதவர்முன்
னாணமற்பிழைசெய்வேனலமடையப்புரிவாயோ
தோணான்கின்மழுமானுஞ்சூலமுடனேடும்வைத்தாய்
சேணுடர்தொழத்தில்லைத்திருநடனம்புரிவானே. (உ௩)

அருட்கடலின்முழுகாமலகிலமயலெனக்கூறு
மருட்பிடித்தமனத்தார்போல்வருந்தவெனைவிடலாமோ
விருட்கரியொன்றுரித்தோனேயிகபரமும்விழையாமெய்த்
தெருட்புலவர்புகழ்தில்லைத்திருநடனம்புரிவானே. (உச)

புகழ்வளம்வேட்டுழல்வேனைப்பூதலத்துப்பூரியரு
மிகழ்வதுகண்டிருக்கின்றாயிரக்கமுனக்கிலைகொல்லோ
வகழ்கடலின்விடமருந்தியகிலமுழுதளித்தபாற்
றிகழ்திருச்சிற்றம்பலத்திற்றிருநடனம்புரிவானே. (உரு)

முற்றிற்று.

ஆக கவி. (௱க)

சிவமயம்.

வெண்பாவந்தாதி.

சீர்குலவுதெய்வத்திருமன்றுடையானைக்
கார்குலவுகண்டத்தோர்காரணனை - நார்குலவு
நெஞ்சமொடுபோற்றுநெறியிற்புகுதாமன்
மிஞ்சநெடுநாட்கழித்தேன்மெய். (க)

மெய்யனெனும்பேர்விரும்பிப்பரவுமென்னைப்
பொய்யனெனப்பல்லோர்புகல்கின்றா - ரைய
மறுத்தாள்வதென்றுரையாயம்பலத்திலென்றுங்
கறுத்தான்மேலாடுமழகா. (உ)

அழகியசிற்றம்பலத்திலாடல்புரியுங்
குழகனையேமுற்றுநம்பிக்கொண்டு - பழவினையைச்
சீறுமடியார்திருத்தாட்டுகள்புனையும்
பேறுபெற்றேற்குண்டோபிழை (௩)

பிழையனந்தஞ்செய்துமகிழ்பேயேன்றனையும்
விழையும்பெருங்கருணைமேயோன் - மழையுகைக்கு
மற்றங்குவாரொலும்புமாலையணிந்தாடுகின்ற
சிற்றம்பலத்துச்சிவன். (௪)

சிவனன்றிமற்றுமொருதெய்வமுண்டென்றெண்ணுந்
தவறுண்டநெஞ்சகத்தோர்தாமும் - பவவேலை
நீந்திப்பொதுவெளியினின்மலமாவாழ்வாரொன்
றியாந்திக்கனைத்தினுங்கேளேம். (௫)

கேளாச்சுருதிகிளத்தும்பொருண்முடிவுந்
தாளாண்மையின்றித்தருவானே - வாளாய
கண்ணாளெதிரிற்கவினார்கனகமன்றி
னுண்ணாடகந்தினஞ்செய்வோன். (௬)

செய்யபவளத்திருமேனிச்சீர்குலவு
மையனைக்கண்டாடகச்சிற்றம்பலத்தி - லுய்யப்
பிறந்தவரோமாதவத்தின்பேறடைந்தோர்மற்றோ
ரிறந்தவரிற்றாழ்ந்தவர்தாமே. (௭)

தாமக்குழலார்தவளத்தரளநகைக்
காமர்க்குருகிக்கழிந்தாலு - மீமத்தி
லாடினான்றில்லைமன்றத்தம்மானருட்பெருக்கம்
பாடினாலுண்டேபயன். (௮)

பயனொன்றுநாடாதுபஞ்சாக்கரத்தை
நயமொன்றப்போற்றிசைக்குநண்பர்க் - கயலொன்று
மில்லாதுதானாயிலங்குதில்லையம்பலத்து
வல்லானேநங்குலதெய்வம். (௯)

தெய்வம்பொதுவெனுஞ்சொற்றேயமெங்குஞ்செப்பிடி
பொய்வழியிற்சென்றுபுலர்கின்றோ - ரைவகைய [னும்
வாந்தொழிற்செய்தம்பலத்திலாடுகின்றதென்றறியார்
சாந்தொழிற்றேவைத்துதிப்பார்தாம். (௰)

தாம்பிரத்தையன்னமனந்தங்கமொக்குந்தன்மை யெய்திற்
பாம்பிருந்தசென்னிப்பரமனார் - காம்பிணைத்தோட்
கன்னியுடனாடுங்கனகமன்றின்சீர்குலவு
மென்னிதயஞ்சாட்சியிதற்கு. (௰௧)

இதுவதெனவாதமொழிந்தேமாந்துவீணே
சதுமுகனைவேலைகொள்ளுந்தன்மை - பொதுவி

லொருகாலினின்றுடுமுத்தமனைப்போற்றி
யருகார்க்கெய்துகின்றதாம். (௧௨)

ஆமாமென்றுள்ளநெறியத்தனையுமொப்புமொரு
கோமாளியானகுணங்கொண்டேனே - தாமாகிப்
பூசுரர்வாழ்தில்லைப்பொதுவினடிப்பானருளைப்
பேசுநலம்பெற்றமைந்தபின். (௧௩)

பின்னும்பிறவாதபேறடைதற்கானதவந்
துன்னுமனத்தோர்க்குத்தோன்றுமே - பன்னுமறை
யத்தனைக்குமாதாரமாயம்பலத்தினின்றானை
நித்தனெனச்சொல்லுநிசம். (௧௪)

நிசமறந்துபொய்வழியினெஞ்சைவிட்டுமாயும்
பிசகுடையார்க்கெய்தரியபேறே - கசமுரித்துப்
போர்த்தமரர்வாழ்த்தப்பொதுவினடம்புரிவான்
சீர்த்தபுகழேத்துஞ்செயல். (௧௫)

செயலனைத்துந்தில்லைநகர்ச்சிற்றம்பலத்தி
லியலுமவன்றன்னதெனலா - மயல்போற்
படித்தமொழிவினவிப்பார்த்தனன்றுவில்லா
லடித்தவடிபட்டதுணர்ந்தால். (௧௬)

ஆலநிழலிலருட்சற்குருவான
கோலமறந்தாலுங்கூத்தாடி - போலவொரு
மன்றினின்றகோலமறவாரோமாதவத்தா
லொன்றினிலைமையுணர்ந்தோர். (௧௭)

ஓராமற்பொய்சொற்றுலகிற்பொருள்விளக்கு
நீராளர்போலநிகழ்வேற்கும் - பாராளு
மன்னரஞ்சத்தக்கபெருவாழ்வளிக்கவல்லாயோ
பன்னருஞ்சிற்றம்பலத்தப்பா. (௧௮)

அப்பமவலெள்ளரிசிமுதலாமவற்றைக்
கப்பவல்லஞானக்களிறென்றும் - வைப்படைவேற்
சேயொன்றுமீன்றருளிச்சிற்சபையினின்றாயென்
வாயொன்றுஞ்சொற்கள்வினவாய். (௧௯)

வாயிலொருதெய்வம்வசிக்கின்றதென்கைபொய்யாய்ப்
போயிடினுநின்னிறைவும்பொய்யாமோ - யாயிலெனை
யாட்டுவதுநீயன்றோவம்பலவாவென்றமிழ்ச்சொற்
பாட்டுமுனக்கேபரம். (௨௰)

பரமாயநீயிருக்கப்பல்சமயத்தோருந்
தரமாவெவ்வேறமைத்துத்தத்த - முரநாடிப்
போர்விளக்குந்தீமையினைப்போக்கநினைத்தேனருளாய்
சீர்விளக்குந்தில்லையரசே. (உக)

அரசேசிவகாமியம்மைமணவாளா
பரசார்க்கிரங்காப்பரனே - முரசார்க்கும்
வாயிற்றிருக்கோயின்மன்றுடையானேயெனைநின்
சேயிற்றிகழவின்னேசெய். (உஉ)

செய்யநிறத்தினிருசேயீன்றருள்சிவையோ
டையனைப்பானல்கிமகவாக்கினை - ளுய்ய
வெனையெடுத்தாலவ்விரண்டோடிவ்விரண்டொப்பாமே
கனைகழற்சிற்றம்பலவா காண். (உங)

காணங்கருதுங்கலிநோய்வளைந்ததனு
ளுணம்பெருத்துநலிவேற்கும் - வேணபடி
வானவர்க்குமெய்தாவரமளிக்கவல்லாயோ
வீனமில்பொன்னம்பலத்தானே. (உச)

ஏயவுயிர்த்திரள்கட்கின்பநல்கவெண்ணியெண்ணி
யாயவிதித்தனையேயையகோ - தூயவருட்
சித்தியொன்றுமீந்திலையேசிற்றம்பலவாவென்
பத்தியிற்பொய்யுண்டோபகர். (உரு)

பகலனையநின்னருளென்பாவவிருடோ
யகவெளியிலென்றுதிக்குமையா - மகரக்
குழையாகச்சங்கணிந்தகோமானேதில்லை
யுழையாடுவானேயுரை. (உசு)

உரையுணர்வுக்கெட்டாததுன்னருளென்றோர்ந்துங்
குறைஞமலியென்னமிகக்கூவித் - தரையறியப்
பத்தனைப்போற்பாராட்டும்பாவியேனுய்வேனோ
வித்தகப்பொன்னம்பலவாழ்வே. (உஎ)

வாழ்விலுயர்ச்சியெய்தவாஞ்சித்துமாநிலத்திற்
றாழ்விலுயர்ச்சியெய்தித்தட்டழிந்தே - ஞழ்வினைஞர்
தம்முடன்சேர்த்தாளாய்தமநியச்சிற்றம்பலத்தோர்
மைம்முயன்மேலாடுமுதல்வா. (உஅ)

முதல்வன்பொதுவிலெல்லாமூவாதவண்ணம்
பதமெடுத்துநின்றுடும்பண்பு - மதலைப்

பருவத்தோர்காண்பதன்றுபத்திமுற்றுஞானத்
தருமத்தோர்காணத்தகும். (உகூ)

தகுவர்புரமெரிந்துசாம்பர்படச்சற்றே
நகுமொருவன்றன்னைமிகநம்பி - வெகுவிதமுந்
தீர்ந்ததில்லையம்பலத்தின்சீரறியவல்லாரோ
யார்ந்தவுணர்வுடையோராம். (௩௰)

ஓராமுதற்சுருதியுட்பயன்வந்துள்ளொளிர
வாராமையெய்தியமுதருகுஞ் - சீராளர்க்
கெய்துங்கதியெனக்குமீவானோவென்றுமருள்
பெய்துமன்றிலாடும்பிரான். (௩க)

பிரசமலர்க்கடுக்கைப்பிஞ்ஞகனைத்தில்லைக்
கரசனெனவெண்ணியடைந்தேன் - சரசநய
மேவுமதனீறுவிளங்குகின்றதெய்வங்க
ளியாவுமவனுகிநின்றனே. (௩உ)

நின்றமனத்தார்நினைவிற்குமெட்டாத
தொன்றதனைநன்குற்றுணருங்கான் - மன்றகத்திற்
றிங்கட்சடையாடத்தேவியொருபங்கின்டித்
தெங்கட்குரிமைகொள்வதே. (௩௩)

கொள்ளரும்புன்போகங்குறித்துப்பரதவிக்குங்
கள்ளமனஞ்சீர்திருந்தக்காட்டுவாய் - விள்ளரிதா
மானந்தக்கூத்தியற்றியம்பலத்தினின்றடியா
ரீனந்தவிர்க்கவல்லானே. (௩ச)

வல்லையெனையாண்டுமாயையெனவாதிப்போர்
சொல்லையடக்குந்தொழிலீவாய் - குல்லைவனம்
பூத்தாலெனச்சிறந்துபொன்னம்பலத்திலருட்
கூத்தாடல்செய்யெண்குணா. (௩ரு)

குணமிறந்தசூனியமாக்கூறுமவர்தங்
கணமகிழநான்வாடல்கண்டாய் - துணர்சொரிந்து
பூசித்தார்வாழ்ந்ததெல்லாம்பொய்யோபொதுத்திருக்கூத்
தாசித்தாயின்னேயருள். (௩சு)

அருளாண்மைச்சித்திநலமாசித்தபின்னர்
மருளாளர்பாலிரக்கவைத்தா - யிருளார்
வினைபுகழ்ந்தார்க்கில்லையெனும்வேதமொழிபொய்யோ
நினைமலர்த்தாளம்பலவாணா. (௩எ)

அம்பலவாவென்னெதிர்நீயாடென்றவன்மொழிகேட்
டும்பர்வியப்பெய்தவுஞற்றிஞய் - நம்படிமை
துன்பக்கடலேத்தொடைத்தருளக்கூடாதோ
வின்பக்கனியனையானே. (௩அ)

அனையாரொருவருமிலம்பலவனெஞ்சிற்
றினையாமளவெனினுஞ்சிந்தித்-தெனையாள்கைக்
கெண்ணுவனேலூனருந்தியேப்பமிடுவார்பலர்க்கு
மண்ணுலகின்வாழ்க்கைமுடிவாம். (௩௯)

வாமத்தொருமகளைவைத்தானைவண்கடுக்கைத்
தாமத்தொடையற்சடையானை - யீமத்தி
லாடியெனச்சொல்வாரழ்கியசிற்றம்பலத்தைத்
தேடிவணங்காச்சிலர். (௪௰)

சிலவாறுருவேளேசிந்திக்குஞ்சிந்தை
யலவாறமைவுறலொப்பாய - பலவாறு
முன்னருட்கூத்தன்றேவுயர்புகழ்ச்சிற்றம்பலத்தின்
மன்னனெனவாழ்முதற்றேவா. (௪௧)

தேவாதிபருடற்பல்சின்னமணிந்தானே
மூவாக்கனகசபைமுன்னவனே - வாவாவென்
றெத்தனைநாட்கூவியிளேத்தேனிரங்காம
லித்தனைநாளும்பொறுத்தாயே. (௪௨)

பொறுக்கரியதீமைபலபூதலத்திற்கண்டு
மறுக்கமுறுந்துயரமாற்ருய் - கறுக்கு
மிடற்றனேதில்லைநகர்வேதியனேயிந்த
வுடற்றுனுமுன்னதல்லவோ. (௪௩)

அல்லற்கடலூடமிழுமடிமையிந்த
மல்லற்புவியின்மகிழ்வேனே - சொல்லரிய
ஞானந்தப்பொருளாநற்றமிழ்ச்சிற்றம்பலத்தி
லானதுநின்றுயறை. (௪௪)

அறைகழற்றுளொன்றான்றியம்பலத்திலாடு
மறையவனைநாடாமனமே - பிறையனைய
பற்காட்டிக்கூற்றன்பகடேர்ந்தெதிராம
னிற்காப்பாருண்டோநிகழ்த்து. (௪௫)

நிகளம்படுங்களிற்றினெஞ்சயர்கைநீக்கி
யகளங்கஞானமருளாய் - சகளமொடு

நிட்களமாயம்பலத்தினின்றானேநீலிமனம்
வெட்கநடித்தோனேவிரைந்து. (௪௬)

விரையார்கடுக்கைநிகர்மிக்கதமிழ்ப்பாட
லுரையார்சிலருமுய்ந்ததுண்டேற் - றிரையாழிப்
பாரிலென்னையாளாயோபம்புதில்லையம்பலத்தோர்
நேரிழைமுன்னாடுகின்றானே. (௪௭)

நேயமறியநிலவுந்திருவருளிம்
மாயவுலகில்வயங்காதோ - தூய
பொடியாடித்தில்லைநகர்ப்பொன்னம்பலத்தின்
மடியாமல்வாழுமிறைவா. (௪௮)

இறையளவுமெய்யுணர்ச்சியில்லாதார்தாமுங்
குறைபகரக்கேட்டுக்கொதித்தே - னிறையு
மருளாண்மையென்றருள்வாயம்பலத்தினுண்மைப்
பொருளாகியசிவசம்போ. (௪௯)

சம்போமகாதேவாசங்கராவென்றுதின
மம்போதிநீரொத்தரற்றுவார் - செம்போதந்
தேடுமகிமைதிகழ்திருச்சிற்றம்பலத்தைப்
பாடுமவர்க்கில்லைப்பயம். (௫௰)

பயன்வேண்டிப்போற்றிசைக்கும்பாவியேனெஞ்சின்
மயனீங்கச்செய்தருளவாராய் - கயல்போலுங்
கண்ணாளெதிரிற்கனகமன்றிற்கூத்தாடு
மண்ணாமழுவணிதோளா. (௫௧)

தோளின்மறியைச்சுமந்தானைத்தோகையர்சூழ்
வேளிமைப்பினீறவிழித்தானைக் - காளியுடன்
வாதாடிவென்றானைமன்னுதில்லையம்பலத்தி
னாதாந்தனென்றுணர்ந்தோநாம். (௫௨)

நாமம்பலவுநவில்வார்க்கெளியபிரான்
வாமந்தனிற்குலவுமங்கையான் - றாமரைப்பூ
வாவிமலிதில்லைநகர்வாழ்வனையானெவ்வுயிர்க்கு
மாவியென்பதோர்வதரிது. (௫௩)

அரியுமயனுமறியாமனின்ற
பெரியபெருமான்பெருமை - தெரியுமிட
மெள்ளாநலம்பொலிவுற்றெச்சமயத்தோராலுந்
தள்ளாததாஞ்சிற்சபை. (௫௪)

சபலமனக்குரங்காற்றட்டழிகின்றேனுக்
கபரிமிதசித்தியளித்தப்பா - லுபநிடதத்
துண்மையையுங்காட்டானோவோங்குதிருத்தில்லைமன்றில்
வண்மைநடமாடுமொருவன். (ருரு)

ஒருவரியதூலவெளிக்குள்வெளியாகின்று
முருவமொடுங்தோன்றவல்லானுண்டே - குருவழங்குஞ்
சொல்லைமிகநம்பித்துணிவார்மனம்போலுந்
தில்லைநகர்க்கோயிலிடத்தில். (ருசு)

தில்லைக்கனகமன்றிற்றேவர்குலஞ்சேர்ந்திறைஞ்ச
வல்லைப்பழிக்குமுலைமங்கையெதிர் - தொல்லைமறை
யோலிட்டுக்கெஞ்சவொருவாநடம்புரிவான்
காலிற்புகலேகதி. (ருஎ)

கதியளிக்கைமெய்மையெனிற்காசினியிலென்றன்
மதிவிருப்பமெல்லாம்வழங்கித் - துதிபுனைவா
யன்றேகனகமன்றத்தாடியகண்டமென
நின்றேனேயாவும்வல்லானே. (ருஅ)

நேரிழையார்மோகநிகளத்துந்தீயதெனப்
பாரினருமொப்பும்பசும்பொன்னாற் - சீரிழந்து
போகாமலென்னைப்புரந்தாள்பொதுவெளியி
லேகாந்தமாநடிப்போனே. (ருகூ)

ஏயவுனையன்றியாவரையுமெண்ணேனின்
சேயவரோடென்றனையுஞ்சேர்த்திடாய் - பாய
வருபுலியைக்கொன்றுரித்தாய்வானுலகும்போற்றுந்
திருமருவுதில்லையரசே. (சுய)

அரனேசிதம்பரத்திலாடல்பயிலும்
பரனேயுனைத்தமிழாற்பாடிக் - கரமலர்கள்
கூப்புநலந்தந்தாய்கொடியேன்குறித்தபல
கோப்பும்விரைந்தின்னேகொடு. (சுக)

கொடுங்கோபமாமறலிகுன்றமெனவீழ
வடுங்கோகனகமலர்க்காசைப் - படுங்கோலங்
காட்டினேனெஞ்சங்கரையேன்கனகமன்றத்
தாட்டினானேயிரங்கியாள். (சுஉ)

ஆளாயென்றேத்துமடியேன்றனையிகழ்ந்தாற்
றோளார்ந்தமுப்புரிநூற்சுந்தரன்பாற் - றாளா

ணடந்தகதைமெய்யாமோநாற்றிசையுஞ்சொல்சேர்
படர்ந்ததில்லையானேபகர். (௬௩)

பகரம்பலகாட்டிப்பார்வையம்புநெஞ்சிற்
புகவந்துநிற்பவர்பொய்ப்போக - மிகவேண்டும்
புன்மையென்றுதீர்வேன்பொதுவினடம்புரிந்து
நன்மைதருமீசாநவில். (௬௪)

நவிலரியநான்மறையுநால்வர்முறையுங்
கவிஞர்துதியுங்கொள்கழலிற் - குவியா
மனத்தினேன்சொல்லும்வினைவாயோதில்லை
வனத்தினடமாடியதேவா. (௬௫)

வாரஞ்சிறிதேனும்வைத்திலையேலிந்தமட்டு
மீரந்தமியனேற்கெய்துமோ - கோரமடந்
தீர்க்குங்கருணையென்றுசெய்வாயோதில்லைமன்றத்
தார்க்குங்கழலணிபாதா. (௬௬)

பாதச்சிலம்பலம்பப்பல்லியங்களார்ப்பரிக்கக்
கீதத்துதிமுழங்கக்கிள்ளையன்னாள் - போதக்
களிகூரச்செய்யுநடங்காட்டியென்னையாளா
யளியார்சிற்றம்பலநாதா. (௬௭)

நாதங்கடந்தநலமேநின்மேனியென
வேதங்கள்கற்றோர்விளம்புவார் - நீத
மறிகிலேன்சேந்தன்கூழ்க்காசைகொண்டோனென்பே
னெறிகதிர்ப்பொன்னம்பலத்தானே. (௬௮)

தானந்தவமறியேன்சட்சமயவாதமன்றி
மோனஞ்சிறிதுமுயல்கிலேன் - ஞானமளித்
தாள்வாயோதில்லையரனேயளவில்பல
கோள்வாதைநீங்கற்குறித்து. (௬௯)

குறியிறந்தநிச்சயநின்கோலமெனவே
யறிஞர்பலர்சொற்றிடினுமங்கை - மறிமழுவு
மாதியசீர்நான்மறவேனுடகச்சிற்றம்பலத்து
வேதியனேயென்னைவிடேல். (௭௰)

விடங்கொண்டகண்டத்துவித்தகாவென்றி
நடங்கொண்டதில்லைவனநாதா - இடங்கொண்ட [ற்
மால்விடையிற்றேவியொடுமைந்தனொடுமுன்னுமென்மே
கோல்விடலாமோமடவார்கோன். (௭௧)

கோனாகிப்பார்புரக்குங்கொள்கையினுமிச்சையின்றி
வானாட்டுக்காவலினும்வாஞ்சையற்றுப் - போனார்க்
கிரங்கியருள்பெருமானேதமில்சீர்த்தில்லை
யரங்கினடிக்குமமலன். (எஉ)

அமலபரமானந்தத்தம்பலவாணன்
கமலமலர்த்தாளேகருதிற் - சமரசப்பே
ரின்பமெய்துமன்றியிதுவதெனவாதாடுந்
துன்பமொருசற்றுந்தொடா. (எங)

தொடக்குக்குழியைச்சுகமென்றுநாடிக்
கிடக்குமனமயக்கங்கெட்டு - விடக்கு
முடையார்வாரீடழிப்பார்முன்னுதிருத்தில்லை
யுடையானைப்போற்றுவதென்றோ. (எச)

என்றுமதியங்கியெனுமூன்றுங்கண்ணானார்
மன்றுவெளியானவகைகண்டு - கொன்றுதின்னா
நோன்புற்றருந்தவஞ்செய்நுண்ணியரொல்லாமவர்தம்
வான்புத்திரரெனவாழ்வார். (எரு)

வாரணியுங்கொங்கைமடநல்லார்வாஞ்சையென்னுங்
கோரணிகொண்டேங்குநெஞ்சேகூறக்கே-டாரணியைத்
தேராக்கியூர்ந்தபிரான்றில்லைச்சிதம்பரத்தை
யோராக்கிலேசமொழி. (எசு)

ஒழியாப்பிறவியொழித்துய்யுமுபாய
வழியாதென்றாராயின்மன்றத் - துழியாடும்
பித்தன்கழலாம்பிரசக்கமலமலர்
நித்தங்கருதுநெறி. (எஎ)

நெறியிழந்துன்றன்னருளைநித்தநித்தநாடுங்
குறியிழந்துநெஞ்சங்குலைந்தேன் - மறியணிந்த
கையானேதில்லைக்கனகமன்றத்துள்ளாடு
மையாவெனைத்திருத்தியாள். (எஅ)

திருத்திமயமாஞ்சிவஞானபோதக்
கருத்திலமைந்தவரோகாண்பா - ரொருத்தியுடன்
கல்லைநிகர்நெஞ்சினருங்கண்டுருகக்காமர்மலி
தில்லைமன்றினின்றோன்செயல். (எகூ)

செயலைத்தருவிழையுந்தீயரினுந்தீயா
ரியலைப்பழிப்பதற்பாலென்னை - முயலவிட்டு

வேறுமயலும்விளைக்கின்றேன்மிக்கமன்றி
லாறுபுனைந்தாடுமவன். (அ0)

அவமறுத்துமெய்யடியார்க்காளாகியுண்மைத்
தவமுயலுநல்லுணர்வைத்தாராய் - பவளவரை
யென்னக்கனகமன்றிலென்றுநடிப்பாயெனக்கிவ்
வின்னற்படமுடியாதே. (அக)

ஆதாரநின்னருளையன்றியறிகில்லே
னீதானிரங்காமைநீதமோ - வேதாவின்
சென்னியிலேற்றுண்டுமகிழ்சிற்றம்பலவாவிங்
கென்னினைப்புமுன்றனசைவே. (அஉ)

அசையாநிலையாலருணெறியைப்பற்றி
வசைதீர்ந்தபேராண்மைமன்னித் - திசையாவும்
வெல்லமுயலுவதுமேதகுசிற்றம்பலத்து
வல்லவனைநாடுமனம். (அங)

மனம்போம்வழியேபோய்மாழ்குவேன்வல்லா
ரினம்போந்தவநெறியிலெய்தித் - தினம்போற்றி
யுன்னையடைவேனோவோங்குபுகழ்த்தில்லைமன்றந்
தன்னையிடமாக்கொளுமெந்தாய். (அச)

எந்தைகனகமன்றத்தீசனிருசெவிக்கு
நந்தையணிந்துநடஞ்செய்வோன் - சந்தைநிக
ரிவ்வுலகத்தென்னையெடுத்தாண்டாலெத்தகைத்தா
மெவ்வுலகும்போற்றிசைக்குமே. (அரு)

இசையாதவாற்றினையுமெண்ணியெண்ணியேங்கி
வசைதோயப்பெற்றமனமே - கசையேந்திக்
கோலவிடையூர்வான்குலவுதில்லையம்பலத்தைச்
சாலநினைந்துருகிச்சார். (அசா)

சார்ந்தவருக்கின்பந்தருந்திருச்சிற்றம்பலத்தை
நேர்ந்தவருக்கன்றிநிலவாதே - யார்ந்த
பலசமயப்போராட்டம்பாராட்டுகின்ற
கலகமறுமுண்மைக்கருத்து. (அஎ)

கருத்தனெழிற்றில்லைக்கனகமன்றிற்செய்யு
நிருத்தனிருபொற்றுணினையில் - வருத்தமுற்றுந்
திருமெனப்பன்மறையுஞ்சித்தந்தெளிந்தவல்லோ
ரியாரும்பகர்வதுண்டுண்டே. (அஅ)

உண்டுண்டுறங்கியுலகப்பொருள்விழைந்து
வண்டுண்டபூங்குழலார்வாய்மொழியாங் - கண்டுண்டு
நைவோருறவுதில்லைநாயகன்பொற்ருட்கடிமை
செய்வோருக்காகாததே. (அசு)

ஆகாரத்திச்சையடக்கேனணிநகையார்
போகாந்தகாரத்திற்புக்குழல்வே - னீகாவா
விட்டாலிங்குய்யேன்விளங்குதில்லையம்பலத்திற்
றட்டாதுநின்றபுனிதா. (சுய)

புனிதத்தமிழுணராப்புல்லர்தமையு
மனிதரொனநாடலறமாற்ருய் - பனிதருபொற்
ருளெடுத்துத்தில்லைநகர்தன்னினடிக்குந்தலைவா
வாளெடுத்தகண்ணுமைகேள்வா. (சுக)

கேளிரனையாருங்கெட்டாரெனன்றேசுமென்னு
ளாளிநிகர்வீரமமைத்ததேன் - வாளியொன்று
வில்லடிக்கன்றீந்தவிடைப்பாகாவீறுதில்லை
நல்லடிகளாயமுக்கண்ணு. (சுஉ)

முக்கட்பெருமானேமும்மூவர்ப்பார்த்தளவில்
கைக்கட்கத்தாருதிப்பக்கற்பித்தாய் - மிக்கட்ட
மூர்த்தியுமாந்தில்லைமுதல்வாமுதுகரித்தோல்
போர்த்தியவாவந்தருளிப்போது. (சுங)

போதாலருச்சித்துப்போற்றிசைக்கும்பூசனைச்சீர்
மீதாவலுற்றுமெலிவேனை - நீதா
ஞெருசிறிதும்பார்த்திலையேயொப்பில்புகழ்த்தில்லை
நிருமலனேசற்றேநினை. (சுச)

நினைக்கின்றநெஞ்சினுள்ளுநீயிருப்பதோர்ந்தும்
வினைக்கும்பகைக்கும்வெருண்டேன் - சினைக்கொண்ட
லார்க்கும்பொழிற்றில்லையம்பலவாதொண்டருடன்
சேர்க்கும்படிகருணைசெய். (சுரு)

செய்யபவளவரைச்சீரார்ந்தமேனிமுற்றுந்
துய்யதிருநீறணியுஞ்சோதியே - வையம்
புகழ்ந்திசைக்குந்தில்லைநகர்ப்புண்ணியனேபல்லோ
ரிகழ்ந்திடதீர்த்தாண்டருள்வாயே. (சுசு)

அருள்வாய்ந்தமெய்யடியார்க்காட்பட்டிடாம
லிருள்வாய்ந்தகூந்தனல்லார்க்கேங்கி - மருள்வாய்ந்த

கேடியல்வதென்றொழிப்பாய்கீர்த்திமிகுதில்லையினின்
றாடியபொன்னம்பலவா. (கூஎ)

பொன்னம்பலத்தானேபூதகணஞ்சூழ்வானே
தன்னந்தனியானதத்துவனே - யின்னம்
பிறவாமற்காப்பதன்றிப்பேருலகினோர்போன்
றிறவாதுங்காக்கைகடனே. (கூஅ)

கடல்விட்டெழுந்தான்போற்காசியினில்வாழுந்
திடமிக்குதவியென்னைத்தேற்றி - நடனத்
திருவடியிற்சேர்த்தருள்வான்றில்லைநகரிற்
குருவடிவங்காட்டுமுதற்கோன். (கூகூ)

கோனாகியும்பர்குலம்புரப்பானொன்பணிந்து
வானாயதில்லைமன்றில்வாழ்வானுக் - கானாத
பத்திபுரிந்துபசுந்தமிழ்ப்பாச்சூட்டுநர்க்கே
சித்தியொடுமுத்திபெறுஞ்சீர். (ஈ)

முற்றிற்று.
ஆக கவி - உஈக.

சிவமயம்.

கட்டளைக்கலித்துறை யந்தாதி.

ஆனைமுகனைக்கதிர்வேற்குகனையளித்தருள்வான்
மேனைமின்னுண்மகள்கேள்வன்றிருத்தில்லைமேயபிரான்
றேனையொக்குந்தமிழ்பாடியநால்வரைத்தேற்றியவ
ரூனையுந்தன்வடிவாக்கியவாறுலகோதிடுமே. (க)

ஓதியவேதம்பலதேடவாங்கவற்றுள்ளுநின்ற
வேதியன்றன்னைவிடையேறுவானைவிளங்குதில்லை
யாதியைப்பல்விதமாநினைவார்களுள்ளம்பிகைப்பெண்
பாதியனென்பவர்க்கேயுண்மைஞானம்பலித்திடுமே. (உ)

பலிக்கென்றெரு ரோடுகைக் கொண்டுவெண் ணீறணி பான்மையராய்ப், புலிக்கன் றுரியுடுத் திங்குவந் தார்தில் லைப் புண்ணியனார், கலிக்குஞ் சிலம்பணி காற்பேதை போய்க்கண்டு கைகுவித்தாள், வலிக்கொன்று கைக்கொடி யோன்றொடுத் தான்மலர் வாளியையே. (ங)

வாளிணைக்கண்மடவீரொனக்காசைவயங்குகொன்றைத்
தோளினர்தம்மைப்பொனம்பலத்தேகண்டுதோய்ந்திட
வேளிகன்முற்றியுந்தாய்வசைமீறியுமெத்தநொந்தே [வே
ளிதுநன்றவரோர்ந்திங்குவந்திடினன்றுநன்றே. (ச)

நன்றனைத் துந்தருந் தில்லைப் பிரானெனை நம்புமன்பாற், குன்றனைத் துங்கொளுஞ் சேய்போல்வைத் தாளெனக் கூவிக்கெஞ்சு, மென்றனைத் தொண்டரிற் கூட்டுங்கொ லோவல்ல தேமன்கையால், வென்றனை யாதனைத் தாங்படைப் பாக விடுக்குங்கொலே. (ரு)

விடுக்கின்ற தூதனு மாய்த்தமிழ்ப் பாடல் விழைந்தணிந்தோ, னெடுக்கின்ற தாளுடைத் தில்லைப்பி ரான்பொன் னிதழியெனத், தொடுக்கின்ற வென்கவி சூடாதிகழினுந் தோடமில்லை, யடுக்கின்ற மெய்யடி யாரினங் கேட்டுவப் பாகுமன்றே. (சா)

அன்றைக் கொருவ னொருபது பாடலுக் காடகமுங், குன்றைப் பொருவுநெற் கோட்டையு மீந்த குணஞ்சிறிது, மின்றைக்குன் பாலில்லை யேற்றமி யேனுய்கை யேதையகோ, கொன்றைச் சடைத்தம்பி ரானேதென் றில்லையிற் கூத்தினனே. (எ)

கூத்தாடுமீசனைத்தில்லையில்வாழுங்குணக்கடலைச்
சேத்தாள்வருந்தப்பரவைதன்பான்மிகச்செல்லவிட்ட
பாத்தானெவ்வாறந்தவாறென்றனுவிற்பகரடியோ
நீத்தாருமால்கொளவெண்டாமரையினிலவுமின்னே. ()

மின்னேருஞ் சிற்றிடை யாளிடந் தூதுவிடுத்ததெண்ணிப், பொன்னேர் தமிழ்ப்புல வோர்தங்க ளாவலைப் போக்கினையோ, வென்னேய மப்படிச் செய்யாது வந்தின்ப மீந்தருள்வாய், நன்னேயத் தோர்க்கெளி யாயல்லை யோதில்லை நாயகனே. (கூ)

நாய்போலு நெஞ்சை மதவேழ மாக்கிட நண்ணுகின்றேன், றாய்போல்வந் தாண்டுமை யாண்முலைப் பான்மிகத் தந்துனது, சேய்போ லொளிர்தரச் செய்யினல் லாவிச்சை தீருங்கொலோ, காய்போலுந் தன்மையர்க் காகாச்சிற் றம்பலங் காப்பவனே. (ய)

காப்புடன் முற்று மணிவாரைத் தொண்டர் கணக்
கிற்சொன்ன, பாப்புகழ் சத்திய மாறனாலும் வேனெனப் பா
டுமிறு, மாப்புநின் றன்னரு ணல்கலன் றேவல்லை வாழ்
வித்திடாய், கூப்புகை யார்க்கெளி யாய்தில் லைவாழ்நங்
குலதெய்வமே. (௰௧)

குலதெய்வ மாமெனப் பன்மதத் தோர்களுங் கொ
ள்ளவெண்ணில்,பலதெய்வ மாகி விளையாடல் சிற்றம் பல
த்தினிற்க, வலதெய்வ மேயெனத் தேர்ந்தெழுத் தைந்
தும் வழுத்துமவர், சிலதெய்வ மாநிகழ் வாரிந்த ஞாயந்
தெரிவரிதே. (௰௨)

தெரியாத தத்துவன் சிற்றம் பலத்துச் சிவனெனப்
பல், பெரியார்முன் னாளி லுரைத்தாலு மென்னது பே
தைநெஞ்ச, நரியாங் குதிரையிற் றிருண்டனுக் காவந்த
நாதனென்று, மெரியார்கைச் சித்தனென் றுந்தினந்தோ
றுமிக் கெண்ணியதே. (௰௩)

எண்ணில்பல்யோனியினுட்போய்ப்பிறக்குமிழிவொழிய
நண்ணியமேலவர்க்கெல்லாஞ்சபையினடம்புரிந்தும் [ம்
விண்ணினுந்தேறும்வெளியாயெண்மூர்த்திவிளக்கமுமா
புண்ணியன்றன்கழலல்லாதுவேறுபுகலில்லையே. (௰௪)

புகலிக்கவுணியன்போல்வானொருவன்புவியில்வந்து
பகலிற்றிகழ்தரச்செய்கெனப்போற்றெனைப்பாருலகோர்
நகலிற்களிப்புனக்குண்டுகொலோதில்லைநாயகனே
தகலிக்குணமல்லவேலெனக்காரன்றுதந்தவரோ. (௰௫)

தந்தக்கரியைப்புலியோடுரித்துத்தரித்தபிரான்
மந்தக்கருத்தருணாச்சிற்றம்பலவாணனெங்கு
மெந்தக்கலையினுந்தோய்ந்துநின்றோனவனேயெமது
சொந்தக்கடவுளல்லாற்பின்னைவேறுதுணையில்லையே. ()

இல்லையென் றேற்பவர் மேல்விழுந் தேசிடு மீனருக்
கென், சொல்லைவில் லாதருட் பேறுநல் காய்தமிழ்ச் சுந்
தரன்பால், வில்லையொப் பாமுடற் கொண்டேடோன்
றேந்தி விளங்கிடனீ, யல்லைகொல் லோசொல்லி டாய்தி
ல்லை வாழ்பர மானந்தனே. (௰௭)

ஆனந்தநாடகஞ் செய்வானைத் தில்லையி லந்தணனை
வானந்தமாயுநிறைந்தானைச்சந்ததம்வாழ்த்துகில்லீர்

பானந்தவிர்ந்துருளும்போதியமன்பகட்டில்வந்தா
வீனந்தணந்தும்மையாளவல்லாரில்லையெண்ணுமினே. ()

எண்ணுங் கருத்தினுக் குள்ளுநின் றுனையிங் கெவ்வுயிர்க்கும்,கண்ணுங் கருத்துங் கொடுத்தானைத் தில்லைக் கனகமன்றி, னண்ணுந் தொழும்பர்க் கெளியானை நாடொறு நான்றுதித்தன், மண்ணுங் ககனமுங் கொண்டாடும் பேரின்ப வாழ்வுறவே. (௰௯)

வாழைக்கனியுகுந்தேன்பாய்வயற்றில்லைமன்றிடத்தோ
ரேழைக்கெதிர்நடஞ்செய்வானைக்கண்டபெண்ணேந்துமி
மாழைக்குவடுறழ்கொங்கைச்சுணங்குமலிந்துநொந்து [ரு
தாழைப்பனிமலர்வாளானைவைதுதவிக்கின்றதே. (௨௰)

தவிசிற்படைமன்னர்பல்லோர்பராவத்தவளநிறக்
கவிகைத்தனிநிழற்கீழிருந்தாலுங்கனகமன்றத்
தவிர்சிற்பரனைக்கருதார்களாகிலடுத்தவுடல்
புவியிற்கடைப்படுபுல்லாதியாகிப்புலர்வதுண்டே. (௨௧)

புலமைத் தொழிற்பெற் றிருந்தாலுந் தில்லைப் பொதுவினிடை, யிலகுற்ற நாதனை வாயார வாழ்த்தி யிகபரச்சீர், குலவப் பெறுமொளிற் பாவிக ளேயெனக் கூறுமுண்மை, நலமிக் களிப்பதன் ஞேன் றொண்டர்தாளி னறுந் துகளே. (௨௨)

துகளறுமுண்மைச்சமரசஞானச்சுகம்விளைக்கு
நிகளமொப்பாம்வினையெல்லாமறுக்குநன்னீதிதருஞ்
சகளமுநிட்களமுந்தானெனத்தில்லைதன்னினின்றோ
னகளசரோருகமன்னமென்றாள்களினன்பொன்றுமே. ()

அன்பொரு சற்று முறுதாசை யென்னு மலைகடலிற், றுன்பொருங் கெய்திச் சுழன்றிடைந் தேனருட் டோற்ற நல்கி, யின்பொருங் கெய்தப் புரிவாய்கொ லோதில்லை யிற் சிவனே, மின்பொரு செஞ்சடை மேற்பிறைக் கீற்றணி வேதியனே. (௨௪)

வேதியர்வாழ்திருத்தில்லையிலாடல்விளைக்கும்பிரான்
மாதிரமெட்டுங்கரமாகநின்றவன்வானவர்க
ளாதியருக்குமறிவரியானென்னையாண்டுகொண்டா
னீதிநன்னூன்முறைமாறுதுலகினிலைநிற்குமே. (௨௫)

நிலைநின்றகீர்த்திபலகோடிநாட்டிப்பினெஞ்சகத்தி
னலைவின்றிக்கண்டுனடித்தாமரையிலமையுமிச்சை
தலையென்றமெய்யுணர்வீந்திலையோவருடந்தருள்வாய்
கலையொன்றுமந்தணர்வாழ்தில்லைமேவியகாரணனே. ()

காரணமாயதன்காரியமாகிக்கலந்தபரி
பூரணமாயபொருளியாதென்ருய்ந்திடிற்போதனுக்கு
நாரணனுக்குநடுவாகித்தில்லைநகரிடத்தி
லாரணமாகமம்போற்றநின்ருனென்றவிர்தருமே. (உஎ)

அவியாப்பொறிகளைாைந்துமனத்திலடங்கியப்பாற்
குவியான்மநீங்கதுகொண்டுநின்கோலங்குறிப்பதென்ருே
புவியாதியாமுலகெல்லாம்பரவும்புகழ்த்தில்லையிற்
செவியார்ந்தசங்கொடுநின்ருடுஞ்சற்குருதேசிகனே. ()

தேசிகன் வேறருட் சீர்த்தெய்வம் வேறெனச் சிந்தை செய்து, மாசியன் றேய்குறு மானிட ரோகங்கை மன்னும் வட, காசியிற் செத்திடி லெய்துமெய்ம் முத்தியைக் காணினல்கிப், பாசிப டாதொளிர் பொன்னம் பலத்தினிற் பார்த்துய்ம்மினே. (உகூ)

பார்த்தனன் றங்கைவில் லாற்சடை மீது பரித்திருக்கும், தீர்த்தஞ் சிதற வடித்தற் குவகை செயுங்கருணை, மூர்த்தம தாந்தில்லை யாண்டானென் செஞ்சொன் முறையிகழ்ந்தாற், சீர்த்தபன் னூல்களும் பொய்யெனச் சிற்சிலர் செப்பன்மெய்யே. (கூ0)

செப்பன்ன கொங்கைச் சிவகாமி தோள்புணர் சீரியர்தந், துப்பன்ன மேனியுந் தூக்கிய தாண்முதற் சொல்லுறுப்பும், பைப்பன்ன கப்பணி யாதியபொற்பும் பதிந்தநெஞ்சிற், றப்பன்ன தோன்றுங்கொல் சொல்லாய்வெண் டாமரைத் தாழ்குழலே. (கூக)

தாழாவிரகத் தகைதோய்ந்து பற்பல தையனல்லா, ராழாழி யன்னகண் ணலெழின் மாந்தச்சென் றையமென்ருர், வாழா லயங்களிற் றில்லைமுன் ஞமென மாமறையும், பாழாதி யென்றெண் ணிடாத்தொண்டர் தாமும் பகர்வதுண்டே. (கூஉ)

பகலன்னபூணணய்கார்வலிதேத்தினும்பாசமுருர்
திகழுமெய்வீட்டினின்மானுருருப்பொருஞ்சித்திரத்து

மிகமருள்வேனுறவேண்டுகின்றேன்றரும்வீறுளதோ
வகலணியாடகமன்றினின்றுடுமருட்கொண்டலே. (௩௩)

கொண்டலைப்போலுங்குழலார்தம்மோகக்குழியில்வீழ்ந்
தெண்டருநெஞ்சினனுத்திரிவேனுய்யவென்றருள்வா
யண்டரும்போற்றற்கரியாய்திருத்தில்லையம்பலத்தாய்
வண்டமிழ்நால்வர்க்கொருதஞ்சமாகியமாமணியே.. (௩௪)

மாமருந்தாயநின்பஞ்சாக்கரத்தைமறந்துசில
தாமதநூல்வழிசென்றுபொய்ச்சூனியந்தன்னில்வீழேன்
காமருசேவடிதந்தருள்வாய்செங்கனகமன்றிற்
கோமளக்கோகிலமன்னுண்முன்னுடுங்கொழுஞ்சுடரே. ()

சுடராயமுக்கட்பிரானும்பராதியர்தோத்திரங்கொண்
டிடராவனகளையும்பலசெல்வனையீன்றருள்வா
னடராயனுமன்றினின்றிலனேற்பலநல்லுலகும்
படராருயிர்த்திரளும்பொடியாகிப்பறந்திடுமே. (௩௬)

பறந்தபுட் போலுருக் கொண்டொரு சீயத்தின் பா டழித்துச், சிறந்த வுலகமெல் லாம்புரந் தோன்றிருத் தில்லையிடை, மறந்தரு கார்முயன் மீதுநின் றுடிய வானவன் றுன், புறந்தனி லுள்ளிற் பொதுவா விளங்கிய பூரணனே. (௩௭)

பூரணமாகிப்பொதுவினின்றுடியபுண்ணியனுர்
காரணசற்குருவாவருவார்சிவகாமவல்லி [ரோ
வாரணக்கோடன்னகொங்கையின்மேலிச்சைவைத்தில
ஞரணனுதியர்க்குந்திருவாதியர்நாட்டமின்றே. (௩௮)

நாட்டநின் பாதங்க ளென்னமுன் னோர்பலர் நன்குரைத்தும், வாட்டடங் கண்ணியர் மேற்றினம் போய்மருள் வஞ்சநெஞ்சேன், கோட்டவிர் சித்தியு முத்தியும் வேட்டுள்ள கொள்கையர்போற், பாட்டனந் தம்பகர் வேன்றிருச் சிற்றம் பலத்தண்ணலே. (௩௯)

அண்ணலைப் பொன்னம் பலத்தானைச் சந்தத மஞ்செழுத்தா, லெண்ணவல் லார்க்குமற் றுென்றுள தோவவனெவ்வுலகுந், தண்ணளி யாற்செய்து தாளுகியாதினுந் தாக்குதலற், றுண்ணரிக் கண்ணுமை யோடுவெள் ளேறுமுகைப்பவனே. (௪0)

உகைக்குந்திறலயிராவணத்தானையுலகமெல்லாம்
பகைக்குந்தகுவர்புரமூன்றும்வெண்பொடிபட்டுவிழ
நகைக்கும்பரமனையம்பரத்தேவரநல்குகையிற்
றகைக்குந்தகையினரின்றெனவேமறைசாற்றிடுமே. (சக)

சாற்றணி யார்திருத் தில்லைப் பிரானருட் டன்மையி
னுற், றோற்றலெல் லாமுண்மை யாமா றெழுத்தைந்துஞ்
சொற்றிறைஞ்சாய், கூற்றனை முன்னொரு சேய்வெல்லல்
கேட்டிலை கொன்மனமே, நாற்றமெய் மாதர்மென் கொங்
கையிற் கொள்ளு நசையறுத்தே. (சஉ)

நசையனைத்துந்தணவாதெய்தியின்புறநாடுமென்னை
வசைமிகச்சூழ்ந்ததுகண்டிலையோவருள்வாழ்க்கைநல்காய்
கசையெடுத்துத்தகருய்ப்பான்றனையெற்கைவிட்டிடே
லசைவின்மெய்ச்சீர்திகழ்தில்லையிலாடியவற்புதனே. ()

அற்புதச்சித்திபலவாறுசெய்வதற்காசைகொள்வேன்
புற்புதக்கொங்கைநல்லார்மையனோயிற்புலர்கைநன்றோ
கற்புடைப்பார்ப்பதியாள்கணவாமெய்க்கருணையின்றோ
சொற்புகழ்வாய்ந்தசிற்றம்பலத்தேதிகழ்தூயவனே. (சச)

தூயவெண் ணீறுடன் முற்றணி வேற்கருட் டோற்ற
மின்றேன், மாய வுலகின்மற் றுருய்கு வாறொன்றும் வாடு
கின்றேன், மேயநின் னல்வமொ டென்னையுஞ் சேர்க்கும்
விருப்புற்றிடா, யேயசிற் றம்பலத் தாடுமெந் தாய்மிக்
கிளைத்தனனே. (சரு)

இளைக்கின்ற நுண்ணிடைப் பாவைய ராவன்மிக்
கெய்திநொந்து, களைக்கின்ற பாழ்விதி மட்டமை யாதயன்
காமர்வண்டை, வளைக்கின்ற கொன்றைச்சிற் றம்பலத்
தையனை வாழ்த்துமன்பிற், றிளைக்கின்ற பேறும் வளாந்தா
னெண் கைகளுஞ் சீர்பெறுமே. (சசு)

சீரானனங்களைந்துள்ளானைத்தில்லைச்சிவனையருட்
பேராயிரம்புனைந்தம்பலத்தாடும்பிரானையன்றி
யாராதிக்குஞ்சிலதெய்வங்களுண்டென்றலமந்ததால்
வாராததுன்பங்கள்பல்கோடியென்னிடம்வந்தனவே. ()

வந்தனஞ்செய்பவர்க்கெல்லாவரமும்வழங்குமெந்தை
மந்தரக்கொங்கைக்கவுமாரிநாயகன்வண்டமிழ்ச்சீர்ச்
சுந்தரத்தோழன்றிருத்தில்லையானெனைத்தொல்லுலகிற்
கந்தனைப்போலவைத்தாலன்றிநெஞ்சங்களிப்பதன்றே. ()

களிவண் டுளையு மலர்க்கொன்றை யார்செங் கனக மன்றி, லெளிவந்த தேசிகர் பன்னும ரூபமு மேற்றுப் பின்னர், வெளியன்றி வேறின்மை காட்டி யெல்லாமென் றன் மீதெறிந்த, தொளியொன்று நெஞ்சின ரோர்வார் மற்றோர்க ளுணர்வரிதே. (௪௯)

உணர்வுங் கடந்த நிலையம் பலத்தி னொருவர் சொந் தம், புணரும்பொய்ப் பாசமென் சொந்தமற் றியாவும் பொதுவெனுஞ்சீர், துணையொன்று பன்மல ரான்மிகப் பூசித்துத் தொண்டுசெய்து, திணரும் படியெழு தேங் கிய பின்னர் திகழ்ந்ததன்றே. (௫௰)

திகழாடகத்திருமன்றினின்றுடுஞ்சிவனையன்பிற்
புகழாமன்மற்றுஞ்சிலதேவருண்டெனப்புண்படுநா
ளகழாழிசூழுலகோர்வெறுத்தார்மெய்யறிந்து கொண்டே
னிகழாரினிச்சித்தியெட்டுமெய்வீடும்வந்தெய்து மன்றே.

எய்துபொல் லார்தமைக் கொல்வது நண்ணி யெரிய நகை, செய்துவென் றூர்தில்லை நாடகத் தார்தந் திருவரு ளைப், பெய்துமெய்ப் பேறிரண்டுந் தரல்வேட்டுள்ள பெ ட்பினருக், கைதுதவுந் துணையா தெனத் தேர்ந்திடி னஞ்செழுத்தே. (௫௨)

அஞ்சக்கரம் புணையா மெனத்தேறு மவன் கவியை, நஞ்சக் கறைக்கண்ட னூர்திருத் தில்லை நகரினிடை, செ ஞ்சக் கரச்சிலைக் கையால் வளைந்திடற் றேர்ந்துய்ம்மி னோ, வஞ்சக் கருத்தினர் பொய்ந்நூலிற் கட்டுண்டு மாழ் குநரோ. (௫௩)

மாழைப் பெருவளை தாங்கிய பாகத்தை மையல் கொள்ளு, மேழைக் குதவுசிற் றம்பலத்தார் தம்மை யே த்திமனக், கோழைத் தனங்கெட்டு வேலேந்துஞ் சேயிற் குலாவுமன்ப, ரூழைப் பொருளெனச் சற்றுமெண்ணு ருண்மை யுண்மையிதே. (௫௪)

உண்மைப்பரந்தில்லையம்பலத்தானொன்றுணர்ந்தவர்கள்
பெண்மைக்கவுரிகணநாதன்வேண்முதற்பேசரிய
வண்மைக்கடவுளரெல்லோருந்தாஞ்செய்தமாதவத்தாற்
றிண்மைப்பொலிவுபெற்றோரென்னுஞாயந்தெரிந்தவரோ.

தெரிக்கின்ற வேயுணர் கின்றவென் னெஞ்சொரு சிற்சபையா, யரிக்கிண் கிணித் திருத்தாட்டில்லை யீச

னின் முடிடினும், விரிக்கின்ற தோகை மயில்வாகனமும் வை வேற்படையும், பரிக்கின்ற பேறு விரும்பாதி ரோ ணண்டர் பார்த்தொல்கவே, (௫௬)

ஓல்கித்தகுவர்தங்குற்றேவல்செய்துழலும்பர்சிலர்க்
கல்கிளர்கண்டமுதலாயகோலமமையும்வண்ண
நல்கியசிற்றம்பலத்தானெனக்கவர்நன்மகவாம்
பல்கிரியானுருநல்கார்கொலோதமிழ்ப்பாரதியே. (௫௭)

பாரவர்வேண்டும்வடிவங்களியாவும்பரிந்தெடுத்துச்
சீரனந்தஞ்செய்துகொல்லாமைநாட்டிநின்சேவடியி
ஞரணனெல்கப்புகுமாட்சிவேட்கைநரர்தன்மையோ
வாரணநூன்முழங்குந்தில்லையூர்ச்சச்சிதானந்தனே. ()

நந்தன் மனையில் வளர்ந்தா னடைந்த நலத்துமுயர், செந்தகை வேட்டுத் தமிழ்ப்பாட லாலுந் தெரிக்குமென் னை, யிந்தவுலகு மிகழ்ந்தோத விட்டு விடேலிமையார், வந்தனை கொண்டு வந்தாய் வளைநேர் செம்பொன் மன் றத்தனே. (௫௯)

மன்றற் கடுக்கைச் சடைத்தம்பி ரான்றில்லை வாழ்பர மன், றென்றற் கிரிமுனிக் கோர்மொழி யாற்புகழ் சேரச் செய்தோ, னென்றற் கொரற்புத வாழ்வளிப் பானெனி லிவ்வுலகத், தொன்றற்கொன் றுவ்வுத லில்லாச் சமய மொருங்கஞ்சுமே. (௬௰)

ஒருங்கொருதன்வடிவேயெனத்தேறுமுணர்ச்சிநல்கிப்
பருங்கழுகன்னபொல்லார்பகைமேவிடப்பார்த்தருளி
னெருங்குமடியவர்தங்கூட்டத்தாசையுநீடச்செய்தோன்
மருங்குறைவாளொடுமன்றினின்றுடியவானவனே. (௬௧)

வானாளும் வாழ்க்கையி னின்னுணை யாதொன்றும் வாஞ்சையில்லை, யானலு மம்புவியிற் கொலைநீக்கு மத னிமித்தம், வேனொண் சித்தியி லாசையுற்றேன் பின் னின்வீட் டிச்சையே, தானாகி யொன்றினுந் தோயாது மன்றிற் றழைத்தவனே. (௬௨)

தழையேந்துங் கையினர் தம்மினுந்தீயர் தயங்கவெ ல்சீர், விழைவேன்றனுள்ள மறியாய்கொலோ மழுவெள் விடைமேற், குழைதாங்கும் வால்வளை யாதிய கோலங் குலவவந்து, பிழைதீர்ந்த பேறருள்வாய் தில்லைமன்றிற் பிறங்கண்ணலே. (௬௩)

பிறங்கற்குவடுதொறுமாடநீதரும்பிள்ளையென
நிறங்கட்டழகுமயில்வேன்முதற்கொடிநீணிலத்தின்
மறங்கட்களைந்திடவல்லானொருவன்வரச்செய்திடா
யறங்கற்றவந்தணர்வாழ்தில்லைமாநகராள்பவனே. (௬௪)

ஆளாமென் றென்னையுங் கொள்வாயென் றெண்ணி
யடிபணிந்தேன், வாளாய கண்ணியர்மோகக் கடலில் வரு
ந்தவிடேன், மாளாமுனிவரும் வானவர்தாமு மகிழ்ந்
திறைஞ்சக், கோளாளர் காணருஞ் சிற்றம்பலத்திற் குதிப்
பவனே. (௬௫)

குதிக்கின்ற நின்னருளென்ற னளவினுங் குன்றியதோ,
மதிக்கின்ற தற்கரிதாம் வினைப்பேயின் வலிகொடிதோ,
விதிக்கின்ற வன்றலையோட் டிரந்தாய்விடம் வேண்டியு
ண்டாய், துதிக்கின்றவர்க் கெளியாய் தில்லைவாழருட்
சோதியனே. (௬௬)

சோதிக்க வேண்டுங்கொ லன்பருளத்தின் றுணி
வதனைப், பேதிக் கவும்வல்லை யல்லைகொல் லோநின் பெ
ருந்தகைய, நீதிக்கொவ் வாவிதஞ் செய்யா திரங்கிமுன்
னின்றருளா, யாதிக்கனக சபைநாத னேவிரைந் தஞ்ச
லென்றே. (௬௭)

அஞ்சனக் குன்றொக்கு மால்வேழ மொன்றுரித் தா
ர்க்கும்பிரான், வஞ்சனைச் சிந்தையொர் சற்றுமெய் தாது
வரங்கொடுப்போன், பஞ்சன்ன மெல்லடிப் பாவைய ரோ
ங்கப் பலிகவர்ந்தோ, னஞ்சன்ம வாதனை தீர்த்தாள மன்றி
னடிக்கின்றதே. (௬௮)

நடிக்குந்திருவடிச்சீர்கருதாதவர்நாணும்வண்ணம்
படிக்குந்தமிழ்ச்சுவைசற்றளித்தாய்பலபாதகர்மே
லிடிக்கும்படியருளீட்டிதந்தாயிலையென்செய்குவேன்
வெடிக்கும்பல்பூமணமோவாததில்லையின்மேயவனே. ()

மேயும்பசுமறையாடன்னவற்றைவெருட்டிக்கொன்றுண்
டேயுங்களியடைவார்தமக்கஞ்சிமற்றேனையர்தாம்
வாயும்புதைக்கின்றநாளெனைப்பாரில்வரச்செய்ததேன்
காயுங்கொலைமழுவேந்திமன்றாடியகண்ணுதலே. (௭௰)

கண்ணானை யென்னுண்மை யீதேயென் னென்னிற்
கனகமன்றில், விண்ணாகிச் சற்குரு நாதனுமாகி விளங்கு

ம்பிரான், றண்ணு ரருள்பெற் றுலகிற் குதவுந் தருமத்தி னு, மெண்ணுத நெஞ்சுமின் மெய்வீட்டு வாழ்க்கை யெ ளிதென்பதே. (எக)

என்பதுபெண்ணுருவாகச்செய்தான்றனக்கீந்தவரு
ளின்பமென்பாலுறத்தில்லைப்பிரான்றரினிக்கணமே
மன்பதைமுற்றுங்கொலையும்புலையுமறக்கச்செய்து
பின்பவன்றன்பதஞ்சேர்வேனதனிற்பெரிதிதன்றே. ()

பெரிதாய முத்தியைப் பல்லோர்க் குதவுநற் பிள்ளை பெற்று, மரிதாய பொன்கொண்டுஞ் சீகாழி யந்தண னுங் கிழவன், பரிதாப மின்றிப் பசுவதைத் தானென்ன பாவ மந்தோ, வெரிதாங்கிப் பொன்னம் பலத்தேகின் றாடிடு மென்னப்பனே. (எ௩)

என்னப்பனென்றொருமானிடன்பாரிலிருக்குமந்நாள்
பன்னப்படாதநின்மெய்யருளாடற்பலிப்புறினும் [ஞே
பொன்னப்படிக்கொலைக்காவிழைந்தானல்கப்போதுவ
வுன்னப்படுமனத்துந்தில்லைமன்றத்துமுற்றவனே. (எச)

உற்றறிதற்கரிதாமெய்யுணர்ச்சியுதவியநின்
னற்றனைக்கியான்செயுங்கைம்மாறுண்டோவருணல்கியெ
முற்றவுஞ்செய்தலுநின்கடனேதமிழ்மூன்றுநன்கு [ண்ண
கற்றவர்வாழ்திருத்தில்லையிலாடியகற்பகமே. (எ௫)

கற்பனைப்பாடல்கழறுஞ்சிலர்க்குங்கருணைசெய்யுந்
தற்பரன்மேவியதில்லைச்சிதம்பரந்தன்னிற்சென்று
பொற்பவிருஞ்சிவகங்கையின்மூழ்கியபுண்ணியனாச்
சொற்பனத்துங்கருதாமெனொடவன்றூதருமே. (எசு)

தூதாகிச்சுந்தரற்காச்சென்றதேனவன்சொன்னதுதி
காதாரக்கேட்டதற்கென்றொப்பிடேனெதுகாரணமோ
நீதானறிவையதைப்பகர்ந்தாலந்நெறியினிற்பேன்
போதார்பொழிற்றில்லையம்பலத்தாடியபுண்ணியனே. ()

புண்ணியநாவலர்பற்பலர்வேண்டல்புரிந்துளநீ
யெண்ணியவாறெனக்கியாதொன்றுநல்கிலையேனுனது
கண்ணியங்குன்றியதோவிந்நாள்கவிகைக்கின்றதோ
திண்ணியர்போற்றப்பொதுவினின்றூடல்செயுஞ்சிவனே.

சிவனேபொன் னம்பலந் தன்னினின் றாடிய தேசிக னே, தவமார்க்க மொன்றுமில் லேன்கூழை மோனைசொ

ற் சாரமின்மை, யவமீறும் கன்மிக ளாசாரம் கைக்கொள லாதியதீர், நவமாய செந்தமிழ்ப் பாடில ளேவரு ணல் கெனக்கே. (எகூ)

எனக்கின் றொருவர நீதர வேண்டும தென்ன வென் னிற், கனக்கும் புவித்தலை மானிட ரியாவரும் காதுதல் விட், டுனக்கன் பராதல்செய் தேமுத்தி வேண்டு முறுதி கண்டாய், வனக்குஞ் சரத்துரி போர்த்துப்பொன் மன் றில் வளர்தெய்வமே. (அ௦)

வளங்கெழு நின்னருட் பெற்றுஞ்சில் கோயிலில் வா ய்மென்றிடா, விளங்கன்றைக் கொல்லலை யானுலு நீக்கில ரோய்ந்தமுத்தி, களங்கம தேயெனச் சொல்லுமென்னுண் மையைக் கற்பித்ததார், விளங்கும் கனகமன் றிற்றின மா டிய விப்பிரனே. (அக)

விப்பிரர்வேள்விக்கொலையுந்தகாதென்றோர்மெய்ப்புலவ
செப்பினனப்படியிவ்வுலகத்தைத்திருத்தவல்ல [ன்
கைப்பிரசண்டத்தனிவீரன்றோன்றக்கருணைசெய்வாய்
தப்பிலியென்றிகழ்ந்தாற்புரந்தாய்தில்லைச்சங்கரனே. ()

சங்கரமாமுனியாதியவுண்மைச்சமரசத்தோர்
தங்களுக்கும்பொருந்தாவிச்சையன்னவர்தாண்மலராஞ்
செங்கமலத்துகள்சூடுமென்சிந்தையிற்சேர்த்தபிரா
னங்கனகந்திகழ்மன்றுனவன்செயலாய்வரிதே. (அ௩)

ஆயும்புகழ்த்திருத்தொண்டத்தொகையிலருண்மிகையா
னீயுமெழுதுந்தமிழ்ப்பாவலனைநிகழ்த்திலதா [தாய்
லேயுமொருவனைக்கொண்டவன்றன்னைமட்டேத்தச்செய்
சாயுங்கழற்றனித்தாண்டவனேதில்லைத்தானத்தனே. ()

தானவர்முப்புரஞ்சுட்டானைத்தொண்டன்றமிழ்விரும்பி
மீனவன்கையடிபட்டானைத்தில்லையில்வேதியனைக்
கானவனுகியொர்பன்றிபின்னேகியகாரணனை
வானவலாரியின்மிக்கோரலார்சற்றும்வாழ்த்தலரே. ()

வாழ்த்தலை யன்றிமற் றோர்பணி செய்யும் வகையறி யேன், காழ்த்தநெஞ் சாளர் பகைகோடி கொண்டு கலங் குகின்றேன், பாழ்த்தலை யுந்துயர் தீர்ந்தரு ளுட்டம் பழ கச்செய்வாய், வீழ்த்தசெஞ் சீர்ச்சடைக் கற்றையனுந் தில்லை மெய்ப்பொருளே. (அசு)

மெய்ப்பொருணீயெனத்தேறார்கள்போல மெலிந்தடியே
பொய்ப்பொருளேதுணையென்றுலகூடுழல்பூரியர்தங் [ன்
கைப்பொருளுடுவதென்றொழிப்பாய்செங்கனகமன்றி
னைப்பொருளாங்குரவாபரவாருக்கரியவனே. (௮௭)

அரியயன்றேடற்கரியானையீடில்சிற்றம்பலத்துப்
பெரியவன்றன்னைப்பெறற்கரிதாமகர்ப்பெற்றவனைக்
கிரியையன்றருகன்னிதன்கேள்வனைக்கேட்டவர்க
ளுரியவர்தாமெனமற்றொருதேவனையுன்னலரோ. (௮௮)

உன்னுங்கதிர்மதியங்கிகண்ணாகியுலகமுண்டோன்
றன்னந்தரங்கமனையாட்டியாகித்தனிவெளியாம்
பொன்னுந்துசிற்சபையேயிடமாகியபூரணன்போ
லின்னங்கடவுளர்வேறுளராகிலியம்புமினே. (௮௯)

இயமானனைவகைப்பூதங்கதிர்மதியென்னுமெட்டிற்
கயலாவதொன்றுமில்லாமையறிந்துமவைகளுந்தன்
மயமானசிற்றம்பலத்தானைப்போற்றிவணங்குகிலா
ருயவேறுமார்க்கங்களில்லையென்றேமறையோதிடுமே. ()

ஓதியங்கற்றைமடமானனையவர்க்குள்ளுருகுங்
கீதியன்றுள்ளவரானாலுந்தில்லையிற்செம்பொன்மன்றத்
தாதியைப்போற்றுநரானாலென்மட்டுக்குமன்னவர்தாம்
வேதியன்றன்னைப்புடைத்தோனுமைந்துகைவேழமுமே.

வேழமுகன்முதலாம்பலதேவரைவேண்டுநரோ
யாழறிவில்லவனென்றென்னையெள்ளன்மினாறுநெறி
வீழறிஞர்க்கும்பொதுவாயவெட்டவெளிதிகழ்ந்தா
னூழதன்றன்வழிநீர்நாடுந்தெய்வங்களும்முயிரோ. (௯௨)

உயிருமுடலுந்தனதாகக்கொண்டன்பரூழ்வினைப்பேய்ச்
செயிரொழித்தாண்டருள்சிற்றம்பலத்துச்சிவபெருமான்
பயிரிடுவாரொத்துநின்றானவனருட்பாங்கெளிதோ
மயிர்நுனியத்தனையும்பிரியாதெங்கும்வாய்ந்ததுண்டே. ()

வாய்ந்தசூறையனந்தந்தொழுதேத்திடவானமுற்று
மேய்ந்தபொருளெதென்றாராய்ந்தறியினெழிற்சடையிற்
றேய்ந்தமதியணிந்தம்பலத்தாடியசித்தனென்றே
யோய்ந்தவினையுடையார்சிந்தைதோறுமொளிருமன்றே.

ஒளிக்கின்ற தன்மை நிற்கேனெங்கு நீநிறைந் துற்றனையென், றளிக்குணத் தொண்டரும் பன்னூற்றிரளு

மறைகை பொய்யோ, விளிக்குமென் றன்னுள்ளு நீயில்லை யோர்வந்து வேண்டனல்காய், களிக்கரு வண்டிசைக் கொன்றை குலாந்தில்லைக் காவலனே. (சுரு)

காவல்செய் யென்றரிக் கன்றீந்த சக்கரங் காமர்குன்றி, யேவ லொன் றும்புரி யாக்குணந் தோய்ந்ததென் றெண்ணுகின்றேன், பூவ லயம்படும் பாடுண்மை யாளர் பொறுக்கரிதென், ஞுவலிற் சற்றரு ளாய்தில்லை மன்றத் தமர்ந்தவனே. (சுசு)

அமரர்தஞ் சேகர மானுனைத் தானவ ரற்றொழியக், குமரனை யீன்றரு ளிச்செய்கை வேலுங் கொடுத்தவனைப், பமரம ருமலர்க் கொன்றையி னுனைப் பசும்பொன் விற்கைச், சமரனைத் தில்லையிற் கண்டு தொழார்தங் தவம் பழுதே. (சுஎ)

தவம்புரியாமலிளமுலைமாதர்தமக்குருகி
யவம்பலநாடுந்தமியேன்கவியைப்பொன்னம்பலத்துச்
சிவம்புனைந்துள்ளிற்சிறிதார்வமெய்திடிற்றேவர்மெச்சு
நவம்பகிரண்டத்துஞ்செய்துமெய்வீட்டினுநண்ணுவனே.

நண்ணுந் தவத்தினர்க் கோர்தஞ்ச மாந்தில்லை நன்னகர்க்கோன், கண்ணுங் கருத்துங் கொடுத்தாண்ட நன்றி கருதுகில்லேன், விண்ணும் புவியும் வியந்தோது மாண்மை விரைந்தருளேன், றெண்ணுங் கவலையி னுற்சில வேளை யிகழ்வதுண்டே. (சுகூ)

இகழ்வார்க்கு மில்லையென் பார்க்கெய் திடாநல மீந்தருளும், புகழ்வாய்ந்த தில்லைப் பிரான்றொண்டர் போலும் பொருளுரைக்கி, னிகழ்வார் மருப்பிரண் டாயிர மேந்தி நிலவைவொப்பா, யகழ்வாரி நேர்மத மூற்ற யிராவண வானையொன்றே. (எ)

முற்றிற்று.

ஆக கவி - நூாக.

சிவமயம்.

பதிற்றுப்பத்தந்தாதி.

சீர்மருவுசெங்கனகத்திருச்சிற்றம்பலமேவி
நீர்மருவுசடையாடநிருத்தமிடச்சலியானைப்
பேர்மருவுதுதிபாடிப்பிரசமலர்ப்பதம்போற்று
நார்மருவுமனத்தினரைநமவாதையணுகாதே. (க)

காதிலவிர்குழையாகக்கவின்சங்கமணிவானை
யேதிலர்மட்டிலனாகியிலங்குபொதுநிலையானைப்
பாதிமதிச்சடையானைப்பசும்பொனெடுஞ்சபையானை
வேதியரிலொருவனெனவிளம்பலுணர்வரிதன்றே. (உ)

அன்றடியார்விரும்பியபேறனைத்துமளித்தருள்பெம்மான்
மன்றகத்திற்றேவியெதிர்மாறுநடஞ்செய்வோ [து
னின்றமிழ்ப்பாட்டாயிரஞ்சொற்றிடுவேனென்றிடச்செய்
தின்றளிகூர்தரற்காயசிற்றுண்டியளித்தானே. (ங)

தானவரிற்கொடியோனாஞ்சலந்தரன்றனுடல்கீன்ற
வானவனைத்திருத்தில்லைமன்றகத்தினடிப்போனைக்
கானமறையுணர்வரியகடவுளெனப்பலர்சொல்வார்
நானறியத்தமிழ்ப்பாடனயந்தமைசத்தியந்தானே. (ச)

இயங்குமிளமுலைமாதரினித்தமொழிச்சுவைவேண்டிக்
கயங்குறுமென்றமிழ்விரும்புங்கனகசபைப்பெருமான்ற
மயங்கலறுமொருநால்வர்வனைந்ததுதிக்கவ்வாறு [ன்
செயங்கொடுத்ததருமையெனச்சிறிதேனுமொழியேனே.

மொழிக்கரும்புச்சுவைகாட்டுமுருந்துநகைக்கனிவாயார்
விழிக்கணையிற்படும்பாடுவிலக்கியருள்புரிவாயோ
பழிக்கருஞ்சீர்ப்பல்லுலகும்படைத்தருளிப்புரந்தப்பா
லழிக்கவுஞ்சற்றுளங்கொள்வாயம்பலத்திலமர்வானே. ()

வானுதியைம்பூதமலர்வதனநிரையாகத்
தானுகிநின்றானைத்தமநியச்சிற்றம்பலத்தி
லூனருங்கறைச்சூலத்துடனாடுமுத்தமனை
நானுகவிழைந்தில்லேனண்ணியெனைக்கவர்ந்தானே. (எ)

கவலையெனுங்கடனீத்துக்கரையேற்றிக்கலங்காமெய்த்
தவமுயல்வார்பெறும்பேறுதரினலதுமகிழ்வேனே

புவனமுழுதயின்றளைப்புணர்ந்தொருபுத்திரனீன்றாய்
சிவசமயத்தலையாகித்திகழ்கனகசபையானே. (௮)

யானெனவிங்கெழுமாயவிருணசியத்தடுத்தாண்டு
தானெனநின்றொளிருண்மைதனைவிளக்குந்தினமியாதோ
தேனெனச்செந்தமிழ்பாடுந்திருவாதவூரனுணர்
கோனெனப்பொன்னம்பலத்திற்குலவுபுகழுடையானே.

உடையாய்நிற்கயலெங்குமொருசிறிதுமிலையாகிற்
கடையேன்மட்டிவ்வாறுகலங்கிநிற்கத்தகுங்கொல்லோ
விடைதோயுங்கொடிச்சிலமிளிர்தில்லைப்பதியானே
படைவேற்கைக்குகன்போலும்பரிசுறத்தந்தருள்வாயே.

வேறு.

அருள்குலாவியதிருவுளத்தமலநாயகனை
யிருள்குலாவியதகுவர்மூவெயிலெரித்தவனைப்
பொருள்குலாவியதமிழ்கொடுபொதுவினிற்புகழின்
மருள்குலாவியவினைகெடுமென்னுநம்மறையே. (௰க)

மறையெலாமுநன்குணர்ந்தவர்மருவியதில்லைக்
கிறையவன்றனையிறைஞ்சுநரியாவரேயெனினுந்
தறையும்வானமுமதிப்பவரன்னவர்தடந்தாள்
கறையிலாமனத்தினர்தலைக்கணிதருகலனே. (௰௨)

கலங்குநெஞ்சகக்கள்வனேன்றன்னையுங்கருணை [தோ
துலங்கு மாறெடுத் தாண்டுகொண் டருள்செயத் துணிந்
னிலங்குசீர்த்திருக்கனகமன்றிடத்தினின்றாடி
விலங்குமூன்றுரித்தணிந்துளவிகிர்தவேதியனே. (௰௩)

வேதியன்றலையோட்டிலேற்றருந்தியுமேனிப்
பாதியம்பிகைக்குதவினானெனுமறைப்பாட
லோதினான்சரித்திரமுலகுணர்த்திடக்கேட்டு
மாதியம்பலத்தாடுவானருளறிந்திலனே. (௰௪)

இலவிலின்சுவைநறுங்கனிவிழையினுமீயும்
வலவர்வாழ்திருக்கனகமன்றினைமிகவழுத்தும்
புலமையாளனைப்போற்றுதியநுதினம்பொல்லாக்
கலகமங்கையர்க்குருகியகாமநோய்க்கருத்தே. (௰௫)

கருத்தனம்பிகைகாவலன்றில்லையிற்கவின்ற
திருத்தனின்மலனெடியமாற்கரியவனென்னத்

திருத்தமார்தமிழ்க்கவிகொடுதுதிக்குமெய்ச்செல்வர்
பொருத்தமெய்தியபுண்ணியத்தினைவடபொருப்பே. ()

பொருப்புவில்லுடைப்புனிதனைப்பூமழைபொழியுங்
கருப்புவில்லியைப்பொடித்தருள்கண்ணுதற்பரனைத்
திருப்பதங்குனித்தம்பலத்தாடியைச்சிறியே
னிருப்புநெஞ்சகங்கருதிடற்கிசைந்தநாளின்றே. (௰எ)

இன்றுநாளையென்றுன்மகனிசைத்தவாறெண்ணிக்
குன்றுநேர்மனங்குறுகியதறிகிலாய்கொல்லோ
நன்றுநீயொருமெய்ம்மொழியென்னுடுநெவிலாய்
மன்றுளாடியென்மனத்தினும்வருங்குருமணியே. (௰அ)

குருவுந்தெய்வமுநீயலதிலையெனக்குறிக்கும்
பருவமெய்துமுன்பட்டபாடின்னமும்படவோ
திருவருட்கடற்றிவலையொன்றெனமிசைதெறியாய்
சருவதாரகமாகிமன்றுடையதனியே. (௰௯)

தனியனென்றுனைத்தேறுமுன்றயங்குமென்மனத்தி
லனியவானவராகியுமவிர்ந்தனையன்றோ
வினியவ்வாதனையெனைத்தொடாதின்னருள்வழங்காய்
பனியருமலர்ப்பொழிற்றிருத்தில்லையம்பரனே. (உ௰)

வேறு.

பரவுவார்க்கருள்பரமன்றனையெண்
கரவினேதனைக்கனகமன்றிடத்
தரனையாதியையறியுமன்பர்பொற்
சரணமியாவுமென்றலையிற்சார்பவே. (உக)

சாருவாகனன்றடங்கைக்கன்னலம்
போருண்மாழ்கியபுன்மையேன்றமி
ழாருங்கொன்றையுமனையதாகுமோ
சீருலாவுமன்றுடையதெய்வமே. (உஉ)

தெய்வநான்முகன்குடுமிச்சென்னிகொள்
கைவலார்தமைக்கனகமன்றில்வாழ்
சைவமூர்த்தியைத்தமிழிற்போற்றுவா
ராவர்வாதனைக்கடங்கிடார்களே. (உ௩)

அடங்கயாவுநின்னருளென்றோர்ந்தமெய்த்
திடங்குலாவியசிலரிற்சேர்த்திடாய்

படங்கொள்பாம்பணிப்பகவமன்றிடை
நடங்கண்டார்தமைநயக்குநாதனே. (உச)

நாததத்துவமுடிவினண்ணிய
பாதபங்கயத்துணைகள்பற்றிலே
னேதமுற்றொழிந்தெவ்வணுய்குவேன்
சீதநீர்ச்சடைச்சிதம்பரேசனே. (உரு)

ஏசுமுற்றொழித்துய்கைக்கேற்றசொற்
பேசுவாயெனப்பெரிதுநம்பினேன்
வீசுதாட்சிலம்பொலிப்பவிண்ணிடை
யாசுதீர்நடம்புரியுமையனே. (உசு)

ஐயமின்றிமெய்யடியர்பற்பல
ருய்யமால்விடையுகைத்துந்தோன்றுநீ
பொய்யனேன்றனைப்புழுக்கல்பொன்னிகர்
செய்யனேதிருத்தில்லைச்சித்தனே. (உஎ)

சித்தர்தங்கணத்தொருவன்சிந்தையிற்
சுத்தநீற்றணிதுலங்கச்செய்திடற்
கொத்தமெய்யுணர்வுதிக்கச்செய்திலா
யத்தமன்றினின்றாடுமார்வனே. (உஅ)

ஆருநின்வடிவறியொணாதெனப்
பாரும்வானமும்பகரக்கேட்டுநீ
நேரும்வாழ்வினைநினைந்துளேனரு
டேருலாம்புலியூரிற்றெய்வமே. (உகூ)

தெய்யென்றாடியதிருட்பொற்றாணினைத்
துய்யென்றோர்கரமுணர்த்தல்பொய்கொலோ
மெய்யென்பார்க்கருள்விளைத்துமன்றிடை
யொய்யென்றண்டமுற்றுதவுமீசனே. (௩௰)

வேறு.

ஈசனெழிற் றில்லைமன்றத் திறைவனல தொருபொ
ருள்வே றிலையென் றெண்ணி, மாசகன்ற பெரியோர்தந்
திருக்கூட்டத் தென்னை யென்நாள் வைப்பா யைய்யா,
பாசமலம் பெருத்துழலுந் தமியனேற் கருள்புரிந்தாற் பா
வங் கொல்லோ, தேசனந்தங் கோடிபொருந் திருமேனி
கொடுநடிக்குஞ் சிவபிரானே. (௩க)

சிவசிவவென் றெனையறியா தென்னதுவா யிசைக்கு நலஞ் செய்தாயுண்மைத், தவமுயல்கைக் கிடையூறு வாராமற் புரந்தருளுந் தயையில்லாயோ, பவளவரை யனையானே பார்ப்பதிகண் களிப்பநடம் பயிலுமெந்தா, யவலமற்றோர் மனம்போலுங் கனகசபை யிடைநாளு மமர்ந்துள்ளானே. (௯௨)

அமரர்பிரான் பெற்றுளபே றத்தனையுங் கசக்குநலமடைந்தபின்னர், சமரநெடு வேல்விழியார் மொழியினிக்கும் பெருங்கொடுமை தவிர்த்தென்றுள்வாய், குமரனையம் பிகைவருந்த மலர்விழியாற் பயந்தருளுங் குன்றேபைம்பொற், பமரமுரல் கொன்றையணிந் தம்பலத்தினடம்புரியும் பதத்தம்மானே. (௯௩)

மானனையார் தருமயலிற் றவமுதிர்பே ரொருருவனுக்கு வழங்கும்பான்மை, பானன்மலர்த் தடத்திடங்க ரருந்துமகன் வளர்ந்துவரப் பகுவாய்தன்னு, லீனல்வெளிப் படுத்தியதா லியாவும்வல்லாய் நீயேயன் றிசைந்தேனுள்வாய், கானமறைத் தொனியகலாக் கனகசபைக் காரணனுங் கருணைவாழ்வே. (௯௪)

கருணையொரு சிறிதுமிலார் கடைவாயிற் படிதோறுங் கலங்குவேனுக், கருணையினீ றளித்ததுபொய்த் திடலாமோ திருவருள்சற் றம்மையச்செய்வாய், தருணமரகதக்கொடிமுற் றமரியச்சிற் றம்பலத்திற் றுளொன்றான்றி, யிருணிறத்து முயலகன்மேற் றினமுநடம் புரிந்துவக்கு மெம்பிரானே. (௯௫)

எம்பிரா நீயெனநன் குணர்ந்துற்றே னுதலினீ யிரங்கியின்னே, தம்பிரா னெனத்தமையே மதிக்கின்றார் மதமொழிக்கத் தரும்பேறீந்தாள், செம்பிரா னுமவரிற் றலையாய முழுமுதலே தில்லைமன்றி, னம்பிரா னெனப்பணியப் பலர்க்குமொரு பொதுவாகி நடிக்கின்றானே. (௯௬)

நடிக்குமிரு பதத்தானை நாரணனுக் கரியானை நகுவெண்டிங்கண், முடிக்குநெடுஞ் சடையானை முப்புரங்களெரித்தானை முனிவோர்முற்றும், படிக்குமியற் புகழானைப் பழுதில்சிற்றம் பலத்தானைப் பரவுகில்லீ, ரிடிக்குரற்கார் மறலிவரி னென்செய்வீர வன்கொடுமை யியம்பொண்ணாதே. (௯௭)

இயமனொருக் காலுமனத் தினுமெண்ணான் மலரவன்றொட் டெழுதமாட்டான், வயமதனன் கைக்கரும்புச் சிலைவளையான் வீட்டினும்போய் வாழலாகும், கயமுரித்துப் போர்த்தானைக் கனகமன்றி னின்றவண்ணங் கருத்தானாடி, வியனுறப்போற் றிசைத்துமலர்ப் பூசனைசெய் தவனருட்சீர் மேவினாலே. (௩அ)

மேவியநன் னலமறந்து கிடையாமை சிறிதெனினு மேல்நாடி, யாவியுட லெனுமிரண்டுந் தளர்வேனைத் திருவருட்கா ளாக்கொண்ணுதோ, பாவிமதன் பொடியாகப் பார்த்தவிழி யுடையானே பசும்பொன்மன்றிற், றுவிநடம் பயில்வானே சகுணமுநிர்க் குணப்பொருளுந் தானானே. (௩௯)

தானாகி நிறைந்தபர தத்துவனைப் பத்திநெறி தனைக்கொண்டோர்க்கே, யானுதபேறுதவும் பெருமானைத் தில்லைமன்றி லாடுவானை, யூனுரு மூவிலைவே லுடையானைக் கடையேனு முணரப்பெற்றாற், றேனார்முத் தமிழ்விரகன் றனையிகழ்வோர் குலநடுங்குஞ் செயலுண்டாமே. (௪0)

வே று.

செயன்மலிந்ததிருவெழுத்தைந்துமே
மயலுறுதுவழுத்திடுவார்க்கெலாம்
புயலிலங்குபொழிற்றிருத்தில்லையி
லயலொன்றின்றியரன்றிகழ்வானரோ. (௪௧)

வானநாடரும்வந்துவணங்குசீ
ரானபொன்னம்பலத்தினிலாடல்கூர்
ஞானமூர்த்தியைநாடிநற்குண
மீனநெஞ்சத்தினர்க்கினிதல்லவே. (௪௨)

அல்லன்முற்றுமழித்தருளாண்மையிற்
செல்லவுய்க்குந்திறத்தனைத்தேடுவீர்
நல்லதில்லைநகர்க்கிடைநால்வருஞ்
சொல்லநின்றதுடித்தொனித்தோளனே. (௪௩)

தோளிலென்புசுமந்துநின்றுடுவான்
வாளிலங்குகண்மங்கைபங்குள்ளவன்
வேளினுக்குருமீளவுநல்கினே
னிடந்தனியம்பலமாமதே. (௪௪)

ஆமைதன்னுறுப்பைந்துமடக்கல்போ
லூமையாகியுனையுணர்ந்துய்ந்திலேன்
றீமைதீர்திருத்தில்லையிற்றேசிகா
வாய்மைஞானம்வழங்கிமுன்னின்றிடே. (சரு)

நின்றிடத்தகுநெஞ்சிலனின்னிடத்
தொன்றிவாழுமொருதினமுள்ளதோ
தென்றிசைக்கிறைவன்றிடுக்கங்கொள
மன்றிலாடிவயங்கியவள்ளலே. (சசு)

வள்ளனீயெனமாமறைநூல்வலோர்
விள்ளலானுனையேமிகவேண்டினேன்
புள்ளலம்புபொழிற்றிருத்தில்லையா
யெள்ளறீர்நலமீகுவதெற்றையே. (சஎ)

எற்றைவந்தெனக்கின்னருளீவையோ
வற்றைநாளையறிகிலனையகோ
பொற்றையென்னப்பொலிந்தபொன்மன்றில்வாழ்
கற்றைவார்சடைக்கண்ணுதற்றெய்வமே. (சஅ)

வம்பறுதமலர்ப்பொழிற்றில்லையூ
ரம்பலத்தினின்றாடியவண்ணலே
நம்பவல்லநலத்தினர்தம்பெருங்
கும்பலூடுகுலாவலென்னிச்சையே. (சகூ)

இச்சைவாரியிடைப்படுவேனுநின்
னிச்சையெய்துமவரொடுசேர்வனோ
செச்சைமேனிதிகழ்தரத்தில்லையிற்
பச்சைமாதெதிராடியபண்பனே. (ருய)

வேறு.

பண்பாடும் வரிவண்டு மலிகின்ற மலர்கொன்றை ப்னிமாமதி, தண்பாவு நதிமங்கை யுடுவாதி யவைதுன்று ச்சடையண்ணலை, விண்பாய தனிமன்ற மவிர்தில்லை யிடை கண்ட மேலோர்களைத், திண்பாரி லுளமைந்த ரறியார்க ளுணர்வார்கள் சிவலோகரோ. (ருக)

சிவசா தனஞ்சற்று மணியாம லுயிருண்டு திரிவோர் களாம், பவசா கரக்குப்பை யனையார்மு னிதமிங்கு பக ராதுகாத், துவமான மறுமின்ப நெறியோரொ டெனை வைக்க வுன்னாய்கொலோ, தவயோகர் மலிதில்லை நடராய னேயீடில் சபைநாதனே. (ருஉ)

சபையூடு புலியூரி னடமாடி யரனின்ற தகையெண்ணியே, செபமைந் தெழுத்தாலு முயல்வார் விருப்பங்கள் சித்திக்குமால், வபையோம முழுமூடர் மதியென்கொல் விதியென்கொல் வானத்தில்வாழ், சுபமாத ருடனீடு கனவென்ன வயில்கின்ற சுகமென்கொலே. (௫௩)

சுகமாதர்தருபோகமெனநாடிமருள்கின்றதுர்ப்புத்திபோயகமூடுன்வடிவைக்குறிக்கின்றசிவயோகமதைநல்குவாய்க்கமூருநெடுமோயனறியாதபடிநின்றகழலாடலாற்புகழாயிரங்கோடிகொடுபாரின்மிளிரீடில்புலியூரனே. ()

ஊரனந்தங் கண்டு பொருடேடி மருள்வே னுளத்தூடருட், சீரனந் தம்பெற்று மகிழ்வார்க ளுறுமாசை செறிவித்ததார், சூரனந் தங்கொன்று புவனேசர் பலர்வாழ்வு தோயச்செய்வேல், வீரனந் தந்தை யெனமன்றி னடமாடு மெய்ச்சோதியே. (௫௫)

சோதித்த பின்னன்ப னைக்கைக்கொள் வாயென்று சொல்லுஞ்சொனின், னீதிக் கொருக்காலு மொவ்வாதெனக்கண்டு நெஞ்சஞ்சினேன், மாதிக்கொ னொட்டுங்கை யாகக்கொள் வாய்செம்பொன் மன்றத்தினின், றாதித் தொழிற்றொட்டொ னைந்துஞ்செய் தெத்தேவு மாமையனே.

ஐயைந்து பேதத்த தேநின் றிருக்கோல மாமென்றசொன், மெய்யென்று நானம்பி டேனெங்கு நீயா விளங்குற்றதான், மையொன்று கண்டத்து மாதேவ னேதில்லை மன்றாடுவாய், வையம் புரக்குந் துணைச்செல்வர் கையிந்த மதிதந்தவே. (௫௭)

மதியுந் துணர்க்கொன்றை யுஞ்சூடி ஞனைப்பொன் மன்றத்தினிற், கதியும் பெருங்காமி யப்பேறு நல்குங் கழற்காரனைத், துதியன்பி லாமற் புரிந்தாலு நன்றே துணிந்தண்டமுற், றதிரும் படிக்கன் றடித்தாரு மெய்வீ டடைந்தார்களே. (௫௮)

தாரார் சடைக்கற்றை மீதே விளங்குந் தனிச்சந்திரன், பேரார் குலத்தோர்க ளேயங்கை வில்லைப் பிரம்பைக்கொடன், றாராரு மோதப் புடைத்தார் சினந்தங் கதைத்தள்ளிலா, னீரார் வயற்றில்லை மன்றத்த னேகன் னெறிக்காரனே. (௫௯)

காராதி யாயே கொடைச்சீர் பெறும்பல் கணத்தியா துநற், சீரார் தனித்தில்லை மன்றத்தி லாடுஞ் செழுஞ் சோதியிற், றூராள மாகத் தனைத்தந்தி டாதென்கை தமி ழ்வா தவூர்ப், பேராள னேயன்ன மேலோர்க ணெஞ்சிற் பிறங்குற்றதே. (௩௰)

வேறு.

பிறங்குபொற்புகர்வேழத்தைப்பிழைபடாவடிவேலானை
யறங்களுக்குயிராவாள்பாலருளியவமலமூர்த்தி
நிறங்கனலனையமன்றினித்தமுநடிக்கும்பெம்மான்
மறங்கெழுதமியேனெஞ்சின்மலரடிபதித்ததுண்டே. ()

பதியுடன்பசுக்களாகிப்பாசமுமாகினானை
விதிமகம்பகர்ந்தசென்னிவேரறக்களைந்தான்றன்னை
நதிவளர்சடிலத்தானைநால்வரிற்றமியனேனுந்
துதிபுரிந்துய்கைவேட்டுத்துணிந்தமைநிசங்கண்டீரோ. ()

கண்டிகை யணிந்து நீறுங் கவினுடன் முழுதும் பூசி, வண்டியல் கடுக்கை யென்ன வயங்குசெந் தமிழாற் போற் றித், தெண்டிரைப் புவியோர் காணத் திரிதரு மென்னை நீகைக், கொண்டிடி னிளப்பங் கொல்லோ குலவுபொற் பொதுவுள் ளானே. (௩௩)

ஆனையைப் புலியைப் பாம்பை யரியினைச் சிலந்தி தன்னைப், பூனையை யெலியை மற்றும் புகல்பவற் றினை முன் னாண்டாய், தேனைநேர் தமிழ்கொண் டேத்துஞ் சிறி யனேற் கிரங்காய் கொல்லோ, மேனையார் மகள்கண் கா ணவிளங்குமம் பலத்துற் றோனே. (௩௪)

உற்றவருறவராதியுலகனைப்பொருளென்றுன்னி
நற்றவமிழந்திடாதஞானவாழ்வெனக்கென்றீவாய்
பற்றலர்புரங்கணீற்றும்பவளவாய்த்தவளமூரற்
கொற்றவாகனகமன்றிற்குலவுமெண்குணப்பெம்மானே.

குணப்பெருங்கடலன்னானேகுஞ்சரத்துரிவையானே
மணப்பசுங்கொன்றையானேவரநதிச்சடிலத்தானே
தணப்பரும்பெருமைசான்றதமனியமன்றத்தானே
கணப்பொழுதினுநீங்காதென்கருத்தினின்றிலங்குவாயே.

இலங்கெழிற்றரளமூரலேந்திழைமடவார்கொங்கை
நலங்குறித்துழலும்பொல்லாநாயினேற்கருள்செய்வாயோ

விலங்குரித்துடுத்துக்காளவிடமுமிழ்மணிப்பூணாரந்
துலங்கிடமன்றிலோர்காற்றூக்கிநின்றாடுவானே. (௬௭)

ஆடகம்பொதிந்தமன்றத்தரவொடுபுலியும்பார்க்கச்
சூடகக்கையாண்முற்றத்தொம்மெனநடிக்கின்றானைப்
பாடவல்லவர்களெல்லாம்பழவினைவழக்கைவென்று
வீடதிற்புகுவாரொன்கைவிரகுளாருணர்தற்பாற்றே. ()

பாற்கடலதனையன்றோர்பாலனுக்களித்தநாதன் [டு
மேற்கவிதொடுத்துத்தில்லைவெளியினிற்கலந்தோற்கேட்
மாற்கனங்கனுக்குநேராமனிதரைப்பாடிப்பாடி
யேற்கவுஞ்சிலர்தஞ்சென்னியிடத்தயனெழுதலென்னே.

எழுதரு மறைவல் லான்ற னீரிரு சிரத்துமோது, முழுதுணர் புலமைச் சேயை மொய்குழ லுமையாட் கீந்த, செழுமணிச் சோதி தன்னை தில்லையம் பலத்திற்க ண்டு, தொழுதெழப் பிறந்தோ ரெல்லாந் தொல்வினைத் தொடர்பில்லாரோ. (௭0)

வேறு.

தான தந்ததன தந்ததன தந்தனா.

ஆரணிந்தசடைநம்பனைநினைந்துளா
ராகுலங்களையுமந்தணனைவென்றிவேல்
வீரனும்பொருவிலைங்கரமியைந்ததோர்
வேழமும்பரவுதந்தையைமடந்தைமார்
சேரநங்கடவுளென்றிடவிளங்குமா
தேவிபங்கினனைமன்றிடைவணங்குவீர்
பாரளந்தமுகில்கண்டிடவருந்துசீர்
பாதமென்றுமுமனந்தனிலிலங்குமே. (௭௧)

தனன தத்ததன தானதன தானனா.

இலவெனத்தகுமுலோபியரைநாடலா
லெனதுசித்தமெலிவானதறியாய்கொலோ
குலவுசத்தியணிசேயனையனாகவே
கொடுநினைத்தபடியாடுநல்மீகுவா
யலகிலுத்தமர்பராவியமயேசனே
யருமறைக்குமமையாவெகுவிஞ்ஞைதனே
புலவனற்றைவிடுதூதெனவுமேவினாய்
பொருவில்சிற்சபையில்வாழுநடராயனே. (௭௨)

தனன தந்ததன தந்ததன தானனு.

நடமிடுஞ்சரணபங்கயமதாலெனுாழ்
 நலியவென்றுனதுதொண்டரொடுகூடும்வாழ்
வுடலழிந்திடுமுனிங்கருள்செய்தாலலா
 லுளமகிழ்ந்திடுவதின்றறிகிலாய்கொலோ
படம்விரிந்தபணியும்புனையுமார்வனே
 பணிலமொன்றியசைகின்றவிருகாதனே
யிடர்தவிர்ந்தசுபமங்கலமணுளனே
 யெழில்விளங்கியபொனம்பலவிலாசனே. (எங)

தனன தானதன தத்ததன தந்தனு.

விலகிடாதுநிறைவுற்றுளவகண்டமா
 மிளிருநீயெனதுசிற்றுயிரிலொன்றிடா
துலகமியாவினுமிருத்தியெனவம்பியா
 னுரைசெய்தாலுமனநக்கதருடந்திடாய்
சலசமாமலர்வனத்தனையையென்றதோர்
 தவசியாவியொடுடற்பருகுசங்கரா
கலகநாடிவருபுத்தரும்வணங்குசீர்
 கவினுமாடகமுதற்சபைவிடங்கனே. (எச)

தனன தந்ததன தந்ததன தானனு.

விடமயின்றுளபெருங்கருணையாடலே
 மிகமொழிந்துருகுமன்பர்பலர்வாழ்வதா
மிடமெனும்பலசிலம்புதொறுமேகிநீ
 யினிதுதந்தமகவென்றபுகழ்தோய்வனே
கடகமும்பெரியகங்கணமதாணிநேர்
 கலனனந்தமுமெலும்பொடரவாகவா
லடலையங்கமுழுதும்பொலியமாதுநே
 ரவிர்பொனம்பலநடம்பயிலுமாதியே. (எரு)

தான தத்ததன தானதன தானனு.

ஆதிவித்தகனநாதிபரமாகினு
 னுடகச்சபையினுடலகலாதகோன்
மேதியிற்றிரிகுவானையடுதாளுளான்
 மேனிலத்தமரர்வாதனைபொருமையா
னீதிதப்புமவுணேசருயிர்கோறுவா
 னீணிலத்துதவுபாலர்பலரோயெனு
வோதிடத்தகுவிலாசவுணர்வாளரோ
 யூழ்வினைத்தொடர்பிலாதமுனிவோர்களே. (எசு)

தான தய்யதன தந்ததன தானனு.

ஓரமெள்ளளவுமின்றிவரநாடுவா
  ரோகைகொள்ளும்வரையுந்தருமயேசனூர்
மாரன்வில்லொடுபொடிந்துவிழநாடினூர்
  வானிலுள்ளவரொலும்பணியுமார்பினு
ரீரநல்கியென்மனந்தனில்வராமுனு
  னீடிறில்லையைநினைந்தறிகிலேனிதால்
வாரமல்குமனைமைந்தரொடுசேவின்மேல்
  வாறநல்லதினமுண்டெனலுமாகுமே. (எஎ)

தான தத்ததன தன்னதன தந்தனு.

ஆகுவிற்றிரியுமண்ணனொடுகந்தவே
  ளாழிசுற்றுமுலகின்மிசைவிளங்கல்போன்
மாகுணத்திருவர்நின்னருள்பொலிந்ததால்
  வாழுநற்றினமுமென்னெதிர்வருங்கொலோ
வேகுமக்கினியையன்னபலவம்பர்தாம்
  வேரொடற்றளவினன்மைகடலங்குமோ
பாகுனைக்கவுரிகண்மகிழ்நடஞ்செய்வாய்
  பாவுசிற்சபையின்மன்னுமகளங்கனே. (எஅ)

தனன தந்ததன தாந்ததன தந்தனு.

களவுநெஞ்சமுடையேன்சிறியவஞ்சிநேர்
  கபடமங்கையர்கள்வாஞ்சையினனண்டரு
ரளவுமிஞ்சுபலதீங்கனுனதன்பரோ
  டமையவுங்கருணைகூர்ந்தொருசொல்விண்டிடாய்
தளவுதந்தமுகைபோன்றநகைதுன்றுமா
  தரியிருந்துமகிழ்பாங்குறுதிகம்பரா
விளவுகுன்றவெறிவான்சுவசமின்றியே
  விழுபொன்மன்றதனையாண்டசிவசம்புவே. (எகூ)

தந்த தந்தனத் தாத்ததன தானனு.

சம்புவம்பலக்கூத்துமுயலீசனோர்
  தண்டுகொண்டகைக்கூற்றையடுதாளுளான்
வெம்புசெம்புலித்தோற்புனையுநாதனியான்
  விண்டதண்டமிழ்ப்பாட்டிலளிகூர்வனேல்
வம்புமிஞ்சுபொய்ச்சேட்டையுறுபாவியோர்
  வங்கிசங்களுக்கேக்கமுறுமூனுணர்
தெம்புடன்சுகத்தாற்றலமைவார்வினோர்
  சிந்தைபொங்குமற்றோர்க்கழிவுநேருமே. (அய)

வேறு.

நேரலர்க் கொதுங்கி யளவில்பல் விதமா நித்தமும் படுந்துயர் நீக்கிப், பாரளந் தவனும் வியப்புறத் தகுமோர் பரிசளித் தென்னையென் றருள்வா, யாரண முடிவு மள விடற் கரிய தாயசிற் றம்பலத் தாடிப், பூரவா கனத்துக் கலைமக ளனைய புலவர்தந் துதிபுனை வானே. (அக)

புனையிழைக் ககன வனிதையர் வலிதிற் போற்றியும் புந்திசற் றிளையா, னனையபோ யடைதற் குரியநின் றிருத் தா ளகிலமங் கையர்க்குமால் கொள்ளும், வினையினேன் றானும் விரும்பினே னந்தோ வெறுத்தெனை யிகழ்ந்திட வேண்டா, நனைமலர்க் கடுக்கை யுடனிற கணிந்தாய் நளிர் பொழிற் றில்லைநா யகனே. (அஉ)

நாயினுங் கடையே னெனச்சில பெரியோர் நவின்ற பொய்க் கிரங்கினை நலந்தீர், பேயினுங் கொடியே னென வொரு தமியேன் பேசுமெய்க் கருள்செயாய் கொல்லோ, தீயினுஞ் சிவந்த திருவுரு வானே தில்லையிற் றினநடம் புரி வாய், தாயினு மினிய கருணையங் கடலே தமிழ்வலார்க் கெளியசங் கரனே. (அங)

சங்கர முனிவன் போன்றுநின் னருட்சீர் தழைத்த சட் சமயமுந் தாங்கி, யிங்கவிர் தரல்வேட் டிளைப்புறுந் தமியேற் கினியபே றளிப்பதென் றியம்பா, யெங்கணு நிறைவுற் றியாதும்வே றின்றி யிலங்கிய வெம்பெரு மா னே, செங்கன லேந்தித் தில்லையி னடித்தாய் தெளிவி லார்க் கரியசிற் பரனே. (அச)

சிற்றுயி ரொன்றே கதிபெற வேண்டித் திருவெழுத் தைந்துமோ தினர்க்கு, முற்றுபே றளித்தாய் மனிதர்பற் பலரு முதற்பெரு நோன்புறப் புரிவான், பற்றுமென் றனையாண் டருளிடாய் கொல்லோ பரவுமென் மனத்துநீ யிலையோ, சுற்றுசெஞ் சடைக்கா டவிழ்தர மன்றிற் றொம் மென நடித்தசுந் தரனே. (அரு)

தாளமு முருந்து மனையவெண் ணகைச்சீர்ச் சங்கிலி யார்மயற் றயக்கம், வரவழைத் தொருவன் றனைப்படுத் தியவா மனத்திடை நினைத்துமிக் கயர்வேன், பரவுசொற் றொடைவேட் டருள்புரிந் தனையேற் பாவமோ பனிவ

ளைக் குமரி, கரமலர் பிடித்தாய் கனகமன் றிடைவாழ் காரணு கருணைமா கடலே. (அகு)

கடனிறத் தொருவ ஞழியங் காவல் கடையெனக் காண்டரப் புவிமா, திடர்படல் காலி யினம்வதை யுண்ட லெனன்முதற் பிழைபல மிகுத்த, வடல்வடி வேலு மயி லுமென் றனக்கீந் தத்தொழிற் றிருத்துமாண் பருளாய், நடமிடச் சலியாய் கனகமன் றுடையாய் நால்வருக் கெளி யவா னவனே. (அஎ)

வானகத் தமர ரீட்டமு மிந்நாள் வலிகெழு தானவர் தம்மா, வீனமுற் றிடைந்த வாறெனை துளத்தா டிய்ம்பிட வந்தவ னெவனே, வேனமெதன் றன்பா விசைத்தனன் கொல்லோ யாவுநீ யறிகுவா யன்றோ, மானவிர் மழுவோ டணிந்தகைப் பரனே வயங்குசிற் றம்பல வாழ்வே. ()

வாழிய மறைநூற் பொருளுணர்ந் தவர்போன் மறித் திரள் வதைத்தயில் வாரும், பாழினைக் கருது வாருநின் றிருத்தாள் பணிந்துபோற் றிசைத்திடப் பார்ப்பேன், கோழிகே தனத்துக் குகன்கலை யென்னுட் குலவவொன் றுயினுங் கொடுத்தா, ளாழியங் கையான் முதற்பலர் வண ங்க வம்பலத் தாடிய வரனே. (அகூ)

அரங்கர் விழியார் மயற்பெருங் கடலூ டமிழ்ந்திடு மாதனேன் றனக்கு, மரகத மயிலும் வடித்தவேற் படை யும் வாரணக் கொடியுநீ வழங்கிற், சரவண பவனுக் கிழி வுறு தவன்போற் றயங்குரு வினர்பல ரன்றோ, புரமொரு மூன்று மெரித்தெழிற் றில்லைப் பொதுவினின் றுடுமெ ய்ப் பொருளே. (கூ0)

வே று.

பொருளு மன்றொரு புலவனுக் கீந்தாய் போக மே மிகும் பொலிவுறப் புசித்தா, னருளி லோர்சிறி தென் றனக் களித்தா லகில முற்றுநல் லருளுறக் காண்பேன், சுருளு மாசுணப் பணியணி வானே துடிமுழங்கிய தோ ளுடை யானே, தெருளு மேலவ ரனைவரும் போற்றுந் தில்லை யம்பலத் தினில்வளர் சிவனே. (கூக)

சிவந்த மேனியு முழுதணி நீறுந் திங்கள் வார்சடைச் சீர்முதற் பிறவு, நிவந்த மால்விடைப் பரிமிசை யொருக் கா னிலவும் வாழ்வுறி னீணிலத் துள்ளா, ரவந் தருங்கலி

யறுப்பதின் முயல்வே னதைவி டென்னநீ யறையினு ம மையேன், பவந்தர் நாடருந் தில்லையம் பலத்திற் பரத நாடகம் பயிலவல் லானே. (சுஉ)

வல்லை நேர்முலைப் பார்ப்பதி கணவா மலையை வில் லென வளைத்தகை யானே, தில்லை யம்பலத் தாடிய முதல்வா சிறிது நின்னருட் சீர்வழுங் கிலையே, சொல்லை மாலி கை யாமெனத் தொடுத்துன் றேளி விட்டுள தொண்டர்க ளெல்லா, மல்லை வென்றன றொன்கைமெய் யலவோ வடிய னேன்றுய ராற்றுகில் லேனே. (சுங)

ஏன மொன்றொடு தொடர்ந்துபோய்ப் பார்த்த னெடுத்த வில்லடி யேற்றருள் புரிந்தாய், நான வின்றிடுந் தமிழ்கொடு சிறிதோர் நலஞ்செய் தாற்புவி நகைத்திடுங் கொல்லோ, கான வேட்டுவ னுருவமுங் கொண்டாய் கன க மன்றிலோர் காலினு நின்றாய், ஞான தேசிக னெனக் கலா னிழலி னுல்வ ருய்வது நயந்திருந் தோனே. (சுச)

இருந்தை யேநிகர் சாரணர் பல்லோ ரிலங்கும் வன் கழு வேறிய நலத்தாற், றிருந்து நீற்றணி குன்றிடா வண் ணஞ் சிறிது மெய்யருட் செய்யநின் னுள்ளம், பொருந்தி டாவித மியாதுகொ லறியேன் போதன் சென்னியிற் புதி துகொண் டனையோ, வருந்து வார்வினை முழுதறத் தில் லை மன்றி லாடியென் மனங்கவர் வானே. (சுரு)

கவலை வாரிதித் திரையிலெற் றுண்டு கலங்கு மென் னைநின் கண்ணருட் பெருக்கா, லவமெ லாமறத் தொடை த்தெடுத் தாண்டா லலதுய் யேனென லசத்திய மன்றே, தவள வாரணத் தினருட லென்புந் தறைதந் தார்தலை மாலையும் பூண்டா, யவல நெஞ்சினர்க் கறிவரி யானு வம்ப லத்தினின் றாடுமுன் னவனே. (சுசு)

முன்னை நாளைமெய் யடியவர் தஞ்சீர் மொழியின் வம் பெனு மூடர்தங் கண்முன், னென்னை யேனுமற் றெவனா யா னுலு மினிய மெய்யரு ளிசைவுறச் செய்வா, யுன்னை நாடலி னுனதருள டைந்தோர்க் குரிமை கொள்வதுத் தமமென லுணர்வேன், றென்னை வார்பொழிற் றில்லையம் பலத்திற் றினமு மாடிய செழுமணி விளக்கே. (சுஎ)

விளக்கு நின்னரு ளொளிவழி யல்லால் வேறு தார கம் விளம்புதற் குளதோ, துளக்கு சென்னியொ டன் றொரு குறிப்புத் தோற்றச் செய்ததுஞ் சோர்வுற லாமோ, குளக்க ணன்முன நீதரும்புதல்வன் கொடுத்த வன்றுயர் கூறிடற் பாற்றோ, வளக்கொ ணப்பெரும் புகழ்கொடு குலவு மாட கத்தனி யம்பலத் தானே. (கூ அ)

தான மால்களிற் றுரியுடை யானைத் தவள நீற்றணிச் சங்கரன் றன்னை, யேன வான்மருப் பாமையோ டாதி யி லங்கு மார்பகத் தெந்தையை யன்பா, ஞன வாவிய திலை யிலை யவனே நலங்கொ டில்லையின் ஞானமே வடிவ, மான தோர்சிவ கங்கையி னருகி லாட்கொண் டானரு ளாண் மைதந் திலனே. (கூகூ)

தந்தி மாமுகக் கணபதி தன்னைச் சகள நிட்களச் சம ரசக் குகனை, முந்தி யீன்றுபால் வீரரைப் பயந்து முதிரு மின்சுவை முத்தமிழ் விரகற், பிந்தி யேற்றரு ளம்பலக் கூத்தன் பிள்ளை யொன்றினும் பிறங்கிடச் செயினே, சிந் தி யாவறு சமயமும் பொதுவுஞ் செப்பு நான்மறை சீர் பெறு மன்றே. (ா)

முற்றிற்று.

ஆககவி (சாாக).

சிவமயம்.

அ லங் கா ர ப ஞ் ச க ம்.

நேரிசைவெண்பா.

செல்வம்பெருகுதிருத்தில்லைநகரம்பலத்தில்
வில்வம்புனைந்துநின்றவேதியனை - பல்வரமுங்
கேட்டபடிநல்குங்கிருபாகரனையன்றி
நாட்டமற்றொன்றில்லைநமக்கு. (க)

கட்டளைக்கலித்துறை.

நமனஞ்சவென்றதிருத்தாட்பரமனைஞானசத்திக்
குமரன்றனைப்பயந்துள்ளானைமன்றுடைக்கோயிலிற்கண்
டமலம்பொருந்தமுயலாமன்மாதரணிநகைச்செய்
கமலம்பொருமுகங்கண்டேங்கியுள்ளங்கலங்கியதே. (உ)

சந்தவிருத்தம்.

தனன தத்ததன தத்ததன தத்தனா.

கலகமிக்கியல்விழிச்சியர்கள்சுற்றவோர்
கழைவளைத்துவருசித்தசனைமெச்சியே
யலகில்பற்பலவிதத்துயருழைக்குநா
ளடியவர்க்குரியமெய்ப்புகழ்பொறுப்பனோ
சலசமுற்றவன்முதற்றலைபறித்தவா
தமனியச்சபையினித்தமுநடிப்பவா
புல்மைமுற்றியவர்சொற்படிமுடிப்பவா
புரமெரித்திடுநகைப்புடையசித்தனே. (௩)

இரட்டையாசிரியவிருத்தம்.

சித்தருக் கரசெனக் கனகமன் றிடைநடஞ் செய்கின்ற சிவனை யிமவான், றிருமகள் விரும்பிய திகம்பர வினோதனைச் செங்கண்மால் விடையி னானைப்,—பத்தருக் கோரொளிய னாகிய மயேசனைப் பவளமே னியினிறைத்த, பால்வெணீ றுடையானை மதியமொடு கங்கையும் பழகுசெஞ் சடைநாதனைச்,—சுத்தசத் துவசொருப நிருமல னெனப்பரவு தூயவர்க் கந்தவண்ணங், தோய்வரிய பொருளாகி யாரூர னேவல்புரி தூதனென வோதுவாருக்,—கத்தமுத லாவன வனைத்துங் கொடுப்பவனை யல்லாது வேறு தெய்வ, மவனானை யில்லையுள தென்றெண்ணி லவ்வண்ண மருள்கொடு குலாவ லுளதே. (௪)

ஆசிரியப்பா.

உளனெனவுணர்வார்க் குள்ளானென்று
மிலனெனநினைவார்க் கில்லானென்றும்
பொற்பொதுவதனிற் பொலிவான்றன்னைப்
பற்பலநூல்கள் பகர்வதுண்டெனினு
முளனெனலதுபோன்றுண்மையாகி
யிலனெனுமொழியே யின்மையாகு
மின்றெனத்துணிவுற் றெண்ணில்பல்லுயிர்கட்
கொன்றினிதருந்துங் கொள்கையோருக்
கவ்வுடற்றிரண்முழுதளித்துச்
செவ்விதின்முறையேதினச்செயல்கரியே. (௫)

நேரிசைவெண்பா.

கரியுரித்துப்போர்த்துக்கனகமன்றிலாடும்
பெரியவனையெங்கள்பிரானைத் - தெரியுமுன்னம்

பண்ணுலவாமுன்னூல்படித்தாலும்பல்பொருளென்
றெண்ணுமடனீங்கிவிடாதே. (சு)

கட்டளைக்கலித்துறை.

விடமார்ந்தகண்டத்துவித்தகனென்றும்விறலரக்கர்
தடமாமதிளெரியச்சிரித்தானென்றுந்தங்கமன்ற
மிடமாகக்கொண்டுநடித்தபிரானென்றுமேத்தலன்றிக்
கடமானையன்னகண்ணுறின்பமோதிடல்கற்கைவம்பே. ()

சந்தவிருத்தம்.

தத்தனத்தனனதத்தத்தனனு.

கற்பகத்தருநிழற்குட்புலவோர்
கட்டமுற்றுமொழியச்சற்றருள்கூ
ரற்புதக்கருணைமுக்கட்பெருமா
னக்கரத்தினைமிகச்செப்பிடினே
பொற்புமிக்கவிர்பொதுச்சிற்சபைநேர்
புத்தருக்கிடியெனச்சொற்பயிலோர்
விற்பனத்தவசியுற்றுப்பிரியா
மெய்க்கதிப்பெருமைசித்தித்திடுமே. (அ)

இரட்டையாசிரியவிருத்தம்.

சித்தியிரு நாலுமெனை யண்டினரை யண்டினர் சிலர்க்கும்வர வேண்டுமென்றுந், திருநீறிடாதபல சமயத்துளாருந் திடுக்குறச் செய்யவென்றுஞ்,—சத்திவடி வேல்கொண்டு மயிலேறி யிந்தச் சகத்தினு மூலாவவென்றுந், தருமமுத லாயவொரு நால்வகைப்பேறுந் தனித்தனி கொடுக்க வென்றும்,—புத்தியினி லாசைப் பெருக்கமுற நல்கியது பொலிவுற வளர்க்கு மொருவன், புலியதளுடுத்துச் சடைக்கற்றை மீதுமதி பொற்கொன்றை யறுகுவில்வம்,—துத்தியர வங்கங்கை யாதிய தரித்தொரு துடித்தொனி முழக்கி யுமைபாற், றொந்தோ மெனக்கனக வம்பலத் தாடிய சுயஞ்சோதி யாமிறைவனே. (கூ)

ஆசிரியப்பா.

இறைமனுத்திரளு டியங்குமாறு
மறைவகுத்துள்ள வானவர்தம்மிற்
றிகழுறும்பெருமைத் தெய்வமியாதெனிற்
புகழுறுந்தில்லைப் பொன்னம்பலத்திற்
றென்றிசைநோக்கித் திருத்தாட்டுணையி

லொன்றினிதூன்றி யுயர்நடம்புரியும்
பிறையணிசடிலப் பெம்மானெனவே
யறைதலென்றுணிவா மன்றியுமுன்னாள்
பிறப்பெனும்வாதனை பெயர்ந்த
சிறப்பினர்பலருஞ் செப்பிடலுளவே. (ய)

நேரிசை வெண்பா.

செப்பனையகொங்கைச்சிவகாமசுந்தரிபான்
மெய்ப்பரதங்காட்டமெலியானே - துப்பனைய
மேனியனேதில்லைநகர்வேதியனேநின்னடிக்கீழ்
நானியல்வதென்றோநவில். (யக)

கட்டளைக்கலித்துறை.

நவிலருஞ் சீர்த்திருத் தில்லையி லாடலி னாதமுதற், புவிவனை நல்கும் பெருமான்முன் னோர்பலர் போற்றிசைத்த, கவிக ளனேக மிருக்கவென் வாய்மொழிக் காதலுற்றான், செவிகொடுத் தேற்றுக்கொ ளானோவெண் டாமரைச் சிற்றன்னமே. (யஉ)

சந்தவிருத்தம்,

தத்தனத்தனனதந்ததனதந்தனா.

சிற்றுருக்கொடுதிறன்சிறிதுமின்றியே
திக்கனைத்தினுமிகும்பகைவிரும்புநான்
முற்றும்வெற்றிபெறவுஞ்சிலர்மொழிந்தவா
முத்தமிழ்க்கவிவிளம்பவும்வரந்தராய்
சுற்றுபொற்சடைசுமந்தசிவசங்கரா
சொற்கம்வெட்குறுநலந்திகழ்சிதம்பரா
பற்றுமுற்றொழியுமன்பருணர்புங்கவா
பட்டினத்தடிகள்கண்டுமகிழ்தந்தையே. (யங)

இரட்டையாசிரியவிருத்தம்.

தந்தைதன் றேளினொடு தரளவெண் சிவிகையிவர் தமிழ்விரக னுக்கு முன்னாள், சாரணர் பெரும்பகை விளைந்ததொரு கொடிதலத் தமியனேற் கிந்தநாளில்,—விந்தைபட வெதிர்நின்ற பகைவர்பல ரவர்கள்போல் வெண்ணீற்றை யிகழ்தன்மட்டில், விட்டுள்ள பேர்களல ரதன்மூல முங்கொன்று வெந்துண்டு வந்துளார்கா,—ணந்தையணி யுங்கைநெடு மாயனங் கொருபெரிய நகமெடுத் துப்புரந்த, நலமறந் தவனென்ன வவருடன் கூடினா னுன்னை

நம்பிநின்றேன், — சிந்தையொரு சிறிதிரங் கிக்கருணைவா ரிதித் திவலையொன் றுதவியாளாய், திகழ்சிலம் பொலி போத மருவுபங் கயபாத சிவசிதம் பரநாதனே. (மச)

ஆசிரியப்பா.

நாதமுதலா நவம்படுபொருட்கு
மாதரமாகி யவிர்தருமமலன்
றிருவருட்பெருஞ்சீர்த் தெய்வநாயக
னருவுடனுருவா யம்பலத்தமர்ந்தோ
னெவ்வகைச்சமயத் தினர்க்கும்பொதுவா
யவ்வவர்மனம்போன் றமைந்தானெனினுங்
கொலைபுலைமருவாக் கொள்கையர்தம்பா
னிலைபெறுமுளித்து நீங்கான்கண்டீ
ரொன்பதுபொய்யன் றியான்பகர்மாற்றம்
பின்பதாதலிற் பிழையெனவேண்டாந்
தாயகடொருவித் தறையிடைமகவா
மேயபோதே வியன்றமிழ்ப்புதுப்பாட்
டுரைத்தவர்நூலின மொருங்கும்
வரைத்தலைச்சுடர்போல் வகுத்ததிவ்வகையே. (மரு)

நேரிசைவெண்பா.

வகைபடும்பல்கோடிமதந்தோறும்வாழ்வோன்
முகையவிழுந்தார்க்கடுக்கைமொய்ம்பன்-றிகைமுழுதுங்
கையாகநின்றகனகமன்றத்தான்சிறிது
மெய்யான்வரங்கொடுக்கவே. (மசா)

கட்டளைக்கலித்துறை.

கொடுக்கச் சிறிதுஞ் சலியாத தெய்வங் குறிக்கு மன்ப, ரிடுக்கத் துறச்செயும் பொல்லாரை யூரொ டெரித் தபிரா, னடுக்கற் சிலைக்கைப் பெருமான்பொன் னம்பலத் தாடல்கண்டா, னடுக்கப் படாமன மெய்துமென்றே சொ ல்லு நான்மறையே. (மஎ)

சந்தவிருத்தம்.

தானதத்ததனதத்ததனனா.

நான்மறைப்பொருண்முழுக்கத்தெளிவீர்
ஞானவிற்பனரொனக்கற்றலைவீர்
தேன்மழைக்கவிகொழிக்கத்தெரிவீர்
தேடுபொற்குவியன்மிக்குற்றவிர்வீ

ளுன்மகத்திடைகுதித்துப்புலவோ
ரோடுதக்கனைவதைத்துக்களிகூர்
கோன்மலர்ப்பதவிருப்பத்தினரோ
கூடுசிற்சபையுமக்கெட்டரிதே. (மஅ)

இரட்டையாசிரியவிருத்தம்.

அரியவற் றரியதென வேதமுட னாகம மனைத்தும் பகர்ந்த செல்வ, மலைகடல் குடித்தமுனி யாதியபல் பெரியோர்க ளநுபூதி யாமகண்டம், — பரியென நரித்திரள் வரக்கண்டு களிகூர்ந்த பாவல னடைந்தவீடு, பத்தர்க்கு முத்தர்க்கு மொருபொதுப் பொருளது பரிக்குநல மடையி னல்லால், — விரிகடற் றரணியிற் பலகோடி யுடலுதவும் வெவ்வினை யொழிந்திடாது, வெற்பினந் தொறுமுலவு குமரகுரு பரமுருக வேளுணர்த் தத்தெரிந்தேம், — வரிவிழிக் கவுரியொடு பொன்னம் பலத்தினெடு மாயன்முத லோர்பராவ, மலையனைய முயலகன் கதறநட மிடுகிழவன் வாரிச மலர்ப்பாதமே. (மகூ)

ஆசிரியப்பா.

பாதம்வருந்தப் பரவைதன்மனைப்பாற்
போதலாதிய புகழ்பலவினவி
நாயினேனுநின் னல்லருள்பெறுவான்
வாயிகமுயன்று மனங்கவன்றுள்ளேன்
சற்றுநீயென் றனக்கினிதருளிற்
செற்றுனுங்கொடுமை தீர்தரச்செய்து
பூதலமுழுதும் புகழ்நிலைநிறுவி
மாதவனேங்க வந்துனையடைவேன்
மெய்வழிநால்வர் வியன்றிறல்விழைவா
வைவொன்று மறைதரற்கிசைவார்
நின்முகமைந்து நிறைமகிழ்வெய்துந்
தென்முகநாடித் தில்லையம்பலத்தில்
வாயரசுதவிய மகட்காத்
திரையினுள்வெளியிற் செயுநடத்தினனே. (உம)

நேரிசைவெண்பா.

நடத்துமுனதருள்போனடப்பதன்றிக்
கடக்கும்வலிசிறிதுங்காணேன் - றிடத்தவுணன்
மேலாடுந்தில்லைநகர்வேதியநின்மெய்யடியார்
கோலாகலத்தைக்கொடு. (உக)

கட்டளைக்கலித்துறை.

கொடுக்குந்திறன்சற்றுமில்லாமலேற்றுக்குலையும்வண்ண
விடுக்கும்பழவினைதீர்த்தருள்வாயிமவெற்பன்மகண் [ம்
முடுக்குந்திருநடங்கண்டும்பரொப்புமொழிவதன்முன்
னெடுக்கும்பதத்தையனேதில்லையூருக்கினியவனே.(உஉ)

சந்தவிருத்தம்.

தனதன தனதன தனதன தனனா.

இனியவரிலரொனமறுகுறுமனமே
யெனதுரைவினவுதியிதுபிழையலவே
யனியமொடநகியமெனநிறைதருமோ
ரதிசயனுளனரியயனறிவரியான்
மனிதரிலொருசிலர்பெறுதிருவருளான்
மறுவறுகனகசபையினடமுயல்வா
னனிநினைபவர்கனவினுமிளிர்தகையா
னமதுரிமையின்முழுகியகுணனவனே. (உ௩)

இரட்டையாசிரியவிருத்தம்.

அவலக் கொடும்பிறவி வாதனை யறப்பெற்ற வடியார்க ளிடையிருத்தி, யணிமா முதற்கொண்டு பலநூல்களும்பகரு மட்டமா சித்துநல்கித்,—தவறுற்ற புன்சமய கோடிகட் கொருகொடிய சண்டனு மெனவிளக்கிச், சதுமறை விதித்தவறு சமயங்களுக்குநற் றுயெனக் குலவ வைப்பாய்,—பவளப் பொருப்பனைய திருமேனி முற்றும் பரந்தவெண் ணீறுளானே, பசியமர கதமயிலை யன்ன மலை மகள்வலப் பாகத்தமைந்த பரனே,—கவலைக் கடற்சுவற வானந்த வாரிதரு கனகமன் றத்தினனே, கையின் மழு மானணிந் தடல்விடைப் பரிமீது ககனத்தில் வருதெய்வமே. (உச)

ஆசிரியப்பா.

ககனவெளியிற் கடவுளர்சூழ
விகல்விடைப்புறத்தி லிமயமகளுங்
குகனெனுமகவுங் கூடக்குலவத்
திகழ்தருசெம்பொற் சிற்றம்பலத்தான்
வரல்குறித்தியற்று மாதவம்வலிதே
கரவறமுதிர்ந்து காணப்பெற்றால்
வரம்பெறுமவர்தம் மனத்தளவன்றித்
தரம்பிரித்தருளுந் தன்மையாங்கவற்கின்

றென்பதன்பகுதி யான்சொலற்பாற்றன்
றன்பர்பற்பலர்க்கு மன்னேபோன்று
கங்கைநாவாயிற் கன்னிபயந்து
செங்கைதொட்டெடுத்துச் சிரமுகந்திடுமுன்
முதைபின்சென்றுயர் தவத்தோன்
காதைநூல்பலவுங் கழறினவுளவே. (௨௫)

நேரிசைவெண்பா.

கழகப்பலகைபெறுங்காதலுமென்னெஞ்சிற்
பழகக்கொடுத்தனேகண்பாரா - யழகியசிற்
றம்பலத்தினேயடியார்க்கெளியானே
வம்பலநான்சொல்லலறிவாய். (௨௬)

கட்டளைக்கலித்துறை.

அறிவாயமாமணிமேலமுக்கேதுமண்டாதுனருட்
குறிநாடும்வண்மைகொடுத்தாயென்றிந்தக்குவலயத்துச்
சிறியாரிகழ்வதுதீர்ப்பதற்காகுமெண்சித்தருள்வாய்[னே.
மறியேந்தியாடுமெந்தாய்தில்லையூர்ச்செம்பொன்மன்றத்த

சந்தவிருத்தம்.

தந்ததானதன தந்ததன தானனு.

மன்றமாவனவனந்தமுளவாய்மையால்
வந்தியாதவர்கள்கண்டிடினும்வீடுபோ
யொன்றலாமுயர்பயன்றருபவாகுமோ
வொன்றதேயுதவுநன்கதனையோதுவேன்
மூன்றனுதுவடிவந்திரையுளாகநேர்
மொய்ம்பருநடமுயன்றரனிலாவலா
மன்றனேகளைவிழுங்கியதுசோழனு
லம்பொன்மேய்வதுசிதம்பரவிலாசமே. (௨௮)

இரட்டையாசிரியவிருத்தம்.

ஆசறுத் துய்ந்தபெரி யோர்களும் விரும்பாத வா
சைபல வாறுகொண்டே, னஞ்செழுத் தோதிநின் றிருவு
ருவை மனதில்வைத் தரியதவ முயலவறியேன்,—பேச
ரியபூதபௌ திகவுடலை நானெனும் பேதமை யகற்றுகில்
லேன், பெண்ணூர்கண் மோகமென் றுள்ளதொரு கோர
வெம் பேய்வசத் தாற்றுழன்றே,—னசம்வரு மோவலது
நால்வர்முத லோர்பெற்ற ஞானவா னந்தம் வருமோ,
நானுய்ந் திடாவிடினு மானின முதற்பிறவு னையாதல் செ
ய்யவேண்டு,—நேசமுன் றிருவுளத் தெவ்வண்ண முள்ள

தோ நீலகண் டத்துவிமலா, நெற்றிக் கணுவிழியில் சிற்சபை நடேசனே நின்செய லறிந்திலேனே. (உ௯)

ஆசிரியப்பா.

ஏனவெண்மருப்பு மியாமைத்தோடும்
கானகத்தெருக்கும் கடுவுமிழரவுங்
கொக்கிறகாதியுங் குணமெனக்கொண்டு
திக்கினரறியச் சிற்றம்பலத்திற்
றிருநடம்பயிலுந் தெய்வநாயகன்
மருள்படுமனத்து வஞ்சனேன்பகர்
புன்சொலும்புனையிற் புரந்தரனாதிய
ரின்சொல்வான்மகளி ரின்பமெய்தித்
தருநிழலதன்பாற் றங்கிலைபெறுவா
ரருவருத்திகழி னவுணர்தாமே
யின்றுளவாறே யியங்கி
வென்றுயர்மாண்பின் மிகக்களிப்பாரே. (௩௰)

நேரிசைவெண்பா.

களிவண்டலம்புங்கடுக்கைமலர்மாலை
யொளிகொண்டசெஞ்சடைமேலுய்த்து-வெளியென்ற
சிற்றம்பலத்தினின்றதெய்வமொன்றுக்கேயடியார்
குற்றம்பொறுக்குங்குணம். (௩௧)

கட்டளைக்கலித்துறை.

குணங்கும்பொய் யூடன்மின் னார்தம்மைநாடிக் குலையுநெஞ்ச, மணந்தங்கு தாமரைப் பூநேர்நின்னருளில் வருவதுண்டோ, கணங்கொண்ட பேய்கள் பலசூழ வாடிய காடதனைத், தணந்தம்பொன் மன்றகத் தோர்திருக் கூத்துச் சமைந்தவனே. (௩௨)

சந்தவிருத்தம்.

தனதன தத்தன தத்தானா.

சமயவிகற்பமறுத்தாயே
சமரசநிச்சயமுற்றேனே
கமலமலர்த்திருவைப்போல்வார்
கலவியினிச்சைகெடக்காணே
னெமனுமடுக்கவிடுக்காதே
யெனதுகவித்தொடையைப்பூணுந்
தமநியமொய்த்தசபைக்கூடே
தனிநடமிட்டபதத்தானே. (௩௩)

இரட்டையாசிரியவிருத்தம்.

பதபங் கயத்துணையி லொன்றுபட வாழ்கின்ற பர
கதியொ ரெளியதென்றும், பாவமிகு மவுணரும் பெற்று
மகி ழுத்தக்க பலசித்தி யருமையென்றும், — விதமலியு
நின்னருட் சத்தியைப் பொல்லாத வெம்மாயை யென்று
மோதி, மெய்த்தரும வடிவான பசுவினம் படுகின்ற வே
தனைக் கயர்வுறுமற், — கதமருவு மதவேள் படுத்துதுய
ரெண்ணிக் கருத்தொல்கு மறிவுமின்றிக், கற்றமட் டிற்
சில பிதற்றுநர்மு னடிமையொரு காலனென மிளிர்வதெ
ன்றோ,—வுதகமக ளுள்ளந் தயங்கிடக் கண்டுமை யுவப்
பெய்த முனிவரிருவர்க், கோவாத பேரின்ப மலிவுறச்
சிற்சபையி லொருநடஞ் செயுமிறைவனே. (ருச)

ஆசிரியப்பா.

இறையளவேனு மேனையகுணத்தா
லறைதருமாற்ற மார்தாலின்றிச்
சத்துவகுணத்தாற் றமிழ்த்தொடைவனைந்து
மொய்த்துணர்க்கடுக்கை மொய்ம்பிற்சூட்டும்
வாதவூரனை வடிவுடனருந்திப்
போதமகிழும் பொன்னம்பலத்தா
னக்குணத்தம்மட் டளவுமின்றி
மிக்குளவிருபால் வெம்மைக்குணமே
பொலிவுறத்தொடுக்கும் புன்சொற்றொடைமேன்
மலிவுறுமார்வம் வைத்தெனைப்புரப்ப
துண்டுகொலறியே னுனதுபல்கலைச்சீர்
கண்டுபாடிக் கவிமலர்சொரியும்
புலவர்தம் நாத்தொறும்பொருந்தி
நிலவெனக்குலவு நிறத்திளம்பிடியே. (ருரு)

நேரிசைவெண்பா.

இளம்புனத்துவேடனை முன்னீந்ததலைவேடன்
களம்புகுத்தநஞ்சக்கறையான் - வளம்பொலியுந்
தில்லைச்சிதம்பரத்திற்றிந்தோமென்றுநென்வாய்ச்
சொல்லைப்பெறினேசுகம். (ருசு)

கட்டளைக்கலித்துறை.

சுகந்தந்துநெஞ்சைப்பலவாறுவாட்டிடுந்தொல்வினையா
மகங்குன்றச்செய்கின்றநாளுளதோவுமையாரணன்மால்
குகன்றந்திமாமுகனுதியொன்றுங்குலாவுமெந்தா
யிகந்தங்குபொன்னம்பலத்தேநின்றுடுமெழிற்சிவனே. ()

சந்தவிருத்தம்.

தனனத்தனதானனந்தத்தனதனதானு.

எழிலித்திரணுணுறுங்கைக்கொடைமுயலாதே
யிகமெய்க்கதியாகநம்பிக்கெடுமவரோடே
பழகித்தமியேன்வருந்தற்றெரிகிலேயோமால்
பரவற்கரிதாயகஞ்சப்பதமருள்வாயே
குழையிற்செவிதோயும்வெண்பொற்பவிர்வளையானே
குகனைப்புலவோர்களுய்ந்தெய்ப்பறமுனமீவா
யழுமற்புதஞானவிஞ்சைத்தவருணர்சீலா
வறிவிற்கறிவானவம்பொற்சபையுறைவானே. (௯அ)

இரட்டையாசிரியவிருத்தம்.

உறைவிட்ட வாளன்ன கண்ணியர்கண் மோகத்தி லோயாத கவலையுற்று, மூர்தோறு மேகியுல கத்தினுக் குயிரொன்ன வொளிர்கின்ற பொருள்விழைந்தும்,—தறை முற்று மொருகுடையி லாள்வோர் முதற்பலர் தமைப் பகைத் துத்தவித்தும், தவயோகர் முதலாய பெரியோ ரை நாடொறுஞ் சற்றுமதி யாதிகழ்ந்தும், — கறைபட்ட நெஞ்சுடைய கடையனேற் குன்னருட் கடல்வந்து கூடுங் கொலோ, கருநிறப் பகடுகைத் தெதிர்துடுக் கினன்விறற் கைச்சமர னேருங்கொலோ, — மறைமுற்று முணர்வரிய பதமெடுத் துத்தில்லை மன்றினின் றாடுமிறைவா, வாதவூர் முனிவன் றொடுத்ததமிழ் மாலிகை வனைந்தணியு மாதே வனே. (௯௯)

ஆசிரியப்பா.

தேவர்தம்மூர்ச் சிறப்பினிற்சிறிது
மாவலெய்தா தடியவரானூர்
பதத்துகள்சுமந்து பரிதிமுன்னர்
நிதத்துனைக்கருது நெஞ்சகந்தன்னிற்
கிள்ளைப்பரிமேற் கிளர்தருகொடியோன்
கொள்ளைமாமலர்க் கோல்வரன்முறையோ
நினையார்மனத்து நிறைதருநீயிவ்
வினையேனகத்தின் மேவிலைகொல்லோ
நீயுளதலத்து நெஞ்சஞ்சாம
லீயுணுமவற்றை யெய்வான்றுனே
முன்னுளெரித்த முறைமறந்தனனே
சொன்னவலர்தாஞ் சூழ்தருகதையோ

யாதின்றன்மை யெத்தகைத்தெனினு
நீதிருவுளத்தா னினைத்திடலரிதோ
வாதலிற்றமியே னகங்குலைந்தலையு
மேதமுற்று மின்னேயொருவித்
தண்டமிழ்க்கிரியிற் றவமுனிமுதலோர்
கொண்டபேரவைக் குழுவினும்போய்மீண்
டாடன்மிக்கியற்றி யரியநின்பதமாம்
வீடடைந்துன்னின் மிளிர்தரக்கொள்வாய்
புலியூர்க்கோயிற் பொன்னம்பலத்தி
னலியாதென்று நடம்புரிவானே. (சல)

நேரிசைவெண்பா.

வானேமுதலாகமற்றெவையுநின்வடிவந்
தானேயெனுநூல்சரதமே - வியானே
னொருவன்மட்டும்வேறுவேனேய்குதில்லைமன்றத்
திருவர்தொழநின்றசிவனே. (சக)

கட்டளைக்கலித்துறை.

சிவனின்றுதில்லைப்பொதுவூடியற்றுந்திருநடச்சீ [னா
ரொவர்கண்டுகொள்ளவல்லாரோவறிகிலமெண்ணில்பன்
லவனன்றிவேறில்லையென்றுமற்றியாவுமசத்தெனவு
மிவனன்பர்நாடியவாறுவனென்றுமிசைத்தனவே. (சஉ)

சந்தவிருத்தம்.

தனத் தனத் தனத் தானன தனனா.

இசைக்குமுத்தமிழ்ப்பாவலர்சிலரோ
டெனைத்திருத்திநிற்காளெனவிடினே
வசைச்சொன்முற்றுமற்றுணவவிருள்போய்
வழுத்துன்விற்கழற்றுளிடைபுகுவேன்
மிசைத்தசத்திரச்சேய்வரும்விழியாய்
விடைப்பரிக்குவப்பாகியபெரியாய்
திசைக்கரத்திலெட்டாயுதமணிவாய்
செழித்தசிற்சபைச்சேண்வடிவினனே. (சஙு)

இரட்டையாசிரியவிருத்தம்.

சேணு நிறைந்ததன் வடிவங் கிடக்கச் சிறுத்தநெஞ் சுடையவென்னோர், சிலருமுய் வதுகருதி யொருதிரு வுருக்கொண்டு சிற்சபையி லாடல் புரிவான்,—மாணார் துதித் தமிழ் பொழிந்தவர னேகரிம் மாநிலத் தெய்தி யெய்தி,

மலங்கள மற்றதனி வீடடைந் தார்களவன் மருவும் புகழ்ப்பெருக்கிற், — கோனாத வேலுடைக் குமரகுரு நாதனைக் குஞ்சர முகத்தினனைக், குழவியிற் பெறலுயர் வெனத் தேரி னதைமிகக் கூறுது விடுவார்களோ, — நீளுக மத்த முத லாமவற் றைச்சொலலி னேர்பாதி யிற்பாதியு, நிகழ்தரக் கேட்டிலேங் கலைமகண் மறைத்தெனது நெஞ்சிடை விளக்கினளே. (சச)

ஆசிரியப்பா.

நாள்பலகழிந்து நரைதிரையடுத்தும்
வாள்பொருகண்ணார் மயற்பெருங்கோட்டி
வளர்தரக்கண்டு மாழ்கலன்றிக்
கிளருநின்னருட்சீர் கிடைக்கப்பெற்றிலன்
முத்தியினுசை முதிர்ச்சியிற்பெரிதாச்
சித்தியின்வேட்கை திகழ்ந்ததந்தோ
வென்றுநீயருள்வா யானென்றிகத்திற்
கன்றுடனுன்கொல் கயவரைச்செகுத்து
மூவகைநலனு முறைமுறையருந்தி
யாவன்முற்றொழிந்த வரும்பதமடைவே
னலதுநின்கடைக்கண் ணதுகொடுநோக்கி
யுலகுடனெனையு மொருங்குவிட்ட
நிலயமாயினு நிகழ்தரச்செய்தி
யிலகுங்கருணை யித்தனையளித்தாய்
பயனிலாதொழியப் படுத்தாயன்றே
வயலவர்நகுமா றறிகிலேகொல்லோ
வின்னமுஞ்சகித்தற் கியான்வலனல்லேன்
பொன்னம்பலத்துப் பொதுநடத்தானே. (சரு)

நேரிசைவெண்பா.

தானக்கரியுரித்தசங்கரனைத்தங்கவெற்போர்
கூனற்சிலையாகக்கொண்டானை - யேனத்
துடன்போனவேடுவனையூனமில்சீர்த்தில்லை
யிடம்போய்ப் பணிவதுநன்றே. (சசு)

கட்டளைக்கலித்துறை.

நன்றனந்தருந்தில்லைப்பிரானைநமன்கெருவங்
குன்றவென்றம்பொற்பதநீட்டினனைக்குமரனென
வொன்றவல்லாரெவரோவவர்தாளிலுதிர்ந்ததுக
ளென்றனக்காதரமல்லான்மற்றியாதுமிலக்கல்லவே. ()

சந்தவிருத்தம்.

தனத்தனத் தனன தானன தனா.

இலக்குமிக்குலகிலீனர்தமயல்போ
யிரக்கமிக்கவர்கண்மோகமதுறுவா
னலக்கணுற்றிடையுநான்மகிழ்வுறநீ
யயிற்படைக்குகனைநேர்வரவிடுவாய்
மலக்குழப்பமறுமாதவர்துணைவா
வடித்தசொற்புலவர்பாடல்கள்புனைவாய்
தலத்தினைப்பெரியதேனொவிவர்வாய்
தனித்தசிற்சபையிலாடியபரனே. (சஅ)

இரட்டையாசிரியவிருத்தம்.

பரமதத்திமிரங் கெடக்குலவு பானுவிற் பசுவாதி யவைவதைத்துப், பருகுமவர் காலனிற் றமிழ்மாரி யுலகிற் பரந்துபொழி கின்றமுகிலிற்,—கரவறு முழுத்திங்களென்னவெண் ணீற்றொளி கவின்றர வுருத்திராக்கக், கண்டிகை புனைந்துகல் லாடையொடு நிலவுமொரு கனயோகி தனையெனுவற்,—றரவனுப் பினுமவனை யாறுநெறியோருறுவல் சகளமென நம்பியந்தத், தன்மையடியேனுமுற் றனதுநிட் களமயந் தன்னிற் கலப்பனந்தோ,—புரமெரிய நகைசெய்த புண்ணிய மெனக்குலவு பொன்னம்பலத்தினனே, பூதவே தாளகண முடனுடுவானே புதுக்கொன்றை மாலையானே. (சகூ)

ஆசிரியப்பா.

மாலைமதியம் வயங்குசெஞ்சடையும்
பாலைவார்த்தன்ன பரந்தநீற்றுருவும்
பரசொடுமறியும் பரித்ததோளும்
வரதமுமபயமு மாசுணமென்பு
வெண்டலையாதிய வியன்பணிபலவுங்
குண்டலமென்னக் குழைக்கணிவளையுங்
கண்ணொருமூன்றுங் கனிவாய்நகையும்
பெண்ணொருபாகமும் பிறங்கத்தோன்றித்
தானவர்சிலர்க்குந் தக்கபேறளித்து
வானவரீட்டம் வருந்துமாறுங்
கண்டனையென்னக் காவியம்பலவும்
விண்டனவதனுன் மெய்நெறிக்குதவி
செய்வாயென்றே தினநினைக்கின்றேன்

பொய்வாய்ப்புலையர் புகழ்பெறத்தமியேற்
கொன்றிடநினையேல் கோயின்மன்றகத்து
நின்றிகபரத்தோர் நினைவளிப்பானே. (ருய)

நேரிசைவெண்பா.

பானல்விழிக்கவுரிபங்கிருந்தசங்கரனைத்
தேனவிழ்பூங்கொன்றைச்சிவன்றன்னை - ஞான
குருவாகக்காணலாங்கோயின்மன்றிற்சென்று
லருவாகவுங்காணலாம். (ருக)

கட்டளைக்கலித்துறை.

காணருந்தெய்வமொன்றுண்டென்னவாடிக்கலங்குகின்ற
வீணறிவுள்ளவரோசொலக்கேண்மின்விளங்குதில்லைச்
சேணலதில்லைத்திருவுருவாயுந்திகழுமன்பர்
வேணதெல்லாந்தருந்தாதுமுன்னுளில்விளம்பியதே. ()

சந்தவிருத்தம்.

தனந் தனந்தன தனனத் தனனு.

விளம்புசெந்தமிழினைமிக்கினிதா
விரும்பிடுங்குணமதைவிட்டனையோ
வளம்படுங்கொடைநலமற்றனையோ
வருந்தல்கண்டுமெயருள்வைத்திலையே
யுளம்புகுந்திவைபகர்வித்திடலா
ருகஞ்செய்வஞ்சகமதையொப்பினையோ
களம்பொருந்தியகறைசற்றுடையாய்
கவின்பொனம்பலநடனத்தினனே. (ருஉ)

இரட்டையாசிரியவிருத்தம்.

இனனுமதி யுங்கனலும் விழியெனக் கொண்டெங்கு மென்றென்று முற்றபொருளை, யீரிரு மறைத்தலையு மாக மப் பகுதியு மியம்பிடும் பெருமையானைக், — கனகவரை யைச்சிலை யெனத்தொட்ட கையனைக் காளவிட முண்ட சிவனைக், கருதரிய பேருருவ னென்றெண்ணி வீணினிற் காலங் கழிக்கவேண்டா,—மனவரத தாண்டவந் தில்லை யிற் செய்திலகு மம்பொன்வடி வைக்குறித்தோ, ரைந் தெழுத் துஞ்சொல்லி யெளவைபகர் நோன்பெய்தி லதுவும்வந் தமையுநிசமீ,— தெனதுணர்வு மல்லபல பெரி யோரு முய்ந்தவா றென்றெனக் கந்தநாளி, லெழில்வே லெடுத்தெழிற் சிகரிதொறு முறுகுரவ னினிதுணர்த் திய ஞாயமே. (ருச)

ஆசிரியப்பா.

ஞாயமொன்றுளது நவிலக்கேண்மோ
மாயவுலகின் மனித்தமகவா
யுற்பவித்துள்ளோற் குறுதாய்முலைப்பா
னற்பலொவ்வொன்று நழுவிநங்கையர்
செவ்விதழ்கவுணோர் சிற்சிலவுறுப்பை
வெளவிடலங்ஙனம் வரத்தகும்பருவத்
தங்கைவேலவ னடித்துணைவிழைந்து
சங்கையில்பனுவற் றமிழ்கொடுபகர்த
லாதியபணிமிக் காற்றவாற்றி
யேதிலர்க்கறுவு மிப்பருவத்தீண்
டியங்குவதோன்றுவ யாவுந்தானென
வயங்கினனியானோர் வடிவினனுதலி
னென்னையுமவ்வா றேற்றுக்கொண்டனன்
பின்னையவ்விரு பெட்புமில்பெருமை
யாதெனத்தேரி னீன்றதொன்றின்றி
வேதமுமறியா வெளியெனவிளங்கிற்
றன்னதுதிருச்சிற் றம்பலமென்ன
முன்னவர்சொன்ன மொழிவழிநம்பிப்
போற்றுகின்றேன் பொருவின்மற்றதெனக்
காற்றுவதென்னேவறிகிலனன்றே. (௫௫)

நேரிசைவெண்பா.

அறிவாயதுகடந்தவம்பரமேயுண்மைக்
குறியாகுமென்றுணர்ந்துகொண்டால் - வெறியாரு
மெச்சமயத்தோர்கதையுமேற்றமுமாமீனமுமா
நச்சலிற்றோன்றுதிங்நலம். (௫சு)

கட்டளைக்கலித்துறை.

நலங்கொண்ட வாறு சமயமுந் தாண்டுமெஞ் ஞானி கட்கே, பலங்கொண்ட சிற்றம் பலமுழுப் போதம் பலிக் கும்வம்பிற், சலங்கொண்ட சென்னிப் பிரானென்று மாலென்றுந் தக்கமிட்டிங், கலங்கொண் டரற்றி யலைகி ன்ற மூடருக் காவதன்றே. (௫எ)

சந்தவிருத்தம்.

தான தத்ததன தத்ததன தத்தன.

ஆவலுற்றபடிசித்திகணடத்தலா
லாருயிர்த்திரளினுக்கிதமியற்றியோர்

சேவல்பற்றியகரக்குமரனொத்துவாழ்
சீர்பொறுத்தொளிர்தரச்செயநினைப்பையோ
மூவலற்றுயரநுக்கிரககத்தனே
மோனநிச்சயமுழுப்பரமதத்துவா
கோவதைப்பவர்குடிக்கொருநெருப்பனூர்
கூறிடக்குலவுசிற்சபைநிருத்தனே (ருஅ)

இரட்டையாசிரியவிருத்தம்.

நிருமல நிராதார நிர்த்தொந்த னுமென நினைத்துற் றுணர்ந்து ளோர்க்கு, நீலகண் டாசங்க ரர்வெனச் சந்தத நிகழ்த்தத் துணிந்தவர்க்கு, — மருமலர் தெரிந்தெடுத் தைந்தெழுத் தோதியினி தர்ச்சிக்கு மன்பருக்கு, மால யத் துக்கினிய பணிசெய்து திருவிழா வாதிய நடத்து வார்க்கு,—முருவமொடு கோலமுஞ் சற்றுமற வாமலுள் ளுன்னிநெக் குருகுவார்க்கு, மொண் பொருளை யொடு வந்த தமிழ்கொண்டு கவிபாடி யுலகிசைய நிறுவுவார்க் கும்,—திருவருள் வழங்கிடச் சலியாது மன்றினிடை தின நடம் புரியுமிறைவன், செப்புவன முற்றுமொரு தொண் டன் செயிற்றருஞ் சீரொன்கொ லறிகிலேனே. (ருகூ)

ஆசிரியப்பா.

அறிதுயிலமர்ந்தாற் கரியமூர்த்தி
மறியொடுமழுவும் வைத்தகையான்
புனிதர்போற்றிசைக்கும் பொன்னம்பலத்தா
னினியவர்தமக்கே யிடுக்கணல்கிப்
பெறலரும்பேறு பெறத்தருமென்கை
யறநெறிமுழுதோர்ங் தவரிற்றலையாம்
வாதவூரனை வழுதியானையி
னேதமிக்கருத்தி யிரண்டறக்கலத்த
லாதியசரித மாயிரங்கள்
சோதியென்னத் துலக்குமன்றே. (சுO)

நேரிசைவெண்பா.

துலக்குங்கருணைச்சுயம்பிரகாசத்தை
யிலக்குவைத்துநாடியவாறெய்தி - யலக்கணறச்
செற்றகண்டபோதநல்குஞ்சிற்றம்பலவனெனப்
பற்றலொன்றேமேலாம்பதம். (சுக)

கட்டளைக்கலித்துறை.

பதந்தரவல்லசிவன்றிருச்சிற்றம்பலத்தமலன் [ன்
சுதந்தரமியாவர்க்குமில்லாமலெங்கணுந்தோய்ந்து நின்று
மதந்தவிரியோகியரியாதினுந்தாக்கற்றவத்துவென்பா
ரதன்பருக்காவதன்றன்னவர்க்கேயிசைவாகுமன்றே. ()

சந்தவிருத்தம்.

தான தானன தந்தன தந்தன.

ஆகுவாகனனும்பலகுன்றுதோ
றுடுவானுநின்மைந்தர்களென்றசீர்
பாகுநேர்தமிழ்கொண்டுமொழிந்துளார்
பாததூளியணிந்தும்வருந்தினே
னியோகுளாரும்வியந்துசொல்கின்றபே
ரோகைவாரிவழங்கவிரங்குவா
யீகுவாரின்முனென்கைதணந்திடே
லீடிலாடகவம்பலநண்பனே. (சுஈ)

இரட்டையாசிரியவிருத்தம்.

நண்பகத் தணுவளவு மில்லாத மங்கையரை நாடவி
னலங்குலைந்து. நானிலத் தீனர்கைப் பொருள் விழைந்
தெண்ணில்பல நகரங்க டொறுமலைந்தும், — திண்பகட்
டியமனும் வருங்கொலோ வென்னும் திடுக்கமுற் றுள்
ளுடைந்தும், சிறியனே னிங்குபடு கின்றபல துன்பமுந்
தீர்தரச் சிறிதிரங்காய்,—விண்பதித் தேவருடல் வெந்த
பொடி யென்பொடு மிகப்புனைந் தாடும்விகிர்தா, வேள்வி
முய லுங்கொடிய பாதகன் முடித்தலை விழுந்துருள வெ
ட்டும்வீரா,—கண்படு கலாபமயில் வாகனத் தொருமத
லை கையில்வடி வேல்கொடுத்தாய், கதியுடன் றொழுமவர்
தம் விழைவனந் தமுமுதவு கனகமன் றுடையசிவனே. ()

ஆசிரியப்பா.

சிவசிவவென்னுந் திருமொழிமிகச்சொற்
றவமறும்வெண்ணீ றக்குடனணிந்து
செய்யகல்லாடை திகழ்தரச்சென்று
வையகத்திரந்து வயிற்றளவருந்து
மெய்யறத்துணையால் வீடுசேர்கைக்
கையமில்விரத்தி யதன்வழிவந்தேற்
கெண்ணரும்பெரும்பேற் றிச்சைநல்கிப்
புண்ணவிர்மனத்தாற் புலரச்செய்தோன்

காம்புறழ்மென்றோட் கவுரியும்புலியும்
பாம்பும்பார்க்கப் பசும்பொனம்பலத்தி
லொருகாலூன்றிமற் றொன்றை
யருகாவளைத்தினி தாடுமவனே. (சரு)

நேரிசைவெண்பா.

ஆடுந்திருவடியையாட்டுக்காலென்றசிந்து
பாடுமவற்கும்பதமளித்தோ - னூடுமன்ப
ரொண்ணமுற்றுந்தானென்றிசைந்துதில்லையம்பலத்தோ
ரண்ணலெனவாழுமரன். (சசு)

கட்டளைக்கலித்துறை.

அரகரவென்றொருக்காலுஞ்சொல்லாதவராயினும்
கரகமுந்தீயுங்கைக்கொண்டுநின்றாடுங்கனகசபை
வரகருணாகரன்றன்னைக்கண்டாலுடன்வாய்குளறி
விரகழிந்தேங்கியழுந்தன்மைபோலும்வியப்பில்லையே. ()

சந்தவிருத்தம்.

தனனதன தத்தனத் தாந்ததன தானனா.

வியனுலகிடத்தெனைப்போன்றிவிதவாசையான்
மெலிவுபடுபத்தரைக்காண்கிலிவண்வாடிடே
னயலறுமிவற்றொர்சற்றேய்ந்துவடலூரில்வா
ழவனையுமறைக்குளுய்த்தீண்டுபலரோசுகீ
ரியலவிடலுத்தமப்பாங்குகொல்கணவினா
டிலகுமவணத்தெழிற்றான்கவலைதீர்குவே
னயனரிவழுத்திடத்தாந்திமிதெய்தோமென
வகல்வெளியினிற்செய்நற்றாண்டவநடேசனே. (சஅ)

இரட்டையாசிரியவிருத்தம்.

நடலையறு நின்வடிவ மட்டமூர்த் திகளென்ன ஞானமுடை யார்கள்பல்லோர், நவிலன்மெய் யாகிலடி யேன்றொடு கிணற்றில்வர நதிவந் துதிக்கவேண்டும்,—வடலூரறைக்குட் புகுந்தவன் புவியறிய வந்துகளி கூரவேண்டு, மதுரையிற் றலைகொய் திறந்தவன் புதைபட்ட மண்ணினின் றெழுதல்வேண்டும், — கடல்சூழு முலகத்தி லெவருமுயிர் கொன்றுணாக் கனநோன்பு கொள்ளவேண்டும், கடையனே னிவையன்ன கருதலொடு பேசனின் கருணையறி யாதுசெயலோ,—விடமயின் றரிபிரமர் முதலாய தேவர்களு மேதினியு முய்யவைத்தாய், வெள்ளியங் கிரியெனக் கனகமன் றிடைநின்று விகசித நடஞ்செய்வானே. ()

ஆசிரியப்பா.

வானெனநிறைந்து மகிதலத்தொருநீ
தானெனக்கருதுந் தன்மையினர்க்காத்
திருவுருக்கொண்டு தில்லைமன்றகத்திற்
பொருவில்பேராடற் புரிவோய்கேண்மோ
தூயவானவரைத் துயர்செயற்குறித்த
மாயவல்லவுணன் மகப்பேரழலில்
விழுந்தெரிந்தானை வெண்ணீற்றுருவா
லெழுந்துறச்செய்தா யானையாதிய
சில்லுயிரொருக்காற் சீர்த்தெழப்புரிந்தாய்
வல்லுருளைத்த மகன்முதலினர்க்கும்
போயசிற்றுயிர்ப் புரந்தினிதளித்தாய்
தாயனாதியர் தமக்கருள்சுரந்தா
யாயவாறனந்த மறைதற்பாற்றன்
றேயநின்னருட்சீ ரியைந்தமைகேட்டே
மத்தகைவிளையாட் டகிலத்திந்நா
ளுய்த்திலையதனா லொருசிலரிறந்தா
ரன்னவர்வழக்கு மடியனதாகத்
துன்னவேற்றுத் துதித்தனையிரந்தே
னல்குதிகொல்லோ நாயினேனையுங்
கொல்குதிகொல்லோ குறிப்பறியேனே. (௭௰)

நேரிசைவெண்பா.

ஏனாதிமெய்ப்பொருளாங்கேதமுறுங்காலம்
வானாடர்போற்றவெதிர்வந்திலா - யானாலு
முன்றிருத்தாளன்றியொருதுணையிங்கோர்ந்திலங்காண்
மன்றிடத்திலாடுமுதல்வா. (௭௧)

கட்டளைக்கலித்துறை.

முதலையொன்றன்றவிநாசித்தலத்தின்முதுகுளத்தின்
மதலைநல்கப்படித்தான்றனக்கீந்தவல்வாக்கருளாய்
திதலைதுன்றுந்தனத்தார்பலரோங்குறச்சென்றிரந்தாய்
புதலைமுத்திக்கணாய்த்தானுணர்சீர்த்தில்லைப்புங்கவனே ()

சந்தவிருத்தம்.

தந்தனத் தனன தன்னதன தானனா.

புங்கவர்க்குணாயர்புண்ணியனைவானுளார்
பொன்றுடற்பொடிகொள்வன்மையனையீடிலா

மங்கலக்கவுரிகண்முனடமாடுசீர்
மன்றிடத்தினனைநண்ணுமறிவாளரோ
யுங்கண்முத்தியரிதென்னவெனல்பாவமா
னுண்டுவெப்பவனைவென்மகிமைநாடிடீர்
பங்கயத்துவிதிசொன்மகமும்வீணலோர்
பண்பினத்துயர்வதின்னருளதாகுமே. (எங)

இரட்டையாசிரியவிருத்தம்.

ஆகுலம் விளைக்கின்ற வேடணைப் பேயின மகத்திற் புகுந்திடாம, லறுவகைச் சமயங்க ளல்லாத பொய்ச்சமய வாணவ மலிந்திடாமற்,—பாகுநிகர் முத்தமிழ்க் கடலருமை யறியார்கள் பலகலை மிகுத்திடாமற், பச்சிலை கிழங்குகாய் கனியமுதொ டென்புறுகர் பாவிகளும் வாழ்ந்திடாமற்,—கோகுல மளித்தநெடு மாயனோ வலதுவேற் குமரனோ வென்றுபல்லோர், கூறிடத் தக்கதிரு விளையாடல் செய்யக் குறித்தபடி யருள்செய்வையோ, — மாகுணக் கடலாகி நிர்க்குணப் பொருளுமா மன்றகத் துற்ற சிவனே, மழவிடைப் பாகனே யடியவர்க் கெளியனென வரைதரு கரத்தையனே. (எச)

ஆசிரியப்பா.

கரநிகர்விழியார் காமமென்னும்
பரவையிற்றவிக்கும் பாவியேனைச்
சரவணபவனுந் தனையற்கொண்டு
திரமனமுதவித் திருத்தியாண்டா
யெவ்வகைத்தேவு மியானென்றிசைந்தாய்
நௌவலந்தீவி னரர்பலரறியக்
கண்ணுறுதியர் கவின்கொடுநிலவி
யெண்ணருமறங்க ளியாவையுநிறுவிச்
சிறப்பொருங்கெய்தித் திருத்தியாகிப்
பிறப்பின்மெய்வீட்டிற் பிறங்கச்செய்வாய்
செம்பொன்மால்வரைநேர் சிற்றம்பலத்திற்
பைம்பொன்மாதருகிற் பார்த்துமகிழ
வொருநடமாயினு மொவ்வாத்
திருநடம்புரியுஞ் சிவசிதம்பரனே. (எரு)

நேரிசைவெண்பா.

சிதம்பரத்திலாடுஞ்சிவபெருமான்செம்பொற்
பதம்பரவப்பெற்றபடியான் - மதம்பரமென்

றேமாந்துவாடாமலெல்லாம்பரமேயென்
ருமாண்படைந்தேமம்மா. (எகூ)

கட்டளைக்கலித்துறை.

அம்மானையாடல்விட்டென்பேதைகையிலமுதுகொண்டு
பொய்ம்மானழைத்துவருந்தில்லைநாதர்முன்போமுனவர்
சும்மாவிராதுவெண்ணீற்றினைத்தூவினர்தூவுதலு
மைம்மால்விளைந்துபின்னேடுகின்றுளென்னவம்பிதுவே.

சந்தவிருத்தம்.

தந்தத்தன தத்தன தத்தனனு.

வம்பத்தனைகட்குமிருப்பிடநேர்
வஞ்சப்பொய்மதத்தரையட்டுயர்வா
னம்பத்தகுமெற்கருண்மிக்குதவாய்
நன்றப்படியத்தினமொப்பிலையோ
கொம்பத்தியுரித்தபதத்திறைவா
குன்றத்தைவளைத்தபலத்தினனே
தெம்பர்ச்செறுபுத்திரரைப்பெறுவாய்
செம்பொற்புறுசிற்சபையுத்தமனே. (எஅ)

இரட்டையாசிரியவிருத்தம்.

தமகுணச் சிதடரைச் சத்துவ குணத்தரிற் சந்ததமு நம்புவாருந், தமிழருமை யறியாத முழுமூடர் கைகளைத் தருவென வழுத்துவாருங்,—கமலமக ளனையவிலை மடவார்களாசையிற் காலங் கடத்துவாருங், கற்பனைச் சமய முறை யிடைபடிந் துண்மைநெறி கழறினுஞ் சினவுவாரு,—மமலபர மானந்த முத்தியொன் றில்லையென வறி யாய மொழிகுவாரு, மடியேனை யிகழ்கின்ற விதமறிந் துஞ்சிறிது மருள்புரிந் திலையையனே,—சமரச சுபாவ முறு பெரியோர்க ளுக்கினிய சரணயுக ளத்தினனே, தங்கவம் பலமதனி லென்றுநின் றரியபர தஞ்செயும் பர மகுருவே. (எகூ)

ஆசிரியப்பா.

பராசரனெனுமோர் பத்தனந்நாள்
வராமுலைச்சிறிய மங்கைதன்னை
வன்னமென்குரும்பை வளமுலைவருத்தி
நின்னருட்பொலிவா னிறைதருபருவத்
தங்கனையாக்கி யணைந்துடனவனிற்

புங்கமிக்குளதோர் புதல்வனைப்பெற்று
னென்கைமெய்ம்மொழியே வியாதுநன்றிசையா
வன்குணத்தென்னை மாதவத்தினைச்
செய்தருட்டிறத்திற் சேர்க்கைநிற்கரிதோ
வைதுகண்பாரா யதிற்பிழையடையா
தன்னந்துயிலு மணிவயற்றில்லைப்
பொன்னம்பலத்திற் பொலிந்தபூரணனே. (அ௰)

நேரிசைவெண்பா.

பூரணனைத்தில்லைநகர்ப்பொன்னம்பலத்திலுறுங்
காரணனைக்கண்டுகளியாமல் - வாரணக்கோ
டன்னமுலையார்க்கடிமையாகித்திரிந்ததனு
லென்னபயன்பெற்றனைநெஞ்சே. (அக)

கட்டளைக்கலித்துறை.

நெஞ்சேபொற் கோயிலென் றெண்ணில்வல் லோர் முன் னிகழ்த்தியுநா, னஞ்சே லெனக்கண்மு னீவரல் வேண்டி யயருகின்றேன், மஞ்சேங்க வார்க்கும் விடைமீ துமையொடு வந்தருள்வாய், நஞ்சேய்ந்த கண்டத்தனே யண்டர்சூழ் தில்லை நாயகனே. (அஉ)

சந்தவிருத்தம்.

தனன தந்ததன தந்தன தனனு.

அகமறிந்தபலவஞ்சகமுயல்வே
    னடியர்தங்களைவணங்கியுமறியே
னிகதலந்தனிலுநின்றிருவருளோ
    டிலகவென்றுமிகநொந்திடலுளதே
குகனையன்றுதவுசெங்கனல்விழியாய்
    குரவர்தம்புடையின்முந்தியசிவனே
நிகளபந்தமறவென்றவருயிரோ
    நிகரிலம்பலநடம்புரிபவனே. (அங)

இரட்டையாசிரியவிருத்தம்.

பவசா கரத்தைக் கடந்துனது பங்கயப் பாதநிழ லடைகுவேனே, பாருலகி லின்னமும் பலகோடி யோனியிற் பட்டுக் கலங்குவேனோ, — தவயோக மார்க்கத்தின் வலிகொண்டு புறநெறிக டம்மைவென் றுய்குவேனோ, சற்றுமஞ் சாதுகொன் றுண்பவர்க ளேசிடச் சவவடிவ மாகுவேனோ,—புவனேச ருங்கண்டு கண்கூசு மாறுபல புண்

ணியஞ் செய்குவேனோ, பூதலத் தின்னமும் பொருளி ரங் தலைகின்ற புன்மைகொண் டுழலுவேனோ, — நவநாத சித்தர்க்கு மாதார மாநின்ற ஞானவா னந்தமயமே, நம்பு மவ ரும்பரொடு தெண்டனிட வம்பல நடம்பயில் பழங் கிழவனே. (அச)

ஆசிரியப்பா.

கிழமைமிக்குள்ளார் கீழ்மைதீர்த்துக்
கழலணிதிருத்தாட் கமலஞ்சூட்டப்
புகுந்தொறுநரைச்சீர் பொலியக்காட்டிபு
நகுந்துவர்க்கனிவாய் நகையணிமடவார்
பைந்தொடிச்செங்கைப் பலிகொளுந்தோறுஞ்
சிந்தொலிமுரசார் திரள்பலகோடி
நாணுறீஇயொதுங்கு நலம்பலவாய்ந்த
யாணுருக்கொண்டு வயங்குமம்பலத்தி
லியாவரொவ்வண்ண மிசைவுற்றேத்தினும்
பாவனைக்கருத்தின் படிதிகழொருவ
னென்றமிழ்விழைந்தென் னிதயத்தவிர்ந்த
தொன்றலம்பலவா றுள்ளலுமரிதே. (அரு)

நேரிசைவெண்பா.

உள்ளங்கரைந்திட்டுயிரோடுடல்கரைந்த
வள்ளலருண்மாணிக்கவாசகன்போ - லெள்ளரிய
பேறுபெறுமுன்புசிலபீடுபெறநாடுகின்றே
னீறுபுனையம்பலத்தானே. (அசு)

கட்டளைக்கலித்துறை.

தானேமட்டுன்றிருத்தாள்சேர்ந்து வாழ்கையென்சம்மதம
றியானேதந்தீர்தருநாளிகத்தன்பர்களியாவருமவ் [ன்
வானேய்ந்தவீடுபெறவேண்டுமென்றம்வயங்குதில்லைக்
கோனேயிவ்வாறுமுன்னுள்சிலவொய்தக்கொடுத்தனையே. ()

சந்தவிருத்தம்.

தனன தந்ததன தத்தத் தத்தத் தனதானை.

தனையர்பெண்டிர்முதலொக்குஞ்சுற்றத்தினராலே
தளையடர்ந்துமனமெய்த்துஞ்செத்துத்தொலையாதே
புனைநினைந்துதுதிசெப்புங்கொற்றத்தினரோபோ
லுபயபங்கயபதத்தொன்றுட்புக்குறுவேனோ

பனை நெடுங்கைமதவெற்பஞ்சச்செற்றருள்வோனே
பருவதந்தருமகட்கண்டச்சொற்பகர்வோனே
சினைவலம்புரிமுழக்குஞ்சத்தத்தடநீர்சூழ்
சிவசிதம்பரநகர்த்தங்கச்சிற்சபையானே. (அஅ)

இரட்டையாசிரியவிருத்தம்.

ஆனேறு கைத்துமலை மகளோடு விண்ணில்வந் தவுணர்க்கு மருள்செய்வானை, யைந்துபூ தங்களொடு கதிர் மதியு மான்மாவு மாகிநிறை வுற்றுளானைத்,— தேனேரு முத்தமிழ்க் கவியாசை யாற்புலவர் சிந்தைதொறு முலவுவானைச், சிவகங்கை யறியமுன் சீராடு வேனுணைச் சிற்றுண்டி யுதவினானை,— நானே னடிக்கடி நினைந்தெழுத் தைந்தினையு நவில்கின்ற தென்னிலுலகீர், ஞானவா னந்த முற் றென்றனுயி ரொன்றுமே நலமெய்த வென்றல்லகீ,— ரூனேது மொருசிறிது மொருநாளு முண்ணாத வுயர்விரத முற்றுய்கைகண், டொப்பிய புலைச்சமய முஞ்சுருதி யாதியு மொருங்கற வொழித்திடவுமே. (அகூ)

ஆசிரியப்பா.

ஒழிவருங்கருணை யுடையசிவனை
யழிவருந்திருச்சிற் றம்பலத்தானைப்
போற்றலாதிய புகழ்புனைந்துய்ந்தா
ராற்றவுளரோ யாயினுமகில
நால்வரேயென நவிலுமாறுணர்ந்தோர்
பால்வனநீற்றைப் பழிப்பார்தம்மைக்
கழுமரத்தேற்றிக் கவிமழைபொழிசீர்
விழுமியதென்றும் விளம்பலுளதே
லதுவரற்காதி யாயவானினத்தைக்
கதுமைசாலெஃகுக் கருவியிட்டரிந்துண்
டேப்பமிட்டுவப்பார்க் கிகலாகாமன்
மீப்பதம்புகுதல் விழைவார்கொல்லோ
வங்ஙனமுயல்வா ரைம்பொறியடக்கி
யெங்ஙனந்தவமிக் கியற்றினு
மான்றவிண்ணூ ரரம்பையாதியரைக்
கான்றநாயினையிற் காண்குநரோனு
மவரினுங்கொடியா ராமெனல்கடவே
னவமுயன்றுங்கு நவின்றதீமை
வேரறக்களைவான் விரும்புமாற்றல்
வீரமொன்றும் வியன்கனவிடத்துங்

திகழ்தரும்பெருமைச் சிந்தையாள
னிகழ்வனயாவு மெய்தினனேனு
மென்னுயிர்க் குயிரொனவெண்ணிப்
பின்னுளாரிடத்தும் பேசல்விடேனே. (கூ0)

நேரிசைவெண்பா.

பேசருஞ்சீர்த்தில்லைநகர்ப்பிஞ்ஞகனைப்பேணுமன்பர்
வாசலிலோர்கைப்பிரம்புவைத்துள்ளான்-பாசமொன்று
மில்லாரோலுய்வதில்லையில்லையிதுவேதமுனி
சொல்லாய்ந்தோர்கொள்ளுந்துணிவு. (கூக)

கட்டளைக்கலித்துறை.

துணிந்திந்தி ராதிய ரத்தனைகாலந் தொழுதழுது, பணிந்தும் பயன்பெற்ற துண்டோநஞ் சிற்றம் பலத்தி றைதா, ளணிந்துய்ந்த நந்தியம் பெம்மா னொருசொல் லறைந்திடலும், கணின்றழ லூடொரு சேய்வந்து தோன் றிடக் கண்டனரோ. (கூஉ)

சந்தவிருத்தம்.

தந்த தானதன தாத்தனத் தானனெ.

கண்டபாவனையினுட்கழித்தேனுளோர்
கந்தனுவடிவுகாட்டியப்பாலெலா
முண்டதாரகமதாய்ச்சொலற்றேகமா
யுய்ந்துளேனெனிறுமாப்பளிக்காததே
வண்டர்மேனிசுடுநீற்றினைப்பூசுநா
லந்தணாளர்தலைபோட்டமற்றேளதேழ்
கொண்டனேர்பகவர்போற்றுபொற்றளதார்
கொன்றைநீடுபுலியூர்த்தலத்தாடுமே. (கூ௩)

இரட்டையாசிரியவிருத்தம்.

ஆடுமெர வப்பணி யணிந்தானை யிணையில்சிற் றம்ப லத் தழகியோனை, யரியயன் றேடரிய வடிமுடிக் கடவுளை யநாதிபர வத்து வென்னப்,—பாடுமெவ ருக்குமணி யாரு ரன் மொழிகொண்டு பரவைமனை யிடைநடந்த, பண்ப னென் பவருக்கு மருள்புரியு மொருவனைப் பணியத்தொ டங்குவோரோ,—வீடுபெரி தானலு மதைமட்டு நாடிமன மிகமெலிந் துருகவேண்டா, மெஞ்ஞான மருவாத சித்தி மட் டிச்சித்து வேறுடலு மெய்த வேண்டாங்,—கூடுமிரு வகையும் பெறக்கருதி டீரதிற் குணமுண்டு காழிநகரிற்,

குலவுகவு ணியன்முதலி னோரறிவி லாரெனக் குளறுமவர் சிலருமுளரோ. (௯௪)

ஆசிரியப்பா.

சிலவகைச்சுருதி தேடியாய்ந்து
பலவகைக்கவலைப் படுகுழிவீழ்வீர்
முத்தியினுயர்ந்த முதிர்பயனில்லைப்
பத்தியிற்பெரிய படர்நெறியாங்கே
சித்தியிவ்விரண்டின் சிறப்புஞ்சேர்த்த
வுத்தியுடையார்க் குணர்த்துமொண்பொருளா
நடுநிலைத்திந்த ஞாயமொன்றுங்
கெடுமதியுடையார் கேட்டுமறியா
ரன்னவர்சிறிது மடையாஞானந்
துன்னலின்மகிழ்ந்து சுடர்விழிப்பிறைப்பற்
கருநிறமறலி கைப்படுமவரோ
யொருமொழியறிந்த துரைக்கக்கேண்மோ
வாதவூர்முனி வயங்குதில்லை
நாதனைச்சேர்கை நலத்துயர்வீடா
மென்புபெண்ணாத லிடங்கருண்ட
தன்பெழ்வாய்வழி தனையற்றருதல்
போலுமெய்ச்சித்தி புகல்வதற்கில்லை
காலுங்கனலுங் கலந்துறவார்க்குங்
கடற்பெரும்புனலிற் கன்மலைமிதந்துந்
திடத்தொடுகோயிற் சீர்செயல்புனையும்
பத்தியில்லை யாதலிற்பரிந்தீண்
டத்திறற்குரியா ராயநால்வர்
பாடலைச்சந்ததம் பழிச்சிக்
கோடலியாவுங் கொளத்தகுமன்றே. (௯௫)

நேரிசைவெண்பா.

மன்றம்பிறங்குதில்லைமாநகரில்வாழ்சிவனைக்
குன்றஞ்சிலையாகக்கொண்டானைத் - துன்றருளா
லொற்றைக்கழலூன்றியொன்றெடுக்குமுத்தமனை
யெற்றைக்குநான்மறவேனே. (௯௬)

கட்டளைக்கலித்துறை.

மறவேடனாகி வனத்தேகி யிந்திரன் மைந்தனையன், றறவே தனைப்படுத் துந்தொழிற் செய்தென்னை யஞ்சவிடே, னறவேய்ந்த கூந்தற் சிவகாமியார்க்கு நதிக்குமுண்

மை, யுறவேபொன் மன்றத்தி னென்றேயென் னெஞ்ச
த்து முற்றதுவே. (கஎ)

சந்தவிருத்தம்.

தத்தனத் தனன தத்ததன தந்தன.

உற்பலத்தினைநிகர்த்தவிழிமங்கைமா
ருட்கருத்தறிவதற்குருகுபண்பனு
மற்பனுக்கினைவழுத்துநலம்வந்ததோ
ரற்புதச்செயலெனக்கருதுகின்றிலேன்
விற்பனச்சதுராருக்குமுனியைந்ததாம்
வெற்றிபெற்றுயர்வுறப்பெரிதிடைந்துளே
னிற்பழிச்சுபயனெப்படிவிடுங்கொலோ
நித்தசிற்சபையிடத்திலகுமெந்தையே. (கஅ)

இரட்டையாசிரியவிருத்தம்.

எந்தையென் றுனையானை முகவனுங் கதிர்வே லெடுத் துலவு குமரவேளு, மிணையினவ வீரரொ டிலக்கவீ ரருமொழிவ தியல்பாகு மல்லதுமையாள்,—பந்தைநிகர் மென்முலைத் துணையுதவு பாலுண்ட பவளவா யினனேதை லாம், பழுதற்ற மெய்யருள் படைத்தோர்கள் சொல்லி னும் பாருல கிகழ்ந்திடாது,— சந்தையினி லபிமானி யொருவ னில்லாமற் றனிப்பட்ட நாயிலுழலுந், தன்மை யுடை யேனுமன நாணுதடிக்கடி தமிழ்க்கவிக ளாற்சொ ற்றுளேன்,—சிந்தையறி யாவொரு திருட் டில்லை யாவுநின் செயலென்கை சரதமன்றோ, சிந்தூரம் பொருதீரர் வந்தி றைஞ் சியசீர்கொள் செம்பொனம்பலவாணனே. (கக)

ஆசிரியப்பா.

வாணனுதிய வல்லவுணர்க்கும்
வேணபேறளித்த விமலமூர்த்தியைப்
போற்றும்பெருமை புனைதரமுன்னு
ளாற்றும்பொருவி லருந்தவமென்பா
லடைந்தவாற்றினு மையமில்லை
யிடைந்துளநெஞ்சத் தெளியனேற்கும்
பற்றகன்றவர்க்கே பலிப்பதாய
சிற்றம்பலத்துச் செல்வம்வந்துறுமே. (ரு)

முற்றிற்று.

ஆக கவி - ருாக.

சிவமயம்.

க - வது கோயிற்பத்து.

எண்சீர்விருத்தங்கள்.

அஞ்சலென்றுமால்விடைமிசைதோன்றி
யமரர்தானவராதியரொவர்க்கு
மிஞ்சவேண்டுநல்வரமுழுதளிப்பாய்
வெளிற்றுநீற்றணிமிளிருமேனியனே
பஞ்சபாதகத்தொழின்மிகமுயன்று
பத்திநன்னெறிப்பகையெனத்திரியுங்
கொஞ்சநெஞ்சினர்தாமுமுற்றிறைஞ்சக்
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே. (க)

நிலவராப்புனல்கடுக்கையாதியதோய்
நெடியவார்சடைநிமலவேதியனே
யலகில்வானவருருவமுங்கொள்வா
யம்பலத்தினின்றுடியவரசே
பலருநின்விழவாதியபோற்றும்
பண்பைநிந்தைசெய்பான்மையராளுர்
கொலல்பொல்லாதெனுமறிஞரோயுணர்ந்த
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே. (உ)

மன்றைநல்லிடமாக்கொடுநடித்தாய்
மதனவேடனைமலர்க்கணுலெரித்தாய்
நன்றையேவிழைவார்க்குமிக்கெளியாய்
ஞானயோகியர்நால்வரைப்புரந்தா
யன்றைவாழ்வதுமறிகிலார்கூடி
யணுகுவாரையுமகற்றிடத்துணிந்தார்
கொன்றைவார்பொழிற்றில்லையேமுதலாங்
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே. (ந)

புற்றராவணிகலனெனக்கொண்டாய்
புனிதநான்மறைப்பொருண்முடிவானாய்
பற்றலார்புரம்பொடிபடச்சிரித்தாய்
பால்வெண்ணீற்றணிப்பவளமேனியனே
செற்றருந்துமூனசையுடைப்பொல்லார்
திரண்டுநிந்தனைசெய்திடத்துணிந்தார்
குற்றமில்லவர்பலருமொப்பியதாங்
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே. (ச)

ஆடுமம்பலத்தழகியசிவனே
யமலதேசிகனாகியும்வருவாய்
பாடுகின்றவர்க்கெளியபண்ணவனே
பனைக்கைமால்கரிபடச்செகுத்துரித்தாய்
வேடுவத்திரளினுமிகுபொல்லார்
வெறுத்துநாடொறுமிக்கிகழாமற்
கூடுமெய்யடியவர்விளையாட்டாற்
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே (ரு)

தவளநீற்றணிதழைத்தசங்கரனே
தரளவாணகைத்தையல்பங்குடையா
யவமெலாமறுத்தருளவல்லானே
யகிலலோகமுற்றமைத்தளித்தழிப்பாய்
கவலுநெஞ்சகத்தடியவர்பலருங்
களிப்பவேனையர்கண்டுகண்டொல்கக்
குவலயத்துறும்பிழையறவுனது
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே (சு)

பொன்றும்வானவரொலும்பணிவானே
பூதர்சூழ்தரப்பொதுநடம்புரிவா
யின்றுநாளையென்றெண்ணுகிலாருக்
கினியவாறுமுற்றியற்றிடுமிறைவா
துன்றும்வாழ்வெதுவரினுமோருயிர்க்குந்
துயர்செய்யாப்பலதொழும்பருமகிழக்
கொன்றுதின்பவர்குலமுழுதறநின்
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே. (எ)

விசையன்மாதவஞ்செய்யுமவ்வனத்தில்
வேடனாமெனவிண்ணவரொடுபோய்த்
திசையும்வானமுமறியவில்லடியுஞ்
சிரத்திலேற்றருட்செய்தபிரானே
வசையெலாந்திரண்டனையபுன்னெறியோர்
வம்பெனாமிகமறுத்தனரந்தோ
குசைநிலாவுகைப்பனவர்சூழ்தருநின்
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே. (அ)

செந்தகைப்புகர்ப்பொறிமுகத்தினனைத்
திருக்கைவேலுடைச்செல்வனைப்பயந்தாய்
கந்தநாண்மலர்க்குழலுமைபாகா
கயிலைமால்வரைக்கண்ணுதற்பரனே

யந்தரத்திறைமுடிவிழத்தாக்கி
யலமகோததியடக்கிவெற்படித்த
குந்தவேல்வழுதியையனையவனுற்
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே. (௬)

ஆறுலாவியசடைமுடியானே
யமணர்காலனொடாகியநால்வர்
பேறுமாயவிர்பெருந்தகைச்சிவனே
பிறவியாதியபிணிமுழுதொழிப்பாய்
தேறுநாவலர்க்குயிரனையாளாத்
திகழ்ந்துளாண்மிகச்சீர்த்ததென்றன்பாற்
கூறுகின்றமன்றுதியபலவாங்
கோயின்மான்மியங்குலவுறச்செய்யே. (௭)

முற்றிற்று.

ஆக கவி - ௱ாம௲.

சிவமயம்.

உ - வது. திருநீற்றுப்பத்து.

கொச்சகக்கலிப்பாக்கள்.

பங்கயத்துநான்முகவன்பகராதநெறியாள
ரிங்களின்மகிழ்வெய்தியிருக்கும்விதஞ்சகிக்கிலே
னங்கணிலமகளேங்கவவள்கணவன்றுயில்கின்றான்
செங்கனகச்சபையாய்நின்றிருநீற்றைத்தருவாயே. (க)

வல்லிநிகர்முலையார்தம்மயற்கோட்டிமுதலாய
தொல்லைவினைப்பிணிசூழத்துடிதுடித்துச்சுழல்கின்றேன்
குல்லைமலர்க்குகனேபோற்குவலயத்துங்களிகூர்வான்
றில்லைநகர்ப்பெருமானின்றிருநீற்றைத்தருவாயே. (உ)

தற்சமையத்திவ்வுலகிற்சமணரைநல்லவராக்கிப்
புற்சருகுண்பவற்றினையும்புசிப்பவருக்கிகலானேன்
மற்சரபவடிவெய்திவயமாவினுடல்கீன்று
சிற்சபையினடிப்பாய்நின்றிருநீற்றைத்தருவாயே. (௩)

நீர்திகழிப்பூதலத்துநிறையுநலம்பலசெய்தென்
பேர்திகழக்கதிசேரும்பெருமைநினைத்தயர்கின்றே
ஞர்திகழ்செஞ்சடையாடவரவாடநடமாடுஞ்
சீர்திகழ்மன்றுடையாய்நின்றிருநீற்றைத்தருவாயே. (௪)

புத்தமுதவாரியெனப்புகழ்பாடிப்பெரிதுய்ந்த
வுத்தமரிற்றமியேனையொருவனெனல்விழைகின்றேன்
பத்தரொடுமுத்தர்களும்பரவியவம்பலத்தூடோர்
சித்தனெனநின்றாய்நின்றிருநீற்றைத்தருவாயே. (௫)

பாகரசத்தமிழெய்திப்பலிதமொன்றுமருவாதாற்
சோகமிகத்துயர்ப்பட்டுத்தொல்லுலகிற்றிரிகின்றேன்
மாகநகரினர்தாமும்வழுத்துதமநியமன்றிற்
சீகரநீர்ச்சடையாய்நின்றிருநீற்றைத்தருவாயே. (௬)

வன்முகத்துக்கயவர்க்கோர்மறலியாய்மற்றையருக்
கின்முகத்துத்தாய்போன்றிங்கிலங்குநலம்விழைகின்றேன்
பன்முகத்துப்பணிபூண்டுபசும்பொனெடுஞ்சபையூடு
தென்முகமாநின்றாய்நின்றிருநீற்றைத்தருவாயே. (௭)

கதம்படுநெஞ்சினர்தம்மைக்கறுவிமிகுங்களிப்பெய்தி
யிதம்பகருமவர்வேட்கையாவையுஞ்செய்திடல்வேட்டே[ன்
மதம்பலவுந்தொழநின்றாய்மகபதிசேயடியுண்டாய்.
சிதம்பரத்திற்றிகழ்வாய்நின்றிருநீற்றைத்தருவாயே. (௮)

அன்புநலஞ்சிறிதேனுமடைந்திலேனாயினுநின்
றன்புதல்வர்பெரும்புகழ்ச்சீர்தனைவிழைந்திங்கயர்கின்றே[ன்
பொன்புரையுந்திருமேனிப்புனற்சடிலப்புங்கவனே
தென்புலியூர்ச்சிவனேநின்றிருநீற்றைத்தருவாயே. (௯)

அருச்சித்துன் றனக்காகு மரியபணி புரிகில்லேன், குருச்சித்தர் தமக்காய குணம்பலவேட் டுழல்கின்றேன், மருச்செச்சை வனம்போல்வாய் வண்டமிழ்நால் வரும் போற்றும், திருச்சிற்றம் பலத்தாய்நின் றிருநீற்றைத் தரு வாயே. (௰)

முற்றிற்று.

ஆக கவி. (௫௨௧)

சிவமயம்.

௩-வது. கண்டிகைப்பத்து.

எழுசீர் விருத்தங்கள்.

அனகமுறுந்தவமேயுயர்வென்னவறிந்துமுயன்றுருகிப்
பனகவணைத்திருமால்விழிசூடியபாதம்விரும்புநரோ
சனகன்முதற்சிலருக்குயர்வாழ்வருள்சற்குருதேசிகனுங்
கனகசபைச்சிவன்விழிமணியாகியகண்டிகையெளிதன்றே

சஞ்சலமுற்று மொழிந்துல கும்புகழ் தன்மை மிகப் பெற்றுப், பஞ்சவிதப்பொறி யின்றியதாய பதம்பெற நா டீரோ, யஞ்சனமுண்ட விழிச்சியொ டம்பல மானதி லா டியுமோர், கஞ்சனடுத்தலை கொய்தவர் கண்டரு கண்டி கை யெளிதன்றே. (௨)

தாமதராசதமாவனவுந்திகழ்சத்துவமயமாகப்
பூமன்விதித்தபொறிக்கயராதுபொதுத்தவமேமுயல்வீர்
சேமகரந்தருதில்லையிலாடினர்செந்திருமனநோவக்
காமனையட்டவர்கண்ணிடைநின்றுதிர்கண்டிகையெளிதன்றே.

பங்கய மங்கைய ரிச்சையு மின்றிய பண்பு பொருந் தின ராய்ச், செங்கையி லன்ன மிரந்து மயின்று திகழ்ந்த திறற்றுற வீர், சங்கையில் சீர்பெறு மம்பல வாணர் சடைத்தலை யிற்றகை சால், கங்கையை வைத்தவர் கண் கொடு முன்றரு கண்டிகை யெளிதன் றே. (௪)

நாரணனுன்முகனுதியரும்புகழ்நன்மைபொறுத்தபினே
சீரணமின்றியவீடுபுகும்படிசிந்தைசெய்கின்றவரோ
பூரணமாகியவம்பலவாணர்புலைத்தகையோருணராக்
காரணதேசிகர்கண்ணருளாவருகண்டிகையெளிதன்றே.

பதிமுதலாகியமுப்பொருளுண்மைபதிந்தமனத்தினரா
யதிர்தொனியார்கழலாருநடந்திகழம்பலமேவிழைவீர்
விதிமகமோதியசென்னிகளைந்தவிறற்றிறல்வேதியனார்
கதிர்மதிதீவருகண்களினலருள்கண்டிகையெளிதன்றே. ()

நாதமுடிப்புண ரியோகியொர் பூனைமு னுணிட லா தியசீர், வேதவியாதன் முதற்பெரி யோர்பலர் விள்ளுதல் கள்ளமதோ, பாதமெடுத்து நடித்தமயேசர் பசுங்கொடி பங்குடையார், காதணி சங்கினர் கண்மலரால்வரு கண்டி கை யெளிதன்றே. (எ)

வேளணிநீடிய வில்விசை யன்றன் விருப்ப மடைந்தி கலோர், மாளவதைத்திட லாதியகோடி வகைக்கதை யுந் தரலா, லாளரியட்டுரி கொண்டவர்தில்லையி லேந்தொழி லாடல்செயுங், காள மிடற்றினர் கண்மணி யாகிய கண்டி கை யெளிதன் றே. (அ)

அந்தரரூர்புகழ் தில்லையில் வாழ்வுறு மந்தண ரோமு தலாஞ், செந்தகை மெய்யடி யார்புகழ்மன்னிய சிந்தை

படைத்தவரோ, தந்தமதக்கரி யானன னைத்தரு சங்கரர் கண்பெறும்வேற், கந்தனை யேநிக ராகிவிளங்கிய கண்டிகையெளிதன்றே. (௯)

நவியணி கைப்பெரு மான்விழி யன்றரு ணல்லருளின்றுளியாப், புவியினில்வந்தவி ரக்க மணிப்புகழ் போதனுநன்கறியா, னவிதலி லாநல மெய்தியதில்லைமு னுகவிழைந்து தமிழ்க், கவிபகர் நால்வர் முதற்பெரி யோர்புனை கண்டிகை யெளிதன்றே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - ௫௩௧.

சிவமயம்.

௪-வது. பஞ்சாட்சரப்பத்து.

கலிவிருத்தங்கள்.

கழுகமுளார்மகிழ்கனிசொற்றமிழும்
பழமறைநூல்பகர்பதமுந்தருமே
மழவிடையார்வெளிமன்றிற்களிகூ
ரழகியநாயகரஞ்சக்கரமே. (௧)

ஈறுத்விர்ந்துயரின்பக்கடலின்
பேறுவிரும்பிய பெரியோருயிரோ
மாறுபடாதருண்மன்றத்தினர்நீ
ராறுபுனைந்தவரஞ்சக்கரமே. (௨)

சத்தமெனத்திகழ்தருநூல்வகையூ
டுத்தமமாமெனவொளிர்கின்றதுவே
சித்தர்பிரானுயர்தில்லைக்கிறையா
மத்தனருட்பொலியஞ்சக்கரமே. (௩)

சித்திமிகக்கொடுதேவர்க்கரிதா
முத்தியுமெய்தியமுனிவோர்துணையே
சத்திமுனஞ்சபைதனிலாடினரா
யத்தியுரித்தவரஞ்சக்கரமே. (௪)

பாலகன்மேல்வருபகடோர்நமனங்
கோலமிடக்கடிதுயிருண்டதுவே
சீலமிகப்பெறுதில்லைச்சிவனு
மாலநிழற்பரனஞ்சக்கரமே. (௫)

பங்கயன்மாலொடுபலவானவருந்
தங்கண்மனத்திடைதனிநாடுவதே
செங்கனகச்சபைதிகழ்தில்லையில்வா
ழுங்கணராடியவஞ்சக்கரமே. (சு)

மந்திரமென்றுளவகையாவையுமுன்
றந்திடலாகியதாயைக்கருதிற்
செந்திருவைகியதில்லைப்பதிவா
ழுந்திநிறத்தினனஞ்சக்கரமே. (எ)

விசையன்வடிக்கணேமேனுள்பெறுமா
றிசைவுறுநெஞ்சகவிகனல்கியதே
திசைமுழுதும்புகழ்தில்லைப்பதியூ
டசைவறவாடினரஞ்சக்கரமே. (அ)

மதியணியானையும்வடிவேலவனும்
விதிவழிசேயெனமிளிரச்செயலே
கதிர்மழுவார்மகிழ்கனகச்சபையூ
டதிவிளையாடல்செயஞ்சக்கரமே. (கூ)

இருவகைநால்வருமெண்ணிக்கதிசே
ரொருபொருளியாதெனவுன்னித்தளர்வீர்
பொருவறுசீர்திகழ்பொன்னம்பலமூ
டருவுருவானவனஞ்சக்கரமே. (ய)

முற்றிற்று.

ஆக கவி (ருசக).

சிவமயம்.

ரு - வது. கல்லாடைப்பத்து.

கலிவிருத்தங்கள்.

மிக்கவேதியர்விளங்குந்தில்லையின்
முக்கணுதனைமுன்னிமூவகைப்
பொக்கமற்றவர்புனையத்தக்கது
செக்கர்வானெனத்திகழ்கல்லாடையே. (க)

சீயமொன்றைமுன்செகுத்துத்தில்லையின்
மேயமூர்த்தியைவிரும்புமெய்யுளீர்
மாயவாதனைமறக்குமாண்பரு
ளேயநீற்றினற்றுணைகல்லாடையே. (உ)

திக்கடங்கலுந்திருக்கையாகிடத்
தக்கவாடல்பொற்சபையிற்செய்குவான்
புக்கநெஞ்சுடைப்புனிதர்பூணெனு
மக்கமாலிகைக்கணிகல்லாடையே. (௩)

கொடிவிண்ணூரினிற்குலவுந்தில்லையிற்
படிகமால்வரையனையபாங்கினின்
றிடியெனுமுயலிரங்கவாடுவா
னடியவர்க்கினியதுகல்லாடையே. (௪)

புன்புலான்மிகப்புசிக்கும்பூரியர்
முன்புமேற்குமென்மூடநெஞ்சினும்
வன்புராரிமன்றதனைவௌவுவா
ரன்புகாட்டுவதவிர்கல்லாடையே. (௫)

அத்தனாடுமம்பலத்திலன்பராய்
நித்தமெய்யருணெறியிற்கூடிநின்
றுத்தமத்தவமுயலுமோகையஞ்
சித்தர்கொள்வதுதிருக்கல்லாடையே. (௬)

பிறந்துசாந்துயர்தீரப்பிஞ்ஞகன்
கறந்தபாலுருக்கருதிக்காசினி
துறந்துமன்றினைத்துதிசெய்வார்களுட்
சிறந்துளார்கொளல்செழுங்கல்லாடையே. (௭)

விசையன்முனன்றொருவேடனாம்புக
ழிசைவுறத்தில்லையிலினிதுற்றாடுவான்
மிசைநினைப்புள்ளவர்விருப்பமேயது
திசைமுழுமையுந்துதிசெயுங்கல்லாடையே. (௮)

எங்கணுமெந்நெறியினருமொப்பிடும்
புங்கமேவியபொதுப்பொருளைநாடிடி
ஐங்கரன்குகன்றொழுமமலனம்பலச்
சங்கரனெனத்திகழ்தருங்கல்லாடையே. (௯)

வாதவூர்முனிமுதல்வகுக்குநால்வரும்
போதவுநம்பியபுனிதத்தில்லையூர்
நாதன்மெய்யன்பிடைநனையுநண்பருக்
காதரமாகுவதருட்கல்லாடையே. (௰)

முற்றிற்று.

ஆக கவி ௫௫.

சிவமயம்.

சா - வது. கோளறுபத்து.

அறுசீர்விருத்தங்கள்.

அளிமுரல்குழலார்மோகமாதியபிழையுற்றாலுந்
தெளிதமிழலங்கனின்பொற்றிருவடிக்கணிகிலேனே
வெளிமுதற்பூதமைந்தும்வேறுபல்பொருளுமானாய்
குளிர்பொழிற்றில்லையானேகோளறுத்தெனையாள்வாயே.

நீறுடன்முழுதும்பூசிநிலவுகண்டிகையும்பூண்டு
தேறுமெய்யடியார்போலத்திகழுநான்றியங்கலாமோ
வாறுறுஞ்சடிலத்தானேயம்பலத்தமரரேறே
கூறுதற்கரிதாம்பற்பல்கோளறுத்தெனையாள்வாயே. (உ)

வஞ்சகமனத்துப்பொல்லார்வாயில்கடோறுமேகிச்
சஞ்சலமிகுத்துவாடுந்தமியனேற்கிரங்கொண்ணாதோ
மஞ்சடர்பொழில்சூழ்தில்லைமாநகர்க்கிறைவாவன்கைக்
குஞ்சரத்துரிவைபோர்த்தாய்கோளறுத்தெனையாள்வாயே

நன்றையேகருதிவாழுநாவலர்நவின்றபாட
லொன்றையுஞ்சிறிதுநம்பாருடன்மிகவுழன்றேனந்தோ
மன்றையேயிடமாக்கொண்டுமாதரிமகிழவாடுங்
கொன்றையஞ்சடைப்பிரானேகோளறுத்தெனையாள்வா[யே.

கன்றலுற்றுலகினோர்தங்கைப்பொருள்விழைந்திட்டாலு
முன்றனைவழுத்தும்பேறுமொருசிறிதடைந்திலேனே
பொன்றயங்கியசீர்மன்றிற்புனிதநாடகஞ்செய்வானே
குன்றவில்லுடையநம்பாகோளறுத்தெனையாள்வாயே. ()

தாயினுமினியாயென்னத்தமிழ்வலார்பகரக்கேட்டு
நாயினுங்கடையனானிலத்துழன்றேனந்தோ
வேயிணைத்தோளிகண்டுவியப்புறவிளங்குந்தில்லைக்
கோயின்மன்றாடுவானேகோளறுத்தெனையாள்வாயே. (சா)

இக்கினு மினிய வாகு மிலங்கொளி மணிநேர் பாடன், மிக்கியன் றுள்ளா யான்சொல் வெண்சொலை வெறுப்பாய் கொல்லோ, திக்கினம் பரவுந் தில்லைத் திருநடம் பயில்கின் றானே, கொக்கின்வெற் றிறகும் பூண்டாய் கோளறுத் தெனையாள் வாயே. (எ)

பலபங்கநசியுமாறுபணிதருபார்த்தன்றன்பாற்
கலகவேடுவனிற்சென்றாய்கனகமன்றுடல்செய்வா

யலரியேமுதலதாகியழனிறத்தரவீறென்னுங்
குலநவக்கிரகவாதைக்கோளறுத்தெனையாள்வாயே. (அ)

குஞ்சரமுகனைவேற்கைக்குமரனைப்பயந்துவானோர்
தஞ்சளந்தவிர்த்துச்செம்பொற்சபையினின்றாடுவானே
நஞ்சயின்றிறவாதானேநானிலமுழுதும்வாழ்வான்
கொஞ்சமுமிடைவிடாமற்கோளறுத்தெனையாள்வாயே. ()

நால்வர்முன்பெறும்பேறெண்ணிநான்மனம்வருந்துமாறு
மேல்வரும்பலருமென்னைவியப்பதுவிழைந்தேன்கண்டாய்
சேல்வளர்கழனித்தில்லைத்திருச்சிற்றம்பலத்துள்ளானே
கோல்வளைக்கவுரிபாகாகோளறுத்தெனையாள்வாயே. (ய)

முற்றிற்று.

ஆக கவி ருகூக.

சிவமயம்.

எ-வது. ஐயமறுத்தபத்து.

எண்சீர்த்தாழிசைகள்.

பூரண னென்றுனை நன்குண ரார்தார் புல்லிய நிந்தை புகன்றிட வீணே, காரண மொன்று மறிந்தில ரொன்னக் கண்தலும் கின்றது கண்டிலை கொல்லோ, நாரண னான்முக னாதிய விண்ணோர் நண்ணிய புண்ணிய ஞான வினோதா, வாரண வுஞ்சடை யம்பல வாணா வைய மறுத்தெனகத்தவிர் வாயே. (க)

மிஞ்சு மிடிக்கன லான்மனம் வாடி வீடுதொ றேகிமெலிந்தது போதும், கொஞ்சு தமிழ்க்கவி சொற்றரு ளாடற் கொள்கை யுளாரொடு கூடல் விழைந்தே, னஞ்சுமிழ் கட்செவி மாலிகையானே நண்பொடு தில்லை நடம்பயில் வானே, யஞ்சு முகத்தொரு மெய்ப்பொரு ளானே யைய மறுத்தெ னகத்தவிர் வாயே. (உ)

பாகுறழ் சொல்லியர் தம்மயன் மீறிப் பற்பல வாறுபடுர்துயர் கண்டா, யோகுடை யாரொடு கூடி முயன்றிடுன்னருள் வாரிதி யூடமிழேனோ, வாகுவின் மாலையெனத்தலை யிட்டாய் மன்றிடை யும்பர்ம யங்க நடித்தா, யாகுல முற்ற மதிக்கருள் வானே யைய மறுத்தெ னகத்தவிர் வாயே. (ங)

தெம்பொடு பல்லுயிர் கட்கொலை செய்வார் சிந்தை கொதிப்பது செய்கென வுன்னை, நம்பொரு மைப்படு தொண்டர்க ளூடே நான்மகி ழுத்தகு நாளறி கில்லேன், கொம்பொளிர் வேழ முரித்த பிரானே கோமள மங்கை குலாவிய பாகா, வம்பொ னெடுஞ்சபை யிற்குடி கொண்டா யைய மறுத்தெ னகத்தவிர் வாயே. (ச)

பத்தியி லாதவர் பற்பலர் கூடிப் பாருல கூடு பழிப் பது கண்டெண், சித்தியு மெய்து மவாவடை வேனைத் தீவினை வந்து தியக்கிட லாமோ, சத்தி குலாவிய பாகமு ளானே தங்க நெடுஞ்சபை தன்னி னடித்தா, யத்தியை மாலிகை யென்ன வணிந்தா யைய மறுத்தெ னகத்தவிர் வாயே. (ரு)

வேலது போலும் விழிச்சிய ராசை மேலிட நொந்து மிகத்தளர் வேனைக், கால பயத்தழ லுஞ்சுட லாமோ கற் பனை தீர்தரு காலமு முண்டோ, மாலய னுட்ரு மம்பல வாணு வல்லிய மொன்றை வதைத்துரி கொண்டா, யால நிழற்குரு தேசிக னுனை யைய மறுத்தெ னகத்தவிர் வாயே. (சா)

புற்புத மன்ன முலைச்சியர் தம்பொய்ப் போகம் வி ழைந்து புலர்ந்திட லற்றின், சொற்புத னன்னவர் தம்மொ டு கூடித் தொண்டு புரிந்து சுகம்பெறு வேனோ, கற்புத வத்தகு முக்கணு ளானே கங்கையி ருந்தக வின்சடை யா னே, யற்புத நீடிய சிற்சபை வாழ்வே யைய மறுத்தெ னகத்தவிர் வாயே. (எ)

பல்விறல் வீரர் தமக்கெம னுகும் பார நெடுங்கை படைத்தவ னுமோர், வில்விசை யன்ற னடிக்கு னருட் பேர் மேவிய வாளி விரைந்திடன் மெய்யோ, கொல்வினை யாளர் மனத்தமை யாதாய் கோதறு மன்றவிர் கோயிலு ளானே, யல்விர வுங்குழ லம்பிகை பாகா வைய மறுத் தெ னகத்தவிர் வாயே. (அ)

தேனை நிகர்த்த மொழிச்சியர் மோகச் சிந்தை மலி ந்து தியங்குவ தோடிங், கேனைய மாதவ யோகியர் தம் பே றெய்தலு நாடி யிளைத்தன னந்தோ, மானை யிடக்கை யில் வைத்த பிரானே மன்றிடை மேனை மகட்கெதிர் நின்

று, யானை முகத்தனை வேளொடு பெற்று யைய மறுத் தெனகத்தவிர் வாயே. (கூ)

காழி நகர்ப்புல வோன்முத லாகக் காசினி சொல்லிய காரணர் நால்வர், வாழிய மெய்த்துதி கொண்டனை யென் வாய் வண்டமிழ் கொள்ள வராவித மியாதோ, வீழ் யிதழ்க்கவு மாரி மணுளா வெள்விடை யாயகல் விண்ணி னடித்தா, யாழி விடத்தையு முண்டருள் வானே யைய மறுத்தெ னகத்தவிர் வாயே. (ம)

முற்றிற்று.

ஆக கவி ௱௭௧.

சிவமயம்.

அ-வது. பொருள்வாதனை தீர்த்தபத்து.

அறுசீர்விருத்தங்கள்.

எல்லா நலமுந் தருவானே யிரங்கா மனத்தார்க் கிரங் கானே, நல்லார் பரவுந் திருத்தில்லை நக ர்நாயகனே நளை விடைமேல், வல்லார் முலையா ளொடுநீயே வரினு மதித் து வணங்கறியாப், பொல்லா வுலகோர்க் குயிர் போலும் பொருள்வா தனைதீர்த் தருள்வாயே. (க)

நெய்யிற் றுவைத்த மழுவேந்தி நெடுமால் விடையின் மிசையேறி, மெய்யிற் றிளைப்பா ரெதிர் செல்வாய் வெளி மன் றகத்தின் மிளிர்வானே, மையிற் கரிய விழிப்பருவ மகளிர் மயலே முதலாய, பொய்யிற் பெரியார் மனங்கவ ரும் பொருள்வா தனைதீர்த் தருள்வாயே. (உ)

நாகா பரணம் புனைவானே நறும்பூங் கடுக்கைத் தொ டையானே, வாகார் தில்லைக் கழகியபொன் மன்றினடிக்கு மாமணியே, மோகாந் தரங்கத் தினனெனப்பன் மூண்ணி வோரிகழ முறைதவறிப், போகா ரிடத்தும் போகவிடும் பொருள்வா தனைதீர்த் தருள்வாயே. (ங)

ஒன்றாய்ப் பலவாய் நிறைந்தோனே யுலக முழுது மொருங்கு தொழு, நன்றார் தில்லைக் கனகசபை நடுநாயக னே நாமகள்போன், மின்றாழ் மருங்குற் றிருமகளும் விரு ம்பா மையினுன் மெலிவுற்றேன், பொன்றாப் புலமைப் புகழ்க் கிகலாம் பொருள்வா தனைதீர்த் தருள்வாயே. (ச)

ஏதங் களையா துலகோர்மிக் கென்னை யிகழும் படி செய்தாய், நீதங் கருதா யெனத் துணிந்து நினைக்கச் சிறிது நினைவில்லேன், சீதம் பொலியுந் திருத்தில்லைச் சிவனே விடையிற் றிரிவானே, போதன் றலையோட் டிரந்துண்டாய் பொருள்வா தனைதீர்த் தருள்வாயே. (ரு)

கலிப்பே யொருபாற் காமமெனுங் கரும்பே யொருபாற் கவர்ந்திழுக்கச், சலித்தே கிடக்குந் தமியேனுந் தவப்பே றடைய விழைகின்றே, னலிப்பான் மையனு யாண் பெண்ணு யமலவெளியா மம்பலத்திற், புலித்தோ லுடுத்து நடிப்பாயென் பொருள்வா தனைதீர்த் தருள் வாயே. (சு)

ஆத வனுந்திங் களுங்கனலு மமல விழியா மருள் வடிவக், காத லடையு மெனையுலகோர் கண்டு நகைக்க விடலாமோ, நாத முழங்குங் கனகசபை நடநா யகனே நமன் வெருளும், பூத கணத்தோர் தலைவாவிப் பொருள் வா தனைதீர்த் தருள்வாயே. (எ)

அங்கி யளித்த கிலையொன்று லடித்தான் றனையாண் டதுமெய்யே, லிங்கி வணம்போற் றிசைக்குமெனக் கி ரங்கா திருக்கத் தகுங்கொல்லோ, பங்கி லொருபெண் ணுடையா னேபசும்பொற் சபையிற் பரமேட்டீ, பொங்கி வழிபே ரருளானே பொருள்வா தனைதீர்த் தருள்வாயே.

அத்தி முகனுங் குகவேளு மனையார் பலர்நின் னருட் கெனமெய்ப், பத்தி கொடுபோற் றிசைக்குமெனைப் பல வா றுழலப் பார்த்தனையே, சித்தி மலியுங் கனகசபைச் சிவனே யுலகோர் தெரிவரிய, புத்தி யளிக்குங் கடைக் கண்ணுற் பொருள்வா தனைதீர்த் தருள்வாயே. (கூ)

மாலும் பெறுதற் கரியபுகழ் மருவு மொருநால் வரை மதித்து, வேலுந் தருவா யெனநினைவேன் வீணே யிறக்க விட்டுவிடே, லாலுங் கனகத் திருமன்று மமருந் தலமா மருட்குரவா, போலுந் துணையொன் றறியானே பொருள் வா தனைதீர்த் தருள்வாயே. (ய)

முற்றிற்று.

ஆக கவி - ருஅக.

சிவமயம்.

கூ - வது காமவாரிகடந்தபத்து.

கட்டளைக்கலிப்பாக்கள்.

அனகவானவரும்பலதேவரு
மம்பலத்திலநுதினங்கைதொழப்
பனகபூடணமாடிடவாடுவாய்
பத்தரெண்ணப்படியருள்பண்பனே
தினகரன்றனைச்சீறியெங்நேரமுஞ்
சித்தசன்கரியைப்புகழ்சிங்தைசேர்
கனகமேனிமடந்தையர்கண்டருங்
காமவாரிகடந்திடச்செய்திடே. (க)

மேருமால்வரைவில்லெனக் கொண்டுபோய்
விண்ணில்வாழ்பவர்வெட்குறநக்குவெம்
போருளார்புரஞ்சுட்டவனேதிருப்
பொற்சபைக்குட்பொலிந்தபுராணனே
வாருமுத்துவடங்களுங்கொண்டதாம்
வள்ளநேர்முலைவாரணமென்னடைக்
காருலாங்குழற்கன்னியர்தந்தபொய்க்
காமவாரிகடந்திடச்செய்திடே. (உ)

புள்ளலம்புகடுக்கையுமாத்தியும்
பூத்தசெஞ்சடைப்புண்ணியனேயருள்
வள்ளலென்றுபொன்மன்றினடித்துளாய்
மால்விடைப்பரிவானிலுகைப்பவா
பள்ளவாரிமுரசுடையான்விடும்
பாணம்வந்துபடப்படப்பாவியேன்
கள்ளநெஞ்சநிறைந்துததும்பிய
காமவாரிகடந்திடச்செய்திடே. (ங)

பன்னகத்துருமாதவனும்புலிப்
பாதநாதனும்பார்த்திடத்தில்லையிற்
பொன்னதாற்செயுமன்றிடத்தாடிய
பொற்புமேயபுராதனத்தெய்வமே
யன்னவாகனத்தன்றுணையாகும்வே
ளைந்துபூவுமடுக்கடுக்காவிடு

கன்னல்விற்கைச்சமர்த்திறத்தால்வருங்
காமவாரிகடந்திடச்செய்திடே. (ச)

அஞ்சனக்கரியொன்றுரித்துப்புனைந்
தம்பலத்திலணிநடமாடுவாய்
நஞ்சயின்றுயிர்முற்றுமளித்துளாய்
நானுரைக்குநறுந்தமிழ்வெளவினய்
வஞ்சமங்கையர்சூழ்தரத்தென்றன்மேல்
வந்துபோர்பொருமன்மதப்பாவிகைக்
கஞ்சமாதியவைங்கணையுந்தருங்
காமவாரிகடந்திடச்செய்திடே. (ரு)

வெற்புலைந்திடத்தொட்டவன்றன்னையும்
வேணபேறுவிளைந்தளித்தாண்டநீ
பொற்புநீறுடன்முற்றணிந்தன்பர்போற்
போற்றுமென்னைப்புறம்பெனத்தள்ளிடே
லற்புதத்திருத்தில்லைமன்றுடுவா
யையகோவினியாற்றுகிலேனருட்
கற்புமங்கையர்தம்மையுநாடும்வெங்
காமவாரிகடந்திடச்செய்திடே. (சா)

கொங்கைகண்டுகுலைவுறுநெஞ்சகக்
கோழையேனுங்குறைவின்மெய்யன்பர்போற்
சங்கையின்றியபேறளித்தாளெனத்
தண்டமிழ்க்கவிசாற்றிடற்கொல்கிலே
னங்கைமான்மழுவேந்தியமெய்யனே
யம்பலத்தினின்றாடியவையனே
கங்கைசூடியகண்ணுதற்றெய்வமே
காமவாரிகடந்திடச்செய்திடே. (எ)

தெவ்வர்வேரறச்செய்வதுநாடினன்
செங்கைவில்லடிசென்னியிற்கொள்ளவே
நௌவியாதிமறைத்தொருவேடனு
நம்பனேதில்லைநற்சபைநாதனே
செவ்வையாமெழிற்கொண்டெதிர்மங்கைமார்
தின்றெனுதெனச்சீரியர்செப்புமூன்
கௌவும்வாயினராயினும்வெளவுமென்
காமவாரிகடந்திடச்செய்திடே. (அ)

குகனேவேழமுகத்தனைத்தந்துவிண்
கொண்டதேவர்குறைதவிர்த்தாண்டநீ
யகனிலத்தினர்துன்பறநாடிலா
யம்பலத்திலவிர்தருமண்ணலே
யிகல்வலார்தமையெண்ணிமிக்கெய்ப்புறு
மிந்தநாளினுமிங்குளமாதரும்
ககனமங்கையருங்கருத்துள்வரும்
காமவாரிகடந்திடச்செய்திடே. (கூ)

புதியமங்கையைத்தொட்டுமணந்துமோர்
போதுமின்பம்புசித்திலனுதியாம்
பதிகாவலர்நால்வருநண்ணிய
பைம்பொன்மன்றிற்பரம்பொருளேயொரு
விதியினுந்தொடநீதமின்மாதரார்
மீதும்வேட்கைமிகக்கொளும்வீணனேன்
கதியினுக்கொருசத்துருவாகிய
காமவாரிகடந்திடச்செய்திடே. (ம)

முற்றிற்று.

ஆக கவி - ருகூக.

சிவமயம்.

ம - வது மண்மயல்களைந்தபத்து.

அறுசீர்விருத்தங்கள்.

ஆரியமுடிவுமாகியாகமப்பயனுந்தானுய்ச்
சீரியர்பரவுந்தில்லைத்திருச்சிற்றம்பலத்துற்றேனே
காரியமனைத்துமாகக்காரணமாகியேழு
வாரிதியுடுத்துக்கொண்டமண்மயல்களைந்தாள்வாயே. (க)

பொன்னதாற்சமைந்ததில்லைப்பொதுவினிற்புலர்ச்சியின்
நன்னயப்பரதக்கூத்துநாடொறுஞ்செயவல்லானே [றி
பன்னகமென்னச்சீறும்பகழிபெய்முகிலேபோலு
மன்னர்பற்பலரைக்கொன்றமண்மயல்களைந்தாள்வாயே.()

போனகமிரந்துண்டன்பாற்புனிதமாமொழுத்தைந்தோதி
மானமாதவஞ்செய்வார்க்காமன்றிடைநடிக்கின்றோனே

யினரோய்முழுதுந்தீர்ந்திட்டிளமையோடியங்குவோராம்
வானவர்தமையுநீங்காமண்மயல்களைந்தாள்வாயே. (௩)

தூயசீர்த்தில்லைமன்றிற்றுடிமுழக்கொடுநின்றாடி
மேயமெய்யடியார்க்கெல்லாம்விளம்பரும்பதமீவானே
காயகத்தகுவர்தம்மைக்கறுவிவானவரைக்காக்கு
மாயனையேனமாக்குமண்மயல்களைந்தாள்வாயே. (௪)

பணிலவார்செவிகளாடப்பாம்பொடுமதியுமாடத்
தணிவில்சீர்த்தில்லைமன்றிற்றையன்முன்னாடுவானே
யணிமறைப்புனலின்மூழ்கியலரியொத்தவிர்ச்சியெய்து
மணிமுடியனந்தமுண்டமண்மயல்களைந்தாள்வாயே. (௫)

அந்தரத்தமரரோத்தவழகியகனகமன்றி
றிந்ததோமெனவெந்நாளுந்திருநடஞ்செயவல்லானே
வெந்தகைக்குருடன்வாரேய்மீனினமெனமுன்னீன்ற
மைந்தர்தங்குலவேர்கீன்றமண்மயல்களைந்தாள்வாயே. ()

செஞ்சரோருகப்பூவன்னதிருவடியொன்றுதூக்கி
யஞ்சனமலைபோல்வான்மேலாடுமம்பலத்தினானே
பஞ்சபாதகங்களென்னும்பயிர்விளைகழனிபோலும்
வஞ்சகமனத்தார்கொள்ளுமண்மயல்களைந்தாள்வாயே. ()

தசைநுகர்ந்தலையும்வேடர்தலைவனில்வடிவங்கொண்டு
விசையன்முற்சென்றாய்தில்லைமேவியவிமலமூர்த்தீ
யசைவறுமனத்தினோர்சற்றணுகினுமழிக்கொண்ணாத
வசைபலபெருகச்செய்யுமண்மயல்களைந்தாள்வாயே. (அ)

பொருவறுமவுணர்பல்லோர்பொன்றுறப்புரியுமைந்த
ரிருவராற்களித்துத்தில்லையிடத்தினின்றாடுவானே
திருவருட்செயலென்றுன்னித்தெளிந்தவர்சிறிதுற்றாலும்
வருமமுந்துயருநல்குமண்மயல்களைந்தாள்வாயே. (௯)

நால்வருக்கருள்செய்தன்னோர்நவின்றபாமாலையாவுநா
வால்வளைச்செவியிற்கொண்டுமகிழ்ந்துமன்றாடுவானே
கோல்வளைக்கையாளோடுகுலவும்வெள்விடைமேல்வந்து
மால்வழுத்தியதாள்சூட்டிமண்மயல்களைந்தாள்வாயே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - கூ௱க.

சிவமயம்.

௰க - வது கலிவாதனையற்றபத்து.

குறுந்தாழிசைகள்.

பெற்றோரறிவுணருஞ்செயல்பெருகம்பலநடுவோர்
பொற்றோகைமுனடமாடியபுனிதன்புகழ்மறவே
னற்றோர்களையடியார்களையறவோர்களையருணூல்
கற்றோர்களைமற்றோரிகழ்கலிவாதனையறவே. (க)

சேலிற்பொலிதருநீர்வயல்செறிதில்லையினிறைவன்
வேலிற்றிகழ்விழியாளொடுவிடைமேல்வரவிழைவேன்
மாலிற்களிபெறுமேலவர்மனதூடவிர்பெருமைக்
காலித்திரண்மெலியப்புரிகலிவாதனையறவே. (உ)

புலைவேள்விசெய்தக்கன்பலபுலவோரொடுமடியத்
தலைவேறருள்வார்மன்றிசைதமிழான்மிகமொழிவே
னிலைவேறுபடாதேயருணெறிதோயுபநிடதக்
கலைவேதியரொதிர்போர்பொருகலிவாதனையறவே. (௩)

பாவித்தநுதினநாடியபத்தர்க்கருள்பரமன்
கோவிற்றிருநடமேபுகழ்கொள்கைக்கிசைவுற்றே
ஞாவித்திரணிலையோர்தவினைவையின்புறமுயலும்
காவிக்கலையினர்மேல்வெகுள்கலிவாதனையறவே. (சு)

ஓதுஞ்சதுமறைசற்றுணருயர்வெய்தொருமன்றி
லியாதுந்தனதுருவாவளரிறைவன்புகழ்பகர்வேன்
வாதும்பொய்வழக்குங்கொடுமையாதியவுயிர்கட்
காதுங்கொடியவர்பான்மகிழ்கலிவாதனையறவே. (ரு)

அண்டங்களிலங்குந்தலமாமம்பலமுடையார்
தொண்டன்பிலமிழ்ந்தெஞ்சலிறுதியேநிதமொழிவேன்
விண்டஞ்சலின்முன்சென்றிடவிறலைவருமேனாள்
கண்டங்குறவந்திங்கடர்கலிவாதனையறவே. (சா)

வாணந்தணிசெவியார்வெளிமன்றத்தில்விளக்குந்
தாணம்பினர்தந்தாண்மலர்தருநுண்டுகள்புனைவேன்
மாணம்புயன்முதலோர்பகர்மறையாதியநூலிற்
காணம்பெரிதுயர்வெய்தியகலிவாதனையறவே. (எ)

அடையார்மிடைதருமூவெயிலடுநம்பனையெழுதும்
விடையார்கொடிமன்றத்தனைவிசையன்பொரநினைவேன்
றடையேதுமிலாமற்பலதசையுண்பவர்முதலாங்
கடையோர்மகிழ்வுறநீடியகலிவாதனையறவே. (அ)

தாமக்குழலுமையாளொடுதனிமன்றமர்வானை
யேமக்கிரியெனநீடுறுமிருமைந்தரில்விழைவே
ளுமக்கொலைவடிவேனிகர்நயனத்தியர்நல்குங்
காமக்கடல்வளமொன்றியகலிவாதனையறவே. (௯)

தருணக்கிளிமொழிமாதுமைதன்னேடுயர்தில்லை
யருணச்சபைநடராயனையருணல்வரினினைவேன்
பொருணிச்சயமுணராதவர்புகழ்வாரியின்முழுகக்
கருணைப்பகையெனநின்றுளகலிவாதனையறவே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - ௯௰௧.

சிவமயம்.

௰௨ - வது அருள்வாக்குப்பத்து.

கொச்சகக்கலிப்பாக்கள்.

செவ்வைமேவியதில்லைத்திருக்கனகசபையூடு
கொவ்வைவாய்க்கவுரியொடுகூத்தாடுங்கோமானே
கௌவைதோய்தலினேயேன்கவலும்விதமறியாயோ
வெளவையாதியர்க்கீந்தவருள்வாக்குத்தருவாயே. (௧)

தண்டமிழும்பைம்பொன்னுந்தழைத்தபுகழ்த்தனித்தில்
தொண்டரினங்களிகூரத்தொலையாதநடஞ்செய்வாய் [லைத்
மண்டலத்துமானிடருமதியாமைக்கயர்வேனை
யண்டர்களும்வியந்தோதவருள்வாக்குத்தருவாயே. (௨)

சீரவிருந்திருத்தில்லைச்சிற்சபையினடமாடிக்
காரணமுங்காரியமுங்கடந்துநின்றகண்ணுதலே
பாரணங்குபடும்பாடுபார்த்துமன்ஞ்சகிக்கில்லே
னாரமுதக்கடலனையவருள்வாக்குத்தருவாயே. (௩)

கஞ்சமலர்த்தடஞ்சூழுங்கவினரும்புலியூரி
னஞ்சனையவிழியாண்முன்னடமாடச்சலியானே

வஞ்சமிகுமிகலோரால்வருந்தும்விதமறியாயோ
வஞ்சலெனவின்னேவந்தருள்வாக்குத்தருவாயே. (௪)

பொற்புமிகுந்திருத்தில்லைப்புலியூரின்பொதுமன்றில்
விற்புருவக்கொடிபார்க்கமிகநடனம்புரிவானே
சொற்புலமைத்தொழிலோரைத்தூர்த்தர்குலமிகழாம
லற்புதங்கள்பலசெய்வானருள்வாக்குத்தருவாயே, (௫)

மானந்தவிழிக்கவுரிமனமகிழமன்றகத்திற்
ருனந்தமாதியெனத்தனிநடனம்புரிவானே
யீனந்தந்தெனைவாட்டுமிருங்கலிவேரறக்கெல்வா
னனந்தமயமானவருள்வாக்குத்தருவாயே. (௬)

பொச்சமில்சிற்றம்பலத்திற்புலவோருமுனிவோரு
நச்சநடம்பயில்வானேநான்படும்பாடறியாயோ
விச்சமயநன்றேயாமிரங்காமலிருந்துவிடே
லச்சமறுத்திடற்கானவருள்வாக்குத்தருவாயே. (௭)

சோறருந்தாவல்விரதந்தொடங்கிவெகுநாளாயும்
பாறனையார்பலர்க்கெய்தும்பசும்பொன்வலையறக்காணே
னீறணியும்பார்த்தனுக்குநெடுங்கணையொன்றளித்தோனே
யாறலம்பம்பலத்தாய்நின்னருள்வாக்குத்தருவாயே. (௮)

கம்பனெட்டக்கூத்தன்முதற்கவிஞரினுங்கடையாகிப்
பம்பகிலத்தியானிறந்தாற்பசுந்தமிழ்ச்சீர்க்கிழிவன்றே
கும்பமதகரிமுகனைக்கொற்றவைவேற்கோமானை
யம்பலத்திற்பெற்ருய்நல்லருள்வாக்குத்தருவாயே. (௯)

ஞாலமுற்றும்போற்றுபுகழ்நால்வருக்குமீந்தாயென்
பாலனுப்போன்ருறலும்பட்சம்வைக்கக்கூடாதோ
சீலமறையார்க்குமெழிற்றில்லைநடஞ்செய்வானே
யாலடித்தேசிகனேமெய்யருள்வாக்குத்தருவாயே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - ௯௨௧.

சிவமயம்.

௩௫ - வது பசுவினம்வாழ்கைப்பத்து.

அறுசீர்த்தாழிசைகள்.

அழகிய மன்றுடை யாதியே யளவற நீடருட் சோதியே, தழல்விழி கொண்டமெய்த் தேசிகா தமியன் விளம்புசொற் றள்ளிடேல், விழவுறும் விண்ணகர் வாழ்வெலாம் விறன்மலி தானவர் கொள்ளினும், பழமறை யாதியமாயினும் பசுவினம் வாழ்வுற வேணுமே. (க)

மரகத மங்கலை பங்கனே மன்றிடை யாடிய வள்ளலே, புரதக னஞ்செயு மீசனே பொய்ம்மொழி யென்று புறந்தளேல், கரவுறு நெஞ்சின ராயுனைக் கருதி வணங்குநர் கைக்கொளும், பரகதி யொன்றிலை யாயினும் பசுவினம் வாழ்வுற வேணுமே. (உ)

சத்தியமேவடிவர்கியோர்தமநியமன்றிடையாடுவாய்
நத்தியவாறருள்செய்குவாய்நானவில்கின்றதைநன்குகேள்
சித்தியுமுத்தியுநல்கிடுஞ்சீரியதென்றுதிகழ்ந்தமெய்ப்
பத்திமுழுப்பிழையாயினும்பசுவினம்வாழ்வுறவேணுமே.

பூசனை செய்துள தொண்டன்மேற் போர்பொருவானுயிர் பொன்றவென், றேசறு மம்பல மேவினை யென்னது சொல்லை யிகழ்ந்திடேட், லாசக னின்றிரு வாகமத் தன்பர் வினவு மவற்றினுட், பாசம தேயுயர் வென்னினும் பசுவினம் வாழ்வுற வேணுமே. (ச)

சிம்புளுருக்கொடுமாயவன்சீயவுடம்புசெகுத்தபின்
பம்புபொனம்பலமேவினைய்பாவிகள்பங்கிலிருந்திடே
லம்புவியிற்கொருசெல்வமாயாசிலறங்களனைத்துமாய்ப்
பைம்புலருந்தியுவப்பவாம்பசுவினம்வாழ்வுறவேணுமே.

காவி மலர்த்தட வாவிசூழ் காமர் மிகும்புலி யூரினிற், கோவில் கொளுஞ்சிவ னேயெனைக் கோதின னென்று குறித்தெளே, லாவியி லாதன வாகுமென் றச்சமி லாமல றைந்துவெம், பாவிகள் கொன்றிடு தீமைபோய்ப் பசுவினம் வாழ்வுற வேணுமே. (௬)

சீர்த்தவரன்பு செயுந் திருத் தில்லையின் மேவிய செய்யனே, மூர்த்த மெலாமு டையாயெனை முற்றும்வெறுத்து முனிந்திடேல், கூர்த்த மனத்திடை நல்லருட் கொண்டுனைநாடிய கொள்கையோர், பார்த்தலு மார்வ முறத்தகும் பசுவினம் வாழ்வுற வேணுமே. (எ)

வில்விசையன் றெழுமற்றை நாள் வேடனுருக் கொடுமேவினுய், வல்வினையார் பகை கொண்டுளேன் வாய்மொழிதன்னை மறுத்திடேல், கல்வியிலார்களு மொப்பிடக் காசினியிற் பலகாலமும், பல்வித நன்மைகளுந் தரும் பசுவினம் வாழ்வுறவேணுமே. (அ)

தர்தமதக்கரிமாமுகன்சண்முகனென்றவர்தம்மைமுன்
மைந்தரெனத்தருதெய்வமேமன்றினடிக்கும்வரோதயா
வெந்தநெருப்புறழ்பாழ்வினைவேரறநாடலின்மேதினிப்
பந்தமறுத்தவருந்தொழும்பசுவினம்வாழ்வுறவேணுமே. ()

சீரியநால்வருமெச்சுசீர்த்தில்லையின்மேவியசெல்வனே
நாரிலரிற்றலையாயநாளுடலுநின்செயலல்லவோ
காரியமியாதெவணுயினுங்கற்றவர்நற்றவர்கைதொழப்
பாரிடைநின்னறமாவரும்பசுவினம்வாழ்வுறவேணுமே. ()

முற்றிற்று.

ஆக கவி - சுஙக.

சிவமயம்.

௰சு - வது அந்தணர்வாழ்கைப்பத்து.

கலிவிருத்தங்கள்.

சீரணங்குதிகழ்தருதில்லையிற்
காரணன்றனைக்கைதொழுதுன்னுவே
ஞரணன்றருநான்முகவன்பக
ராரணர்தெரியந்தணர்வாழவே. (க)

பூகமன்னுபொழிற்றிருத்தில்லையி
ஞகபூடணநாதனைநண்ணுவே
னேகமென்றுபினெட்டெனவும்புக
லாகமத்தருளந்தணர்வாழவே. (உ)

தேறுவார்புகழ்தில்லையிற்றேசிக
னறுமம்புயநாண்மலர்த்தாள்விடே
னீறுதீருமியல்புடைத்தாயநூ
லாறுநன்குணரந்தணர்வாழவே. (௩)

திருத்தமாயதிருவருட்டில்லையி
னிருத்தனைத்தினநெஞ்சகத்துன்னுவேன்
பொருத்தமெய்தப்புராணமெல்லாமுணர்ந்
தருத்தமோதிடுமந்தணர்வாழவே. (௪)

பூசைகொண்டுபுகழ்தருபுண்ணிய
னேசையுற்றசிற்றம்பலமுன்னுவேன்
வேசையின்பமிகத்திகழ்விண்ணக
ராசையின்றியவந்தணர்வாழவே. (௫)

செக்கர்வானெனத்தில்லையிலாடுவான்
முக்கணோங்கர்முந்நெறியுங்கொள்வேன்
பொக்கவேள்விப்புலைத்தொழிலின்றியைந்
தக்கரம்பகரந்தணர்வாழவே (௬)

தெருள்குலாவுசிதம்பரத்தெம்பிரான்
பொருள்குலாவுபுகழ்மிகப்போற்றுவே
னிருள்குலாவிடவெவ்வுயிர்க்குஞ்செயா
வருள்குலாவியவந்தணர்வாழவே. (௭)

பார்த்தன்வெளவியபாசுபதந்தருஞ்
சீர்த்தமூர்த்தியைத்தில்லையினாடுவேன்
கூர்த்தவேலினுங்கூருளேயெனு
வார்த்தவாசகத்தந்தணர்வாழவே. (௮)

செய்யதில்லைச்சிவன்றருசெல்வர்போல்
வையமீதுமகிழ்வதுநாடினேன்
பொய்யலாவருட்போதமிக்கெய்தலா
லையமற்றொளிரந்தணர்வாழவே. (௯)

கோதில்பாடற்குரவரொர்நால்வரிற்
சோதிவாழ்திருத்தில்லையைச்சொல்லுவே
னீதிநூலினிசந்தெரித்தற்குமோ
ராதியாகியவந்தணர்வாழவே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - ௬௪௧.

சிவமயம்.

௰௫-வது மாதவர்வாழ்கைப்பத்து.

கலிவிருத்தங்கள்.

அஞ்சந்துயில்வாவியணிப்புலியூர்த்
தஞ்சன்புகழேதமிழிற்புகர்வேன்
கஞ்சந்தருகாரிகையாரனையார்
வஞ்சந்தவிர்மாதவர்வாழ்வுறவே. (௧)

புயலொன்றுபொழிற்புலியூரிலருட்
செயல்விஞ்சியதேசிகனைப்பணிவே
னயலுண்டிலையென்றறையத்தகுபொய்
மயலின்றியமாதவர்வாழ்வுறவே. (௨)

புலியட்டுரிகொண்டணிபுண்ணியனு
டொலிமற்பொதுவம்பலமுன்னல்விடேன்
கலியைப்பொருளென்றுகருத்தயரா
வலிபெற்றுளமாதவர்வாழ்வுறவே. (௩)

கனகந்திகழ்மன்றமர்காரணனைத்
தினமன்பொடுசிந்தனைசெய்தல்விடே
னனவுங்கனவென்றுணர்நன்மைகெடா
மனமொன்றியமாதவர்வாழ்வுறவே. (௪)

கந்திப்பொழில்சூழ்கவினார்புலியூ
ரந்திப்பிறைசூடிதனன்பைவிடேன்
சிந்திப்பதுகண்டுதெளிந்துதினம்
வந்தித்திடுமாதவர்வாழ்வுறவே. (௫)

நதிவைத்தசடைச்சிவனைப்புலியூர்
நிதியைத்தினநெஞ்சினினைப்பதெலா
மதிகத்திருநீறணிதன்மையினான்
மதியிற்றிகழ்மாதவர்வாழ்வுறவே. (௬)

கண்ணிப்பிறைசூடியகாரணனை
நண்ணிப்புலியூரைநவிற்றலெலாம்
விண்ணிற்புலவோர்குலம்வெட்குறவிம்
மண்ணிற்பலமாதவர்வாழ்வுறவே. (௭)

அடிகொண்டொருவற்கடலம்பருள்வான்
வடிவந்திகழ்மன்றைவழுத்தலெலா
மிடிவந்துவெதுப்பினுமெய்ந்நெறியின்
மடிவென்றவிர்மாதவர்வாழ்வுறவே. (அ)

இருமைந்தனையீனியவீசனருட்
டிருமன்றதனைத்தினநாடிடுவே
னருவென்றுருவென்றறைகின்றதனுண்
மருமந்தெரிமாதவர்வாழ்வுறவே. (௯)

நால்வர்க்கருணாயகனற்புலியூர்
மேல்வைத்தவிருப்பமதைத்தணவேன்
கோல்வெற்றிகொளுங்கண்மடந்தையர்தம்
மால்வற்றியமாதவர்வாழ்வுறவே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - ௬௱௧௬.

சிவமயம்.

௰சு - வது அட்டமாசித்திப்பத்து.

எண்சீர்விருத்தங்கள்.

பழவினையேவலியதெனநினைத்தஞ்சாமற்
பத்தர்மலர்ப்பதத்துகளைப்பரிந்துதாங்கி
மழலைமொழித்தமிழ்கொடுசெற்றேன்றமட்டும்
வழுத்துகின்றநானுனருள்வசத்தனன்றோ
குழவியொன்றுக்கன்றுவெண்பாற்கடலீந்தோனே
குளிர்சடையிற்கங்கைநன்னீர்குலுங்கச்சிந்த
வழகியசிற்றம்பலத்தினடிக்கின்றோனே
யட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (க)

சிந்துகொடுபோற்றிசைத்தவொருவன்சேரத்
திருவாதவூர்முனிவன்சேர்ந்தமுத்தி
தந்துளவாறுலகுரைக்கக்கேட்டேனந்தோ
தமியேன்சொல்லீனமெனத்தள்ளிடாதே
யிந்துமுடிக்குஞ்சடிலத்தொருபெம்மானே
யேறூர்ந்துதகுவர்முன்னுமிலங்குமெய்ந்தா
யைந்துமுகமம்பலத்திற்றுலங்கநின்று
யட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (உ)

௰

கறிவிரவுநெய்ச்சோறும்பொன்னுநெல்லுங்
கனியிதழ்ப்பாவையருமொருகவிஞற்கீந்து
பொறிதிகழ்வெள்ளானையினுமேற்றும்வண்மைப்
புகழ்விளக்கவேண்டுமென்னைப்புறம்பிற்றள்ளேல்
வெறிகமழ்பூங்கடுக்கையொடுமதியுஞ்சென்னி
மிசைவைத்தாய்கனகமன்றில்விளங்குமெந்தா
யறிவுடையாருணர்மூர்த்தியெட்டுமான
யட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (௩)

உம்பர்குழாமன்றுகொள்ளுமிறுமாப்பெல்லா
மொருதுரும்பாற்றொலைத்தவிதமுண்மையாகி
லிம்பரிற்பற்பலர்செயுந்தீங்கனைத்துமிந்நா
ளென்றனாற்றீர்தரச்சற்றெண்ணொண்ணாதோ
கம்பமதகரியுரித்துப்போர்த்துள்ளானே
கயிலைவெற்பைத்தொடுமரக்கன்கதறச்செய்தா
யம்பலத்தினின்றுநடம்பயிலவல்லா
யட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (௪)

வாரணக்கோடன்னமுலைமடவார்மோக
வலையிடைப்பட்டாடகப்பேய்வருத்தநொந்தும்
பாரணங்குக்குதவிசெய்யக்கருதுமென்னைப்
படிறனெனப்பலர்கூடிப்பழிக்கின்றாரோ
காரணமுங்காரியமுந்தானேயான
கண்ணுதலேகனகசபைக்கடவுளானே
யாரணமுமாகமமுந்துதிக்கநின்றா
யட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (௫)

வானந்தக்கனகசபைநடுநின்றானே
மழவிடைமேற்பவனிவரும்வண்மையானே
மானந்தவிழிக்கவுரிபாகத்தானே
வம்பர்பலரிகழவென்னைவருத்தவேண்டா
ஞானந்தந்தயன்முகத்திலுதித்தார்போலு
நல்லடியாருடன்கூட்டிநவிலொண்ணாத
வானந்தவாரிதியிற்றோய்க்குமுன்ன
மட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (௬)

மந்தரவெற்பாற்கடலைக்கடைந்தமாயன்
மாநிலமாமனைவிபடும்வருத்தந்தேரா
துந்தவுணர்வானவர்மேற்றொடரக்கண்டு
முறங்குகின்றானிவைதவிர்ப்பதுன்னிநொந்தே

னிந்தவிதத்திச்சையுமோருயிர்க்குண்டாமோ
வெழிற்கனகசபையாய்நின்னெண்ணமியாதோ
வந்தரத்திலுமையொடுமோல்விடையிற்றோன்றி
யட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (எ)

விசையனைப்போலரியதவஞ்செய்யமாட்டேன்
மேதினிமங்கையொழிற்குமிகமால்கொள்வேன்
றசைநுகர்வாரனைவரையும்வெல்லவேண்டித்
தவிக்கின்றேனின்கருணைத்தன்மையாதோ
திசைமுழுதும்புகழ்ந்தோதுந்தில்லைமூதூர்ச்
செம்பொன்மன்றினடித்தருளுஞ்சிவனேயென்று
மசைவிலதாமெய்ப்புகழுக்குறுதிகாட்டு
மட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (அ)

பாராதியண்டபகிரண்டமெங்கும்
பரந்தனைத்துந்தானனபரனேயுண்மைச்
சீராருந்தில்லைமன்றிற்சிவனேசெம்பொற்
சிந்துரத்தைக்கந்தனைமுன்சிவைபாலீன்றாய்
நேரானசிந்தையொடுநினைவோனல்லே
னெறிதவறாவிரதியல்லேனிசத்தோனல்லே
ஞாதித்துருகுநரிலொருவனல்லே
னட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (கூ)

நிகண்டறியேனிலக்கணநூலொன்றுந்தேரே
னினைவில்வந்தபடிதுதிபோனிகழ்த்துகின்றேன்
றகண்டர்புகழ்நால்வர்பெறும்பேறேயெண்ணித்
தமநியச்சிற்றம்பலத்தைச்சார்ந்தேன்கண்டாய்
வகண்டமும்பற்பலசிலதானவர்க்குமீந்த
வள்ளலேயெறும்புமுதல்வணங்கப்பெற்றா
யகண்டபரஞானவிளக்கொளியேயாகு
மட்டமாசித்தியெனக்கருள்செய்வாயே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - கூகூக.

சிவமயம்.

௰எ-வது திருவிளையாட்டுப்பத்து.

எண்சீர்த்தாழிசைகள்.

அருட்சித்தமுறுந்தவத்தோர்துயர்க்கடலிற்குளித்தா[தார்
ரானினங்கொன்றுணுங்கொடியோரதிமகிழ்ச்சி யடைந்
மருட்செற்றமலிவுடையாரிறுமாப்புக்கொண்டார் [ர்
வண்டமிழ்நூற்புலவரெல்லாம்வறுமையிற்பட் டுழன்று
குருச்சித்தர்பற்பலர்பன்மலைதோறுமுற்றுங்
குறித்திவற்றைக்கருதாதகொடுமையினராளுர்
திருச்சிற்றம்பலத்தினிடந்திருநடஞ்செய்வானே
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (க)

அத்தமிகப்படைத்தவரேயளவிலுவப்புற்று
ரருளாடற்கருதியவரலமரன்மிக்கடைந்தார்
பத்தர்களுக்காதரமாமாலயச்சீரெல்லாம்
பழுதுபட்டதினிமேலும்பார்த்திருக்கக்கூடா
துத்தமச்சற்குருவாகியாலடியிலிருந்தா
யோங்காரவட்டத்தினுட்பயனுமானாய்
சித்தருக்கோரரசெனச்சிற்றம்பலத்தினின்றாய்
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (உ)

மாதமொருமழையுமரிதாங்கொடுமைகண்டேன்
மறையவரும்புலையர்களைவழுத்துமொழிகேட்டே
னீதமனீதத்தினைக்கண்டொதுங்குமிந்தநாளி
னினைக்கரியநினைவனைத்துநினைத்துள்ளேனந்தோ
பாதமொன்றினடமாடச்சலியாதபரனே
பரவுவார்விருப்பமுற்றும்பரிந்தருளவல்லாய்
சீதரனும்போற்றியபொன்னம்பலத்தினானே
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (௩)

மங்களந்தோய்தருமுனதுகோயிறொறுமேகி
மதுரநறுந்தமிழ்ப்பாடல்வனைந்துமிகச்சூட்டி
யங்கணெடுமாலயனேர்வானவர்க்குமெய்தா
வருளாடற்புரிவார்க்கேயாசையுற்றேன்கண்டாய்
சங்கணியுங்காதானேவரங்கொடுக்கச்சலியாத்
தன்மையனேபுன்னகையாற்றானவரூர்ச்செற்றாய்

செங்கனகத்தனிமன்றினாடகஞ்செய்வானே
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (௪)

காலபடரினுங்கொடியார்பலருலகிலுண்டாய்க்
காலியயமுயலேனங்கயன்முதலாமவற்றைச்
சாலவுங்கொன்றருந்துதுயர்சகிக்கறியேனந்தோ
தனிவீட்டிற்புக்கவர்முன்சகித்தவிதமியாதோ
கோலவுருச்சமைந்துநெடுமாலறியாப்பதங்கள்
குலவிடச்சிற்றம்பலத்திற்கூத்தாடுவானே
சேலனையவிழியுமைப்பெண்மகிழ்கூருங்கணவா
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (௫)

அங்கணிலமங்கைமிகவழுதுபடுந்துயரு
மறநெறியைப்பாவநெறியடக்கியெழுங்கொடிதும்
பங்கயச்செந்திருமடந்தையினமுற்றவாறும்
பார்த்தடிமைநெடுநாளாப்பரதவிக்கின்றேன்காண்
டங்கமலைவில்லேந்தித்தறைப்பெருந்தேருகைத்தாய்
தனிமன்றிற்றினம்புரியுஞ்சமரசக்கூத்துள்ளாய்
சிங்கமுடனானையுரித்தேகாசமிட்டாய்
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (௬)

சக்கரக்கைமாயன்முதற்சொல்லவல்லார்சொல்லுஞ்
சகலவிதத்தெய்வமுநீதானெனநன்கோர்ந்து
மக்களிற்சிற்சிலரடையத்தகும்பேறுமின்றி
வருந்துகின்றேனீயறியாவஞ்சகமொன்றுளதோ
முக்கணுடைப்பெருமானேமுழுவதும்வல்லானே [ய்
மொழிவருஞ்சீர்த்தில்லைமன்றின்முயலகன்மேனடித்தா
செக்கரெனப்பிறைக்கீற்றோடவிருமெழிற்சிவனே
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (௭)

மூர்த்தமிருபதிற்றைந்தாயனந்தவிதமானாய்
மொழியுமொருவெண்கவிக்கோர்முனிவனெதிர்முன்னா
னேர்த்தகுணப்புலிபிடித்தபசுவைவிடச்செய்தாய்
துதிபகர்வான்மகிழவொருதூதனுமாச்சென்றாய்
பார்த்தனடிகொளுமுவப்பாற்றில்லையிடைநடித்தாய்
பாவமிகுங்கலிநடுங்கப்பண்ணுவதுவிழைந்தேன்
சீர்த்தமறையாகமத்தினெறிவழுவாவண்ணந்
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (௮)

நீலநிறக்கலிபுருடன்றனைப்பிடித்துத்தவமா [ய்
நெருப்பதனுற்சுடுவதெண்ணிநெஞ்சயர்ந்தேன்கண்டா
பாலனொருவனுக்காமுன்னியமனைக்கொன்றதுபோற்
பரவுமென்றனிமித்தமதுபண்ணிடத்தான்வேண்டுங்
காலதுகொண்டுதைத்ததுபோன் றமர்விளைக்கவேண்டாங்
கரிமுகன்போற்குமரன்போற்கவின்றருமன்பினராஞ்
சீலமறையவர்வழுத்துந்தில்லைநகர்ச்சிவனே
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (௯)

சந்தவரைக்குறுமுனிவன்முதலியபல்பெரியோர் [ளேற்
சபையினும்போய்வணங்கிமகிழ்தன்மையும்வேட்டுள்
இந்தவிதத்துயரளிக்கத்தகுங்கொல்லோதமியே
னிதயமட்டுநீயறியாவியற்கையினதாமோ
வெந்தநலத்தினும்பெரிதென்றிதுவிழைந்தேன்கண்டா
யெழிற்கனகசபையானேயெங்குநிறைவானே
செந்தமிழ்ப்பாவலர்நால்வர்க்கருளியபெம்மானே
திருவேடத்திருக்கூட்டத்திருவிளையாட்டியற்றே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - ௬௭௧.

சிவமயம்.

௰அ-வது. அருட்சத்திப்பத்து.

கலிவிருத்தங்கள்.

குற்றம்புரியுங்கொடியவர்தமக்கு
நற்றவப்பயனைநல்கினுநல்கு
மற்றவரதனைமறுக்கொண்ணாது
சிற்றம்பலத்தான்றிருவருட்சத்தியே. (க)

ஆடகம்போலுமம்புயப்புதுப்பூப்
போடவல்லாரைப்பொடிக்கினும்பொடிக்குந்
தேடரும்பெருமைச்சிற்றம்பலத்தி
னாடகஞ்செய்வானல்லருட்சத்தியே. (உ)

அம்பொனுந்தமிழுமட்டமாசித்துந்
தம்பொனும்வீடுந்தவத்தாலுணரிற்
பைம்பொனேர்மேனிப்பார்ப்பதியுடன்வாழ்
செம்பொனம்பலத்துச்சிவனருட்சத்தியே. (௩)

பரிதியுமதியும்பார்முதலாக
விரிதருபூதமும்வேறுபல்லுயிருந்
தெரியுமெய்யுணர்வாற்றேறவல்லாருக்
கரியசீர்த்தில்லையரனருட்சத்தியே. (௪)

கம்பலைப்பெருக்குங்களிப்பெனுங்கடலு
மெம்பரிலியாதுமெண்ணிநன்குணரி
லும்பர்போற்றிசைக்குமுயர்புகழ்த்தில்லை
யம்பலத்தாடுமவனருட்சத்தியே. (௫)

நாரணனயனேர்நவில்பலதேவருங்
காரணநிலையுங்காரியப்பெருக்கு
மாரணமுழங்குமம்பலத்தாடும்
பூரணன்றன்பாற்பொருந்தருட்சத்தியே. (௬)

எழுதருமறையோரெண்ணில்பன்னூலுங்
குழுவுபல்சமயகோடியும்பிறவும்
விழுமியதில்லைவிருத்தவேதியனைத்
தழுவிநின்றுயருந்தனியருட்சத்தியே. (௭)

அடித்திடத்துணிந்தவருச்சுனன்றனக்கும்
வடித்தசீர்ப்பகழிவழங்கிடத்தக்க
திடித்தொனியரக்கனிகல்கெடமன்றி
னடித்தவன்றனதாநவிலருட்சத்தியே. (௮)

கணபதிதன்னைக்கந்தனைப்பயந்து
குணமிகப்பலருங்கொளும்படிபுரிந்த
திணர்படுசடையாற்கினியவம்பலத்திற்
றணவரும்பொருளாத்தயங்கருட்சத்தியே. (௯)

முன்னையோர்நால்வர்மொழித்தொடைவனைந்து
மென்னையுந்துதித்தற்கெனத்தடுத்தாண்ட
தன்னையிற்சிறந்தவம்பலக்கூத்தன்
றன்னைவிட்டகலாத்தண்ணருட்சத்தியே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - ௱அக.

சிவமயம்.

௰௬ - வது நெஞ்சநிலைத்தபத்து.

எழுசீர்த்தாழிசைகள்.

ஆதியாகி யநாதிவத்துவு மாகியம்பல மேவருட், சோ
தியே யிம வர்ன்ம கட்கொரு சொந்தமென்றுள தூயனே,
மூதிரந்தொறு மெண்ணிலிச்சை வளர்த்து மாதவமென்
னூன், னீதியின்றி யலைந்தநெஞ்ச நிலைக்குமாறருள் செய்
திடே. (௧)

பாசநோயழியத்தணைந்துபதந்தரத்தகுபண்பனு
வாசகன்றபொனம்பலத்திலளக்கொணுநடமாடுவாய்
கூசலோர்சிறிதேனுமற்றுயிர்கொன்றுதின்றுகொழுத்திடு
நீசராலுலைவுற்றநெஞ்சநிலைக்குமாறருள்செய்திடே. (௨)

பாடிநாரதனுதியோர்தொழப்பைம்பொனம்பலமூடுநின்
ருடியெவ்வுலகத்தினுந்திகழைந்தொழிற்செயுமண்ணலே
யூடியாடவராவியுண்பவருண்கணுதியுறுப்பையே
நேடிவாடிமருண்டநெஞ்சநிலைக்குமாறருள்செய்திடே. ()

சுத்ததத்துவ மாகிமெய்யருட் சோதியாய்ப்பல தொ
ண் டரும், பத்த ரும்புகழ் தில்லையிற்புரி பாண்டரங்கவி
நோதனே, யித்த மைச்சுக முத்தியிற் பெரி தென்னுமீ
னரு மேசவே, நித்தமுஞ்சுழல் கின்றநெஞ்சநி லைக்குமா
றருள் செய்திடே. (௪)

பொன்னதாற்செயுமன்றிலண்டர்புரந்தராதியர்போற்றிட
நன்னயக்கவுமாரிகண்முனடம்புரிந்திடுநாதனே [யே
யின்னல்பற்பலவாறடைந்திவணெய்ப்புறும்பிழையின்றி
நின்னருட்கடலூடெனெஞ்சநிலைக்குமாறருள்செய்திடே.

ஆறுசூடியசென்னியாயருளம்பலத்தினின்றுடுவா
யீறுமாதியுமின்றியெங்கணுமென்றுமேவியவீசனே
தேறுமேலவர்தம்மையுண்டுதெவிட்டுநின்றிருமேனியி
னீறுபூத்தவனப்பினெஞ்சநிலைக்குமாறருள்செய்திடே. ()

நச்சராவணிந் தம்பலத்தி னடம்புரிந்திய னுவலோர்,
பிச்சனென் றிகழ்ந்தாலும் வீடுபெறக் கொடுத் தருள்பிஞ்
ஞகா, பொச்ச மில்லதுன் றண்ணருட் பெரும் போகமே

யெனும் போதநா, னிச்சயந் தெரிவுற்ற நெஞ்ச நிலைக்கு
மாறருள் செய்திடே. (௭)

ஆயிரங்கண்வலாரிமைந்தனடித்தபோதுவப்பாகினாய் [ன்
கோயின்மன்றினடித்துளாய்பலகோடிகுற்றமிழைத்துளே
ருயினும்பெருகார்வனென்றுனைத்தக்கமேலவர்சாற்றலா
னீயிரங்கியுனன்பினெஞ்சநிலைக்குமாறருள்செய்திடே. ()

தந்தை யாய்க்கண நாத னைக்குகன் றன்னை யீன்று
பொன் னம்பலத், தெந்தை யென்றுப லன்பர் போற்ற
விசைந்த நாடக மாடுவாய், பந்தை நேர்முலை மங்கைமார்
மயற் பாச மீறலிற் பாருளோர், நிந்தை யாற்கொதிக் கின்
ற நெஞ்ச நிலைக்கு மாறருள் செய்திடே. (௯)

ஆரியச்சதுர் வேதமுந்தமி ழுன்பர்நால்வ ரறைந்தி
டுஞ், சீரியன்றசொற் பாடலும்புகழ் தில்லைமேவிய தெய்
வமே, பாரின்மங்கைய ராதியாகிய பஞ்சபோகம் விழைந்
ததா, னீரில்வண்டெனச் சுற்றுநெஞ்ச நிலைக்குமாறருள்
செய்திடே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - ௬௯௧.

சிவமயம்.

உ௰ - வது பிறவியிகழ்ந்தபத்து.

வெண்டளைக்கலிப்பாக்கள்.

புன்னகையாலொன்னார்புரமெரித்துப்பொற்பொதுவி
னன்னயச்சீர்காட்டுநடம்புரியுநாயகனே
யுன்னருளேமிக்கதெனவுன்னுமுணர்வுற்றதுண்மை
யென்னபட்டாலுமினிப்பிறவியாகாதே. (௧)

செந்தமிழ்ச்சீர்த்தில்லைத்திருநடனஞ்செய்துமற்றை
யந்தணரிற்றானொருவனாமென்றமைந்தோனே
மந்தமடிமுதலாமாசுடையேனானாலு
மெந்தவுலகத்துமினிப்பிறவியாகாதே. (௨)

வள்ளற்றகைசாலுமாதேவாமன்றகத்தில்
விள்ளற்கரிதாம்வியனடற்செய்வோனே

யள்ளற்கடல்சூழுமம்புவியிலாற்றரிதா
மெள்ளற்படுவேற்கினிப்பிறவியாகாதே. (௩)

கொட்டுமுழவொலிப்பக்கொக்கிறகும்பூண்டுமென்றிற்
றெட்டுமருளாற்றிருநடனஞ்செய்வோனே
மட்டுளடங்காமகத்துவங்கள்வாய்ந்தசித்தி
யெட்டும்விழைவேற்கினிப்பிறவியாகாதே. (௪)

தானக்கரியுந்தரக்குமுரித்தணிந்து [னே
பானற்கண்ணுண்முன்மன்றிற்பாண்டரங்கஞ்செய்வோ
வானத்துமாநிலத்துமங்கையர்க்கெல்லாமயங்கு
மீனக்குணத்தேற்கினிப்பிறவியாகாதே. (௫)

பச்சைமரகதநேர்பாவையெதிரம்பலத்திற்
செச்சைவனம்போற்றினடிக்குஞ்சீர்ச்சிவனே
கச்சையணியுமனைக்காவலருங்கைகுவிக்கு
மிச்சையுடையேற்கினிப்பிறவியாகாதே. (௬)

சேத்திரண்முன்னுமுயிர்கட்செற்றருந்துவானையவர்
சாத்திரங்களோடழியத்தாக்குமிச்சைதந்தனையே
யாத்தியணிந்தாடுமம்பலவாவைந்தெழுத்தா
லேத்திமகிழ்வேற்கினிப்பிறவியாகாதே. (௭)

வில்லாலடித்தோன்விரும்பும்பயனுதவி
யுல்லாசக்கூத்துமன்றிலோவாதுஞற்றுமெந்தாய்
வல்லாண்மைச்சித்தர்களும்வந்துறவாடத்தகுஞ்சீ
ரெல்லாம்விழைவேற்கினிப்பிறவியாகாதே. (௮)

சீரார்கரிமுகவன்செவ்வேளென்றுள்ளமைந்தர்
பேராணையென்னைப்பிணமாகச்செய்துவிடே
னீரார்சடையானேநெற்றிவிழியானேபொன்
னேரார்சபையாயினிப்பிறவியாகாதே. (௯)

தெள்ளுதமிழ்நால்வருமோர்சீருருக்கொண்டாங்குலகில்
விள்ளரும்பேறெய்திவிளங்குவதேவேட்டுழன்றேன்
புள்ளிளையுங்கொன்றைப்புரிசடையாய்பொற்பொதுவி
லெள்ளொடெண்ணெய்போல்வாயினிப்பிறவியாகாதே ()

முற்றிற்று.

ஆக கவி - ௭௱௧௰.

சிவமயம்.

உக - வது. பொன்வண்டுப்பத்து.

கலிவிருத்தங்கள்.

ஆவிக்கொருதுணையாமெனவணியம்பலவெளியின்
மேவித்திருநடனஞ்செயும்விமலன்றனையணுகிப்
பாவிப்பழவினைசெய்துயர்பகர்கைக்கிசையாயோ
வாவிக்கமலந்தோறுறுமதுவுண்டபொன்வண்டே. (௧)

கலையொன்றுறு மதியம்புனை கவினார்சடை யவிழத்,
தலைமன்றிடை நடமாடிய தகையாரொதிர் குறுகிச், சிலை
கொண்டெதிர் மதனன்பொரு திறலோதவ லாயோ,
மலைமங்கைதன் விழியென்றொளிர் வடிவங்கொள் பொன்
வண்டே. (௨)

கதமார்முயலகன்மீதொருகால்வைத்தொருகமலப்
பதமேலெழநடமாடியவம்பொற்சபையானை
நிதநாடியமடவார்மிசைநீயேனிகலுற்றாய்
மதவேள்சிலையொடுநாணெனவருகின்றபொன்வண்டே ()

ஐயானனமுடையார்நடமாடுஞ்சபையதிலுற்
றெய்யாமலெனெண்ணங்களையின்னேபகர்வாயோ
செய்யார்புலியூரிற்பலதெருவூடுலவுவவா
மையார்கரிமதமுண்டுளமகிழ்கின்றபொன்வண்டே. (௪)

அந்திப்பிறையணியுஞ்சடையானைப்பொதுவதனிற்
சந்தித்தவனடியாரொடுதமியேனுறல்புரிவாய்
முந்திப்பிடகரைவென்றுயர்முனிவோன்முதலினரா
வந்தித்தவர்பலபாடலின்வயினொன்றுபொன்வண்டே. ()

வேலைப்பொரும்விழியார்பலர்விறல்வேள்கணைவலியாற்
சேலைப்பறிகொளவாடினர்சிறிதும்பெறுகில்லார்
மேலைத்தவமெதுசெய்தனைவெளிமன்றினர்கொன்றை
மாலைத்தலையகலாவணமருவுற்றபொன்வண்டே. (௬)

ஆனாவமுதுறழ்சொல்லிமுனாடம்பலவாணன்
மேனாண்மயறந்தானெனைமேவற்கிசைகில்லான்
றேனாறிசைவாயாலொருசிறிதோதிடநினைவாய்
மானார்பலர்மகிழ்தாதுசொல்வலியுற்றபொன்வண்டே. (௭)

இசைநீடியகுயில்வாயொலியின்னற்றருதலிஞற்
றசையுண்பவர்தவமொத்துடறளர்வுற்றதுகண்டாய்
விசையன்றொழுமமலன்புகழ்மிளிரம்பலமேவி
வசைதீர்நலனதுகொண்டெதிர்வரவல்லபொன்வண்டே ()

கறுவுந்தகுவரைவென்றுயர்கணநாதனைவேளைப்
பெறுமம்பலவன்பான்மயல்பேசற்கிசையாயோ
செறுமங்கசன்வெருளத்தகுசீலம்புனைவதனுன்
மறுவின்றியதவயோகியர்மனமன்னபொன்வண்டே. (கூ)

சேல்வைத்தகணுமையாளொடுசினவெள்விடைமேலாய்
நால்வர்க்கருடில்லைச்சிவனகுமாறிசையூதிக் [ணராய்
கோல்விட்டகைமதவேளெதிர்கொன்றைத்தொடைகொ
மால்வெற்றியுள்வார்பற்பலர்வெளவுற்றபொன்வண்டே. ()

முற்றிற்று.

ஆக கவி - எகக.

சிவமயம்.

உஉ-வது. கிளிப்பத்து.

கலிவிருத்தங்கள்.

குன்றவில்லுடையாரொதிர்தில்லையிற்குறுகி
யென்றனுவன்முற்றுரைத்திடற்கொருசிறிதிரங்கா
யுன்றன்மேலிவர்வான்பகையெனநினைத்தொல்கே
றென்றலோடிளஞ்சோலையிற்றிரிதருகிளியே. (க)

போர்த்ததோலுடையாரொதிர்தில்லையிற்போய்நின்
றூர்த்தவாரிதிமுரசொலியடக்குமாறறையாய்
வார்த்ததேனமுதெனத்தருமழலையின்சுவையாற்
சீர்த்தசெந்துவராமெனத்திகழ்ந்தவாய்க்கிளியே. (உ)

அங்கசன்றொடுங்கணையெனப்படுத்துபாடனைத்துஞ்
சங்கரன்றன்முற்றில்லையிற்சாற்றிடற்கிசைவாய்
பங்கயாதனன்றனைப்பயந்துலகெலாம்பரிக்குஞ்
செங்கண்மாலெனப்பசுநிறங்கொடுதிகழ்கிளியே. (ங)

சிகரகோபுரநிலைமலிதில்லையிற்சிவன்பாற்
பகரவேண்டுமென்விருப்பநீயறிதரும்பாற்றே

கிகரமுற்கொடோரெதிர்மறையின்றெனக்கிளர்ந்து
மகரவாரிசநாணுறுமணங்கமழ்கிளியே. (௪)

கதமருமுயலகன்மிசைகனகமன்றகத்தி
னிதநிலாவினனெனேப்புணர்தரச்செயநினைவாய்
வதனமட்டுறுமொருமுனியடைந்தமெய்வாழ்வோர்ந்
திதமுரைத்துனேயிரந்தனனிலங்கெழிற்கிளியே. (௫)

அந்தணாளருடொருவனென்றம்பலத்தமர்வான்
கந்தநாண்மலர்க்கொன்றையென்றியான்பெறக்காண்பா
யிந்தமாநிலத்தினர்களுமிமைப்பிலார்முதலா
மெந்தலோகரும்விரும்பிடுமெழிற்கொள்பைங்கிளியே. ()

சிமயவில்லுடைச்சிவன்றனைத்தில்லையிற்கண்டு
சமயநன்றிதென்றழைத்துவந்தென்றுயர்தவிர்ப்பா
யமையைநேர்புயத்தங்குசபாசம்வைத்தவிரு
மிமயமங்கலையெனமொழிபயிலிளங்கிளியே. (௭)

விசையனுக்கருள்விகிர்தனைமன்றமாம்வெளியி
லசைவிடைகமாடியைக்கொணர்ந்தெனக்கருளாய்
திசையெலாமுணர்தருமயல்கொடுமிகத்திகைத்தே
னசையுளார்பயிற்றியமொழிநவிலுநற்கிளியே. (௮)

ஆனைமாமுகன்றனக்குகவேளுடனருளுங்
கோனைமன்றினிற்கண்டெனக்காமொழிகூறாய்
மானைநேர்விழிச்சிறுமியர்தம்மையுமயக்கித்
தேனையன்னசொற்பற்பலசெப்புமென்கிளியே. (௯)

பாடினொருநால்வருக்கருள்செயும்பரன்பா
லோடியான்படுமுறுகணெல்லாம்வகுத்துரைப்பாய்
தேடிமாலயன்றளர்மலைக்கிளியெனச்சிறந்து
கேடின்முத்தமிழ்நயமிகக்கிளர்தருகிளியே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - எஉக.

உந - வது நாகணைவாய்ப்பத்து.

கலிவிருத்தங்கள்.

அங்கையின்மானணியம்பலவாணன்
சங்கையில்பேறுதரும்படிசொல்வாய்
பங்கயமென்றபணித்தவிசேறு
நங்கையர்போலொளிர்நாகணைவாயே. (க)

சீரியர்நண்ணியதில்லையிலீசன்
பேரியல்பிற்சிலபேசவிரும்பாய்
வாரியுடைப்புவிவானிடைவைகு
நாரியரொல்கியநாகணைவாயே. (உ)

அல்லிலகுங்களமார்நடராயன்
புல்லியதென்புலிசைப்புகழ்கூறாய்
வில்லியர்நெஞ்சம்வியந்தளிகூரு
நல்லிசைமிக்குணர்நாகணைவாயே. (ந)

சோகமிலன்பர்கள்சூழ்தருதில்லை
யேகனுடன்சிறிதென்றுயர்சொல்வாய்
மாகமுறும்பணிமால்வரைமங்கை
நாகரிகம்பெறுநாகணைவாயே. (ச)

செந்தமிழ்வீறுதிகழ்ந்துளதில்லை
யந்தணர்கோனெனையாள்வதுகூறு
யிந்தவிதத்துயரெய்தினனங்கோ
நந்தலில்சீர்பெறுநாகணைவாயே. (ரு)

பற்றலர்நீறுபடும்படிசெய்வா
ருற்றவிர்தில்லையினெண்புகழோதா
யற்றமறிந்தருள்வாரவர்கண்டாய்
நற்றகைபெற்றுளநாகணைவாயே. (சு)

விட்புலநாணும்வியன்றிகழ்தில்லை
யுட்புரியாடலுளார்புகழோதா
யெட்புரைநன்றியுமில்கிளியொல்க
நட்புமிகப்பெறுநாகணைவாயே. (எ)

வில்விசையற்கருள்வேடுவனைச்
செல்விநிலாவியதில்லையொடோதாய்

வல்வினைகுன்றியமாதவமுண்டா
நல்விதியெய்தியநாகணைவாயே. (அ)

கைக்கரியைக்குகனைத்தருகாமர்ச்
செக்கரனுறொதிர்தில்லையின்மேவி
யிக்கணமென்றுயரியாவையுமோதாய்
நக்கவனப்பவிர்நாகணைவாயே. (கூ)

ஆலமருந்தியவம்பலவாணன்
சீலமொழிந்துதினங்களிகூர்வாய்
நாலறிவாளர்நவின்றுறுமேன்மை
ஞாலமுணர்ந்ததுநாகணைவாயே. (ய)

முற்றிற்று.

ஆக கவி - எ௩க.

சிவமயம்.

உச - வது. அன்னப்பத்து.

அறுசீர்த்தாழிசைகள்.

செம்புகர்வேழமுலாவுசீர்த்தெருவளநீடியதில்லையி
னம்புநர்வாழ்வுறவாடுவார்நலமுதவுந்திருநாளெதோ
வெம்புதுயர்க்கடன்மூழ்கியேமிகவுமருண்டுவெருண்டுளே
னம்புயமீதுறைநான்முகத்தயனிவரத்தகுமன்னமே. (க)

கந்தமலர்ப்பொழில்சூழ்தருங்கவினுறுதில்லையிலாடுவார்
சிந்தனையிற்சிறிதென்னையுந்திருவருளானினைவார்கொலோ
வெந்தவிதத்தினியுய்யலாமெனமிகவாடியிடைந்துளே
னந்தரர்பொன்னகர்வாவியூடமர்தருபொற்புறுமன்னமே.

நாரணனுன்முகனுதியோர்நண்ணுநலந்திகழ்தில்லையிற் [ன்
பூரணஞானவினோதனுர்பொன்னடியென்றுபொருந்துவே
காரணமென்றறியார்கள்போற்கண்கலுழ்கின்றதுகண்டு
யாரணமாதியகூறிஞளன்னநிறம்பெறுமன்னமே. [ளா

கஞ்ச மலர்த்தட வாவிசூழ் காமர் மிகப்பெறு தில்லை யிற், பஞ்ச விதத்தொழில் செய்குவான் பற்றி யெனைக் கொள லெற்றையோ, செஞ்சரணத்துணை நம்பியுஞ் சிங்

ைத மருண்டு தியங்கினே, னஞ்சன மோர்சிறி தேனுமில்
லாத வனப்புறு மன்னமே. (௪)

தசமுகனன்றழவோர்விரற்றன்னையிருத்தியதாளினர்
நிசநடனம்புரிதில்லையினீயெனதுண்மைநிகழ்த்துவாய்
கசநிகர்நெஞ்சுகலங்கலாற்கான்முயலொத்ததுகண்டுளா
யசலமளித்தமகட்குநேராகநடந்திடுமென்னமே. (௫)

வானுலகத்தினருந்தொழுமன்றிடையாடிவரந்தருங்
கோனுடனென்றுயர்கூறியுட்கோதுகளைந்துகுணந்தராய்
மானுறழ்கண்ணியர்மோகமும்வந்துவெருட்டமருண்டுளே
னுறுதவத்தகுபாலினீரதுபிரியச்செயுமன்னமே. (௬)

வாசவனுன்முகனுதியோர்வந்துவணங்கிடமன்றிடை
யேசறுநாடகமாடினுமொன்னைவிரும்புவதெற்றையோ
பாசவினைக்குளழுந்தியேபைம்பொன்விழைந்தயர்பாவிநா
னுசகலியோகியர்நெஞ்சமொப்பாயநலந்திகழன்னமே.(௭)

பாருலகிற்கயிலாயமாப்பற்பலதொண்டர்பகர்ந்தமெய்ச்
சீருலவாதுயர்தில்லையிற்சித்தரொடென்றுயர்செப்புவாய்
நீருறுசென்னியின்மோதிஞனேயமுமொப்பியநெஞ்சர்கா
ணுருமிசைத்தொனிநல்குவாயம்பொனிறச்சிறகன்னமே.

சங்கரனைச்சிவசம்புவைத்தந்திமுகன்குகனென்றுவாழ்
புங்கவனைத்தருதந்தையைப்பொற்பொதுவூடுபுகழ்ந்தென
இங்கவர்வந்தருணல்குமாறின்றுபுரிந்திடவல்லையோ [க்
வங்கசன்மால்கொளுமங்கைமிக்காசையுறத்தகுமன்னமே.

ஏழிசை முத்தமிழ் மாலையாலீரிரு தொண்ட ரிசைத்
தசீர், வாழிய தில்லையி லந்தணன் வந்தெனை யாள்வது செ
ய்திடாய், கோழி முதற்பல புட்கள்போற் கொன்றிரை
யுண்டிடு கோதிலா, யாழி கடக்கவும் வல்லபே ராண்மை
பொருந்திய வன்னமே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - ௭௪௧.

சிவமயம்.

உரு - வது. குயிற்பத்து.

அறுசீர்விருத்தங்கள்.

பாதிமதிச் சடையானைப் பசும்பொ னெடுஞ் சடையானைப் பழுதிலாத, நீதியுடைப் பெருமானைச் சந்ததமு மறவாம னினைத்துக் கொண்டே, யேதில்பல சமயத்தோர் கண்கூசி நெட்டுயிர்ப்புற் றேங்கி வாடக், கோதிலருட் டிருநீறுங் கண்டிகையும் பெரிதோங்கக் கூவாய் குயிலே.

மலைச்சிலைக்கை யுடையானை மன்றகத்தி னடிப்பானை மதுரச் செஞ்சொல், விலைக்கொரு தூதுரைத் திருக்கான் மீண்டானை மறவாமல் விரும்பிக்கொண்டே, கலைத்தமிழ் வாரிதி யனையமாதவத்தோர் திருக்கூட்டங் கவினும்பெட் பாற், கொலைத்தொழிலும் புலைத்தொழிலு மடியோடு கெடுமாறு கூவாய்குயிலே. (உ)

செங்கணெடு மாலறியாப் பதத்தானைத் தில்லைநகர்ச் சிவனைத் தேவ, ரங்கமிகப் புனைவானை யநுதினமு மறவாம லகத்தி லுன்னி, வெங்கணவு ணரையனையா ருயிர் வதைத்தூன் றினப்பகரும் விதியெல்லாம் போய்க், கொங் கவிழ்செந் தாமரைப்போ துடையான்சொ னெறிபெருகக் கூவாய்குயிலே. (௩)

இக்கினைவில் லெனக்குனித்து மலர்க்கணையாற் பொருவானுக் கிடையு மென்னுட், புக்கியுன தொலியுமிகப் படுத்துதுய ரினிமேலும் பொறுக்கக் கூடா, தக்கினியு மழுவுமெடுத் தம்புலியுங் கொன்றையும்பச் சறுகும் பாம்புங், கொக்கிறகு முடித்தாடுங் கோமான்முற் றில்லையிற் போய்க் கூவாய்குயிலே. (௪)

சேத்தானை யிழந்துவளை முதலாய பணிபலவுஞ் சிதறிப் பாலு, நீத்தாவி மறுகுமக டனைநீயுந் துயர்ப்படுத்தனீதி யாமோ, காத்தாளும் பெருங்கருணைக் கண்ணுதலை விண்ணவர்கள் கண்டுங் காணுக், கூத்தாடித் தில்லைமன்றிற் குலவுவான் றனையினிது கூவாய்குயிலே. (௫)

நன்றையுந்தீ தையுமறியா ணகிலமதன்வளர்ச்சிமுற்று நடந்து செம்பொற், குன்றையொத்துத் திகழவில்லை மயற்

கோட்டி கொண்டுமிகக் குலைந்தாள் கண்டா, யன்றையில் வந் திவட்குரிமை யளித்தானை விடையுகைக்கு மமலன் றன்னைக், கொன்றைமலர்த் தொடையானைக் கோதறுசீர்த் தில்லைமன்றிற் கூவாய்குயிலே. (௬)

கலகமதன் ஞெருடுங்கணையுங் கடலொலியு மதிக்கன லுங் காத லோரார், பலர்வசையும் படுத்துதுய ரறியார் போ னீயுமெனைப் பகைக்க வேண்டாம், புலவர்களு மாத வரும் வானவரும் பெரிதேத்தும் பொதுப்பொன் மன்றிற், குலவுநடம் புரிவானுக் கென்னுசை யுறுமாறு கூவாய் குயிலே. (எ)

பொல்லாத காக்கையின்முட் கூட்டினிலுற் பவிக் கும்வினை போக்கத் தக்க, நல்லாரெுன் றுளதுகரிக் குரு வியுமுன் னுய்ந்தவித நவிற்று வானேன், வில்லாலன் றடித் தாற்கும் விறற்பகழி யளித்தானை வெளிமன் றானைக், கொ ல்லாநல் விரதியருக் கெளியானைச் சந்ததமுங் கூவாய் குயிலே. (அ)

கஞ்சமலர்ப் பிரமனடித் தலைகவர்ந்த கைகொண்டே கடவுண் மாக்கட், கஞ்சலளித் தாலமயின் றம்பலத்தி னடமாடு மமலன் றன்பால், வெஞ்சமண ரினுங்கொடியா ரிறுமாப்புக் கெடல்காண்பான் வேற்கை வேளைக், குஞ் சரமா முகனைநிகர் மெய்யடியார்த் தருகெனவே கூவாய் குயிலே. (௯)

வால்வளைக்கைத் திருநெடுமான் மத்தளமு நான்மு கன்கைம் மணியு நாணக், கால்வருநா டகத்தானைக் கனக சபைப் பெருவெளியிற் கண்டார் தம்மி, னுல்வருயர்ந் தமையுணர்ந்தவ் வாறுபெறக் கருதுகின்ற நல்லோர் போ லக், கோல்வளைப்பார்ப் பதிகொழுநா வெனத்தினமுஞ் சலியாமற் கூவாய்குயிலே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - எ௱௯௪.

சிவமயம்.

திரிவுமஞ்சரி.

கட்டளைக்கலித்துறைகள்.

நிதம்பரதம்பயின்றைந்தொழிற்செய்கின்றநீயுனருட்
பதம்பரவுந்தமியேற்கின்பநல்கப்படாதுகொல்லோ [தாய்
விதம்பரவைக்குழைத்துந்தமிழ்கேட்டபண்பெங்குவைத்
சிதம்பரதேசிகனேயொன்னலார்புரஞ்செற்றவனே. (௧)

குற்றம்பலவகையாற்கொள்ளுநான்மலர்க்கோல்சொரியுஞ்
செற்றம்பலவநிறமாதர்சூழ்மதன்செய்தலினுன்
முற்றம்பலவமுதலியாவுந்தீர்தரன்முன்னியருட்
சிற்றம்பலவனைநம்பிவிட்டேனவன்சித்தமன்றே. (௨)

மாகரவாரிடத்தேயுமிரக்கவருத்துமிடி
யாகரவாரின்பமெய்தவுஞ்செய்யுமரியதலஞ்
சேகரவாரியநூலோன்றலையிற்றினமிரந்துஞ்
சீகரவாரிநஞ்சுண்டார்மருவுஞ்சிதம்பரமே. (௩)

சக்கரையன்னநறும்பால்வலிதிற்றரக்கிடைக்கு
மிக்கரையன்னலொய்யான்பிறப்பெனுமேழ்கடலி
னக்கரையன்னமுள்ளான்படையாமலடைந்துய்யலாஞ்
செக்கரையன்னதிருத்தில்லையீசனைச்சிந்திக்கினே. (௪)

நாதத்தரங்கன்வில்வேளாதியரெனநல்கறியாக்
கோத்தத்தரங்கம்பலபாடுவீர்தில்லைக்குஞ்சிதப்பொற்
பாதத்தரங்கனொருமூன்றுளாருமைபங்கமர்ந்தார்
சீதத்தரங்கப்புனற்சடையானெனச்செப்புமினே. (௫)

வில்லாலடித்தவற்குங்கணையீந்தவிமலர்தம்மை
யல்லாலடிகண்மற்றில்லையென்றோர்ந்தமெய்யன்புடையீர்
நல்லாலடிச்சிலம்போசைமுன்னுஞ்சிலஞாயங்களாற்
கல்லாலடிக்குயர்வாந்தில்லையென்றிடற்கண்டுய்மினே. (௬)

யானந்தத்தாண்டவமெய்தாதவண்ணமிடபமிசை
மானந்தத்தாண்டவலகண்ணியோடெதிர்வந்தருள்வாய்
வானந்தத்தாண்டவனுன்முகனுதியர்வாழ்த்துதில்லை
யானந்தத்தாண்டவனேயிமையாத்திரியம்பகனே. (௭)

கற்பனையற்றகருணாகரனைக்கனகமன்றிற்
பொற்பனையற்றமறிந்தருள்வானைப்புகழ்ந்திறைஞ்சி
நிற்பனையற்றவஞ்செய்யேன்பகட்டிவர்நீலநிற
வெற்பனையற்றடிந்தந்தணற்காத்தவிதங்குறித்தே. (௮)

பனகமன்றத்தனையாலமுமிழற்பருகினனை
யுனகமன்றத்தனையாளுஞ்சிவனையுலகளிக்கும்
வனகமன்றத்தனைத்துந்தீர்க்குநனைவழங்குநனைக்
கனகமன்றத்தனைக்கண்டாருக்கின்பக்கடலெய்துமே. (௯)

தவகங்கையலெனநீத்துயிர்கொன்றுதசையருந்தும்
பவகங்கையன்னவர்க்கெய்தானைநான்மறைப்பண்ணவன்ற
னவகங்கையண்ணியகோலத்தனைநெஞ்சினண்ணித்தில்லை
சிவகங்கையம்பிற்குளிப்பாருக்கில்லைச்செனனங்களே. [ச்

மைத்தருக்கோர்களுக்கெட்டாதுநின்றவரனையிசைச்
சத்தருக்கோன்றலைகொய்தகையானைத்தருந்தொழிற்சீ
தத்தருக்கோனென்பூண்டானைத்தில்லைத்தனிவெளியிற்
சித்தருக்கோரரசானைத்தேடித்தியங்கனன்றே. (௰௧)

இன்னம்பலத்துவிதம்பேசிமங்கையர்க்கிச்சைகொள்ளுங்
கின்னம்பலத்துக்கெடாதேநெஞ்சேபத்திகீழ்மையென்பா
சொன்னம்பலத்துறழப்பணிபூண்டுபுற்றோலுடுத்துப் [ர்
பொன்னம்பலத்துநடமாடுமீசனைப்போற்றுதியே. (௰௨)

வேதங்களையப்படப்பலவாறும்விளம்புமிந்து
நாதங்களையென்னுமூன்றாகினான்றில்லைநாடகத்தாற்
பேதங்களையும்பெருமான்மயானத்திற்பேயினத்தைப்
பூதங்களைத்துணையாக்கொண்டஞாயம்புகலரிதே. (௰௩)

மாதக்கமலமறக்களைந்தாளைமருவியப்பா
லேதக்கமலனைச்செற்றானிற்சேயிலிலைகைநண்ணிச்
சீதக்கமலஞ்சுமந்தாடுந்தில்லைச்சிவபெருமான்
பாதக்கமலம்பணிவாருக்கில்லைப்பழவினையே. (௰௪)

விடராயதொண்டர்க்கும்வேண்டியபேறருள்வித்தகனைத்
தொடராயமபடர்போர்புரியாதருடேயவனைச்
சுடராயகிலமுந்தானாகினானைத்துகளிறில்லை
நடராயனைநினைவார்க்கென்றுமில்லைநவையென்பதே (௰௫)

நாமக்கடலைக்குநானிலங்காத்தனைநான்குதமிழ்ப்
பாமக்கடலைக்கதிசேரச்செய்தனைபைம்பொன்மன்றிற்

சேமக்கடலைமிகப்பூசியாடினைசிற்றறிவேன்
காமக்கடலைக்கடந்துய்யுமாறுகண்காட்டுதியே. (௰௬)

செஞ்சக்கரத்தைவெண்சங்கத்தையேந்துந்திருநெடுமா
லொஞ்சக்கரத்தையிலென்றருள்வாயறமோங்கெழின்மெ
கஞ்சக்கரத்தையல்பாகாகருணைக்கடலனையா [ன்
யஞ்சக்கரத்தையனேதில்லையூர்ச்சச்சிதானந்தனே. (௰௭)

இரக்குஞ்சரதமுடையானொர்சீயத்தினீடுகுன்றக்
கரக்குஞ்சரபவடிவாகினான்பெருங்கார்வரைநே
ருரக்குஞ்சரமுரித்தோன்றில்லையூரிலுரகமுஞ்செந்
தரக்குஞ்சரணடைந்துய்ந்தமைகூறுஞ்சகமுற்றுமே. (௰௮)

மஞ்சனக்கன்னிகர்கொங்கைநல்லார்கண்மயல்பெருக்கும்
வெஞ்சனக்கன்னியமர்ந்தவப்பேறுவிழையவல்லீர்
நஞ்சனக்கன்னியற்பாவலர்வேண்டுவநல்கும்பிரா
னஞ்சனக்கன்னிபங்கன்றில்லைமன்றையடுத்துய்மினே. ( )

வானத்தியானண்டராதியர்கூட்டமடிந்தெரிந்த
வூனத்தியானபணிபூண்டுந்தண்ணிமமோங்குமலைத்
தானத்தியானனங்கண்டளிகூருஞ்சதாசிவன்றன்
ஞானத்தியானமுள்ளார்தில்லையம்பலநாடுநரோ. (௨௰)

மிஞ்சானனந்தலைமென்றளிர்மீதுவிழிதுயில்வான்
கெஞ்சானனலம்பெறத்தருவான்றனைக்கேட்டறிந்தேன்
றுஞ்சானனவினர்சூழ்தில்லைமன்றிற்றெருந்தோமெனநின்
றஞ்சானனந்திகழத்திருக்கூத்தென்றுமாடுநனே. (௨௧)

கல்லனந்தஞ்சிந்தினாற்கருள்வீட்டுக்கனகசபை
வல்லனந்தஞ்சிந்திற்போற்றிசைத்தாற்குமவ்வாழ்வளித்தா
னல்லனந்தஞ்சிந்தியங்கெடுத்தார்க்குமதேநல்கலான்
மெல்லனந்தஞ்சிந்திப்பிற்கானமட்டும்விரும்புதுமே. (௨௨)

பெருந்தானவன்கைக்களிறூர்ந்தும்வாழும்பிரபலர்க்குங்
கருந்தானவர்க்குமொல்காவருட்பேறுகருதியன்பிற்
றிருந்தானவம்புரிதொண்டரொல்லோர்க்குந்தியக்கறுக்கு
மருந்தானவம்பலவாதமியேனையும்வாழ்வித்திடே. (௨௩)

அமரசமானனையும்பொருளாமென்றகத்திலெண்ணா
தெமரசனீயன்றியில்லையென்றேத்துமியல்பினர்க்குக்
குமரசரவணனேநிகராண்மையுங்கோதொழிந்த
சமரசஞானமுமீவான்சிதம்பரதாண்டவனே. (௨௪)

வெம்பலவாணனிராவணனுதிவிறலவுணர்
கும்பலவாணவத்திற்கேற்றபேறுங்கொடுத்தருள்சிற்
றம்பலவாணனருளோங்கவேண்டுமடியவரைத்
தம்பலவாணங்கிச்சாகவிடானென்கைசத்தியமே. (௨௫)

முற்றிற்று.

ஆக கவி - ௭௭௬.

சிவமயம்.

யமகமஞ்சரி.

கட்டளைக்கலித்துறைகள்.

திருக்கஞ்ச நாண்மலர்த் தாளெடுத் தான்மகஞ் செப்பியவி, திருக்கஞ்சன் சென்னி கவர்ந்தா னிறைபுனற் செய்யினெற்க, திருக்கஞ்ச னக்கண்மின் னொல்குந் தில்லையிற் றெண்டனிட்டார், திருக்கஞ்சச் செய்ய வல்லானென் னு முண்மை தெளிந்தனமே. (௧)

சங்கரசங்கரறிவினுந்தோய்பவர்தாங்குகுழைச்
சங்கரசங்கரத்தாற்பிடித்தான்றந்தைதண்ணருளி
சங்கரசங்கரணித்தில்லைநாடகத்தார்தினமுஞ்
சங்கரசங்கரவென்பார்பின்செல்லுந்தகையினரே. (௨)

சிவசிவஞ் சித்திக்கு மூவகைத் தாந்தமிழ்ச் செய்த தவ, சிவசிவ யிற்சென்று மீள்பெருஞ் செல்வமுஞ் சேரு நல்லா, சிவசிவன் கையருஞ் சொல்வார் தென்றில்லையின் செம்பொன்மன்றிற், சிவசிவ வென்றுரு வேற்றிநற் றுண் டவஞ் சிந்திக்கினே. (௩)

சீதாரவிந்தனயனண்டர்போற்றெழிற்றில்லையில்வா
சீதாரவிந்தணிசென்னியெந்தாய்நின்றிருவடியாஞ்
சீதாரவிந்தங்கருதாதமாந்தர்தஞ்சென்மமென்ன
சீதாரவிந்தழியும்புரத்தார்நிகர்தீயவரே. (௪)

அரகரவாள்விழிமங்கையர்கொங்கையினுசைவம்பில்
அரகரஞ்சக்கரமேவடிவாயசிற்றம்பலத்தின்
அரகரமுன்னென்றுரைத்தானுணர்ந்தநல்லாடலினுர்
அரகரவென்னுஞ்சொன்மட்டுமுள்ளார்க்குமருள்பவரே.

சக்கரத்தானையநெஞ்சினையீர்தருதையனல்லார்
சக்கரத்தானையங்கொங்கையெள்ளேற்குந்தயங்குகளா
சக்கரத்தானைக்கிசைந்தமெய்ப்பேறுதரவல்லையோ
சக்கரத்தானையன்றுண்டாய்தென்றில்லைத்தலத்தரசே. ()

சதாசிவகுத்துனைப்போற்றறியேனன்புசற்றுமில்வஞ்
சதாசிவனத்தனமாலுங்கொள்வேன்வெற்பதாயவிர
சதாசிவனுற்றபொன்னம்பலவாபரதத்துவமாஞ்
சதாசிவசற்குருவேயுண்மைவாழ்வினைத்தந்தருளே. (எ)

கானகவேடலர்கொன்றையதானவன்கண்ணழச்செய்
கானகவேடணைதீர்ப்பாய்சிலையெனக்கைக்கணிம
கானகவேடத்துமெய்யன்பர்சூழ்தில்லைக்காவலனுங்
கானகவேடனுமானாய்சற்றுன்னருட்காட்சிநல்கே. (அ)

தங்கவளையைச்சிலையாக்கினானைத்தவத்தினர்போ
தங்கவளையனைச்சிற்றம்பலத்தைச்சரதநெஞ்சந்
தங்கவளையவல்லாரெவரோவவர்தம்மைவெண்மா
தங்கவளையன்முதலோர்வணங்கத்தகுந்தகுமே. (கூ)

அங்கமணியத்துணிந்தானைக்கொங்கையளகமுதல்
அங்கமணியவொருபாகத்தானைப்பலாரணத்தார்
அங்கமணியணியாத்திகழ்தோளனையம்பலமாம்
அங்கமணியரவம்புலிபோற்றெருழுமன்பருண்டே. (ய)

தந்தக்கரியொன்றுரித்தானருட்டண்சலதியின்மி
தந்தக்கரிநிகர்சீர்பெறலாமயன்சாற்றுமறைத்
தந்தக்கரியலுந்தில்லையிற்சென்றுசமணரன்னர்
தந்தக்கரியெனக்கண்டஞ்சுமாறுதவஞ்செய்யினே. (யக)

சிரமஞ்சுளான்றனைத்தில்லைப்பிரானைத்திகிரிகொல்வச்
சிரமஞ்சுகூடுடையார்புரநீற்றியசேவகனைச்
சிரமஞ்சுகமிரண்டுஞ்சமமாக்கொளுஞ்சீர்திகழாச்
சிரமஞ்சுமந்தவல்லோர்சிந்தையூடுந்தெரிசிப்பரோ. (யஉ)

சத்தியமாகத்தமநியமன்றந்தனிலிமயச்
சத்தியமாகரங்கண்டாடுவான்றனைச்சார்ந்தனமோ
சத்தியமாகருதேலெம்மையெண்ணினுஞ்சாவைநின்று
சத்தியமாகத்தும்பூதலத்தூடுந்தழைக்கின்றதே. (யங)

பாலனஞ்செய்யற்பெறுமாறுகண்ணின்பதத்தணிந்தோன்
பாலனஞ்செய்யலராற்பொரவாடியபைந்தொடிநின்

பாலனஞ்செய்யமுகக்கிள்ளையாதிபலவனுப்பிப்
பாலனஞ்செய்யதன்றென்றிகழ்ந்தாடில்லைப்பண்ணவனே.

பத்திரமானதத்தாலிடுவார்க்கும்பரிந்தருட்சு
பத்திரமானப்பதந்தருமீசனைப்பைம்பொன்மன்றிற்
பத்திரமானதமிழாற்பரவுநர்பற்பலர்க்கு
பத்திரமானச்செயலரிதோவகல்பாரினரோ. (௰௫)

பங்கயமங்கைகளிகூருந்தில்லைப்பரன்பெருங்கோ
பங்கயமங்கையலாராற்செயிலடும்பண்பனிடும்
பங்கயமங்கையிலேற்றனென்றெண்ணிப்பரிக்குமிட
பங்கயமங்கையன்றுதைமுன்னாட்பட்டபாடுணர்ந்தே. ()

தித்திக்கத் தக்கசொன் மங்கையர் கொங்கைப் பொய்ச்சேரினைம, தித்திக்கத் தக்கரு வேட்குடைந் தேனருட் செய்மிகநத், தித்திக்கத் தக்கனத் தார்பா லிரந்திட நீர வின்னே, தித்திக்கத் தக்கத்தெய் யென்றுடுந் தில்லைச் சிதம்பரனே. (௰௭)

தானத்தனதனண்பில்லார்க்கரியன்றனியளகைத்
தானத்தனதனற்றோழன்கனகசபையினிடந்
தானத்தனதனவென்றுடுவான்புகர்த்தந்திமுகத்
தானத்தனதனன்றனர்தவாழ்வருள்சற்குருவே. (௰அ)

கனகமன்றுங்குதவுங்கன்னிகேள்வனைக்கண்ணருளாற்
கனகமன்றுக்கங்கெடுத்தபிரானைக்கவின்மருவுங்
கனகமன்றுட்கண்டுதெண்டனிட்டார்க்குக்கலியெனுந்தீங்
கனகமன்றுள்ளத்தொருபொருளாகக்கருதலினே. (௰௯)

கயிலைக்குரியவன்சிற்றம்பலத்தைக்கருதிநத்து
கயிலைக்குநெஞ்சகப்பேயுடையீரொமன்கைச்சமர்நேர்
கயிலைக்குளிர்விடைமேல்வருவாரொவர்காமநல்கோ[வனே.
கயிலைக்குறிப்பதிலெட்டிலொன்றெண்ணினுங்கைக்கொள்

மானத்தரங்கக்கடல்விடமுண்டவர்வாலியதா
மானத்தரங்கற்கரியபொற்றாளினர்வைத்தமமூ
மானத்தரங்கனகச்சபையாளர்மதித்தெமது
மானத்தரங்கண்டருள்வாரொனிலுய்யுமாநிலமே. (உக)

மந்திரக்காரணமஞ்செழுத்தென்றுணர்மாதவர்சென்
மந்திரக்காரணங்கீன்றதொப்பென்னமதித்துந்தில்லை

மந்திரக்காரணவேதியர்க்கானவகைசெயற்கு
மந்திரக்காரணந்தோய்தருதீவினைமாறிலனே. (உஉ)

கருத்தனைந்தக்கரமேவடிவாயவன்கற்றுணர்ந்தோர்
கருத்தனையந்தவிர்ப்போனெமனுருயிர்கால்கொடுநு
கருத்தனையார்புகழ்தில்லைப்பிரானவன்காதலுற்றோர்
கருத்தனைச்சேர்வதின்றின்றுமுக்காலுமெய்கண்டுய்மினே.

சரதத்தையாதுமறியேனெனினுமுன்னுனவரஞ்
சரதத்தையாச்சென்றசீர்பகர்வேனெனைத்தள்ளிவிடேல்
சரதத்தையாசிபகர்தில்லையாய்மறைதந்தவைந்தட்
சரதத்தையாகுலந்தீர்ப்பாயடியவர்தம்முள்வைத்தே. ()

தருமந்தனக்குரித்தாய்ப்பவந்தீர்த்திடத்தக்கமெய்ச்சித்
தருமந்தனக்குவைவேட்பர்கொல்வாயசந்தன்னிலிவர்
தருமந்தனக்குளனெஞ்சேகனகசபையின்முத்தி
தருமந்தனக்குடன்வெண்ணீறணிந்துதவஞ்செய்திடே. ()

முற்றிற்று.

ஆக கவி - அாாக.

சிவமயம்.

சிலேடைப்பத்து.

நேரிசைவெண்பாக்கள்.

தந்திடையார் கண்ணின்முத்துத் தாண்டவன்போல்
வார்துதியிற், சிந்தியலும் தில்லைச் சிதம்பரமே - யந்திம
திச், சென்னி யரனுர் திகழ்வமுற்று மாகியல்லா, வன்னி
யரனு ரகம். (க)

துய்யநகைமங்கையருஞ்சுற்றும்வயனெற்பயிருஞ்
செய்யவளங்காட்டுஞ்சிதம்பரமே - பையரவம்
பூண்டவனுண்டுற்றமலேபோற்றப்புரியுமெழிற்
றூண்டவனுண்டுற்றதலம். (உ)

கற்பணியின்பொற்புங்கறைதீர்கனகமன்றுஞ்
சிற்பரதங்காட்டுஞ்சிதம்பரமே - விற்பனர்வாய்ச்
சொல்லுடையவார்த்தார்துதைந்தார்சுடர்க்கடவுள்
பல்லுடையவார்த்தார்பதி. (ங)

வேதங்கொள்வாருணர்வின்மேதகுமின்னுருறுப்பிற்
போதங்குலாவும்புலியூரே - சீதமலி
கங்கையணிந்தார்முடித்துக்காதிற்குழையெனவெண்
சங்கையணிந்தார்தலம். (௪)

கொன்னூர்கொடிமதிளுங்கோகனகப்பூந்தடமும்
பொன்னூட்டளாவும்புலியூரே - பன்னுக
மாணூரத்தையகொன்றைமண்டையெலும்பாதியபல்
பூணூரத்தையர்புரம். (௫)

பாகியற்சொல்லார்குறியும்பற்பலராமாடவரும்
போகியினையெள்ளும்புலியூரே - தாகித்த
வண்ணமளியானில்வந்தருள்வான்மாசடைந்த
வெண்ணமளியானிடம். (௬)

ஈனந்தவிர்வார்க்குமேத்துமவர்தீவினைக்கு
மானந்தநல்கெழிற்சிற்றம்பலமே - வானந்தம்
பூண்டசெவியார்புலியைப்புயங்கமுட
னூண்டசெவியாரகம். (௭)

மோடகத்திற்பொல்லாமுரணூர்முயன்முதுகி
லாடகச்சீர்மன்னியசிற்றம்பலமே - வேட
னுருவாவடியேற்றுரும்பரிற்போய்மீள
வெருவாவடியேற்றூர்வீடு. (௮)

பந்தமற்றூர்சிந்தைக்கும்பார்க்குமவர்கண்களுக்கு
மந்தந்தருந்திருச்சிற்றம்பலமே - மைந்த
ரிருவனைக்கையான்பொற்பிலங்கும்வில்லென்றேந்தும்
பருவனைக்கையான்பொற்பதி. (௯)

நால்வர்தமிழ்ப்பாடலையுநாடரும்பேராடலையு
மால்வழுத்துஞ்சீர்க்கனகமன்றமே - கால்வலிய
வெம்மையிடத்தானலறிவீழவென்றான்வெற்புதவு
மம்மையிடத்தானகம். (௰)

முற்றிற்று.

ஆக கவி - அகக.

சிவமயம்.

அம்மானைப்பத்து.

சீராருந்தில்லைச்சிவஞானசித்தர்பிரா
ஞாராலுங்காண்டற்கரியான்காணம்மானை
யாராலுங்காண்டற்கரியானேயாமாகிற்
றேராமெனப்புவிமேற்செல்வானேவம்மானை
சென்றவிதமெண்ணிற்சிரிப்புக்காணம்மானை. (௧)

தில்லைப்பதியிற்றிருநடனஞ்செய்யுமவன்
வல்லையனையமுலைமங்கைபங்கனம்மானை
வல்லையனையமுலைமங்கைபங்கனுமாகி
லெல்லைநிகர்சேய்விழியாலேனீன்றானம்மானை
யீன்றதலமம்பகமென்றியாரறியாரம்மானை. (௨)

ஞானமிகுந்தில்லைநடராயர்நஞ்சதனைப்
போனகமென்றெப்பிப்புசித்தார்காணம்மானை
போனகமென்றெப்பிப்புசித்தாரேயாமாகி
லீனமுறப்பாரிலிறவாரோவம்மானை
யில்லிடத்தாராணிறப்பாரோவம்மானை. (௩)

அன்னமலிதில்லையணிநகரிலாடுமர
னின்னந்தலையிலிரக்கின்றானம்மானை
யின்னந்தலையிலிரக்கின்றானுமாகிற்
றன்னன்பர்வேட்கைதரல்பொய்யோவம்மானை
தங்கமலையிருந்தாற்றாரானேவம்மானை. (௪)

கோதுபடாத்தில்லையினிற்கூத்தாடுங்கோமானோர்
தூதுவனுமாகத்துணிந்தான்காணம்மானை
தூதுவனுமாகத்துணிந்தானேயாமாகின்
மீதுறையுநாதனென்கைவீண்சொல்லோவம்மானை
வீணல்லத்தொண்டர்விரகன்காணம்மானை. (௫)

ஆலடியினிட்டையைவிட்டம்பலத்திலாடுமவன்
காலனுயிர்குடித்தகாலன்காணம்மானை
காலனுயிர்குடித்தகாலனேயாமாகின்
மாலயன்முன்றேடிவருந்தியதேனம்மானை
வருந்தியதுமெய்யைமறைத்ததாலம்மானை. (௬)

எங்குநிறைந்துமிலங்குதில்லையம்பலத்திற்
றங்குமொருவன்சமர்த்தன்காணம்மானை
தங்குமொருவன்சமர்த்தனேயாமாகிற்
கொங்குமலரோடிறகுங்கொள்வானேவம்மானை
கொண்டவிதமெண்ணிலொருகோலத்தாலம்மானை. ()

சீர்த்தபுலவர்புகழ்தில்லைச்சிற்றம்பலவன்
பார்த்தனடிக்கருளும்பண்பினன்காணம்மானை
பார்த்தனடிக்கருளும்பண்பினனேயாமாகிற்
பேர்த்தற்கரியபெரும்பித்தனேவம்மானை
பித்தனென்றுஞ்சொல்வார்பிறப்பில்லியம்மானை. (அ)

செந்தமிழ்ச்சீர்மன்னுந்திருத்தில்லைச்சித்தரிரு
மைந்தர்களைமுன்னாள்வழங்கினாரம்மானை
மைந்தர்களைமுன்னாள்வழங்கினாராமாகி
லெந்தமக்குச்சற்றுமிரங்காரோவம்மானை
யிரங்கலினான்மானிடத்திலெய்தலன்றோவம்மானை. ()

செல்வைத்தகண்ணிபங்கன்றில்லைச்சிற்றம்பலவ
னல்வர்க்கருளுநலத்தினன்காணம்மானை
நால்வர்க்கருளுநலத்தினனேயாமாகி
லெல்லையறிந்தருட்பேறீயானோவம்மானை
யெண்ணுமெழுத்துமவனீந்ததன்றோவம்மானை. (ம)

முற்றிற்று.

ஆக கவி - அ௨௪.

சிவமயம்.

உ ந் தி ப் ப த் து.

தில்லைத்தலமேசிறப்புட்சிறப்பென்னுஞ்
சொல்லைப்பகர்ந்துகொண்டுந்தீபற
சுயஞ்சோதியீசனென்றுந்தீபற (க)

ஆறுசமயத்தவர்க்கும்பொதுவாய
வீறுவெளியொன்றென்றுந்தீபற
மெய்யன்சிவனேயென்றுந்தீபற (உ)

வானிற்சுடர்கண்மலர்க்கண்களாநின்ற
கோனிற்கிணையாரொன்றுந்தீபற
குறையாநிறைவானென்றுந்தீபற. (ங)

ஒன்னார்புரங்களொருமூன்றெரித்தோனென்
னின்னுவொழிப்பானென்றுந்தீபற
வெழிற்றில்லையீசனென்றுந்தீபற. (௪)

வானோநடஞ்செய்யுமன்றுமெனக்கொண்ட
கோனேமுதல்வனென்றுந்தீபற
குறையாவுந்தீர்ப்பானென்றுந்தீபற. (௫)

எட்டுப்பொருளாயிலங்கும்பெரியோனை
விட்டுத்தொழலியாதென்றுந்தீபற
வியன்றில்லைமேயானென்றுந்தீபற. (௬)

இன்னம்பிறவாமையெய்துந்தவத்தோர்க்குப்
பொன்னம்பலமாமென்றுந்தீபற
புலைத்தீயர்க்காகாதென்றுந்தீபற. (௭)

பார்த்தன்கைமோதப்பரிந்தாண்டருள்செய்த
மூர்த்தம்பெரிதாமென்றுந்தீபற
முதற்கோயில்கொண்டதென்றுந்தீபற. (௮)

கந்தக்கடம்பன்கணநாதனென்றுள்ள
மைந்தர்க்கினியானென்றுந்தீபற
மணிமன்றில்வாழ்வானென்றுந்தீபற. (௯)

நால்வர்க்கருளுநடராயனற்றொண்டர்
பால்வைத்தநாட்டனென்றுந்தீபற
பழுதற்றதெய்வமென்றுந்தீபற. (௰)

முற்றிற்று.

ஆக கவி - அ௱௪௯.

சிவமயம்.

குரவைப்பத்து.

குறுந்தாழிசைகள்.

குன்றின மொத்தெழு கொங்கையுங் கோளர விற்றிக ழல்குலுந், துன்றிம தன்பொரு மாடவர் தோள்களை வென்றவிர் தோகையீர், மன்றின டிப்பவ ரருள்கொண்டோர் மாதவர் சேகரன் வருவதாற், கொன்றிரை யுண்கலர் வாழ்வுறக் குரவை நெடுந்தொனி கொண்மினே. (௧)

காதன்மிகத்தருமுடலைக்கண்டுமெருண்டிருகமடநோ
பாதம்வணங்கியகொண்கனைப்பற்றியநெஞ்சுறுபாவையீ
ரோதமில்சீர்திகழ்தில்லையூடென்றுநடஞ்செயுமீசனுன்
மாதவரியாவரும்வாழவேவாய்கொடுகுரவைவழங்குமே.()

கண்வலை கொண்டு வெருட்டியே காளையர் நெஞ்சு கவர்ந்திடுமின், முண்வளர் கொங்கைக ளான்மிகச் சமரமிட்டுக்கு தன்மையீர், விண்ணவயி றடிய நாதனார் மெய்யருள் வாரிதி குத்தான், மண்வள மீடிட லெண்ணியே வண்ணக் குரவைத்தொனி வளர்மினே. (௩)

காலன் வெருண்டு திடுக்குறக் கடலொடு நஞ்சு கலங்கிட, வேலது போல விளங்குகூர் விழியின் வனப்பு மிகக்கொள்வீர், சூல மணிந்தவர் தில்லைமுற் சொல்லிட வல்லவர் சொல்பவா, மாலய முற்றுந லங்கொள்வா னருள்கொடு குரவைக ளாடுமே. (௪)

செந்தளி ரொத்தொளிர் மேனியுந் தேனொடு பானிகர் சொற்களுங், கொந்தள கம்பொலி வண்மையுங் கொண்டுகு லாவிய கொள்கையீர், திந்ததி மித்தெயென் றாடுவார் தில்லை நகர்க்கொரு செல்வமா, மர்தண ராதியர் வாழவே யன்பொடு குரவைக ளாடுமே. (௫)

வாரண மென்பிடி நாணுற வண்கம லத்திடை வைகுறு, மேரண வப்பெறு மன்னமொத் தென்று நடக்குமடந்தையீர், நாரண னுடரி தாயதா ணம்பர் நடம்புரி தில்லையிற், கார்ண யோகியர் கூடவே கவினுறு குரவைகள் செய்மினே. (௬)

மீனை வெருட்டிய கண்ணுளீர் வேறுள நன்மைகண் மிக்குறத், தானை நெடுங்கட லம்புவி தன்னின் முழக்கிய தன்மையீ, ரானை யுரித்தவர் தில்லையி லன்பமொ ரோகுழுவாதலா, லேனையர் நாணுற லெண்ணியே யின்குர வைத்தொனி யிடுமினே. (௭)

கூர்த்த நெடுங்கணை யென்னவே குலவிய கண்ணுறு கோதையீர், போர்த்த வதட்கலை யாளனுப் புலிசையின் மேவிய புண்ணியன், பார்த்த னடித்திடு மந்நாள் பகழியளித்தருள் பண்புதோய், சீர்த்த பெரும்புக ழுன்னியே திகழ்குர வைத்தொனி செய்மினே. (௮)

செவ்வை யுறுந்திரு மேனியர் தில்லையி லாடிய சித்தனார், தெவ்வை யடுங்கதிர் வேலனைச் சிந்துர மாமுகனைப்பொரக், கௌவை தவிர்த்திடு மைந்தனைக் காசினி யிற்றர லெண்ணியே, கொவ்வை யிதழ்க்கனி வாயுளீர் குரவை நெடுந்தொனி கொண்மினே. (௯)

கொக்கிற கும்புனை சென்னியார் கொண்டபொன் மன்றிசை கூறினார், முக்கிய நால்வனை யன்னதோர் முத்தமிழ் நாவல னித்தனைப், பக்குவர் சேகர னுவரப் பாடிடு மென்சொல் பலிக்கவே, யிக்கு மலர்க்குழன் மங்கையீ ரொன்று மிடும்பல குரவையே. (௰)

முற்றிற்று.

ஆக கவி - அ௪௧.

சிவமயம்.

உண்மைப்பத்து.

அறுசீர்விருத்தங்கள்.

எவ்வரமுந் தரவல்லா னியாவனோ பொதுவெளியானவனோ வன்னோ, னிவ்வுலகத் தெவர்க்கேனு மிடபமிசை தோன்றியரு ளீந்த துண்டே, னௌவலந்தீ விடைவசிக்கு நரர்பலரு மூன்வெறுக்கு நன்மை செய்வா, னவ்வடிவங் கருதியெழுத் தைந்துரைக்கு நானருட்பே றடைவதுண்டே. (௧)

எத்தேவர் தம்முருவுந் தருமமுநற் பசுவடிவத் தெய்துமென்ன, மெய்த்தேசு ளார்பலரும் வேதமுட னாகமமும் விளம்ப லுண்டேற், புத்தேளிர் போற்றிசைக்கும் புலியூரிற் சிவனைநம்பிப் புலரு நாயேன், சித்தேறச் செய்தினிமேற் றிரும்பாத பரகதியுஞ் சேர்வ துண்டே. (௨)

ஆனிடத்திற் கொளுமிரக்க மதுமிகலா லந்தணர்தம் மறத்தை நீங்கிக், கானிடத்துப் பொதுவர் தொழிற் செய்துதந்தை காற்றடிந்தோன் கதிசேர்ந் தானேல், வானிடத்தி னடிப்பானை வயங்குதில்லைப் பதியானை வழுத்து நாயேன், மானிடருக் கரியவிதம் பலபுரிந்து தனிவீட்டில் வாழ்வ துண்டே. (௩)

காதன்மிகத்தருமூட்லைக்கண்டுமருண்டிருகமடநேர்
பாதம்வணங்கியகொண்கனைப்பற்றியநெஞ்சுறுபாவையீ
ரேதமில்சீர்திகழ்தில்லையூடென்றுநடஞ்செயுமீசனுன்
மாதவரியாவரும்வாழவேவாய்கொடுகுரவைவழங்குமே.()

கண்வலை கொண்டு வெருட்டியே காளையர் நெஞ்சு கவர்ந்தபின், றண்வளர் கொங்கைக ளான்மிகச் சமரமி டத்தகு தன்மையீர், விண்வயி னுடிய நாதனுர் மெய்யருள் வாரிமி குத்ததான், மண்வள நீடிட லெண்ணியே வண் குர வைத்தொனி வளர்மினே. (௩)

காலன் வெருண்டு திடுக்குறக் கடலொடு நஞ்சு கலங்கிட, வேலது போல விளங்குகூர் விழியின் வனப்பு மிகக் கொள்வீர், சூல மணிந்தவர் தில்லைமுற் சொல்லிட வல்லவர் சொல்பவா, மாலய முற்றுந லங்கொள்வா னருள்கொடு குரவைக ளாடுமே. (௪)

செந்தளி ரொத்தொளிர் மேனியுந் தேனெடு பானிகர் சொற்களுங், கொந்தள கம்பொலி வண்மையுங் கொண்டுகு லாவிய கொள்கையீர், திந்ததி மித்தெயென் றுடுவார் தில்லை நகர்க்கொரு செல்வமா, மந்தண ராதியர் வாழவே யன்பொடு குரவைக ளாடுமே. (௫)

வாரண மென்பிடி நாணுற வண்கம லத்திடை வைகுறு, மேரண வப்பெறு மன்னமொத் தென்று நடக்குமடந்தையீர், நாரண னுடரி தாயதா ணம்பர் நடம்புரி தில்லையிற், காரண யோகியர் கூடவே கவினுறு குரவைகள் செய்மினே. (௬)

மீனை வெருட்டிய கண்ணுளீர் வேறுள நன்மைகண் மிக்குறத், தானை நெடுங்கட லம்புவி தன்னின் முழக்கிய தன்மையீ, ரானை யுரித்தவர் தில்லையி லன்பொரோ ரேகுழுவாதலா, லேனையர் நாணுற லெண்ணியே யின்குர வைத் தொனி யிடுமினே. (௭)

கூர்த்த நெடுங்கணை யென்னவே குலவிய கண்ணுறு கோதையீர், போர்த்த வதட்கலை யாளனுப் புலிசையின் மேவிய புண்ணியன், பார்த்த னடித்திடு மந்தநாள் பகழி யளித்தருள் பண்புதோய், சீர்த்த பெரும்புக ழுன்னியே திகழ்குர வைத்தொனி செய்மினே. (௮)

செவ்வை யுறுந்திரு மேனியர் தில்லையி லாடிய சித்தனார், தெவ்வை யடுங்கதிர் வேலனைச் சிந்துர மாமுகனைப்பொரக், கௌவை தவிர்த்திடு மைந்தனைக் காசினியிற்றர லெண்ணியே, கொவ்வை யிதழ்க்கனி வாயுளீர் குரவை நெடுந்தொனி கொண்மினே. (கூ)

கொக்கிற குஞ்புனை சென்னியார் கொண்டபொன் மன்றிசை கூறினார், முக்கிய நால்வரை யன்னதோர் முத்தமிழ் நாவல னித்தனைப், பக்குவர் சேகர னுவரப் பாடிடு மென்சொல் பலிக்கவே, யிக்கு மலர்க்குழன் மங்கையீரொன்று மிடும்பல குரவையே. (ம)

முற்றிற்று.

ஆக கவி - அசக.

சிவமயம்.

உண்மைப்பத்து.

அறுசீர்விருத்தங்கள்.

எவ்வரமுந் தரவல்லா னியாவனோ பொதுவெளியானெவனோ வன்னோ, னிவ்விலத் தெவர்க்கேனு மிடபமிசை தோன்றியரு ளீந்த துண்டே, னௌவலந்தீ விடைவசிக்கு நரர்பலரு மூன்வெறுக்கு நன்மை செய்வா, னவ்வடிவங் கருதியெழுத் தைந்துரைக்கு நானருட்பே றடைவதுண்டே. (க)

எத்தேவர் தம்முருவுந் தருமமுநற் பசுவடிவத் தெய்துமென்ன, மெய்த்தேசு ளார்பலரும் வேதமுட னாகமமும் விளம்ப லுண்டேற், புத்தேளிர் போற்றிசைக்கும் புலியூரிற் சிவனைநம்பிப் புலரு நாயேன், சித்தேறச் செய்தினிமேற் றிரும்பாத பரகதியுஞ் சேர்வ துண்டே. (உ)

ஆனிடத்திற் கொளுமிரக்க மதுமிகலா லந்தணர்தம் மறத்தை நீங்கிக், கானிடத்துப் பொதுவர் தொழிற் செய்துதந்தை காற்றடிந்தோன் கதிசேர்ந் தானேல், வானிடத்தி னடிப்பானை வயங்குதில்லைப் பதியானை வழுத்து நாயேன், மானிடருக் கரியவிதம் பலபுரிந்து தனிவீட்டில் வாழ்வ துண்டே. (ந)

பிறந்தவுட னயலூரி லயலவர்தம் மனையிலிடும் பிள்ளை யொன்று, சிறந்தபணி யானினத்திற் கியற்றியதான் மாய னெனத் திகழ்ந்த துண்டே, லறந்தழைக்குந் திருத்தில்லை யம்பலத்துச் சிவனைநம்பு மடிய னேனுங், கறந்தவெண்பா லனையமனத் தினனாகிப் பரகதியுங் காண்ப துண்டே. (௪)

மென்றிரைநன் கருந்தறியா வியன்றிகழான் கன்றினிற் றேர் விடுத்த மைந்தற், கொன்றிடுமென் னவனொருவன் கோ தொழிந்த பரகதியிற் கூட லுண்டேன், மன்றினடம் புரி வானை மரகதமங் கலையமைந்த வாமத் தானை, நன்றிசை யப் போற்றிசைக்கு நாயினே னருட்பேற்றி னண்ண லுண் டே. (௫)

பாந்தளம்பொற் படமனைய வல்குன்மின்னா ளொடு மருமைப் பால னோடுஞ், சேந்தனிடுங் கூழினைச்சிற் றம் பலவ னேற்ற துண்மைச் செயலே யானு, னீந்தரும்பல் பகைவிளைத்து நீணிலத்திற் பரதவிக்கு நெஞ்சத் தேனு, மாந்தருக்கும் வானவர்க்கு மரிதாய பேறுபெற்று வாழ்வ துண்டே. (௬)

உடற்பிணிதீர் வதனிமித்தஞ் சிந்துகொடு போற்றி சைக்கு மொருவன் றன்னைக், கடற்புவியி லினிப்பிறவா முத்தியுறத் தில்லைமன்றிற் காத்த துண்டே, லடற்பரசு மிரலையுங்கைக் கணிந்தானை விடையுகைக்கு மமலன் றன் னைத், தொடற்கருது மென்மனமுஞ் சுகப்பெருவா ரிதிநடு விற் றோய்வ துண்டே. (௭)

நல்லடியார் பரவுதிருத் தில்லைநகர்க் கோயிலிடை நடிக்கும் பெம்மான், வில்லடியேற் றந்நாளி லருச்சுனனுக் கருளியது மெய்ம்மை யாகிற், சொல்லடியாற் றுதித்தவர் முன் பெறும்பேறு கருதிமிகத் துடிக்கு நெஞ்சேன், கல் லடியால் வழிபட்டான் முதலினரும் பெற்றகதி காண்ப துண்டே. (௮)

பிணமலையும் பேயினமும் பெருகுமுது காட்டியல் பைப் பெரிது போற்றுங், குணமுடையா ளொருத்திக்குங் குலவுதிரு வடிநீழற் கொடுத்த துண்டேற், றுணர்விரிபூங் கொன்றையணிந் தம்பலத்தி னடமாடுந் தூயோன் றன் பாற், கணபதியுங் கந்தனும்போன் றொருமகவாய்த் தமி யேனுங் களிப்ப துண்டே. (௯)

பொற்புமிகு வெண்ணீ றுருத்திராக் கமுமறைந்து போகா வண்ண, மற்புதமார் திருவிளையாட் டியற்றுநல மம்பலவ னளிப்பா னுகிற், கற்புடையார் நெஞ்சனைய கருத் தினராய்த் தமிழ்கொடுபல் கவிதை பாடு, நற்புலவர் நால் வரொடு நானுமொரு தொண்டனென நண்ணலுண்டே.()

முற்றிற்று.

ஆக கவி - அருக.

சிவமயம்.

திருப்புகழ்.

தனத்தத் தந்தன தானன—தனதானு.

மணிச்சத்தம்பொலிபூசனை
விருப்பத்தந்தணராதியர்
மகிழ்ச்சிப்பொங்கமதோடினி திலகாரோ
வயிற்றுக்குண்பனவாயிர
மிருக்கக்கண்டும்விடாதுயிர்
வதைத்துத்தின்பவர்பாழ்மத மழியாதோ

கணித்துச்செந்தமிழ்நால்வர்கள்
பதத்தைக்கும்பிடுமாதவர்
கணத்திற்றங்கியவாவற முயலேனே
கரத்திற்கந்தனிலாவவு
னிடத்திற்சங்கரிமேவிய
களிப்புற்றிங்கொருநாள்விடை மிசைவாராய்

பணித்துத்தொண்டர்கடவினை
யொழித்துச்சந்ததமாகிய
பதத்திற்சென்றிடவேவிடு மிறையோனே
பனைக்கைக்குஞ்சரவீருரி
தரித்துக்கொண்டதனேரொழில்
படைத்துக்கொஞ்சொருபாலனை யருள்வோனே

திணிச்சித்தம்பெறுகாலனை
யுதைத்துக்கொன்றடிபேணிய
சிறுக்கர்க்கெஞ்சலில்வாழ்வுற விடுவோனே
திரைக்குட்கண்டுகொள்வார்மன
விகற்பத்துன்பமெலாமடு
திருச்சிற்றம்பலமாகிய பெருமானே. (க)

தனைதந்த தத்ததானன—தனதானா.

உனைமறந்துபற்பலாயிரம்
விதநினைந்துபொய்ச்சொனூல்வழி
யுழலும்வம்பொழித்துன்வார்கழல் பணியேனோ
வுரையிறந்தசுத்தயோகிய
ரரியவிஞ்சைகற்றமாதவ
ருடனுறுஞ்சபைக்குளேகியு மகிழேனோ

வெனைவிரும்புபத்தராமவர்
கவலையுந்தவிர்க்குமேன்மையொ
டிகதலந்தனிற்செவேளென மிளிரோனோ
விமயமன்றளித்தபார்வதி
யருகிருந்துவக்கவாலிய
விடபமொன்றிலிற்றைநாளெதிர் வருவாயே

நனைதருங்கடுக்கைமாலிகை
யனையசெந்தமிழ்ச்சொல்வான்மொழி
நவிலவன்றெருத்திவாசலி னுழைவோனே
நரியினங்களைப்பல்சீர்திகழ்
குதிரையென்றுவிற்றுமோர்கவி
நலமிலங்கிடச்செய்தேசிக வடிவானும்

சினைமுதிர்ந்துழைக்கும்வால்வளை
மணியுமிழ்ந்துசுற்றியோலிடு
தெருவிலன்றெருத்தனோதிய துதியாலே
சிமயமந்தரத்தைநேருமி
ரதநடந்திடக்குலாவிய
சிவசிதம்பரத்திலாடிய பெருமானே. (உ)

தந்த தனா தான தந்த—தனதானா.

பஞ்சியர்போலேயிரந்து கெஞ்சியவாயோடுநொந்து
பைம்பொனுளார்வாயிலின்க ணடவாதே
பங்கயமானுருநெஞ்ச மொஞ்சியகோலாகலங்கொள்
பண்பினர்மாமோகமிஞ்சி மடியாதே

யஞ்சிகிமாவூரும்வென்றி துன்றியசேய்போலவுன்ற
னன்பர்களோடாடும்விஞ்சை தருமாறே
யந்தரவாழ்வார்நெருங்க வெண்கிரிநேர்காளையொன்றி
லம்பிகையோடேறியிங்கு வருவாயே

நஞ்சினைமேனுளருந்தி யண்டமெலாம்வாழல்கண்ட
நன்றியிலார்மாயவென்ற தனிவீரா
நம்பியதோர்பாலனஞ்ச வன்றெதிர்வாணுவியுண்டு
நந்தலில்வாணுள்பொருந்த வருள்வோனே

செஞ்சிலைவேளானவம்ப னங்கியில்வீழ்பூளையென்று
சிந்தமுனோர்கான்மலர்ந்த நுதலோனே
தெண்டிரைசூழ்வாவியெங்கு மம்புயமோவாதலர்ந்த
தென்புலியூர்வாழவந்த பெருமானே. (௩)

தந்த தந்த தத்த தானன—தனதானு.

வஞ்சநெஞ்சமுற்றவேசியர்
தங்கள்கொங்கையிச்சையாலுனை
வந்தனஞ்செய்பத்தியானது நழுவாதே
வண்டலம்புசெச்சைமாலிகை
கொண்டகந்தனைத்துனேவல்செய்
வண்புனைந்துமுத்திவீடது மடையேனே

தஞ்சமென்றுசெப்பும்வானவ
ரிந்திரன்படைப்புளானரி
தங்கணங்களுக்குளோர்மழ விடைமீதே
சந்திரன்றரித்தவேணியு
மங்கைபங்குமுற்றுநீறணி
சந்தமுந்துலக்கமாகிட வருவாயே

பஞ்சவன்பணத்தையீயவு
நெஞ்சுரம்படைத்துளானது
பங்கினின்றுபுத்தர்வாதற முனிவோனே
பங்கயந்தொடுத்தவேளுடல்
வெந்திடும்படிக்குநாடிய
பண்புறுங்கனற்கணூர்நுத லுடையானே

செஞ்சரண்டுதித்தவீறுறு
சுந்தரன்சொலிற்கராவது
தின்றமைந்தனைச்செய்தேயினி தருள்வோனே
திந்திதிந்திமித்தெய்தாதிமி
யென்றுதொண்டர்சித்தமேகிகர்
செம்பொனம்பலத்திலாடிய பெருமானே. (௪)

தனந்தன தனனதன தனனதன தனனதன
தத்தத் தனத்தனன தத்தத் தனத்தனன—தனதான.

தவளநகைமடமகளிர்கலவிநலமெனவவர்சொல்
சத்தத்தினுக்குமுருகித்தத்தளிக்குமன
முடையவிடரனைவரினுமுதன்மைபெறுதமியனும
ருட்பெற்றிறப்பொடுபிறப்பற்றசித்தர்நிகர்
தகைகுலவும்வடிவமொடுதிரியவிடனிசமிதுத
னைச்சத்தியப்படமுடித்துக்களித்திடவும்
விழைவாயோ
தவமுமலைமலிவுபெறுமெழுகடலுமணிகலையெ
னத்தொட்டிருக்கும்வள்சித்தத்திலுற்றதுயர்
மிகையினொடுமொலைபுலைபொயனையவையுமழியவிடு
மொற்றைத்தவத்தலைவனைத்தொட்டளப்பில்பல
தவசிகளுமொருகுழுவதெனநிலவவமரரும்வி
யப்புற்றிடத்தகுமொர்சுத்தத்தினத்தினையு
மருள்வாயோ
கவளமதகரியினினமெனவிணையில்கெருவமொடு
கற்றுப்பிதற்றியருணட்பற்றிருப்பவரு
மநுபவமொரணுவளவுமிலதுதமதுயிர்பரமெ
னச்செப்பிடத்துணியுமற்பக்குணத்தரொடு
கறுவுசமணரும்வலியபிடகர்முதலினருமிகு
தத்துற்றுவப்புமுழுதற்றுத்தவிக்குநல
மிலகாதோ
கலிபுருடன்வலிபெரியதெனுநினைவொடளவில்பல
குற்றத்தினிற்றினமுயற்சிக்குமற்பர்பல
ருனதருளையலதுகதியிலையெனவுளுருகுசிலர்
முற்கொக்கரித்துவசைசெப்பத்தொடுத்திடுதல்
கழியும்வணமெவனெனினுமொருபுலவனுவல்கவிக
ணத்திற்பலிப்புறும்வியப்பித்தினத்துலகி
னிகழாதோ
பவளமலையனையதிருவுருவமொடுபசுமரக
தச்சித்திரக்கிரியெனத்தக்கசத்தியுட
னொருபெரியவயிரமலையனையமழவிடைமுதுகி
லுற்றுத்திதிக்கடவுண்முற்செப்புபற்பலர்கள்
பரவமுதிர்தவமுடையவொதிர்குலவிவரமுதவு
பட்சத்தினிற்சிறிதுமெய்ப்பற்றிருக்குமொரு
பழையோனே

பலமலைகடொறுநிலவுகுமரகுருபரனடல்கொள்
பக்கத்தினைக்கடிதுகொட்டிக்குகுக்குகுகு
வெனமுரலுமொருபறவை யெழுதுகொடியினனமரர்
துக்கப்படச்சிறைசெய்துட்டத்தொழிற்றகுவர்
படைமுழுதுநொடியிலலைகடலினிடைமுழுகவடு
மற்பெற்றகைக்குகனுதிக்கத்திறக்கும்விழி
யுடையோனே
யவளவனுமதுவுமறுமவுனரகசியநிலையை
நட்புற்றவர்க்கினிதுசெப்பிக்கொடுக்கவெனு
நினைவினொடுவடநிழலிலயனுதவுசதுரரொடு
முற்றுப்பரித்திரள்கொளப்பொற்பணப்பொதியொ
டணுகுமவனையசிலபருவர்களையவரருக
டுத்துத்தடுத்தருள்விளக்கைக்குமிச்சையுறு
குருநாதா
வரகரவென்மொழிபகருமடியவரையிகழ்பவர்கு
லத்தைப்புரத்தொடுசிரித்துக்கெடுத்தருளு
மொருவவழிபடுமவளுள் விழையும்வணமிருகனியொ
சட்டிக்குளக்கணமளித்துக்களித்தசிவ [ர்
வகிலபுவனமுமசரசரமுநிலைபெறவெனந
டித்துப்பழிக்கரியபொற்சிற்சபைக்குள்வளர்
பெருமானே. (௫)

தனனதன தத்தத் தந்தன தனன—தனதானா.

களவுறுமனத்துக்கங்கொடுமறுகி மெலியாதே
கனியிதழ்சுவைக்கத்தந்திடுமவர்சொல் வினவாதே
வளவன்வழுதிக்கொக்கும்புரவலரை யிகழாதே
மகிதலமுழுக்கக்கண்டுளமகிழு மவனோர
பளபளவெனக்கொட்டுங்கதிர்மருவு மழுவானே
பசுபதியெனச்செப்புந்தவசிகளை யகலானே
யளவறுதமிழ்ச்சொற்றொண்டர்கள்விழைத லருள்வானே
யழகியதிருச்சிற்றம்பலமுடைய பெருமானே. (சு)

தன தனந் தத்த தானன—தனதானா.

சுவணமிஞ்சக்கொள்வாரது
பிறகுசென்றிச்சைபோம்வழி
துதிபகர்ந்தெய்க்கநீடிய கலியாலே
தொயில்வரைந்திட்டதோண்மூலே
கொடுபொரும்பெட்புளாரடி
தொழவுநன்கொப்பமீறிய மயலாலே

யவலைநெஞ்சத்தினுடியு
முரலிடங்குத்துமூடரி
லலையும்வம்புக்கொராளென	வுலைவேனோ
வழுதல்கண்டற்றைநாளொரு
கவுணியன்றுய்க்குமாறரு
ளமுதமென்றற்குமோர்சிறி	தருள்வாயே

தவமுயன்றிட்டதாலிம
வரைதரும்பச்சைமாதொரு
தனதுடம்பிற்குளோர்புற	முடையானே
சரணகஞ்சத்தினுலெமன்
மடியவென்றக்குநீறணி
தருகுழந்தைக்குமாய்வறு	நிலையீவாய்

கவலைமிஞ்சிப்பல்வாறுழல்
புலவனின்பத்திலாழ்வது
கருதியன்றொற்றுமாகிய	புகழோனே
கரியகுன்றத்தைநேரொரு
முயலகன்பெற்றபேறொளிர்
கனகமன்றத்திலாடிய	பெருமானே. (எ)

தனன தானன தானன—தனதானா.

கழகநாவலர்மேவியபலகைமீதினுமாவல்கொள்
கனவிசாரமெனூடுற	விடலாரோ
கருதிடாமுழுமூடரிலொருவனுகுமென்வாய்பகர்
கவியினுசையினுலது	செயலாரோ

பழகுநான்மறையாதியினுவலும்வானவராயெணில்
பலகனுவிலெனூகமுள்	வரலாரோ
பசுவுமேடமுமேனமுமனையவாருயிர்கோறுநர்
பகைமையால்வெகுணீர்மிகை	தரலாரோ

தழல்குலாவியமேனியின்முழுதுமாணருள்பாணிகர்
தவளநீறதுபூசிய	பெரியோனே
தவம்விடாதுறுபார்வதியருகிலேகியவாவொடு
தவறுபேசியலீலையு	முடையோனே

யழகினுன்மடமாதர்களுடைகள்சோர்வுறவீடுதொ
றமுதுதேர்பவர்போலவு	நுழைவோனே
யருணிலாவியவாடகசபையினுடகமாடிய
வனகனேயரனேசிவ	பெருமானே. (அ)

தானன தந்ததானன—தனதானு.

கோமளமங்கைமார்பலர்சூழ்தரவந்துபோர்பொரு
கோலமதன்றனுணவ நிலையாதே
கோபநமன்றனேவலினுளுமுயன்றுவாழ்வுறு
கோரணிமிஞ்சுதூதர்க ளெதிராதே

நாமகள்கொண்கனுமவனுலிருசெங்கையாலினி
நானுறவென்றுவேறுடல் சமையாதே
ஞாயமறந்தசாரணர்காலனைமுன்கொடோதிடு
நால்வரடைந்தபேறதை யருள்வாயே

காமருகொன்றைதாதகிகூவிளமம்புவான்மதி
காணுறுசெஞ்சடாடவி யுடையானே
கார்விடமுண்டுவானமுநானிலமுங்கெடாதருள்
காரணசம்புவேயுமை மணவாளா

வாமருவைந்துமாடியநாயகவிந்திராதிய
ராகவெலும்புமாலிகை புனைவோனே
யாரணமும்பலாகமநூலினமுஞ்சொல்வீறுறு
மாடகமன்றிலாடிய பெருமானே. (௬)

தனனதன தனனதன—தனதானு.

கொடியநமபடர்பதறிய்முதுவசமழியவடு
குணமொடகல்புவியினிடை மகிழேனே
கொலையிடுபுலையுமடியுடனுருவுசமயநெறி
கொளுமவர்கள்குரவனென மிளிரேனே

மிடிவிளையவரசுபுரிகலிபுருடனெனுமவனை
வினைகளொடுபொடியும்வண மெரியேனே
விடைமுதுகின்மனைவியொடுமதலையொடுமநுதினமும்
விழையுமிருபொழுதும்வர விசைவாயே

யடியவருமுனிவருமமரர்களுமகிழவென
வவுணர்புரமெரியுநகை புரிவோனே
யரிசிமுதலியகமரினிடைசிதறவினிதுகள
மரியுமவனெதிர்நிலவும் வடிவானே

கடினபுளகிதகளபகுசயுகளமுறுபரவை
களியடையுமளவுநடை பயில்வோனே
கரியமுயலகனெளியும்வசமிலதுகதறவொளிர்
கனகசபைநடனமுயல் பெருமானே. (௭)

தய்யத்தனந்தன தானன—தனதானா.

அல்லைப்பொருங்குழன்மாதர்கள்
வல்லொத்தகொங்கையின்மால்கொளு
மல்லற்பெரும்பிணியாமிது தவிராதோ
வள்ளித்துணிந்துவெணீறதை
மெய்முற்றிலும்புனைவார்களொ
டையர்க்குமின்பநிலாவிட முயலேனோ

வில்லைச்செயங்கொளும்வாணுதல்
வல்லிக்கொர்பங்கருள்சீலமும்
வெல்லத்தகும்பரசாயுத மறிநேரா
விள்ளத்தகும்பலகோலமு
மெல்லிற்றிகழ்ந்திடநாடொறும்
வெள்ளிச்சிலம்புறழ்காளையில் வருவாயே

கல்லைத்தினந்தினமேலிடல்
வெஃகிப்பதந்தருவாய்மலி
கள்ளூற்றகொன்றையுநாகமு மணிவோனே
கள்ளத்தனந்தவிரியோகிய
ருள்ளத்தினின்றவனேமுதிர்
கல்விப்பயன்றெரிவாருட னமர்வோனே

தில்லைப்பெரும்புதலானதில்
வைகித்தவம்புரிவாணிசை
தெய்வத்தலந்தொறுநீடிட வருள்வோனே
தெள்ளித்தெளிந்துளவேதியர்
மல்கிச்சிறந்திடலாகிய
செல்வச்சிதம்பரமேவிய பெருமானே. (௰௧)

தந்த தந்த தானன—தனதானா.

நைந்துநைந்துமாதர்கள் கொங்கையின்பநாடிய
நந்தொழும்பைவீணென விகழ்வாயோ
நண்டுகெண்டையாதியு முண்டிருந்தபேர்களு
நன்றருந்துநாள்வர நினையாயோ

வெந்துசிந்துராசல மொன்றுகொன்றமாணிகர்
வென்றிதுன்றநாடுவ தறியாயோ
விண்டலங்கொள்வார்நனி கண்டுளொஞ்சுமாறொரு
விஞ்சைமந்திராகர மருள்வாயே

கொந்துவிண்டதாதகி செங்கரந்தைநீர்மதி
கொன்றைபைம்புல்கூவிள மணிவோனே

கொஞ்சுகின்றகோமள மங்கைபங்கனேயுயிர்
கொன்றுதின்றிடார்வினை களைவோனே
சிந்துசந்தமால்வரை யின்கண்வந்துமோதிய
செந்திலெந்தைபேணிய கழலோனே
சென்றிறைஞ்சுவார்பல ருஞ்சிறந்தவீடுறு
செம்பொன்மன்றிலாடிய பெருமானே. (௰௨)

தனதன தத்த தானன—தனதானா.

மடலவிழுபுட்பவாளிகள் படலினிளைத்துமாதர்கள்
வடிவைநினைத்துவாடிய வினைதீரா
மடமைபெருத்தபாழ்மன முடையவெனக்குஞான்மும்
வளமுறுசித்தியாவையு மருளாயேல்
விடநிகர்மைக்கணுளிட மொருதமிழ்வித்தைநாவலன்
விடவிசைவுற்றபேரருள் பிழையாமே
விரிகடல்சுற்றுமேதினி யினர்பொருளிச்சையாயினும்
வினைவிலொழிக்கின்மாதவ முயலேனே
படவரவத்தின்மேல்விழி துயில்பவனிட்டதாகிய
பதுமமலர்க்கண்மேவிய கழலோனே
பருவதவிற்கொடேகியு மதனைவளைத்தெயாதெதிர்
பகைவர்புரத்தைவாய்கொடு முனிவோனே
கடகமுதற்பல்பூணென வரவணிசித்தனேயிம
கரனுறுகற்றைவார்சடை யுடையானே
ககனமதுற்றதேவரு முனிவருநித்தநாடிய
கனகசபைக்குளாடிய பெருமானே. (௰௩)

தன தந்த தானன—தனதானா.

இகழ்கின்றதீயவர் பகைமிஞ்சிவாடுமெ
ளிதயஞ்செய்பாவனை பிழையாமோ
விருடின்றும்வார்குழன் மடமங்கைமார்படை
யினன்வந்துபோர்பொர நினைவானே
சகளம்பொலாதெனும் வெறிகொண்டமூடர்கள்
சமயங்கள்பாரிடை நிலையாமோ
தமிழ்கொண்டுஞிசை பகர்சண்பையாளிகர்
தகையென்றனூடுற வருள்வாயே
முகமைந்துளானெம திறையென்றவாசக
மொழியுஞ்சிலோரையு மகலானே

முரணொன்றுதாருக னுயிருண்டநாளையின்
முருகன்பராவிய கழலோனே
புகர்தங்குமாமத கரியொன்றினீருரி
புனைகின்றகோலமு முடையானே
பொறையுங்கெடாதுயர் தவமுங்கொள்வார்புகழ்
பொதுமன்றிலாடிய பெருமானே. (௰௪)

தனதந்த தத்ததானன—தனதானா.

மதனன்றொடுத்தவார்கணை
படநொந்திளைத்துமாதர்கள்
வசையும்பெருத்துவீணினின் மடியாதே
வயிரம்படைத்தலோபியர்
தருசெம்பொனிச்சையான்மிக
மறுகுங்கலக்கமானது வளையாதே
யிதமிங்கிதச்சொலேதுமில்
சிலவம்பரைச்செவேலவ
னெனவுந்துதிக்குநாவல ஒதிராதே
யிடபந்தனிற்கலாமயி
னிகரம்பிகைப்பெணாளுட
னெளிவந்தெனக்குவேணவை தருவாயே
பதபங்கயத்திலோர்விழி
யணிகின்றபத்தனாருயிர்
பலவும்புரக்கும்வாழ்வுற வருள்வோனே
பதறுங்குணத்தராகிய
சமண்வஞ்சரைக்கொல்பாடல்கள்
ப கர்தொண்டன்முற்சொனால்வரை யகலானே
விதனம்பெருத்துவேதிய
னலறும்படிக்குவேள்வியின்
விதியன்றுரைத்ததோர்தலை களைவோனே
விடமுண்டிறப்புறுவித
முணரன்பர்சுற்றநாடொறும்
வெளிமன்றிடத்திலாடிய பெருமானே. (௰௫)

தனனதனத் தனனதனத்—தனதானா.

அணுவளவுட்கருணையுமற்
றுயிர்வதையிற்றுணிபவர்முற்
றறமுயல்கைக்கொருநினைவைத் தரல்வீணே

வருணையிலப்படியொருகைத்
தடிகொடுபத்தினியுடனுற்
றருளருமைப்பொடியின்வனப் பிலகாதோ

வெணுமனதிற்கசைவையளிப்
பதுவுமருட்செயலெனமிக்
கியையுமறைத்தொகுதிமுழுப் பிழைதானோ

விடபமதிற்கவுரியிடத்
தினிதிலகக்குகனடுவுற்
றிடவெதிருற்றெனதுவிருப் பருள்வாயே

யுணுமமுதத்தினில்விழைவுற்
றமரரலைக்கடல்கடைதற்
குதவிசெயச்சுதனுணர்மெய்ப் புகழோனே

யுரகமெருக்குமதிபுனற்
கொடியிதழித்தொடையிறகொத்
துளபொருள்பற்பலபுனைபொற் சடையானே

கணுவுமிழ்முத்திலகியவிக்
கெனுமடல்விற்கொளுமதனைக்
கனல்விழியிற்பொடிபடமுற் புரிவோனே

ககனநகர்ப்புலவர்முதற்
பலர்பரவத்தகுபெருமைக்
கனகசபைக்கொருதலைமைப் பெருமானே. (௰௬)

தனனத்தானன தானன—தனதானா.

இருளைப்போலடர்தாழ்குழ
லயிலொப்பாகியகூர்விழி
யினிமைத்தேனிகர்வாய்மொழி கொளுமாது

ரிருபொற்கோடெனுமாமுலை
களையெப்போதினுநாடுமெ
னிதயப்பேயுனதாடல்கள் கருதாதோ

வருளைப்பேணியமாதவ
முயல்சித்தாதியர்கூடிய
வவையிற்போய்வருமென்மையை யருள்வாயே

யதெனக்கீகிலையாகின்முன்
வெறுமைப்பாடல்சொனுமொடு
மருமைப்பாடுகள்பேசிடல் பிழையாமே

குருவைக்கோலமெலாமுய
முலையிற்பாலருள்வாய்சிறு
குருவிக்கோருபதேசமு மொழிவோனே
கொடுமைத்தானவர்வேருட
னழியப்போர்பொருவேலொரு
குமரற்கீவதுகூறிடின் மகிழ்வோனே

பொருளைத்தானுயிராமென
நினைதற்கியாதுமொல்காதவர்
புழுவிற்கீழ்மையராகவும் விடுவோனே
புகலிப்பாவலனேர்சில
பெரியர்க்காதரமாமுயர்
புலிசைக்கோயிலிலாடிய பெருமானே. (௰௭)

தந்தத் தனத்தனன—தனதானா.

வந்தித்தடுத்திடினு நெஞ்சிற்பிணக்கமுறு
மந்திக்குணத்துமட மலிவார்பால்
வம்பிற்பயிற்றுமொழி யின்பத்துமிச்சையுறும்
வஞ்சக்கடற்பொருமென் மனதூடே

யந்திப்பிறைச்சடையுநஞ்சக்கறைக்களமு
மங்கைத்துடித்தொனியு மழுமானி
றங்கத்தலைத்தொடையன்முன்செப்புபற்பலவு
மம்பொற்பதத்துணையொ டிலகாவோ

நந்திக்கணத்தலைமைகொண்டுற்றவத்திமுக
நம்பற்கொரொப்பில்வர மருள்வோனே
நம்பித்துதிப்பவரைநிந்திக்குமற்பர்குல
நைந்தற்றிடச்சிறிது முனிவோனே

சிந்தித்தபத்தனெதிர்வந்துற்றதட்டுமொரு
தென்றிக்கினெற்சிதைய வடுதாளா
செஞ்சொற்றமிழ்ப்புலவர்தங்கட்குவப்புதவு
செம்பொற்சபைக்குள்வள்ள பெருமானே. (௰௮)

தந்த தானன தனதன தனதன—தனதானா.

மந்தமாருதமிசைவருமதனனை
வென்றசாயகமெனவிலகியவிழி
மங்கைமார்மயலெனுமுததியின்முழு கிடுவேனோ

வஞ்சமேவடிவெனவருமொருசிலர்
தங்கள்வாசலிலநுதினநடைபயில்
வண்டனாவலர்களுமிகழ்தரமன மெலிவேனோ

வந்தணுளருமுனிவருமருணெறி
துன்றுமானினமுதலியவுயிர்களு
மஞ்சிவாய்விடுகொடுமையையுணர்தலி னலிவேனோ

யந்திவான்மதியணிசடைமுதனுவல்
இன்றசீர்முழுதொளிர்தரவிடைமிசை
யஞ்சலோதியெனெதிர்பகலினும்வர விசைவாயே

கந்தநாண்மலர்வதிதருபிரமர்த்
மண்டைமாலிகையணிதருபுயமிசை
கந்தனேறிடிலளவறுமுவகையி லமிழ்வோனே

கங்குனேர்குழலுமையவளொடுதிரை
யுந்துமாயிரமுகமுடனுலவிய
கங்கைதோய்தரவிதழியொட்விர்தரு மெழின்மார்பா

சந்தநாறியபொதியையிலுலகுய
வந்தமாமுனிதவவலிமையின்மலி
தண்குலாவியதமிழ்கொடுதுதிசெயின் மகிழ்வோனே

சங்கராவரகரசிவசிவவென
வுந்துமோசையதெனமிகவுயர்வுறு
தங்கமாகியசபைநடுநடநவில் பெருமானே. (௰௬)

தனன தானன தந்தன தந்தன—தனதானு.

சரணவாரிசநம்பியதொண்டர்க
ளுறுமனேகசுகங்களுமன்பொடு
தருவையோவலதிங்குமடிந்திட விடுவாயோ

தமிழிலாசைபொருந்தியநெஞ்சின
னெனவெனூடும்விளங்கியநின்புகழ்
தறையினேருமறிந்துசொலுந்தின முதியாதோ

விரணவாதைமலிந்துதரும்பல
சளமுமாறுநலம்பெறிலிங்குனை
யிடைவிடாதுநினைந்துபெருந்தவ முயலேனோ

விடபமீதினிலம்பிகைபங்குற
நிதமும்வானிடைவந்துபவஞ்செயு
மிகலெலாமறவென்றிடும்வென்றியை யருள்வாயே

யரணமோடுபறந்துதிரிந்துல
கிடையுமாறுசெயும்பிழைதுன்றிடு
மவுணரியாருமெரிந்துவிழும்படி நகுவோனே
யகிலலோகமருந்தியபுங்கவன்
விழியதாகியகஞ்சமணிந்திடு
மடியிஞலெமனன்றுபடுஞ்சமர் புரிவானே

கரணநாலுமிழந்தபரம்பரை
யறிவதாகநிறைந்துததும்பிய
கருணைவாரிகொளுந்திரியம்பக முடையானே
கனகமாமணிமன்றினிடந்தனி
லெவரொவாறுவிரும்பினுமங்கது
கவினுமாடல்பயின்றுதுலங்கிய பெருமானே. (௨0)

தந்த தந்த தானன—தனதான.

கஞ்சனென்றபாதக னுன்றனன்பிலாரொதிர்
கன்றிநின்றுவாய்விட விதியாதே
கங்குலொஞ்சுமேனிகொ ளந்தகன்கடாமிசை
கண்சிவந்துபாசமொ டெதிராதே

யஞ்சமென்றசீர்நடை கொண்டமங்கைமாருட
னங்கசன்பல்பூமழை பொழியாதே
யன்றுமின்றுமோர்நிறை வென்றிருந்தஞானமு
மண்டருஞ்சொன்மேன்மையு மருள்வாயே

செஞ்சதங்கையோலிட வந்துகொஞ்சுபாலர்க
டிண்புயஞ்செயாண்மையின் மகிழ்வோனே
சிங்கமொன்றுகோவென வந்தறைந்துவாய்கொடு
சிந்திடுஞ்செகீர்நுகர் ககமானய்

வஞ்சகஞ்செய்வார்களை வென்றுமிஞ்சநாடினர்
வந்தனங்கள்சூடிய கழலோனே
மஞ்சடர்ந்துமால்வரை யென்றுயர்ந்தவாடக
மன்றிடங்குலாவிய பெருமானே. (௨௧)

தன்னந் தன தானன—தனதான.

எண்ணுங்கலிநாளையின் மன்னுந்தவமேதுபொ
யென்னுங்கொடியோர்களை யணுகாதே
யெண்ணெண்கலைதோய்தரு நின்மந்திரமோதியு
மின்னஞ்சிலதேவரை நினையாதே

யண்ணும்பொறியால்வலி துன்னும்புலவேடுவ
ரன்மிஞ்சியதீவினை விளையாதே
யண்ணன்குகனேயென நண்ணும்பெரியோருட
னங்ஙன்களிகூர்நல மருள்வாயே

மண்ணுண்டுமிழ்வாய்வலி துன்னுந்திருநாரணன்
வன்மம்பொலிதானவர் பகைதீர்வான்
வன்னந்திகழ்பூநிகர் கண்ணங்கழன்மேலிடில்
வைம்முந்துறுமாழியை யிடுவோனே

புண்ணும்புகைநீரது மன்னந்தனுடார்பவர்
புன்னெஞ்சறியாவடி வுடையானே
பொம்மென்றெழுபூண்முலை மின்முன்பிணிதாடியொர்
பொன்னம்பலமேவிய பெருமானே. (௨௨)

தந்த தானன தத்த தானன—தனதானா.

இன்சொலார்வம்விளைக்குமாதர்கள்
கொங்கைமோகமிகுத்துவாடுறு
மென்றனுதுமனத்துநீவர விசையாயோ
வெண்கண்வேதனெழுத்துமேலெனி
லந்தநாளொருபத்தன்மீதிலெ
றிந்தபாசமுடைக்கையானவண் மடிவானே

வன்சொல்வேடனெனச்செலாவொரு
தொண்டன்மோதுமடிக்குமோகைம
லிந்துவாளியளித்துளாயெனல் கதைதானே
வண்குலாவியகொச்சையூர்வரு
மந்தணாளன்முதற்சொனுல்வரில்
வந்திநாளொருசித்தனடிடி லிழிவமோ

தன்சொலாலளவற்றமேன்மைவி
ளங்குமாறுகொடுக்குமீடுறு
சங்கராசகளச்சதாசிவ குருநாதா
தண்சடாடவியிற்பன்மாசுண
மிண்டைமாலைகடுக்கைதாதகி [னே
தங்குகோலமொடொற்றைமால்விடை யிவர்வோ

புன்சொனூல்கள்படித்துநடலை
கழ்ந்துவீணிலிறக்குமானிடர்
புந்தியூடமைவுற்றிடாவடி வுடையானே

பொங்கர்சூழ்வயலூற்றசேலினை
முந்திவானுடுவிற்புகாவரு
புண்டரீகபுரத்தின்மேவிய பெருமானே. (௨௩)

தனதன தத்த தனத்—தனதான.

அளவறுமிச்சைவிளைத் துனதுநினைப்புமொழித்
தலமருமற்பரொனைப் பழியாதே
யகிலமுழுக்கவுயிர்க் கொலைசெயல்விட்டியுநட்
படையுநலத்தைநிறுத் திடுமாறே
பளபளெனத்திகழ்சொற் பெருகுதிருப்புகழ்பற்
பலமொழியத்துணிதற் றெரியாயோ
பவளநிறத்தொருவெற் பெனவிடையிற்பசுமைப்
பகவதிபக்கமுறத் தினம்வாரா
யிளகுமனத்தொடுமிக் கினியதமிழ்த்துதிசெப்
பினர்சிலருக்கருள்பொற் கழலோனே
யெகினவுருக்கொளுமப் பிரமனுரைத்தபொயிற்
கிசையுமொறுப்பதனைப் புரியானே
களவனெனக்கருமைக் குறமகளைத்திருடிக்
களிபெறுபுத்திரனைப் பெறுவோனே
கதியுதவத்தகுநற் பதிகளின்முற்பகர்சொற்
கனகசபைச்சகுணப் பெருமானே. (௨௪)

தனன தனன தனன தனன
தனத்தத் தந்தனத் தானன
தனத்தத் தந்தனத் தான்ன—தனதான.

பொருளே துணையா மெனநா டினர்பா
லடுத்துக்கெஞ்சிடற்காயுளை
யொழித்துப்பங்கமுற்றேரொன
மயினே ரொயிலோ டருகா கியுமால்
விளைத்துக்கொங்கைமற்போர்பொரு
மவர்க்குத்தொண்டியற்றுசிடை
புலர்வே ரொனமா நிலமே கதியா
நினைத்துச்சண்டையிட்டாருயிர்
விடுத்துப்பின்பிறப்போரொன வுழலாதே
பொதுநான் மறைநூ னிலையோர் கிலராய்
மகத்திற்சிந்தைவைத்தாடதை
வதைத்துத்தின்றுகெட்டோரையு

மடியார் மிசையோ ரணுவா யினுமா
வலற்றுத்தொண்டரைப்போல்வடி
வெடுத்துக்கொண்டுபொய்ப்பாடல்கள்

புகல்வா ரையுமா ருயிரே பரமா
மெனச்செப்புங்குணத்தாலரு
ணலத்திற்கன்புவைக்கா ரையு மதியாதே

யிருளா கியமால் களிறே றியுநே
ரெதிர்த்திட்டைங்கணைப்பூமிக
விடுத்துப்புண்படுத்தீனனு

மடன்மே தியின்மே லகல்வா யிதழ்தா
னதுக்கிக்கொண்டபற்றேணிட
வதட்டித்தண்டெடுத்தேவரு

மெமரா யனுநாண் மலர்மீ துறைநான்
முகத்துச்சந்தனக்கீறல்கொ
ளறற்பொற்குண்டிகைக்கா ரனும் வெகுளாதே

யிமையா விழியார் முனிவோர் முதலோர்
கணத்துச்சந்தடிக்கூடுவெ
ணிறத்துத்திண்டிறற்காளையின்

மதிகூ டியவார் சடையா தியசீர்
துலக்கிப்பங்கினிற்பான்மூலை
வனப்புற்றங்கையிற்பாலனெ

டிமவான் மகண்மே விடநா டொறுநீ
யெனக்குக்கண்களிப்போடுபல்
வரத்தைத்தந்திடற்காவர விசைவாயே

யருளே வடிவா கியகா ரணனே
பொருப்புச்செஞ்சிலைச்சேவக
னெனச்சொற்கொண்டுநற்றூரணி

யதுதே ருருவா கிடவே கியுமூ
வெயிற்பற்றும்படிக்கோர்நகை
நகைத்துத்திண்புயத்தானவ

ரடியோ டுவெணீ றெனவீழ் வதனு
லிகத்துத்துன்பமிக்கோர்வளர்
பரத்துச்சங்கடத்தோடறல் புரிவோனே

யயனூர் மகவா வருகா சிபமா
முனிக்குத்தன்கயற்பார்வையின்
மயக்கப்பண்பளித்தேபுணர்

மகமா யையினால் வருசூர்முதலோ
ரிடுக்கத்தஞ்சியெத்தேவரு
மடுத்துத்தெண்டனிட்டோலிட

வழலாம் விழியா லொருபா லனையீ
னிவிட்டுச்சங்கரித்தீடறு
புகழ்ச்சித்தண்கடற்றேய்வுறு   பழையோனே

சுருண்மா சுணமா மிகுபூ ணணிவாய்
துடிச்சத்தந்தனிற்சூழ்கலை
பிறக்கக்கண்டுநிற்பாய்விட

மமுதா மெனவே நுகர்வா யுமையாள்
பறக்கக்குன்றைமற்றோளினி
லெடுத்துக்கொண்டவற்கீடறு

துயர்தோய் தரவோர் விரலூ ணிடுவா
யிரக்கச்சென்றெழிற்பாவையர்
தொடுக்கக்கண்டுவெப்பாயென   மறவாதே

துதிகூ றிடுவா ரிடைவாழ் சிவனே
யொருத்தற்கின்புறத்தூதுசெ
லிடற்கொப்பும்புகழ்ச்சேகர

வுரகா திபமா முனியோ டடல்கூர்
விருத்தச்செம்புலிக்காலினர்
தமக்குச்சொந்தமொப்பாய்பகர்

தொகைதீர் தருமா ருயிர்வாழ் வுறுசீர்
குறித்திட்டைந்தொழிற்காணுறு
திருச்சிற்றம்பலத்தாடிய   பெருமானே. (௨௫)

தனதாத் தனனதந்த தய்யத்தனத்த—தனதானா.

மருணூற்சிதடர்தங்கள்
பொய்வக்கணைக்கு   மெலியாதே
மறையாப்புகழ் புனைந்த
மெய்யர்க்கிகழ்ச்சி   பகராதே
வெருளாத்திறல்பொருந்து
சொல்வெற்றிவித்தை   தருமாறே

விடைமேற்கவுரிபங்கில்
வைகிக்களிக்க வருவாயே
யிருள்போற்பொரவெதிர்ந்த
வெய்யற்செகுத்த கழலோனே
யிமையாப்புலவரின்ப
மெய்தச்செய்வித்த விழியானே
யருளாற்பெருமைகொண்ட
தில்லைத்தலத்தி லமர்வோனே
யடியார்க்கெளியனென்று
கையொப்பம்வைத்த பெருமானே. (௨௬)

தந்ததனதன தனதனதனதன—தனதானா.

விண்டுவுலகிடைமனிதர்தம்வடிவுடன்
வந்துதிகழ்தரலெனநலமுயல்கையில்
விஞ்சுமுரிமையொடலமருமெனதுள மறியாயோ
வெஞ்சொன்மொழிதருபுலையர்கையுறுபொருள்
கொண்டுபுரிதருமமுநலமெனவுழல் [மோ
விந்தையுடையவருடனெனையொருவனில் விடலா
பண்டுபுலவர்கள்சிறைவிடவெனவுன
தங்கிவிழிவழிதருமகனுவன்மொழி
பங்கமுதவுபொயெனமறைவுறுவது முறைதானோ
பன்றிபிறகொருவனசரன்வடிவொடு
சென்றபெருமையைநினைதருமடிமைசொல்
பைந்தமிழிலொருசிறிதுநினுளமகிழ் வடையாதோ
தண்டமதகரியுடனுழுவையினுரி
கொண்டுபகைபுரிமுனிவரர்மனைவியர்
தங்கள்வளையொடுகலைகவர்புதுமையு முடையானே
சந்தமலர்வகைகொடுவழிபடுசிறு
மைந்தன்மிசையடமுடன்வலைவிசறிய
சண்டனுயிரொருகழல்கொடுபருகிய பெரியோனே
யண்டமுதவிடவருபலபிரமர்த
மண்டைவடமணிதருபுயநிரைமிசை
யைந்துகரமழகளிறுலவிடின்மிக மகிழ்வோனே
யன்றுநரிபரியெனவரும்விதமறி
தொண்டனுறுகதியுயர்வினுளுயர்வெனு
மன்பர்பரவியகனகசபையில்வளர் பெருமானே. ()

தனதந்த தத்ததானன—தனதானு.

கயல்கண்டுவெட்டும்வாள்விழி
மடமங்கையர்க்குமால்கொடு
கலியன்சிரிக்குமாறிவ ணுழல்வேனோ
கனகம்படைத்துவாழ்பவர்
மனைகண்டவர்க்குநேர்பல
கவிவிண்டிரக்கும்வாதனை தொலையாதோ
வியமன்செலுத்துதூதரி
லுயிர்கொன்றுபற்பலூனுக
ரிழிவொன்றுதுட்டர்வேருட னழியாரோ
விடபந்தனிற்பராபரை
யருகின்புறக்கைமான்மழு
விலகும்படிக்குநாடொறும் வருவாயே
யயலின்றியெட்டெனுறுவ
லுருவம்பொறுத்துளாயென
வறையுந்தவத்தினோர்களை யகலானே
யகலந்தனிற்பல்வானவ
ருடலென்புமிட்டஞாயம
தறிகின்றபத்தர்நாடிய வரமீவாய்
செயசங்கமொப்பிலாரத
முடனங்கொருத்தனேய்வது
செயுமந்திரச்சொலாகிய பெயரோனே
திறல்கொண்டபுத்தர்வாதற
வருதொண்டனுக்குவீடரு
டிருவம்பலத்திலாடிய பெருமானே. (உஅ)

தனதன தானன தானன—தனதானு.

மனமெனுமோர்பெருவானர
மதனொடுபோர்பொருநானதன்
வலிமிகலாலிவண்வாடிய தறியாயோ
மறைநெறியாறுமெனுருயி
ரொனவெணிவேறுளதீநெறி
வகைகளேமோதிடநாடுதல் பிழையாமோ
வினமனையார்களுமேசிட
வுலகிடைநாயெனவீடுதொ
றெனைவிடநீயிசைவாகிய விதமியாதோ

விமயமகாமலையீனிய
மகளொடுசேயருகாகவெ
ளிடபமதேறியெநேரமும் வருவாயே

யனகசதாசிவதாரக
மவுனநிராமயபூரண
வமலபராபரமாவளர் பழையோனே

யகிலமெலாநுகர்வான்விழி
மலரிணைவார்கழன்மேலிட
வலரியைநேர்சுடராழிமு னருள்வோனே

தனதனையோர்பொருளாமென
வுறவுகொள்வாயிசைஞானிகை
தனில்வளர்வானதுதோழமை யுடையானே

தமிழ்வளமார்புலியூரினின்
முயலகனேலிடுமாடக
சபைநடுவேநடமாடிய பெருமானே. (௨௯)

தந்தன தத்தன தானன—தனதான.

பங்கயமுற்றுளவேதிய
னெண்கையின்மட்கொடெனுதிரு
பண்டைவினைக்கிசைவாமுடல் சமையாதே

பந்துவனப்புறுபூண்முலை
மங்கையர்சுற்றிடும்வேள்விடு
பஞ்சமலர்க்கணையாலுயிர் தவியாதே

யங்கணிலத்திடையாருயிர்
கொன்றுதிரத்துடனூனும
ருந்திடலெட்டுணையாயினு மருவாதே

யஞ்சலளித்தெனைநீயொரு
தொண்டனெனக்கொளின்மாதவ
ரண்டர்முதற்பெரியோருனை யிகழ்வாரோ

தங்கமலைச்சிலைதோய்தரு
திண்கையுடைச்சிவனேசிறு
சந்திரனைச்சடைமீதினி லணிவோனே

தண்டமெடுத்தெதிர்காலனை
வென்றொருபத்தனநாளுறு
சஞ்சலமுற்றுமிலாதற வருள்வோனே

சிங்கவுருக்கொடுநாரண
னன்றுகுதித்ததனாலொரு
சிம்புளெனப்பொருதேயதள் கவர்வோனே
தெண்டனிடத்துணிவார்வினை
யன்றொழியச்செயும்வீறுறு
செங்கனகச்சபைமேவிய பெருமானே. (௩௰)

தனனதன தனனதந்தத்—தனதானா.

கரியநமபடர்நெருங்கிப்
பிடியடிகொயெனவிளம்பிக்
கலகமிடுதெலினடுங்குற் றிறவாதே
கயலனையவிழிகொண்மங்கைப்
பருவமடமகளிர்கொங்கைக்
கலசமதைமிகவிரும்பிச் சுழலாதே

யெரியிலுயர்கலிவளைந்திட்
டறிவிலர்தமனையினும்புக்
கிரவலரிலொருவனென்கத் திரியாதே
யிடபமிசையுமையொடின்சொற்
குகனருகிலுறவிவர்ந்துற்
றெனதுவிழியெதிர்துலங்கற் கிசையாயோ

பொரிகடலையவல்பழஞ்சர்க்
கரைவிடலைமிகவருந்திப்
பொதுமும்வயிறுடையமைந்தற் றருவோனே
புலைமருவுசமயவண்டர்க்
கறுவுமதிவிநயநெஞ்சப்
புனிதர்ப்கர்பதிகமிஞ்சப் புனைவோனே

யரியொடயனிகலுமன்றக்
கொடுமையறவொருசிலம்பொத்
தவர்நடுவில்வளரும்விந்தைக் குரியோனே
யளவிலமைவரியதொண்டர்க்
கினியகதியுதவுபொங்கத்
தருள்பெருகுகனகமன்றிற் பெருமானே. (௩௧)

தந்த தந்த தந்த தந்த—தனதானா.

வெங்கண்வஞ்சர்தங்கண்முன்பி ரந்திரந்தலைந்தபங்க
மிஞ்சுதுன்பமொன்றுமின்று தவிராதோ
விண்டலம்புரந்துகந்த கந்தனென்றநின்குழந்தை
விண்டிடுஞ்சொனம்பிநொந்த தறியாயோ

வங்கணம்புகுந்தபன்றி யென்றுநிந்தைகொண்டவென்ற
னன்பினும்பயன்பொருந்த வருள்வாயோ
வஞ்சலஞ்சலென்றுவந்து பங்கின்மங்கைகொங்கையுண்
வந்தணன்பெறுஞ்செயங்க டருவாயே [ட

கங்கணஞ்சிலம்புடன்பு கன்றிடுங்கலன்களென்று
கண்சிவந்தவங்கதங்கள் புனைவானே
கந்தமிஞ்சுறுங்கடம்பொ ழிந்தெதிர்ந்ததந்திகொன்று
கஞ்சுகங்கவர்ந்தணிந்த விறலோனே

சங்கரன்பரன்றிகம்ப ரன்சிவன்சயம்புவென்று
சந்ததஞ்சொலுந்தொழும்ப ருடன்வாழ்வாய்
சண்டனெஞ்சகங்கலங்கு றும்பெருந்திறன்றுலங்கு
தங்கமன்றிடஞ்சிறந்த பெருமானே. (௩௨)

தத்ததத்த தத்ததத்த—தனதானா.

முத்தமிழ்க்கவிக்கிரக்க
மத்தினத்திலுற்றபெட்பு
முற்றும்விட்டிருக்கையொத்த விதமியாதோ
முத்தியைக்கொடுத்தினிப்பி
றப்பறச்செய்நிற்கெனிச்சை
மொத்தமிக்கணத்தளிக்கை யரிதாமோ

தத்துறத்தொடைத்தெனைத்த
டுத்தெடுத்தளித்திடிற்பல்
சத்துவக்குணத்தவத்த ரிகழ்வாரோ
சத்தியத்தினுக்குமச்ச
மற்றவற்குநெற்கொடுத்த
தைச்சுமக்கமற்கணத்தை விடலாரோ

பத்தருக்கும்வித்தகர்க்கு
மொத்தநற்பதத்திலுற்ற
பற்பலர்க்குமெய்ப்புகழ்ச்சி தருவானே
பற்றும்விற்கொடுச்சியிற்பி
ளப்புறப்புடைத்திடித்த
பற்குனற்குமிச்சைமுற்ற வருள்வோனே

சித்தமொத்துருக்கொடிக்கு
கற்களிற்றினுக்கருத்து
சித்திரத்தைமெச்சுநர்க்கொ ளியோனே

செக்கரிற்றிகழ்ச்சிபெற்ற
ருட்கடற்பெருக்கெனத்தெ
ழித்தசிற்சபைக்கணுற்ற பெருமானே. (௩௩)

தய்யதானன தானன—தனதான.

பையராவணைமேலிருதையலாரொடுபாணிறை
பௌவமூடுறுமாயனின் மகிழ்வேனோ
பல்விகாதமுமேதினிகொள்ளுமாறுசெய்தீயவர்
பல்கிடாதழிவாவதின் முயலேனோ

மெய்யராமவராதியிலெய்துமாடல்கள்பாடல்கள்
விள்ளுநாவலியேகொடு புரியேனோ
வில்லைநேர்நுதன்மாதொடுசெய்யவேளருகாகிட
வெள்ளைமால்விடைமேனிதம் வருவாயே

மையகோவெனமாதர்கண்மையலானணிகூவிட
வையமோதியலீலையு முடையானே
மையர்மாதவராதியருய்யுமாறுகலாவிடை
யல்லறீர்தருயோகினே விடுவோனே

தெய்யதாதிமிதோமெனமையைநேருருவான்மிசை
தெய்வகோடிகள்சூழ்நட மிடுவானே
செல்வமேநிறைசீரொருதுய்யபாவலனேதிய
தில்லைமாநகர்மேவிய பெருமானே. (௩௪)

தனத்தா னனதனதானன—தனதான.

இருக்காதியமறைநூல்பகர்
பொருட்டேர்கிலரறிவாரொன
வெணித்தீமகமதிலூனுண லொழியாதோ

வினிப்பாமதுமலிதாமரை
மலர்ப்பீடமதுளநான்முக
னெழுத்தேவலிதெனுமூடர்சொ னழுவாதோ

தருக்காலளவறுமாருயிர்
வதைப்பாரழல்படுபூளைய
தனைப்போலடியொடுநாசம தடையாரோ

தனித்தோர்கனவிலெனேடுநின்
விழிச்சேய்பகர்மொழியானது
சகத்தூடிலகிடுநாள்வர வருள்வாயே

பெருக்காகியபுனல்வாளர
வெருக்காரிதழிவிளாவிலே
பிறைக்கூறனையவைசூடிய சடையானே
பிணக்காட்டிலுறைவாயென
வுரைத்தேவழிபடுவானுயிர்
பிறக்காதுயர்கதிசேரவும் விடுவோனே
முருக்கார்மலரிதழ்வாயுறு
குயிற்போலிலகியபார்வதி
முலைக்காதலின்மிகமூழ்கிய மணவாளா
முனைக்கோடெயிறுகுலாவிய
பணிக்கோர்சுமையதன்மேனிகழ்
முதற்கோயிலினடமாடிய பெருமானே. (௬௫)

தந்த தத்த தானன—தனதானா.

பஞ்செனச்சொல்சீறடி மங்கையர்க்குமால்கொடு
பங்கமுற்றபாவியை யறமர்மோர்
பண்புசற்றுமேவலில் வம்பருக்குமாசிசொல்
பைம்பொனிச்சையாளனை யெளியோர்மே
னஞ்செனக்குரூரமு டன்சினக்குமூடனை
நன்றியற்றபாழனை யருளாலே
நந்தியொத்தமேலவர் தங்கணத்தினூடுற
நந்தலற்றபேறுற விடுவாயோ
மஞ்செனக்கடாமிசை வந்தெதிர்த்தகாலனை
வண்கழற்கொடாதியின் முனிவோனே
வஞ்சமிக்கசாரணர் தங்களைச்சொலாலடு
மைந்தனைத்தொழாரறி வரியானே
யஞ்செழுத்துமேபுணை யென்றுரைத்தமாதவ
னங்கயிக்கமாவது புரிவோனே
யண்டர்சித்தராதியர் சிந்தைமுற்றுநாடிய
வம்பலத்திலாடிய பெருமானே. (௬௬)

தனன தானனத் தானன தனதன—தனதானா.

அளவிலாதசித்தாதியர்முனிவரர்
முதலினோர்கள்பெற்றுடியதிருவரு
ளடியனேனுமுற்றுலுனதுயர்புகழ் குறைவாமோ
வரியநான்மறைக்காதரமெனநிகழ்
சமயமாறும்விட்டாணிணைமுதனுக
ரசடர்பாழ்நெறிக்கூடிவண்மலர்மக ளுறலாமோ

தளவவாண்முகைக்கேநிகரிளநகை
மகளிர்மோகமெப்போதினுமலிவுறு
தமியனேன்மனத்தூடுனதெழில்வடி வமையாதோ
தகுவர்சேனைநிர்த்தூளிகள்படவென
வுதவுபாலனைப்போலெனையருள்கொடு
தழுவிநாடகத்தாள்களினிடைபுக விடுவாயே

துளவமாலிகைக்கார்முகிலழகினி
லிணையின்மோகினிக்கோலமதுறவடி [லே
தொழுதுவாரணக்கோடுறழ்களபமென் முலைமே
துடிநிலாவுகைக்கூர்நகநிரைநிரை
பதியவேயணைத்தாசறுகலவிசெய்
தொழிலினுன்மகப்பேறுமெய்திடவருள் புரிவானே

யிளகுநேயமுற்றோர்பலர்வினைதரு
பனுவல்சூடுமற்றோர்களின்முரணுறு
மெனையனுர்கள்சொற்பாடலுமிடமன மிசைவோனே
யெழிலிதோயுமற்சோலையின்வளமலி
புலிசைமாநகர்க்கோயிலினடுமிக
விலகுமாடகச்சீரவையினில்வளர் பெருமானே. ()

தனந் தனத் தனுதன—தனதானு.

மதன்றொடுத்தவாளிகள் படுந்தொடர்ச்சியான்மிக
மயங்கலுற்றபாழ்மன முறுநாயேன்
வனைந்தவிச்சொன்மாலையை யிகழ்ந்துவிட்டுவேறுடல்
வருந்துயர்க்குண்மூழ்கவு முனிவாயோ

கதஞ்செலுத்துமேமனு நடுங்கிடப்பல்வாறுள
கனம்பொறுத்துமேதினி யதன்மேலே
கவின்கொள்சித்தெலாமிக முயன்றுனக்குளாருயிர்
கலந்திடச்செய்தாள்வைகொ லறியேனே

யிதங்கள்செப்பியோர்விலை மடந்தைபத்தனோடுள
மிசைந்திடச்செய்வானடை பயில்வானே
யிறந்துவிட்டவானவ ருடம்பெரிக்கணூடொறு
மெரிந்தவத்தியானவையு மணிவோனே

நதங்கொடுக்குமாடக மிகழ்ந்துநச்சராவணி
நலங்கொள்சித்தனுகிய குருநாதா
நறுங்கடுக்கைசூழ்தரு சிதம்பரத்தினூடொறு
நடம்பயிற்றுசீர்திகழ் பெருமானே. (௩௮)

தனன தனத் தந்தன தானன—தனதான.

கருணைவிளக்கந்தெரியாமுழு
மடையர்களைக்கெஞ்சிடநீடிய
கலிமுழுதற்றின்புறுமோர்தின முதியாதோ
கனககர்ப்புங்கவராதியர்
புகழ்தருசித்திங்குபல்கோடிசெய்
களிபெறநத்துந்தமியேனினை வறியாயோ
விருணவிபொற்பொன்றியநால்வர்கண்
முதனிகழ்மெய்த்தொண்டர்களோடுல [மோ
கெனைமொழியக்கண்டிடின்மேன்மைகள் குறைவா
விரசதவெற்பென்றொளிர்மால்விடை
யதன்முதுகிற்சங்கரியோடென
தெதிர்நிலவிச்சிந்தனையாவையு மருள்வாயே
தருணமதைக்கண்டடியார்மன
மகிழ்வதியற்றுஞ்சிவனேயொரு
தவளமதித்துண்டுகுலாவிய சடையானே
சகலவிதக்குன்றுதொறுடியென்
மனதினிடத்துங்குடியாகிய
சரவணனைத்தந்தவிர்சீர்விழி யுடையானே
யருணனடத்தும்பரியேழுறு
மிரதமுடைச்செங்கதிரோன்முத
லமரரழச்சென்றொருவேள்வியை யடும்வீரா
வகிலமனைத்துந்தினமோதிய
பெருமைபடைத்தெஞ்சலில்வாழ்வுறு
மழகியசிற்றம்பலமேவிய பெருமானே. (௩௯)

தத்தந்தனத் தானன—தனதான.

குற்றங்களுக்கோரிட மொக்குங்குணத்தார்சிலர்
கொட்டுஞ்சினைத்தேள்விட மதுபோலே
குத்துஞ்சொலெப்போதினு நித்தஞ்சொலச்சோர்வொடு
கொக்கென்றிருப்பேனினி னருளாலே
சொற்றந்திரக்கார்ர்கள் வெட்கும்படிக்காம்வலி
துற்றின்புறக்காணிலி வுலகூடே
சொற்கங்குறித்தாடுவ தைத்துண்டுவைப்பார்நிகர்
துர்ச்சங்கநிட்டேரனை முனியேனோ

நற்றங்கவெற்பாமொரு விற்கொண்டுமொட்டார்களை
நக்கன்றெரித்தேபுகழ் புனைவோனே
நத்தொன்றுகைக்கார்முகி லொக்குந்திறற்சீதர
னத்தும்படிக்காழிமு னருள்வோனே
செற்றம்பெருத்தேயெதிர் துட்டன்றனைக்கால்கொடு
செற்றந்தணச்சேயினை யினிதாள்வாய்
திக்கெங்குமெக்காலமு மெச்சும்புகழ்ச்சீர்மலி
சிற்றம்பலத்தாடிய பெருமானே. (சஙு)

தந்ததத்த தந்தன தானன—தனதானா.

கந்தரத்தைவென்றவிர்கார்குழன்
மந்தரச்சிலம்புறழ்பூண்முலை
கஞ்சம்வெட்குமிங்கிதமாமுக மயில்போலே
கண்டவர்க்கிதந்தருசாயல்வெ
ணங்தெனச்சொலுங்களமான்விழி
கண்டெனத்தகுங்கனிவாய்மொழி கொளுமாளுர்
சுந்தரத்திலின்புறுநாஹன
தன்பருக்கியைந்தனவாகிய
தொண்டியற்றிடும்பெருமான்மிய முறுமாறே
துங்கமிக்கதிண்கழன்மால்விடை
யின்புறத்திலம்பிகையோடுது
லங்கிடற்குனெஞ்சகமானது கருதாதோ
பந்தமற்றமந்திரயோகியர்
சிந்தனைக்குணின்றவனேபல
பங்கயத்தர்தந்தலைமாலிகை புனைவானே
பங்தெனச்சொலுந்தனமோகினி
கண்கள்வெட்டுகின்றதின்மால்கொடு
பண்டணைத்தொர்மைந்தனுமீனிய முதியோனே
தந்தமுற்றசெம்புகர்மால்களி
ஞென்றுரித்தணிந்தவனேகமழ்
சந்தனக்குழம்பெனநீறணி தகையோனே
சண்பையிற்பிறந்தவனுதிய
புங்கவர்க்கருந்துணைபாமுயர்
தண்டமிழ்ச்சிதம்பரமேவிய பெருமானே. (சஙக)

தனத் தனன தான தந்த—தனதான.

மருக்கமழ்பூவாளிசிந்து
கருப்புவில்வேளாலிடைந்து
மலைத்துணைநேரானகொங்கை கொளுமானார்
வசத்தினனுயேதிரிந்து
னருட்செயன்மீதாசையின்றி
மரித்திடுமோபாவமொன்று மணுகாதே
குருக்களெனுநீவிளங்கி
யெனக்குமுனனல்வர்கொண்ட
குழப்பமின்மாயோகவிஞ்சை யருள்வாயோ
கொடுத்திடலாநீமுனங்கொர்
பொருட்கயவாயோடும்விண்ட
குணத்தனெனுநூல்விளம்பல் பிழையாமோ
தருக்கொடுமேனுளெதிர்ந்த
நமப்பயல்வாணளையுண்டு
தனைத்தொழுமோர்பாலனின்ப முறவாள்வாய்
தலைப்புணுளார்கோபமிஞ்சி
யலைக்கடனீர்மேன்மிதந்த
தமிழ்ப்புலவோன்மீதமைந்த களியோனே
செருக்கெழும்வானேர்நினைந்த
நினைப்பறிவானேபுரங்கள்
சிரிப்பதனுனீறல்கண்ட பெரியோனே
சிறப்புறுசோணுடுகொண்ட
முகத்தினைநேராயிலங்கு
திருப்புலியூர்வாழவந்த பெருமானே. (௬௨)

தனந்தத் தத்தன தானன தானன—தனதான.

இணங்கிக்கிட்டியவேளையிலூடியு
மழுந்துட்டக்குணமாதனையாருயி
ரொனும்பட்சத்துடனுடியதீவினை தவிராதோ
வெலும்பைப்பப்பலர் காணுறவோர்திரு
மடந்தைக்கொத்துருவாகிடுமாறுசெய்
திடுஞ்சித்திக்குரியானிகர்மேன்மையு மடையேனே
வுணங்கிக்கட்டமதேநிகருன்வனை
விரும்பித்துய்ப்பவரியாவருமாதவ
ருவந்தொப்புக்கொளவேறுகர்காலமு மிலகாதோ

வரம்பெற்றுத்திகழ்மால்விடைமீதுமை
யுடன்சத்திப்படைவேளருகாகிட
வொளிர்ந்திச்சித்துளவாறொருவாசக மொழிவாயே

கணங்கட்குத்துணையானவனேயரு
ணலங்கற்றிட்டவர்தாயகனேசிவ
கரந்தைப்பச்சிலையாதியசூடிய சடையானே

கரும்புக்கைச்சிலையானரியாதியர்
சொலுஞ்சொற்றட்டிவிடாமையினாலுடல்
கரிந்திற்றுப்பொடியாய்விழநாடிய விழியானே

பிணங்கித்தக்கனோர்சிலர்வேள்வியில்
வருங்கொற்றப்புலியாதியெலாமெழில்
பிறங்கற்குத்துணையாமெனவேயினி தணிவோனே

பிறந்தெய்த்துப்பிணமாவதுதீர்தர
வரும்பத்தர்க்கதனோடுபல்பேறருள்
பெரும்பற்றப்புலியூரினின்மேவிய பெருமானே. ()

தனன தான தானன—தனதான.

கருமமானபேய்கோடி யிடைவிடாதுபோராடல்
கழியுமாறொராராமை யுதியாதோ
கனகமேருவேபோலு முலைமினார்கண்மாலான
கடலினூடுவீழாது பிழையேனோ

சருவவேதவாதார மௌனநிலாவுசீர்மேய
சகுணயோகுளார்கூடி மகிழாரோ
தவளவேழமீதேனு மறமெலாமுமேயான
தணிவில்காளைமேலேனும் வருவாயே

யருகனாதியோராய கடவுளாருமாயாரு
மறியொணாதவாறுயு மிளிர்வோனே
யயனுமாலும்வாதாடி யிகலுநாளனோர்காண
வளவில்சோதியாநீடு மிறையோனே

பொருவில்காழியூரான்மு னமணர்மாயுமாறோது
புனிதமீறுபாமாலை புனைவோனே
புரிசைமீதுகார்சாயும் வளமைநாளுமோவாத
புலிசையூரில்வாழ்வான பெருமானே. (சச)

தனன தானன தனதன தனதன—தனதானு.

வனசநாணியமதிமரபினிலுயர்
வழுதியேவியபடிபரிகொ●வரும்
வழியினீயருள்செயவுயுமுனிவனு முடலோடே
வருநலாள்பகர்மொழிகொளுமிறைவனு
மழுதுஞானமதனையயிலடிகளு
மயிலைநேரிருவனிதையர்கணவனு நுவல்பாவோ

டெனதுபாடலுமிலகிடவருடரி
னலதுவீடொருபொருளெனநினைகில
னிதுவுநீதருநினைவலதிலையெனல் பிழையாதே
யிடபமாகியபரிமிசையிமவரை
யுதவுபாவையுமயிலணிகுமரனு
மிடநிலாவிடவொருவிசையெனதெதிர் வருவாயே

தனதனுருறவினன்னனுவலினு
முவகைகூர்திருவுளமருவியசிவ
சகலதேவரும்வழிபடநிலவிய பழையோனே
சரணவாரிசமலர்மிசைவிழியினை
யணியுநாரணன்மகிழ்வுறவொருபடை
தனையெலாவுலகமுநலமுறும்வண மருள்வோனே

கனவிசாரமெய்தியகொடியதிசய
மடையவோரிருகனியருள்பவமிளிர்
கடகமாதியபணியெனவிடவர வணிவோனே
கயிலைமால்வரையினுமுயர்வினதென
வறிவுளார்சிலரறிதரவிலகுறு
கனகமாகியசபைநடுவெதிதரு பெருமானே. (சரு)

தந்ததன தானதந்த—தனதானு.

வந்தபடிபாடுகின்றவென்றனதுபாடலின்கண்
வன்பிழையெதேனுமொன்றி லுனதேயாம்
வம்பலமெய்தான்வளைந்துநின்றுநலமேவிளம்பு
வண்புலமையாளர்பண்பை யறியாயோ

முந்தவொருநாளுன்முன்புசங்கமதிலோர்தொழும்பன்
மொய்ம்புகொடுபேசும்விந்தை மறவாமே
முங்கருள்வினைதவென்றிதந்துவிடௌாருடைந்த
மொங்கைநிகராயினும்பொன் முடியாமே

கந்தனதுதாதையென்றுவந்தனைசெய்வார்கள்சிந்தை
கன்றுதலுருவிதங்கள் புரிவானே
கங்கணமதாணிதண்டையங்கதமதாயணிந்து
கம்புசெவியூடுதொங்க விடையூர்வாய்
சந்தமதிலாசைகொண்டுமைந்தனடியார்பதங்கள்
சந்ததமுநாடுமென்சொ லணிவோனே
சண்டனுயிர்சோரவென்றுதென்றிசையைநாடிநின்று
தங்கசபையூடவிர்ந்த பெருமானே. (சசு)

தந்தன தந்தன தந்தன தந்தன—தனதான.

பங்கயமங்கையர்தஞ்சுகமும்பிழை
யென்றுதுணிந்துனைநம்பியிரங்கிய
பண்பினர்தங்களுடன்பழகுந்தவ மடையேனோ
பஞ்சவிதம்படுமென்கணையங்கச
னுங்கமலந்தனில்வந்தவனுங்கொலை [ரோ
பண்டைநலங்களிலொன்றெனும்வம்பனும் வெருளா
மங்களமும்புகழுந்திறலுஞ்சுப
மென்பவொருங்குமிகழ்ந்திடினுந்தினம்
வந்துபொருந்திவிளங்குநலம்பெரி திலகாதோ
மந்தரமொஞ்சியகொங்கையிலங்குமை
யுங்குகனுந்துணையென்றுறவெண்கிரி
வந்திடலென்றுதுலங்கிடபந்தனில் வருவாயே
தங்கநெடுஞ்சிலையும்புவியுண்டமு
குந்தனெனுங்கணையுங்கொடுசென்றுத
யங்குபுரங்களெரிந்துவிழும்படி நகுவோனே
சஞ்சலமின்றிநினைந்துவணங்கிய
தொண்டர்கணெஞ்சிலுறைந்தொளிருஞ்சிவ
சம்புசயம்புவெனுந்தமிழ்கொண்டவர் துணையாவாய்
திங்கள்கரந்தைநறுந்துணர்கொன்றைமு
ழங்கியகங்கைவனைந்தபெருஞ்சடை
சிந்தவறைந்தவனுங்கருதும்பய னுறவாள்வாய்
சிங்கமுடன்கரியும்புலியும்பட
வென்றுரிகொண்டுபுனைந்துநலம்பொலி
செங்கனகந்திகழ்மன்றினடம்புரி பெருமானே. (சஎ)

தத்தன தத்தன தத்தன தத்தன—தனதானா.

கற்றையெனப்பொலிவுற்றவிருட்குழ
லிற்பன்மலர்த்துணரிட்டுமுலைக்கணி
கச்சைநெகிழ்த்துவிழிக்கணையைக்கொடு பொருமானார்
கட்டடலிற்பொய்மொழித்தொகையிற்சர
சத்தொழிலிற்கலவிக்கடலிற்பல
கட்டம்விளைத்திவிதத்துழல்வுற்றிட லறியாயோ

சற்றருள்வைத்துனைநத்திவழுத்துமு
வப்புறுமுத்தமர்செப்பியசொற்படி
தத்துவநிச்சயமுற்றிலகச்செயும் விழைவோடே
சத்தசுரச்சுருதிக்கழலிட்டவ
ணப்பவிர்வெற்றிவிடைப்பரியிற்சிறு
சத்தியிடத்தமையத்தமியற்கெதிர் வருவாயே

குற்றமிகப்புரிபத்தர்களுக்கும்வி
ருப்பமளித்தகளிக்கருணைக்கடல்
கொட்டியமுக்கணுடைப்பவளக்கிரி யனையானே
கொச்சைநகர்த்தவனொப்பவர்சொற்றொடை
யைப்புயமிட்டொருநட்புமில்பெட்புறு
கொக்கிறகைச்சடிலத்தலைமத்தியி லணிவோனே

பொற்றையினுக்கடியிற்கையிரட்டிய
பத்தும்விடுத்தசையச்செய்பவற்கொரு
புத்தியுரைத்தவனைப்புவியிற்கிடை விடுவோனே
பொக்கமொர்சற்றுமில்சத்தியபத்திப
டைத்தவரிச்சையனைத்துமிகத்தரு
பொற்புறுசிற்சபையிற்குடியுற்றவிர் பெருமானே. ()

தானதன தானதன—தனதானா.

கோபமதவேடனதுநீலமலர்போலிலகு
கோலவிழிமாதர்மயல் பெருகாதே
கோடிபொருடேடிடினுமோர்கடுகினூறிலொரு
கூறுமுதவாதவரை மதியாதே
பாபமுயிர்கோறலெனவோதினுமெணுமடையர்
பாலணுகியாசுகவி பகராதே
பாகரசமூனதமிழாலுனையெநாளுநனி
பாடிமகிழ்சீலமுற வருள்வாயே

சாபமெனவேநெடியமேருவளைதோய்தருவி
சாலபுயமீதிதழி யணிவோனே
சாகரமும்வேவவருமாலமதைவானமொடு
தாரணியும்வாழவென நுகர்வோனே

கூபமதினீர்வருதனுடிமெலிவானினிது
கூறுதுதியாயிரமும் விழைவோனே
கோகனகமாதுவிளையாடுமெழில்வாவிமலி
கோதில்புலியூர்மருவு பெருமானே. (௪௯)

தய்யன தத்ததானன—தனதானு.

பொய்வலிமிக்கமாதர்கண் மெய்யின்மயக்கமீறிய
புல்லறிவுற்றுளேனுன தருளாலே
புள்ளிமயிற்கணேறியும் வைவளமுற்றவேல்கொடு
பொல்லவருக்கொர்காலனின் மிளிர்வேனே

சைவமுதற்சொன்மூவிரு மெய்நெறிபற்றுவாரெதிர்
சள்ளிடுமெற்பராண்மைக ளறியாயோ
சைகையுணர்த்தலாலிவண் வெஃகினன்வித்தையாமிது
தள்ளருமுத்திவாழ்வினு முயர்வாமோ

வைவரின்மத்தியானவன் வில்லடிபட்டும்வார்கணை
யைதிலளித்தபேரரு ளுடையானே
யையர்களிற்பலோர்தனை யொவ்வுருவத்தராகவு
மள்ளிமலர்க்கைநீறுமு னருள்வோனே

தெய்வமனைத்துமாகியு மல்லிலொளித்தவாபல
திவ்வியசத்திசூழ்தரு பெரியோனே
செல்வமுழுக்கமேவலி னல்லவளத்ததாகிய
தில்லைவனத்திலாடிய பெருமானே. (௫௰)

தத்தத் தத்தத் தத்தத் தத்தத்
தனதன தனதன தனதன தனதன—தனதானு.

வெற்புக் கொப்புச் செப்பப் பொற்புற்
றிலகியவனமுலை மகளிரையநுதின
மிச்சித் துச்சித் தத்திற் பித்துப்
பெருகிநலறமொடு தவசையுமடியொடு
விட்டுத் துக்கத் திற்பட் டுச்செத்
துறவினர்களுமெடு மெடுமிதுபிணமென
வொழியாதே

வித்தத் தைக்குப் பைக்கொக் கக்கொட்
டியமனையுடையவர் மிசைபலகவிதைக
ளச்சப் பட்டுக் கொற்றச் செற்றத்
தவுணர்களிரிதர வடுமுரகரியென
விற்கைப் பற்றிப் புட்பத் தைத்தொட்
டரிவையர்படைநடு வருமெழின்மதனென
மொழியாதே
யற்பச் சொற்கத் துக்கிச் சைப்பட்
டழலெதிருயிர்வதை செயுமிழிவினையையு
நற்பெட் பிற்குட் சுத்தப் பத்திக்
கிணையிலையெனிலிகழ் தருமுனிவரரையு
மைக்கத் துக்கெட் டெட்டுச் சித்தித்
துறைவழிசெலல்பிழை யெனுமடியினையு
மதியாதே
யத்திக் குட்கற் றெப்பத் திற்சுற்
றியுமுயுமுனிவனி லமணர்கள்கழுமர
முற்றப் பட்சிக் கொக்கத் துப்கைக்
கிரையெனவொழியமு னடுமெதலையிலணி
யக்கைப் புத்தர்க் குக்கட் டிப்பற்
றியவனிலழகிய பரவைதன்மகிணனின்
மகிழ்வேனே
சற்பத் தைப்பச் சைப்புற் கொத்தைப்
புனலினைமதியினை யிறகினையிதழியை
மத்தத் தைத்துட் டச்சித் தப்பொய்த்
தவர்விடுதலையினை யணிசடைமுடிமிசை
தத்தைப் புட்குச் சொற்கற் பிக்கத்
தகுமுமைபுலவியி லவள்பதமலர்களு
மணிவோனே
தக்கற் செற்றுப் பக்கத் திற்றுற்
றவனுதவியவய நிணநுகரமரரை
வெட்டிக் குத்தித் திக்கெட் டிற்சிற்
சிலரிரிதரமுடு கியவலிமொழிபவர்
சக்குக் குச்சித் தத்துக் குச்செப்
பருமகிழ்வுறமழ விடையினிலிலகிடு
மிறையோனே

கற்பத் திற்பற் றற்றெய்ப் பற்றுற்
றுலகிலகிடிலறி வுடன்வருபெரியவர்
புத்திக் குட்டித் தித்துச் சத்தித்
திரள்களுமயலல வெனநிகழ்பரசிவ
கற்றெட் டுத்தட் டுக்கெட் டுப்பொற்
பணமயல்கொடுதிரி பவனுவல்கவிகளும்
விழைவோனே
கத்திக் கத்திச் செத்தற் கொத்துத்
தளர்முயலகனகன் முதுகினிலொருபதம்
வைத்துத் திக்கத் தக்கத் தித்தெய்த்
திமிதிமிதகதக வெனநடமுயல்பவ
கட்டத் தைத்தட் டிச்சுட் டுச்சிற்
சுகமருளிடுமுயர் கனகசபையில்வளர்
பெருமானே. (௫௧)

தனனதனத் தாந்தன தானன—தனதான.

மலிவுறுபொய்த்தீங்கினர்வாசலி னடவாதே
மகளிருவப்பாம்பணிநாடொறு முயலாதே
குலிசமுடைக்கோன்பெருவாழ்வினை மதியாதே
குறைவிலருட்பாங்கினனுவது புரிவாயே
பலிநுகரப்போந்துமினுர்வளை கவர்வோனே
பனிமலர்தொட்டான்பொடியாகவு முனிவோனே
கலியனழற்காஞ்செயனுடுநர் குருநாதா
கனகசபைத்தாண்டவமாடிய பெருமானே. (௫௨)

தந்ததன தந்தன—தனதான.

கொஞ்சுமொழிவிண்டுள மங்கையருரந்தரு
கொம்பெனவிலங்கிய முலைமாலே
கொண்டுருகுமென்சிறு நெஞ்சிடைசிலம்பணி
குஞ்சிதபதந்தனை யமையாயே
லஞ்சுபொறியுங்கெட வென்றவர்கள்கண்டுள
மஞ்சிமிகவொஞ்சிட வொருநாணீ
யன்பன்மனமின்புற விண்டமொழிகொண்டுமொ
ரங்கனையிடஞ்செல னிசமாமோ
கஞ்சுகம்விழைந்தொரு குஞ்சரமுடன்புலி
கன்றிடவதஞ்செயு முதுவேடா

கந்தரமெனுங்குழ லம்பிகையொடுஞ்சிறு
கந்தனெடும்விண்புகும் விடையூர்வாய்
மஞ்சுபணியும்புக ழிந்திரனொடும்புடன்
மண்டைவடமும்புனை மணிமார்பா
வஞ்சரும்வணங்குபொ னம்பலநனந்தலை
மங்களநடம்பயில் பெருமானே. (௫௩)

தானனத் தத்தன தானன—தனதானு.

பாலெனத்தக்கசொன்மாதர்கண்
மோகமுற்றுத்தளர்வாரிசை
பாடுமற்பக்குணநாவல னொதிராதே
பாசமிக்குற்றபொய்ஞானியர்
கூடிநிட்டைத்தவயோகியர்
பாவனைக்குப்பழுதோதிடன் மலியாதே
வேலனுக்கொத்தடியார்புடை
சூழ்தரப்பற்பலகோயிலின்
மேவியெட்டெட்டுவினோதமு முயலேனே
மேனைமுத்திக்கொளுமோர்சிறு
பேதைபக்கத்துறமால்விடை
மீதென்முற்பட்டுவெணீறினி தருள்வாயே
யோலையைக்கைக்கொடுதூதர்கள்
போய்வரற்சற்றுமெணுதுர
மோடெதிர்த்துச்சிறுபாலனை முனிவான்மே
லூழ்வினைக்குத்தளராதடி
யாருவப்புற்றிடுமாறுத
னோர்பதத்தைக்கொடுசாடிய வலியோனே
யாலடிச்சற்குருவேமழு
மானணிக்கைச்சிவனேயெனை
யாளவிச்சித்தொருவாறெனுள் வருவோனே
யாரணத்திற்பலவாகிய
வாகமத்திற்பகர்சீர்பெறு
மாடகச்சிற்சபைமேவிய பெருமானே. (௫௪)

தானந்தத் தாந்தன தானன—தனதானு.

மீனெஞ்சப்பாய்ந்திடும்வாள்விழி
யார்கொங்கைக்கேங்கியெநேரமும்
வேள்செங்கைப்பூங்கணையான்மிக மெலியாதே

வேதங்கட்டேர்ந்தவர்போலய
வூனுண்டிட்டிடிங்குழல்வார்தமை
மேலென்கக்காண்டகுதீநெறி நிலையாதே

ஞானங்கற்றியான்பரமாமென
வோதுஞ்சொற்றேர்ந்தபொலாருனை
நாடும்பெட்பார்ந்தவலோர்களை யிகழாதே
நாலன்பர்க்கீந்தனவாகிய
வீரஞ்சித்தீர்ங்கவியாதிய
நானும்பெற்றேங்கவுணுதுள நினையாதோ

கானங்கட்கூன்றிகழியாழ்கொடு
பாடன்பற்சூழ்ந்தடுபோழ்மிடி
காடொன்றிப்போம்படியோர்கவி வரைவோனே
காவென்றெய்த்தாண்டுசெய்பூசனை
யானஞ்சத்தோன்றெமனுருயிர்
காலொன்றிற்சாம்படியாதியி லுதைவானே

யானுஞ்செற்றீண்டுணுநீசர்கண்
மாய்வொன்றற்கேன்றவுபாசனை
யாய்தொண்டர்ச்சார்ந்தவர்மீதினு மகிழ்வோனே
யால்கொண்டுட்கார்ந்தவனேபுலி
யூர்மன்றத்தான்றவனேதின
மானந்தத்தாண்டவமாடிய பெருமானே. (௫௫)

தந்தனத்தத் தாத்தானன—தனதானு.

செம்பொன்வைத்துக்காப்பார்பலர்
விண்டபொய்ச்சொற்கேட்டாய்வுறு
சிந்தையிற்பொற்றட்பூவுற வருவாயோ
சிந்துரத்துக்கோட்டோடுறழ்
கொங்கைவெற்றிப்போர்ப்பாவையர்
தின்றிடெச்சிற்பாக்கோடிலை கசவாதோ

பைம்பொழிற்கட்சீர்த்தேவரொ
டந்தரத்துற்றேற்காகிய
பங்கெனச்சொற்றுட்டேனுண லொழியாதோ
பங்கயத்துப்பார்ப்பானல
ரிங்கணைக்கைக்கேட்டானெரி
பந்தவிற்கட்கூற்றுதியர் வெருளாரோ

கொம்பொடித்துப்போட்டோர்முது
வஞ்சனைச்செற்றுற்கார்மதி
கொன்றையொக்கச்சூட்டியாவையு மருள்வோனே
குந்தம்விட்டுச்சூர்த்தானவ
னங்கமுற்றட்டாற்கேமயல்
கொண்டசித்தத்தேற்கோர்நிலை தருவானே

யம்பொனுக்குப்பாட்டோதிய
தொண்டனுக்கொற்றுய்ப்போயவ
னங்கனைக்குட்டோற்றூடல்கள் களைவோனே
யஞ்செழுத்தைப்போற்றுதவர்
நெஞ்சினுக்கெட்டாப்பீடுறு
மம்பலத்திற்கூத்தாடிய பெருமானே. (௲கூ)

தாந்ததந்த தானதந்த—தனதானு.

வேம்புறுங்குரூரநிந்தை
யாஞ்சொலென்றுமோதுகின்ற
வீம்பர்தங்களோடிணங்கி மெலியாதே
வேந்தர்முன்சொல்வாரடைந்த
மாண்பைநெஞ்சுளேநினைந்து
வீந்துடம்புவேறுகொண்டு தவியாதே

தேம்பியங்கணீர்சொரிந்து
கூம்புசெங்கைமேயதொண்டர்
சேர்ந்திடுங்குழாமொடின்ப முறுமாறே
தீங்கில்குன்றமாதிருந்த
பாங்கிலங்கவூடலர்ந்த
தேங்கடம்பன்வாழவென்க ணெதிர்வாராய்

காம்பவிர்ந்ததோண்மடந்தை
வேண்டிநொந்தவேளைகண்டு
காந்தனஞ்சவோரிரண்டு கனியீவாய்
கான்றருந்துநாயிளந்தை
போன்றவென்றனுதுபுன்சொல்
கான்செய்கொன்றையோடுரிஞ்ச வணிவோனே

பாம்படர்ந்தகோடிரங்கொ
டான்றசங்கராவெதிர்ந்து
பாய்ந்திடும்புன்மாயவென்ற வலியோனே

பாண்டிநன்பனேபசும்பொன்
மேய்ந்தமன்றினூனின்று
பாண்டரங்கமாடுமெங்கள் பெருமானே. (ருஎ)

தந்தனத் தய்யதானன—தனதானு.

செந்தமிழ்ச்சொல்வலோர்மிடி
யின்கணுற்றல்லல்கூர்வது
சிந்திடச்செய்தனேடொடு மகிழ்னே
தின்றிடற்குள்ளகாய்கனி
கொண்டுவப்பெய்திடாதுபல்
செந்தினைக்கொல்பொலார்களை முனியேனே

வந்தரத்தையர்பேர்சொலி
மென்புலுட்கொள்ளுமாடதை
யங்கிமுற்கொய்யும்வேள்வியை விலகேனே
வங்கழற்றுய்யமால்விடை
யின்புறத்தெஃகவேலனொ
டஞ்சனத்தையல்பாலுற வருவாயே

சந்தனச்செல்வமால்வரை
யின்றலைத்தெய்வமாமுனி
தன்றமிழ்ச்செய்யுளாசையி லமிழ்வோனே
தன்றருக்குள்ளியோர்கயி
றங்கெடுத்தொல்லைவீசிய
சண்டனேச்செய்யதாள்கொடு முனிவோனே

பந்தமற்றைவர்வாதனை
விண்டிருட்டள்ளுமாதவர்
பண்பினிற்புல்லுமாடல்க ளுடையானே
பங்கயக்கள்வனோர்தலை
கொண்டமற்கையனேவளர்
பைம்பொழிற்றில்லைமேவிய பெருமானே. (ருஅ)

தானன தந்தன தந்தன—தனதானு.

நாகரிகஞ்சிறிதுந்தெரி
யாதவர்தங்குமிடங்களி
னுணமிழந்தலையுந்துயர் தவிராதோ
நாகபடம்பொருபெண்குறி
யேபொருளென்றுதினந்தின
நாடியநெஞ்சகநின்கழல் கருதாதோ

பாகநயந்தெரிகின்றில
ரோதியபுன்கவியும்பல
பாதகர்நெஞ்சுகலங்கிட மிளிராதோ
பாறையினின்புதல்வன்சொல
தான்முயலுங்கிணறென்றிடை
பாலுறழ்க்ங்கைவரும்படி யருள்வாயே

சூகரமென்றுருவங்கொடு
போயொருவம்பனைவென்றுயர்
சூரமுகுந்தன்வணங்கிய கழலோனே
சோழன்வியந்துகொளும்படி
கூழ்கொடுநின்பணியன்றுசெய்
தோமறுமன்பனறுந்தமிழ் புனைவோனே

யாகமவிஞ்சையுணர்ந்துய
ரியோகியர்சிந்தைவிரும்பிய
வாடலனந்தமுயன்றவிர் குருநாதா
வாசறுதொண்டரையுண்டுமி
ழாதகுணங்கொடிலங்கிய
வாடகமன்றிலமர்ந்தருள் பெருமானே. (ருகூ)

தனனதந்த தத்ததத்த—தனதானு.

தளவமென்றதிற்கலித்த
முகையெனுஞ்சிரித்தபற்கொள்
சரசமங்கையர்க்குரித்து மிகலாலே
சரணபங்கயத்தையுச்சி
மிசையணிந்திடற்குமொப்பு
தமியனுன்றனைத்துதிக்க வறிவேனோ

களவொழிந்தவிர்ச்சிபெற்ற
மொழிவனைந்திடச்செய்வித்த
கருணையின்பெருக்கமுற்று மறையாதே
கனவில்வந்தசித்திரத்தை
நனவினுந்தெரித்தெதிர்த்த
கலியைவென்றுவக்கும்வெற்றி யருள்வாயே

துளவணிந்தபச்சைவெற்பை
யனையவன்றொழக்களித்தொர்
சுடர்மலிந்தசக்கரத்தை யிடுவானே

துகளில்சுந்தரற்பழித்த
வொருவனும்பிழைக்கவைத்த
சுகிர்தமங்களத்திருக்க ணுடையானே

யள்கையந்தலத்தியக்க
னுறவனென்பவர்க்குமுத்தி
யதனலம்பெறக்கொடுக்கு மிறையோனே

யவலநெஞ்சகப்பிணக்க
ருணர்வரும்புகழ்ச்சிதுற்ற
வனகவம்பலத்திலுற்ற பெருமானே. (௬௰)

தனன தானனத் தத்ததான—தனதானா.

கயலைநேர்விழிப்பொற்புமாதர்
மயலினலிளைத்திட்டபாவி
கருணைவாரியிற்சற்றுமூழ்க வருளாயோ

கலகமேவிளைத்துக்குலாவு
சமயவாதரைச்செற்றுமாசில்
கவிகள்கோடிசெப்பிப்பலோரு ளவிரோனே

சயமதாலுறுப்புக்கள்போன
மதியைவார்சடைக்கற்றைமீது
தழையுமாறமைத்துக்கொள்பான்மை பிழையாமோ

சலசவேதன்முற்செப்புமாறு
நெறியினேருமெத்தக்குருவ
றருமமோவெனக்குச்செவேள்சொ. லிடல்வீணே

குயவனார்தமைத்தொட்டிடாத
மனைவியோடிழுத்துப்பொய்பேசு
கொடியர்தாமெனச்செப்புமாறு தெருவூடே

கொடுதனேடைதைப்பறபல்வாறு
பரவிநீர்முழுக்குற்றபோது
குறைவில்பேரருட்சத்தியோடு மிளிர்வோனே

புயகபூடணத்தத்தனேயொண்
மழுவுமானும்வைத்திட்டவாமெய்
புகலுமேலவர்க்குட்சதாவை கியதேவே

புகழும்வாழ்வுமற்றொப்பிலாத
வறமுமேவிடப்பெற்றதான
புலிசைமாநகர்ச்சித்தராய பெருமானே. (௬௧)

தனதனத் தானதானன—தனதான.

மகளிர்குற்றேவலேமிக
முயலுமுற்சாகமூடனை
மலிகொடைக்காரியாதிய ரொனவீண

வனைதமிழ்ப்பாவலார்களு
முனைவிருப்போடுபாடிடும்
வகைநினைத்தேனுணேமெ யருள்கூரா

தகமிளைத்தீனர்வாசலி
லவரொனப்போயெநேரமு
மலையவிட்டாய்முனல்வர்சொ னுழைகாது

டடிமைசொற்பாவுரு துகொன்
மலயவெற்பானும்வாணியு
மனையரிப்பான்மைநாடிடி னைகையாரோ

புகலியிற்பாடினனேமு
னுதவுநற்றுதையார்புரி
புதுமைகட்கானவாறுபொ னருள்வோனே

புலவிமிக்கேசுவாண்மகிழ்
வடைவதற்கேபராவிய
புலவனைத்தோழனுமென மொழிவோனே

சகளநட்போவுபாழ்மத
விருளறச்சாடலேயுயர்
தவமெனத்தேறுவார்களை விழைவானே

சருவசத்தாதிமூவகை
யெனவுமுற்றீடிலாடக
சபையிலெக்காலுமாடிய பெருமானே. (௬௨)

தன்தன தந்தத்தானன—தனதான.

அருள்வலிமிஞ்சக்காண்மொழி
கொடுதவமுன்பெற்றான்முத
லடியர்வருந்தச்சோதனை செயல்போலே

யளவறவென்றற்றேர்தரி
னிலைபடலின்றிப்பாழ்படு
மசடுறுநெஞ்சத்தாசைகள் பலவேயா

மிருள்கலியொன்றற்றனல
மொருகிணறுங்கற்பாறையி
லியைதருவம்புக்கேதுசெய் திடுவேனு

வனசமலருறைதிருமகள்கணவனெ
ரரவவணையினிலறிதுயிலமர்பவ
னெண்ருங்குரங்கினினமுந்துன்றிடும்படையொ
டுததிநடுவொருதிருவணையிடுமவ
னொருபதணிமுடியினனுயிர்கவர்பவ
னன்றங்கெழுந்திரணியன்றன்சிவந்தகுடர்
மலையைநிகர்புயநிரைகளின்மகிழ்வுட
னணியுமழகியநெடியவன்முரகரி
தன்கண்புனைந்துபணியுந்துங்கமொனறுமிரு
கழலோனே

சதிசெய்திடுமவுணரையடியுடனடு
மயில்கொடெனதுளமலரினுமளவறு
குன்றெங்கணுங்குலவுகந்தன்கடம்புர
வணியுமிளையவனமரர்கள்சிறைவிடு
குமரகுருபரசரவணபவகுக
னென்றென்றுவிண்டெனையிவண்கண்கலங்கவிடு
தகையனடமிடுமயின்மிசையிவர்பவன்
மறவர்மகள்பணிசெயமிகமுயல்பவ
னந்தந்திகண்டுமகிழுந்தம்பிவந்தவிழி
யுடையானே

சகளபசுபதிதிரிபுரமெரிபட
வொருபுன்முறுவல்செய்தருளியபரசிவ
னைந்தைந்துடம்புடையனென்றுந்துலங்கியொரொண்
வடிவனெனவுமெய்திடுமரனெவரெவ
னுவலுநெறியினுநிறைபவனடியவர்
தம்பங்கினின்றவர்விரும்புந்திறன்செய்தரு
டலைவனெனநனியுணர்பவர்புடைமலி
கனகசபைநடுமுயலகன்முதுகினி
டஞ்சந்ததம்புலவர்கண்டுய்ந்திறைஞ்சவளர்
பெருமானே. (சாச)

தனத்தத் தந்தன தானன தானன—தனதானா.

அரத்துக்கும்பழுதோதிடும்வாள்விழி மடவாரா
லகத்துக்கங்கொடுபூரியர்வாசலி லலையாதே
பரத்துட்சென்றுனில்வேறலனாகியு மகிழ்வேனே
பழிப்பற்றிங்களிகூர்பெருவாழ்வினை யருள்வாயே

கரத்திற்சங்குடனாழிகொள்வான்விழி புனைதாளா
கடித்துத்தின்றொருவேடுவனார்தர னுகர்வோனே
சிரத்தைப்பண்புடையார்களனாடொறு மகலானே
திருச்சிற்றம்பலமூடுகுலாவிய பெருமானே. (௬௫)

தத்தந்தன தானதானன—தனதானா.

இக்கென்றசொன்மாதரார்மயன்
முற்றுங்கொடிதான்மெய்சோர்வுறு
மித்துன்பமுளேனுமாதவ முயல்வேனோ

வெற்றுஞ்சொலனேகமோதிய
குற்றங்கொளுமூடர்வாசலி
லெய்க்கின்றவிடாயைவேரொடு களைவாயோ

நக்கென்றனையேசுவார்களு
மச்சங்கொடுபேணியேமிக
நத்தும்படிகாணுமோர்தின முதியாதோ

நட்டந்தெரியாமலாருயிர்
செற்றுண்கிறபேருமேதமி
னற்பண்டமதேயுண்மூதறி வடையாரோ

மைக்கெண்டையைநேர்கணுண்மிக
வெட்டுஞ்செககாலமோகினி
மற்கொங்கையின்மோகமீறிமு னணைவோனே

மத்தொன்றதனாலநாளடி
பட்டும்புவிவாழுமாறருள்
வைக்குங்கரியோனனார்தொழு முதியோனே

திக்கெண்கரமானவாமதி
மத்தம்புனைவானவாதமிழ்
தெட்டும்புகழ்மீனவாவுமை மணவாளா

சித்தொன்றியகோணனேசுரர்
மெச்சுங்கலியாணனேயுயர்
சிற்றம்பலவாணனேசிவ பெருமானே. (௬௬)

தந்தனத்தன தானதந்த—தனதானா.

கந்தரத்திரள்போலிருண்ட
கொண்டையிட்டெதிர்வார்மருண்ட
கண்கள்பட்டதனாலுடைந்து மடியாதே

கந்தனுக்கிணையானவென்றி
கொண்டபுத்தர்களாதிவம்பர்
கண்களுக்கடலேமனென்று மிளிரோனே

சுந்தரற்கொருதூதுசென்ற
பண்பினைப்பலகான்மொழிந்து
தொண்டியற்றுமெனுசையொன்று மறியாயோ
துங்கமிக்குயர்காளையொன்றி
னெஞ்சினுக்குணிலாவிவிண்ட
சொந்தநிச்சயமாகவென்க ணெதிர்வாரா

யந்தணச்சிறுபாலனஞ்ச
வந்துகைக்கதையோடெதிர்ந்த
வந்தகற்கொருகாலனென்று திகழ்வோனே
யம்புலிப்பிளவார்கரந்தை
கொன்றைமத்தமராவிளம்பு
லம்பருட்சிவைதாள்கமழ்ந்த சடையானே

யைந்தருப்புலவோர்களென்பு
கஞ்சர்பொற்றலைமாலைவிண்டு
வங்கமுற்பகர்பூணனந்த மவிர்தோளா
வஞ்செழுத்துருவாகியன்பர்
சிந்தையிற்குளுநீடுசெம்பொ
னம்பலத்தினுமாடுகின்ற பெருமானே. (௬௭)

தய்யதந்த தத்ததன தானதந்த—தனதானு.

கல்வியென்றபெட்டபொரணுவேனுமின்றி
வில்லுறழ்ந்தநெற்றிமடமாதர்தங்கள்
கல்லெனுங்கடுத்தமுலைமோதநொந்து பிணமாவார்
கைதரும்பொருட்குமிகவாசைகொண்டு
ளொல்கலின்றிநித்தமவர்பானடந்து
கள்வனென்றிகழ்ச்சிகொடுவீணிலிங்கு தளர்வேனே

மல்விளைந்தவெற்றிவடிவேலியைந்த
கையொடுன்றுடைக்கணமர்பால்னென்ற
வள்ளலன்றுரைத்தபுதுவாசகம்பொ யெனலாமோ
மல்குசெங்கரத்துமழுமானிலங்க
வெள்ளிகண்டுவெட்கும்விடைமீதுகுன்ற
வல்லிபங்கிருக்கவொருபோதென்முன்பு வருவாயே

யல்விடங்குடித்துமணிநீலகண்ட
மெய்தியந்தரத்திலமுதேயருந்து [னே
மையருய்ந்திடச்செய்தருள்சீர்விளம்பின் மகிழ்வோ
யௌவைவெண்களிற்றிலிவர்வானைமுந்த
வல்லைதன்றுதிக்கையதனாலவண்செ
யையன்வந்துதிக்கவருள்வாள்புணர்ந்த மணவாளா
செல்விதங்குரத்துநெடியோனுமொய்ம்பி
லொல்லமிஞ்சுமிச்சையதனான்மடந்தை
செவ்விகொண்டுசுற்றுமழகார்சிவந்த வடிவானே
தெள்ளுசெந்தமிழ்ச்சொன்முனிவோர்புகழ்ந்த
வைபவம்பெருத்தகயிலாயமென்ற
தில்லையம்பலத்தினடமாடுகின்ற பெருமானே. ()

தந்ததந்த தத்தத்த—தனதான.

கொஞ்சுமென்சொல்கற்றிச்சையின்றியும்பொருட்கெற்றல்
கொண்டவஞ்சகத்துட்ட விலைமாதர் [ள்
கொங்கையுஞ்சுகத்துக்கொர்தஞ்சமென்றணைத்துக்கொ
கொஞ்சநெஞ்சனைச்சற்று மதியாதே
மஞ்சுமொஞ்சுறப்பற்பல்பண்டமுஞ்சலிப்பற்று
வந்திரந்தவர்க்கிட்டு மகிழேனே
வண்டலம்புபொற்செச்சைபைங்கடம்பொடிட்டுற்ற
மைந்தனென்றெனக்குச்சொ னதுதாராய்
நஞ்சுறுங்கறைப்பொற்புநின்றகண்டமெய்ப்பத்தி
நங்கைவிண்டவிக்கட்டி னழுவாதார்
நன்றடைந்திடற்குத்தண்மண்கலங்கொடுத்துப்பொய்
நன்கியம்பிடச்சித்த மிசைவோனே
தஞ்சுகங்கள்பக்கத்துநண்பரும்பெறச்செப்பு
சந்தவண்டமிழ்ச்சொற்கள் புனைவோனே
சண்டன்வம்பறப்பெற்றதென்சிதம்பரத்திற்செய்
தங்கமன்றுடைச்சித்தர் பெருமானே. (௬௯)

தனதன தானதான—தனதான.

அரியகுலைமேபெரியவர்மேன்மையாது
மறிகிலர்வீடுதோறு மலையாதே
யபிடிமாதர்சேனையொடுவருகாமராச
னமர்செயலாலுமாவி மறுகாதே

யெரிநிகர்கோபமூடர்பலருறுபாரமீறி
 யெழுகடல்சூழுமாது கதறுதே
யெனதுகணுவினூடுன்விழிதருபாலனோது
 மியல்புகுலாவுமாறு புரிவாயே
பரியெனவேபல்கோடிநரிகொடுபோனபான்மை
 பகரவலாளாநாளு மகலானே
படர்பொழில்வாதவூரில்வருமொருநாதனோது
 பனுவலையோலையூடு வரைவோனே
கரிபுலிசீயமாகுமவைதருதோல்களாய
 கலைபுனைசீலமேவு குருநாதா
கதிபெறுமோனயோகர்வருபுலியூரினீடு
 கனகசபேசனான பெருமானே. (௭௰)

தனனதன தானதத்ததந்த—தனதான.

விடமொழுகும்வேலெனச்சிறந்து
 சினைமருவுசேலெனப்பிறழ்ந்த
 விழிமகளிர்மாயையிற்புகுந்து தவியாதே
வெடுவெடெனவேயுளைக்கும்வம்பர்
 மனைகளிடைபோயிரக்குமிந்த
 வினைமுழுதுமோடவிட்டுனன்பி லமிழேனோ
நடமிடுகலாமயிற்கடம்ப
 னெனுமுனதுசேயெனக்குவிண்ட
 நலமுழுதுமீவதற்கிரங்கி விடைமீதே
நறைகமழ்பல்பூமுடித்தகொண்டை
 செவியருகொர்பாலினிற்சரிந்து
 நகுகவுரியோடுசெற்றுமுன்பு வருவாயே
கடலிடையராமிகக்கலுழ்ந்த
 விடமதைவிடாதெடுத்தருந்து
 கருணைநினைவார்களைத்தொடர்ந்து திரிவோனே
கவுணியனொடோதுமிக்கதொண்டர்
 தமிழுயர்வதாகிடப்பகர்ந்த
 கவிகள்பலசூடுமெற்புயங்கொள் பெரியோனே
தடமலையயோர்கையிற்சுமந்து
 பசுநிரைகள்வாழவைத்தகொண்டல்
 சரதநெறியால்வழுத்திடன்றோர் படையீவாய்

சகுணபரமாய்நிலைத்தபின்பு
திரையுளருவாய்மிகுத்தகண்ட
சபையினடமாடுதற்கியைந்த பெருமானே. (௭௧)

தனனதன தத்ததந்த—தனதான.

மயிலெனவடுத்துவந்துகுயிலெனவுரைக்குமின்சொன்
மகளிர்கலவிக்குநெஞ்ச முருகாதே
மதுரமலியப்பொழிந்ததமிழ்கொடுவழுத்திநின்பொன்
மலரடிகளிற்புகுந்த சிலர்போலே

பயிலருண்மிகப்பொருந்தியுயிர்வதைசெயத்துணிந்த
பரசமயமுற்றும்வென்று மகிழ்வேனோ
பருவதமளித்தமங்கையருகுறவிடைக்கணுந்து
பவளவரையொத்தென்முன்பு வருவாயே

யயிலினையெடுத்துமுர்துமவுணரையழிக்கவென்று
றறுமுகனிடத்திலன்பொ டருள்வோனே
யரகரவெனப்பகர்ந்துதொழுமடியவர்க்கிரங்கி
யளவறுதலத்தமைந்தும் வருவோனே

கயிலையசையச்செய்வம்பனொருபதுமுகிற்புரைந்து
கதறிடவழுத்தும்வென்றி பெறுதாளா
கருணைபெருகுற்றவுண்கணுமையவள்களிப்புமிஞ்சு
கனகசபையிற்சிறந்த பெருமானே. (௭௨)

தத்தத்தத் தத்தன தானன—தனதான.

பத்திப்பெட்பற்றவர்போலுல
கத்தத்தத்திச்சைகொள்வேன்து
பக்கத்திற்சற்றடியார்குண முதியாதோ
பற்பத்தைத்தொட்டறியாரதை
யிட்டுச்சற்றுட்கொளுமேலவர்
பற்றைக்கைத்துப்பெரிதேசிட லொழியாதோ

தத்திற்பட்டுச்சுழல்பாவலர்
புத்திக்குட்டுக்கமிலாதுயர்
சத்தத்திற்கற்பனைநாடியு மகிழாரோ
சத்திக்கைப்புக்கிரனேயென
வெர்ப்பித்திக்கெட்டிலுளார்புகழ்
சட்டத்துச்சித்தனிநாள்வர வருள்வாயே

கொத்திக்கொத்தித்திருமாலுரு
வத்தைச்செற்றிட்டொருதோல்கவர்
கொற்றத்தைச்செப்பவலார்தமை மறவானே.

குட்டிக்கட்டத்துயிர்போனவ
யத்துக்குச்சற்றருள்கூர்முனி
கொற்றிக்கிட்டத்தினனுகவு நினைவானே.

யத்திக்கட்கட்டழகார்மக
ளைச்சிட்டிக்கக்கவிபாடின
னத்தத்துக்குத்தகுதாளால் கிடுவானே

யற்பப்புத்திச்சிறியோர்கணி
னைத்துக்கிட்டற்கரிதாயரு
ளக்கத்துச்சிற்சபைமேவிய பெருமானே. (எ௩)

தனதன தத்ததானன—தனதானு.

அழகுமிகுத்தமாதர்கள் கலவிகுறித்துவாடுறு
மகமுனுறுப்பெலாமிக நினையாதே
வடியவரிச்சையாவன முழுதுமளிக்குமேன்மையை
யடியொடுவிட்டவாறுறன் முறைதானே

தழலினையொத்தபாழ்மிடி யதுவளைவுற்றதாலுயர்
தவமுமிளைத்ததீமையை யறியாயோ
தவளவிடைக்கணேறியென் விழியெதிருற்றுவேல்புனை
சரவணனைத்தபேறுற வருள்வாயே

கிழவனெனக்குமாரனு மெனவுருவுற்றொரேய்நிகர்
கிடையுநொடிக்குளேகொடு துயர்கூரோர்
கிளிமொழியைத்தனுதிட மருவுமவட்குளேபுகு
கிருபைபெறச்செய்தாள்புக ழுடையானே

கழகம்விளக்குமோர்சிறு பலகையிடத்துநாவலர்
கலகமறுக்கவுமையை விடுவானே
கரியநிறத்தொர்தானவன் முதுகினிருத்தமாடிய
கனகசபைச்சதாசிவ பெருமானே. (எச)

தானதத்தத் தந்தன தானன—தனதானு.

கோமளப்பொற்பொன்றியமாதர்கண்
மோகமுற்றிப்பைம்பொனவாவிடை
கோதுபட்டுப்புண்படுதீவினை தவிராதோ

கோவதைத்துத்தின்றுளபாதகர்
வேரறச்செற்றந்தணராதியர்
கூடுநட்டைக்கொண்டொருமாதவன் மினிரானே

பாய்மரத்திற்றண்கடலூடுறு
காகமொத்துச்சங்கடமார்பல
பாவலர்க்கச்சந்தவிர்பேரரு ளுதியாதோ
பாவனைக்குப்பங்கமதோதிய
சூனியச்சொற்குண்டகர்வாய்வலி
பாழ்படக்குட்டுஞ்சிவயோகியர் பெருகாரோ

காமணிக்கைக்கொண்டலர்தாமரை
வாளிதொட்டுப்பின்பொருபூமிசை
காதல்வைக்கைக்குஞ்சகியாதெரி புரிவோனே
காதலித்துத்தொண்டுசெய்வார்மன
தாவல்சித்திக்கும்படிநாடிய
காமருற்றுற்றெங்குநிலாவிய தனியோனே

யாமகிழ்ச்சிப்பண்புறுமாறதன்
வேலைபெற்றுத்தந்தையின்மேன்முனி
வாகிவெட்டித்துண்டுசெய்தானுணர்செயலோனே
யாவன்மிக்குற்றிந்திரனாதிய
தேவர்மெச்சிக்கும்பிடும்வீறுறு
மாடகச்சிற்றம்பலமேவிய பெருமானே. (எ௫)

தனதனதனன தனத்ததானன—தனதானா.

உளமுடனுயிருமினிக்குமாறிள
நகையொடுமொழிகளுரைக்குமாதர்க
ளுரிமையின்முழுகுமயக்கமாமிருள் விலகாதோ
வுமைமுலையமுதுகுடித்ததாலணி
மதுரையிலமணர்குலத்தைவேருட [னே
னொருவியபுனிதனெனப்பன்மேன்மைக ளடையே

களவுறுமனதைநிகர்த்ததாமொரு
பெரியகலிடைசெய்கிணற்றினீர்மகள்
களையதுபிறழவுதித்தொராறெனை நடவாளோ
கலியுகபுருடனெனச்சொல்பாதக
னிவளவிலவனதுரித்துமாறிய
கடைபடல்கருதுமெனக்கவாறருள் புரிவாயே

கொளலரும்வளையையெடுத்துவானவர்
வசமறவமர்செய்களத்திலூதரி
குருவெனுமதலைகுடித்துய்வானமு தருள்வானே
கொடியிடைமறுகமுளைத்தபூண்முலை
தெரிதரமயல்கொடடுத்தமோகினி [னே
குறைவறுமகிமைபொறுத்தசேய்பெற வணைவோ
யளவறுகலியிலிளைத்திடாதுத
னுயிர்பொருமனைவிகொடுத்ததாலிகொ
டதுசெயுமவர்தமனைக்குள்வாழ்வுற நினைவானே
யரையுடலரவுதரக்குநேரிரு
தவசிகண்மகிழவிமைப்பிலார்தொழ
வழகியகனகசபைக்குளாடிய பெருமானே. (௭௬)

தந்தத் தத்தன தானன—தனதானு.

தங்கக்கட்டியைநேரிரு கொங்கைப்பொற்புறுமாதர்க
டங்கட்பொய்க்கணையான்மன முடையாதே
சந்தைக்கொப்புறவோர்குல மென்றிட்டுத்துறவாயவர்
தந்திற்சொற்றுளநீதியை யிகழாதே
வங்கத்திற்றிரிவாணிபர் தங்கிட்டத்தினுமேகிவ
ருந்திச்சிற்சிலவாசக மொழியாதே
வஞ்சச்சித்தமிலாதுனை நம்பிப்பற்பலவாமிக
வந்திக்கத்தகுமூதறி வருள்வாயே
இங்கட்செக்கரைநேருரு வம்பெற்றுச்சிவையோடொரு
செங்கட்சித்திரமால்விடை மிசையூர்வாய்
செந்திற்குட்படைவீடுகொடன்றைக்கக்கொடியோருயிர்
சிந்தச்செற்றுயர்சேய்வரும் விழியானே
யங்கத்தைத்தலைமாலையு டன்றொட்டுக்கணநாதரொ
டன்புற்றுச்சிறிதாடிய பெரியோனே
யண்டத்துக்கொருதாரக மென்றொப்புக்கொளநீடுறு
மம்பொற்சிற்சபைமேவிய பெருமானே. (௭௭)

தனனதந்த தத்தத்தனந்த—தனதானு.

முகமுமஞ்சளிட்டுப்பிறங்க
விழிபிறழ்ந்துவெட்டச்சிணுங்கி
முறைபகர்ந்துபக்கத்தில்வந்து விலைமாதர்
மொழியறிந்தழைத்துக்கொடங்கு
கலவியிங்கிதச்சொற்பயின்று
முலைதிறந்தணைக்கப்புணர்ந்து கெடுவார்மேல்

விகசிதம்பெறக்கட்டுமிஞ்சு
கவிதையுந்தொடுத்துப்புகழ்ந்து
வெகுபணம்படைத்திட்டவம்ப ரிகழாதே
விடையில்வந்தெனக்குத்தகுந்த
சுகம்வழங்கியொப்பற்றிலங்கும்
விமலகுஞ்சிதப்பொற்பதங்க ளருள்வாயே
சகலமந்திரத்துக்குமுந்தி
நிகழுமைந்தெழுத்தைப்புகன்று
தமிழ்கொடுந்துதிக்கைக்கியைந்த சிலர்வாழ்வே
சளமலிந்திளைத்துக்கிடந்த
வெளையிவண்டிருத்தத்துணிந்த
சரவணன்றனைப்பெற்றகண்க ளுடையானே
ககவுடம்பெடுத்திட்டொர்சிங்க
வுதிரமுங்குடித்துப்பலண்டர்
களிபெறும்படிக்குப்புரந்த புகழோனே
கனலில்வந்தெதிர்த்திட்டவண்ட
முயலகன்றுடிப்பற்றழுந்து
கனகவம்பலத்திற்சிறந்த பெருமானே. (எஅ)

தத்தன தத்தன—தனதானு.

மக்கண்முதற்பகர்சுற்றநினைத்துள
மட்கும்வினைப்பிணி தொடராதே
வச்சிரமுற்றகரத்தினனைத்தொழு
மட்டிகள்சொற்பயன் வினவாதே
கைக்களிறுரித்தபலர்க்கரியொத்தம
கத்துவமுற்றினி தவிரோனே
கற்புயருத்தமிபக்கமுறப்புனை
கச்சைவிடைப்பரி மிசைவாராய்
தக்கனையட்டவனைத்துணைபற்றினர்
தத்தடையப்பொரு முதல்வீரா
சத்தசுரச்சுருதித்தலையிற்பொலி
தத்துவநிச்சய முடிவானுய்
செக்கரொனக்குலவுற்றசடைக்கிடை
சிற்றுருவப்பிறை யணிவோனே
சித்தகணத்தலைவர்க்கரசொத்துயர்
சிற்சபையிற்றிகழ் பெருமானே. (எகூ)

தனனதன தானதந்ததந்த—தனதானா.

மயிலைநிகர்சாயலொன்றவந்து
முலைசிறிதுதோணவும்பொய்விண்டு
மனவுறுதிபாழ்படுந்திறன்செய் மடமானார்
வலையினிடையேகிடந்தழுந்தி
யளவில்பலநோய்பொருந்திநொந்து
மடியுமவர்பாலிரந்தலைந்த தறியாயோ
வயில்குலவுதோள்பிறங்குமுன்ற
னிளையமகனோடிவந்துவந்தெ
னருணகிரிநீயெனுஞ்சொல்வம்பின் மொழிவானோ
வளவில்பலபாடல்கொண்டபின்பு
னினைவுதவினானவன்செய்வஞ்ச
மறிகிலனையோவிரங்கியின்று னருடாராய்
வெயிலுதவுபானுவுங்குளிர்ந்த
மதியுமனலோனுமென்றியம்பும்
விழிகள்கொடுவானமெங்குநின்ற முதல்வோனே
விரைமலிகடாமுமிழ்ந்தகன்ற
கவுளிடையெநேரம்வந்தறைந்த
விரிசெவியினானைமுன்புதந்த பெரியோனே
கயிலையரசேயறந்தெரிந்த
விமலைகணவாவிரும்புமன்பர்
கவலையறிவாய்வரங்கண்மிஞ்சு கனிவாயா
கதிவடிவமாய்நெருங்குமன்பர்
பலையுடலோடுமுண்டுயர்ந்த
கனகசபைநாடகம்புரிந்த பெருமானே. (௮௰)

தனனதன தந்ததானன—தனதானா.

கிரியனையகொங்கைமாதர்கள்
கலவியைநினைந்துவாடிய
கெடுமதிதவிர்ந்துமாதவ முயலேனோ
கிளர்கலியெனும்பொலானர
சடியொடுதொலைந்துபோயுயர்
கிருதயுகமிங்கிநாளினி லுதியாதோ
பரிதிமதியங்கியாம்விழி
யுறுமுகமலர்ந்துவான்மதி
பழகுசடையுங்குலாவவெள் விடைமேலே

பகவதியுமென்றனுருயி
ரனையகுகனுந்தனோடுறு
பரிசதுவிளங்கநாடொறும் வருவாயே
யரியயனறிந்திடாமுழு
முதலெனவுணர்ந்துபேணுமெ
யடியவர்களெஞ்சினூடுறு மெளியோனே
யசலமதுகொண்டுபோர்பொர
முடுகிநொடியென்றவேலையி
லடையலர்புரங்கணீறிட நகுவோனே
கரியினைவதஞ்செய்தோர்புலி
யுடனதளுரிந்துமாசறு
கலையெனவணிந்துலாவிய முதுவேடா
கதறியழுகின்றசேயதன்
விரலமுதருந்திநீடிய
கனகசபையின்கண்மேவிய பெருமானே. (அக)

தனனதான தத்தத் தனத்தன—தனதானா.

அறமதேநினைத்துக்களிப்புறு
மிதயதாமரைப்பெட்பினுத்தம
ரழலைநேர்மிடிக்கட்சளப்பட னிலையாதே
யமுதெனுவரற்றித்தலைக்கடை
நுழைகுவார்நடுக்குற்றிடப்பக
ரதிகலோபிகட்குப்பொருட்குவை மலியாதே
மறநிலாவுசத்திப்படைக்குக
னெனவனேகர்செப்பச்சிகிப்பரி
வயினுலாவிடச்சற்றெனக்கருள் புரிவாயே
மலயமால்வரைக்கட்பிறப்புறு
மமுதசாகரப்பொற்புடைத்தமிழ்
மதுரவாசகத்துத்திருப்புகழ் பகர்வேனே
துறவுஞானவித்தைத்திறத்தினை
யொருகலாலடிக்குட்டுதித்தவர்
துதையுமாறளித்துக்களிப்புறு குருநாதா
தொடருலோகமுற்றுட்கொளத்தகு
நெடியமாயனுக்குத்திதித்தொழில்
சுடர்செயாழிபற்றக்கொடுத்தொரு துணையாவா

யிறகைவான்மதிக்கொப்பெனச்சடை
முடியின்மீதமைத்துக்கொளத்தகு
மிறைவனேயருட்சத்திநட்புறு பழையோனே
யிகல்பொலார்புரத்தைக்கணத்திடை
பொடியுமாறுசெற்றிட்டவெற்றியி
லிணையிலாடகச்சிற்சபைச்சிவ பெருமானே. (அஉ)

தனனதானனத் தனதனதனதன—தனதானை.

கருணையான்மிகப்பெரியநினடியவர்
சரணவாரிசத்துதிர்துகண்மிகவணி
கவினிலாவுநற்றலையெனைமருவிடல் செயலாலே
கருதும்வாழ்வுபெற்றகமகிழ்வுறுதின
முளதெனுநினைத்துளனெனையிவண்மலி
கலியினுலிளைத்தலமரவிடுவது முறைதானோ
தருணமீதெனத்தெரிகிலையெனிலுனை
முழுவியாபகத்தினனெனல்பிழையது
சரதமேயெனச்சுருதிகள்பலபல சொலல்வீணோ
தவளமால்விடைப்பரிமிசையுமையொடு
குகனுமோர்புறத்தினிலுறமகிழ்வொடு
சகலதேவர்சுற்றிடநினைதொறுமெதிர் வருவாயே
யருணமாநகர்ச்சிகரியிலமர்குகை
நமசிவாயனிற்கருதலொடொருகவி
யறைதலாலடற்புலிபசுவினைவிட வருள்வோனே
யரிமுனுமெனத்திகழ்பலகடவுளர்
மனதுநாணுறச்செயுமொருசிறுநகை
யவுணர்வாழுமுப்புரமெரிவதுசெயும் வலியோனே
பொருநைமாநதிப்புனல்வளமலிவுறு
திருநெல்வேலியிற்றவமுயலுறுமொரு
புனிதனூர்வமுற்றிடவெனைமகவென விடுவோனே
புவனகோடியிற்றெரிதருதொகைதவிர்
சமயவாலயத்தினுமுளகலைவரு
புகழ்கொளாடகச்சபைநடுநிலவிய பெருமானே.

தனத்தனனத் தனத்தனத்—தனதானை.

இனித்தமொழிப்பகட்டும்விழிப்
புரட்டுமுலைக்குலுக்கும்விளைத்
தெனைக்கவலைக்கடற்குள்விழச் செயுமானை

ரொழிற்கருதித்தவிக்குமனக்
களிற்றைவசப்படுத்திமறைக்
கிசைக்கருமெய்ப்பதத்துணையிற் பிணியாயோ

சனித்தமனுப்பிறப்பினைமிக்
கிளப்பமெனக்குறித்துவிணிற்
றகர்க்கொலைதொட்டிறக்கருதிப் புரிதீயோர்

தமைக்கறுவிச்சிதற்கொலையொப்
பவற்றையுமற்றிடச்செயுமெய்த்
தவத்தைநினைத்திருக்குமெனக் கதுவாமோ

பனித்தடவெற்பினிற்றவமிக்
கியற்றியவுத்தமிக்கருகிற்
பழிப்புரைசெப்பிடற்குநரைத் தலையானாய்

பறித்ததலைத்திருட்டமணத்
திரட்கதறத்தெளித்ததமிழ்ப்
படித்தவனைத்துதிப்பவருக் கெளியோனே

தனித்தொருசொற்பனத்திலருட்
குறிப்பொருசற்றுணர்த்தியெனைத்
தடுத்தடிமைப்படுத்தியசற் குருநாதா

சகத்திரையத்தினிற்புகழ்பெற்
றரக்கனழக்குதித்துயர்சிற்
சபைக்கழகைப்பெருக்குமருட் பெருமானே. ()

தானதத்தன தனதனதானன—தனதானா.

பூரணப்பொருளதனிலைதோய்தரு
மோனவித்தகமலிசிவயோகுணர்
போதமுத்தர்கடமையிகழ்வாரொடு பழகாதே

போதகத்தமர்தருபிரமாமுதன்
மூவர்கைத்தொழில்வலிமையினுலகல்
பூதலத்தொடுபிலமதில்வாதனை யயிலாதே

வாரணக்களிறொருவிசைகூவுமு
னோடியப்படியருள்புரிவானிகர்
வாழ்வுபெற்றிடமுயலுமெனுவல்க ளறியாயோ

மானெனக்குலவியவிழியாளொரு
பாகமுற்றிடவிடைமிசையேறியென்
மானதத்தினிலுளபடியேயெதிர் வருவாயே

காரணப்பரசிவகருணுகர
நால்வருக்கொருநிலையருள்வாயெதிர்
காமனைப்பொடிபடவிழியாலடும் வலியோனே
காவிரிப்புனல்கடலிடைபோய்விழு
மூரிடத்தொருவணிகர்பிரான்மனை
காதன்முற்றியவிடனெனவேகவு மிசைவோனே

யாரணத்துடனளவறுமாகம
கோடிகட்குளுநிறைவுறுபேரரு [னே
ளாழியைத்தருமொழியுடையானெனின் மகிழ்வோ
யாசிலுத்தமமுனிவர்பராவிய
பாடல்பற்பலபகர்புலியூரிடை
யாடகச்சபையதனினிலாவிய பெருமானே. (அ௫)

தந்ததந்த தத்ததனதன—தனதானு.

சந்தனங்குழைத்தகளபம
ணிந்தகுன்றமொத்துநிலவிய
தண்பெருந்தனத்துவனிதையர் மயலாலே
சந்தையின்கணுற்றளுமலியி
லிங்கலைந்துபுத்திவலியினர்
சந்ததஞ்சிரிக்கமெலிவது தவிரேனே

கந்தனுங்கடற்கணரவணை
கொண்டுறங்குமச்சுதனுமிணை
கண்டியம்பிடப்பல்வகைநல முயலேனே
கண்சிவந்தவெற்றிவிடைமிசை
மங்கைபங்குமத்திபுலிதரு
கஞ்சுகம்பொறுத்தவடிவமு மிலகாதோ

சுந்தரன்றுதித்ததமிழ்மயன்
மிஞ்சியங்கொருத்திமனையிடை
தொங்கிசந்தவிர்க்குமொழிசில பகர்வோனே
தொங்குதொங்கெனத்தென்மதுரையி
லிந்தனந்தலைக்கொடிசைபயி
ஞெண்டர்தொண்டிசைக்குமவர்களை மறவானே

சிந்ததன்கணற்றையினிலர
வங்கலுழ்ந்துவிட்டவிடநுகர்
திண்டிறன்குறிக்குமவர்பகை களைவோனே

சிம்புளென்றுருக்கொடுலகுய
வென்றுசிங்கமட்டபிறகொரு
செம்பொனம்பலத்தினடநவில் பெருமானே. (அசு)

தானதானன தனந்தனத்தன—தனதானு.

கூரவேல்விழிமடந்தையர்க்கதி
மோகமாயவர்நினைந்துரித்தொடு
கூறுமேவல்கள்புரிந்திளைப்பது தவிரேனே

கோபமோடொருகரும்பகட்டினி
லேறியேசமர்பொருந்தொழிற்பெறு
கோரனுதியர்திறன்குறித்திவண் மெலிவேனே

சூரனுருடல்பிளந்துவெற்றிகொள்
வேல்விசாகனெனெடுணும்படிக்கொரு
தோகைவாகனமதுங்கொடுத்தருள் செயுமாறே

தூயமால்விடையதன்புறத்துமை
யானமாதிடமிருந்திடச்சிறு
சோமசேகரமிலங்குறத்தினம் வருவாயே

மாரனுமவனுடம்புமுற்றும்வெ
ணீறதாகிடமுனிந்தமெய்ப்புகழ்
வாழிநாடொறுமொழிந்தபத்தர்க ளுடன்வாழ்வாய்

வாதுகூறியசமண்கெடத்தமிழ்
பாடினுனிகர்பெருந்தவத்தினர்
வாய்மைநாடினர்மனந்தனிற்பெரி தவிர்வோனே

தீரனுவொருசிலம்பெடுத்தவி
ராவணேசுரனழும்படிக்கொரு
சேயதாள்விரலழுந்தவைத்துள மகிழ்வோனே

சேலுலாவியபசும்புனற்பணை
தோறும்வால்வளையினங்கண்முத்துமிழ்
சீர்குலாவியசிதம்பரத்தமர் பெருமானே. (அஎ)

தந்ததன தத்ததந்த—தனதானு.

குஞ்சரமருப்பைவென்றுசந்தனமிகத்திமிர்ந்த
கொங்கைமகளிர்க்குநெஞ்ச முருகாதே
கும்பமுனிமுற்பயந்தசெந்தமிழிடத்திலன்பு
கொண்டுனைவழுத்துமின்ப மடையேனே

வஞ்சகமிகப்பொலிந்துகொன்றுதசையுட்கொள்கின்ற
வண்டனையடக்கும்வென்றி மருவேனே
மஞ்சுறழொருத்திபங்கிலொன்றிடவிடைச்சிலம்பில்
வந்தினிதெனக்கியைந்த வரமீவாய்
நஞ்சவிர்கறைக்களங்கொள்சங்கரவெனப்பகர்ந்து
நம்பொருவனேற்றனென்று முறுவோனே
நங்கையர்கள்சுற்றவந்தொர்பங்கயம்விடுத்தவம்ப
னந்துறவிழித்தசெங்க ணுதலோனே
சஞ்சலமிகுத்திறைஞ்சுமைந்தனுயிரைப்புரந்து
சண்டனைவதைத்துயர்ந்த கழலோனே
தண்டலையுடுத்தகன்றதென்புலிசையிற்பிறங்கு
தங்கசபையிற்சிறந்த பெருமானே. (அஅ)

தனனதன தனனதந்த—தனதானு.

ஒருமைபடுதவமுயன்றுவினையுதவுமயலைவென்று
னுரிமைமிகுமடியர்தங்க ளுடனேநா
னெளிபெருகுமிகல்பொருந்தியெதிர்சமயமுழுதுமஞ்ச
வுயர்பொதுநனிலையினின்று மகிழ்வேனே
கருணையொழுகியகருங்கணுமையொருகைமதலைகொண்ட
கவினெடுநிஙினிடமிலங்க விடைமேலே
கனகநகரினர்நெருங்கமுனிவர்துதிசெயவிரைந்து
ககனவெளிநிறையவென்க ணெதிர்வாராய்
திருமருவுபுயமுகுந்தனொருவிழியையணிதல்கண்டு
திதிபுரியும்வலிமைதுன்ற வருள்வோனே
தெளியுமறைபலவிளம்புபிரமர்தலைவடமணிந்த
திரள்புயமதனிலென்வெண்சொல் புனைவோனே
தருவரசருடலினென்புமமரருடன்முழுதும்வெந்த
தவளவடலையும்விரும்பு மகன்மார்பா
சருவபரிபுரணமென்றுபெரியவர்கள்பகரகண்ட
சபைநடுவின்மிகநடஞ்செய் பெருமானே. (அகூ)

தனனத்தனு தத்தத்தத்தன—தனதானு.

அருள்சற்றிலராகிச்செற்றத்திடை
முழுகிக்கொலையாதிக்கொப்புக்கொளு
மவர்சொற்றுளநூல்கட்கிச்சித்துள மருளாதே
யறிவுக்கறிவாநிற்கப்பட்டநி
னியல்பைக்கருதார்மற்பொக்கத்தின
ரறைசொற்கொடுவாதிட்டுச்சித்தம தயராதே

யிருண்மைக்குழலார்சுற்றச்சித்தச
னலர்கட்கணைமாரிக்கொக்கப்பெய
வினையற்றுயர்ஞானக்கற்புத்தவ மழியாதே
யெனையிப்பொழுதேகைப்பற்றிக்கொள
விடையிற்கவுமாரிக்குப்பக்கலி
லெழில்விட்புலவாசத்துச்சற்சன ருடன்வாராய்

வெருளுற்றுளபாலற்குப்பற்பல
வயதைத்தருவான்மைப்பொற்புச்சமன்
விழவட்டுயர்சீர்செப்பத்தக்கவர் துணையாவாய்
விகடக்கவுண்மால்வெற்பைப்பெற்றபி
னசலத்தரசாடுமாற்றைப்புத்திரன்
விழியிற்பொறியாறுய்த்திட்டக்கண மருள்வோனே

பொருளைத்துணையாநத்திச்சத்திய
மதைவிட்டுழல்வார்சித்தத்துக்கிடை
புகுதற்கிசையாதெட்டுத்திக்கினு நிறைவோனே
புனிதச்சிவயோகத்துச்சித்தர்கள்
பரவிப்பணிசீலத்தைத்துறவிர்
புலிசைத்திருவோலக்கத்திற்றிகழ் பெருமானே. ()

தனனதந்தன தனனதந்தன—தனதானு.

பருவமங்கையர்முலைமுகந்தெரி
சனைதரும்படிமிகமுயன்றயர்
படிறுதுன்றியமனமுனன்பிடை யமிழாதோ
பழையவின்கவிகளினயம்பல
திருடியங்கவைகொடுமுடைந்துசொல்
பனுவல்வஞ்சகருடனிணங்குவ தொழியாதோ

மருமலிந்தலர்கமலமொன்றிய
பிரமனெஞ்சறிகிலர்துணிந்துபொய்
மகமுவந்துயிர்வதைசெயும்பிழை தவிராதோ
மறியுடன்றிகழ்மழுவணிந்தகை
யிலகிடும்படியிடபமென்றதின்
மலைமடந்தையொடெனதுகண்களி னெதிர்வாராய்

குருவெனுந்திருவடிவுகொண்டுபொ
னுடன்வரும்பனவனைநினைந்தொரு
குளிர்குருந்தையினடியிலன்றினி தமர்வோனே

குலிசபுங்கவருடலெலும்பொடு
கமடமுந்தலைவடமுமங்கத
குலமுநன்கணிதருபெரும்புய முடையானே

திருமடந்தையுமணியுடன்றுள
வமுமிலங்கெழிலுரமுகுந்தனோர்
செயமுறும்படைகொளவிரைந்தருள் புரிவானே

செகதலம்புகழ்பெருமைகொண்டர
வொடுபெரும்புலிபரவும்வண்புனை
சிவசிதம்பரநடநடம்பயில் பெருமானே. (௬௧)

தந்தன தத்ததானன—தனதான.

நஞ்சமேயொத்தவாள்விழி
மங்கைமாரிச்சைமேலிட
நைந்துநோய்முற்றிவீணினின் மடியாதே

நன்றியோர்சற்றுநாடலில்
வம்பர்பாலுற்றதாலுள
நன்றெலாமற்றபாழ்மிடி வளையாதே

வஞ்சமீறிப்பலாருயிர்
கொன்றவூனுட்கொள்பாதகர்
மங்கயோசித்தவாடல்கள் புரியேனே

வண்குலாம்வெற்றிமால்விடை
யின்கண்வாமத்திமாசல
மங்கைவாழ்ச்சதாநிதம் வருவாயே

யஞ்சலோதிப்பொனூரவ
ரின்பமாகக்கணலயி
லங்கைவீரக்குமாரனை யருள்வோனே

யம்புராசிக்குள்வாசுகி
தந்தவாலத்தையாவரு
மங்குமாய்வுற்றிடாவண மயில்வோனே

செஞ்சரோசத்தைநேர்விழி
யொன்றினான்மிக்கபூசைசெய்
திண்கைமாயற்கொராழிமு னருள்வோனே

திங்கள்வேணிப்பராபர
கொன்றைமாலைச்சதாசிவ
செம்பொனாலைக்கமேவிய பெருமானே. (௬௨)

தந்ததந்த தத்ததனதன—தனதான.

சங்கலம்புகைப்பெணரசியர்
கொங்கையின்பநத்திமெலிவுறு
சங்கடந்தவிர்த்துனடியிணை பரவேனோ
சஞ்சலம்பெருக்கியலேவது
கண்டருந்தவத்துமுனிவரர்
சந்ததஞ்சிரிக்குமிழிவது விலகாதோ
செங்கடம்புசெச்சைகுரவணி
கந்தனென்றிகத்துமனிதர்கள்
சிந்தையுங்குறிக்கவதிசய முயலேனோ
சிந்துரந்தரித்தநுதன்மலே
மங்கைபங்கிருக்கவிடைமிசை
திண்கணங்கள்சுற்றவொருதரம் வருவாயே
யங்கமம்புமுற்றுகமடம்வெண்
மண்டைகொம்புகொக்கிறகுமதி
யங்கரந்தைபச்சறுகுமுத லணிவோனே
யங்கதங்கடற்குளுமிழ்விட
மும்பர்கண்டடுத்துமுறையிட
வஞ்சலென்றுணாத்துநொடியினி லயில்வோனே
பங்கயன்பொறித்தவிதிவலி
தென்றுநொந்திளைக்குமடியினர்
பங்கமும்பிறப்புமரணமு மொருவானே
பண்சிறந்தொலிக்குமுதுமறை
யின்குலந்துதித்துவழிபடு
பைம்பொனம்பலத்தினடமுயல் பெருமானே. ()

தனனதன தானதந்ததந்த—தனதான.

கயலிணையதானகண்கள்கொண்டு
பொருமகளிர்மோகமிஞ்சநொந்து
கவலையிடைமூழ்குமிந்தவம்பு தொலையாதோ
கடுகளவுமீகையின்றிவந்த
விரவலர்கண்மேல்விழுங்குணுங்கர்
கடைகடொறுமேகிநின்றுகெஞ்ச லொழியாதோ
வியலிசையுநாடகங்களுஞ்சொல்
கவிஞரனைவோர்களுந்திரண்டொ
ரிடமதனின்மேவியின்பமிஞ்ச வடையாரொ

விபூகவிநாயகன்சிலம்பு
தொறும்வளர்விசாகனென்றியம்பு
மிருவரொடுநானொர்மைந்தனென்று தழுவாயே

புபணிறமுராரியுஞ்சகஞ்செய்
தருள்பிரமதேவனுந்துணிந்து
பொருகளமதூடெழுந்தகுன்றின் வடிவானாய்

புலவனொருநாண்மொழிந்தசெஞ்சொல்
கொடுபரவைவாழுமங்குசென்று
புலவியறமாறிடுந்திறன்செய் தருள்வோனே

யயலவர்கள்வாழ்புரங்கரிந்து
பொடிபடமுனாள்வெகுண்டவென்றி
யதைமொழிகுவாருடன்றிரிந்த புகழோனே

யடியவர்குழாநெருங்குகின்ற
புலிசைநகரூடுசெம்பொன்மன்றி
லனவரதநாடகம்பயின்ற பெருமானே. (௯௪)

தனனதனதன தனத்ததானன—தனதானா.

மயிலைநிகர்சொலநடிக்குமாதர்கள்
கபடவபிநயமொழிக்குமால்கொடு
மறுகும்வினைவலிவிளைத்தபாழ்மிடி யதனாலே

மலினமிகைபடுமனத்தனாமெனை
யுனதுகழலணிபதத்தைநாடிய
மகிழ்வினொடுதுதிசெயச்செய்தாயிது பிழையாதே

பயிலுமுதுகலைபடித்தநாவல
ரறிவிலமைவரும்வியப்பதாகிய
பதிகமளவறவுரைத்தநால்வர்க ளொடுமேலோர்

பகருமகிமைகள்படைத்துநான்மறை
நுவலுநெறிகளையுயர்த்தியூனுகர்
படிறர்குலமறவொறுக்குமேன்மையை யருள்வாயே

சயிலமகளருகிருக்கமால்விடை
முதுகிலமரனைவருத்தவாவுறு
தகுவர்நினையினும்வரத்தையேதரு மிறையோனே

தனதுமகண்மணமுடித்துளானரு
கணுகியவுள்சிகையறுத்துவேறருள்
சரதநினைபவர்மனத்தைநாடொறு மகலானே

கயிலைமலையினையெடுத்தராவண
னழுதுகதறிடவழுத்துசீர்திகழ்
கழல்கொடியமனைவதைத்தசேவக முடையோனே
கரியமுயலகனெதிர்த்தவாணவ
நசியவடியவர்களிக்கமாசறு
கனகசபைநடுநிருத்தமாடிய பெருமானே. (௯௫)

தனனதத்தத் தனனதத்தத்
தனனதத்தத் தானத்தத்—தனதான.

அயனெழுத்தைக்குறியெனச்செப்
பியபிழைச்சொற்காரர்க்குட்
சுழலுமற்பக்குணமொழித்துத்
தவமுனூற்றிப்போதத்துக்
கரியமெய்ச்சித்திகள்படைத்திட்
டருளளக்கர்க்கூடுற்றுக் களியேனோ

வவனெனச்சொற்றவளெனச்சொற்
றதுவெனச்சொற்றேமுட்டிப்
பொருசமர்க்கெய்ப்பறுமதத்துர்ச்
சனர்களுக்கெட்டாமற்சிற்
றறிவினுக்கப்புறமிருக்கத்
தகுமுனைப்பற்றூர்வத்திற் றிளையேனோ

புயலெனக்கைக்கொடைவிளைத்துக்
கயவர்வெட்கப்பேர்பெற்றுத்
தவர்கள்சுற்றக்கவிஞர்மெச்சத்
தலமுழுக்கப்போய்வெற்பைப்
பொருமுலைச்சிற்றிடையையத்திக்
கிடையழைத்திட்டாளுத்துத் திகழேனோ

புனையில்கொற்றத்தனிவிடைக்கட்
கவுரிபக்கத்தேயுற்றுப்
பெரிதுவக்கக்குகனடுப்பெற்
றினிதிருக்கத்தேகத்திற்
புனைபொடிப்பொற்புடனெடுத்துச்
சொலும்வியப்புத்தோணச்சற் றெதிர்வாராய்

சயமகட்குக்கணவனற்றைப்
பொழுதிலொற்றைப்பூவொத்துத்

தனதுசக்கைக்கழலிலிட்டுத்
தொழவிரக்கத்தாலொப்பிச்
சகமுழுக்கத்திதிசெயச்சக்
கரமளித்திட்டாய்சற்பப் பணியோனே
தகுவர்வெற்றிச்சமர்மிகுக்கத்
தளர்வுபட்டுற்றோர்கட்குப்
பழையகொற்றத்திருவமைக்கக்
கருதிமெத்தச்சூழ்கொற்கைச்
சரவணத்திற்சிறுவனைப்பெற்
றருண்முதற்சித்தாபத்தர்க் கெளியோனே
கயமுதற்சிற்சிலவுரித்துக்
கலையினிற்குப்பாயத்திற்
கொளும்விதத்தைத்தமிழினிற்செப்
பிடுமொருத்தற்காமொற்றிற்
கவினுடைப்பொற்பரவைபக்கத்
தினிலடுத்துப்போகைக்குச் சலியானே
கயிலைவெற்புக்கிறைவவத்தித்
தலைமகற்பெற்றாய்தெற்குத்
தலமுடைத்துட்டனையுதைத்துப்
புகழ்பொறுத்திட்டாய்சுத்தக்
கதியளிக்கத்தகுமெழிற்சிற்
சபையிடத்துற்றாய்முக்கட் பெருமானே. (௬௬)

தய்யதத்தன தானனதனதன—தனதான.

சைவமுற்பகர்மூவிருநெறிகளு மெலியாதே
தள்ளுபட்டனவாகியபுறநெறி தழையாதே
மெய்வலித்திருநீறுடன்முழுதினு மணிவேனோர்
வெள்ளிவெற்புறழ்மால்விடைமிசைதினம் வருவாயே
பொய்வழக்கொருகோவணமதுகொடு புரிவோனே
புள்ளிமிக்குறுமாமயின்முருகனை யருள்வோனே
தெய்வமெத்தனையோவெனுமவருள மறியானே
தில்லையிற்றிருவாசகமெழுதிய பெருமானே. (௬௭)

தனதந்தன தானன தானன—தனதானு.

அறிவென்றறியாமையதாமென
நிகழ்கின்றவையூடும்விராவுநி
னருள்கண்டுகொளாதெனைவாடிட விடலாமோ
வருவம்பரமாமெனநேர்வரு
முருவம்பொருளாமெனவேறுசெய்
தலமந்துளமூடருமேசிடன் முறைதானே
குறிகண்டறியாதவர்போன்மிடி
வளைகின்றதுதீர்தரவீனர்கள்
கொளுமம்பொனிலாவல்கொரேர்தொறு முறலாமோ
குருவென்றுகலாலடிமேவிய
வடிவங்கொடுதோணியெனுருயிர்
குலையுந்துயர்வேரறஞானம தருள்வாயே
மறியும்பரசாதியவாயுத
வகையும்புனைதோண்மிசைபாவலர்
வனையுந்தமிழ்மாலையுமார்வமொ டணிவோனே
மடமங்கையர்சூழ்தரவோர்கிளி
தனில்வந்தொருபூவிடும்வேளெழில்
வடிவம்பொடியாகிடநாடிய விழியானே
செறியுஞ்சமண்வாதனைதீரமுன்
மதுரம்பொழிபாடல்கள்பாடிய
சிறுமைந்தனைநாடியமாதவ ருயிராவாய்
சிவைபங்கினில்வானவராதியர்
பரவும்புலியூரினிலாவிய
திருவம்பலநாடகமாடிய பெருமானே. (சுஅ)

தனந்தன தானன—தனதானு.

மடந்தையர்மாலிடைநிதந்தளர்வேனுனை
வணங்கிடுமாதவ முறுவேனே
வதஞ்செயும்வேள்வியின்முயன்றுளதீயரும்
வருந்திநின்வார்கழல் கருதாரோ
நடஞ்செயுமாமயிலிவர்ந்துளவேலவ
னவின்றபல்வாய்மையு மிலகாவோ
நகுஞ்சமணுதியர்வெருண்டழுமாறுசெய்
நலம்பெறுபாவலர் பெருகாரோ

குடங்கையைநேர்விழிநெடுங்கிரிநேர்முலை
கொளுங்கவுமாரிதன் மணவாளா
குவிந்துளசீர்மனமுறும்பெரியோனெதிர்
குருந்தையினீழலி லமர்வோனே
திடம்பொலிதானவர்புரம்பொடியாவது
செயுங்கனிவாய்நகை யுடையோனே
திகம்பரனேயருணிறைந்தவனேதிகழ்
சிதம்பரனேசிவ பெருமானே. (கூகூ)

தனனத் தானத்—தனதானு.

கருணைச்சீலத்தமர்வித்தாரக்
கவிகற்போரைப் பழியாதே
கயலைப்போலப்பிறழ்பொற்பார்கட்
கணிகைப்போகத் துருகாதே
தருமச்சீலத்தினைவிட்டோரைத்
தழுவிப்பேசித் திரியாதே
தவளக்காளைப்பரியிற்றேணித்
தமியற்கோர்சொற் பகர்வாயே
குருளைக்கோலத்திரளைப்பேணிக்
கொளவப்போதப் படியானுய்
குலிசத்தானுக்கரசிட்டாள்கைக்
குகனைப்பாலத் தருள்வோனே
பொருளுக்காசித்தவனுக்காகப்
புகல்சொற்றூதுக் கிசைவோனே
பொதுமைப்போதத்தினருக்காநற்
புலிசைக்கோயிற் பெருமானே. (ள)

தந்ததன தந்ததானன—தனதானு.

பங்கயமிருந்தவேதிய
னென்கரம்வரைந்தபாழ்விதி
பர்தமுதவுங்குரூரம தழியாதோ
பண்டொருதொழும்பனுலெம
னங்குயிரிழந்தவாறுணர்
பண்பினைநம்புவாரறி விலர்தாமோ

வைங்கணைபொழிந்தமாரனை
வென்றுளாநினன்பின்மூழ்கியு
மங்கயலெனுங்கணார்மயல் வரலாமோ
வன்புநெறிகொண்டநால்வரொ
டென்றனையிணங்குமாறுசெய்
தந்தரரறிந்திடாநிலை யருள்வாயே

சங்கரசுயம்புவேயுமை
பங்குடையநம்பனேயொரு
தந்தியுரிகொண்டவாவெனின் மகிழ்வோனே
தண்குலவுகொன்றைகூவிள
மந்திமதிகங்கைதாதகி
தங்கியபெருஞ்சடாடவி யுடையானே

சிங்கவடிவங்கொண்மாயனை
வென்றுரிகவர்ந்தவாவிரி
தெண்கடல்விடங்கொள்வாய்சிவ மகதேவா
திந்திமிதிமிந்தெய்தாதிமி
யென்றுசரதங்குலாவிய
செங்கனகமன்றிலாடிய பெருமானே. ()

தனனதந்தன தானதந்த—தனதானா.

பழிபொருந்தியநூலோர்தங்கண்
மொழிவிழைந்தலையாதேயன்பர்
பலருறுங்குழுவூடேசென்று பிழையேனா
பரமதங்களெலாநோய்மண்டி
யழியவுங்கொலையாகாதென்ற
பழமைகொண்டவர்வாழ்மாறுஞ்செய் துலவேனா

வழிபடுந்தவசாலேயைந்து
பொறியுமஞ்சமுனோர்போலுன்றன்
மகிமையின்றமிழாலேவிண்டு மகிழேனா
மழுவுடன்சிறுமான்வாழுங்கை
யிலகவந்தரர்சூழ்சேவின்கண்
மலைமடந்தையினோடேவந்து னருடாராய்

விழியினங்கியினாலேகந்த
னெனுமகன்புவிமீதேவந்து
விபுதர்தங்களையாள்வானெஞ்சி னினைவோனே

விலைமடந்தைமுனோர்தூதென்று
நடைபயின்றுமநாளோர்தொண்டன்
மிகமொழிந்தசொலாலானந்த முறுவோனே
செழியனென்றுருவானுய்விண்டு
பணிபொருந்தியதாளாவம்பர்
செறிபுரம்பொடியாமாறங்கு நகுவோனே
திகழ்சிலம்பொலிகோடாதென்று
மருணடம்பயில்வானேமுந்து
சிவசிதம்பரதேவாவெங்கள் பெருமானே. (௱௨)

தத்தனத் தத்தன—தனதானு.

அத்திரத்தைப்பொரும்விழிச்சியர்க்கிச்சைகொடு
னற்புதத்தைச்சிறிது நினையாதே
யத்தமிக்குற்றவனைநத்துமிக்கட்டுமுழு
தற்றிடத்தக்கதின முதியாதோ
தத்திரப்பட்டடிமையிப்படித்தட்டழிவ
தற்றவிர்க்கைக்குனுள மிசையாதோ
சத்துவப்பத்தியினைத்துதித்துப்பொருவில்
சத்தியத்தைத்தெரிய வருள்வாயே
வத்திரத்திற்புலியுரித்துடுத்துச்சடையின்
மத்தம்வைத்துத்திரியு முதியோனே
மைக்கடற்கொத்தவடிவத்தரிக்குப்பின்வரும்
வக்கணைச்சொற்கவுரி மணவாளா
சித்திரத்தைப்பொருவுபொற்கொடிக்குக்கனிகள்
செட்டிமுற்சட்டியிடை தருவானே
சித்தியைச்செப்பரியமுத்தியைப்பத்தர்பெறு
சிற்சபைக்குட்குலவு பெருமானே. (௱௩)

தனன தானன தனந் தனத்தன—தனதானு.

அளியைநேர்விழிமடந்தையர்க்குள
முருகிஞலுநின்வரம்பெறக்கொளு
மதிகவாசையைமறந்துவிட்டிரு ளிடைமூழ்கே
னடியனேனிவணலைந்துபற்பலர்
மனையின்வாசலிலிரந்திடச்செய
லறமதோவலவருந்தவத்தின றொடுசேராய்

கிளியதாமொழிபகர்ந்துருக்கிய
பரவைநாயகன்விரும்புபொற்குவை
கிருபையாலுதவிடுங்குணத்தினை விடலாமோ
கிழவனீயெனவிகழ்ந்ததுர்க்குண
மொருவியாவினுமிறைந்தமெய்ச்செயல்
கிளர்தலால்வனைசருந்திருப்புகழ் பழுதாமோ

களியளுமதுகரங்கள்சுற்றிய
விதழிதாதகிகரந்தைகட்செவி
கலைநிலாவறலமைந்தபொற்சடை யுடையானே
கவுரியாமளைகடம்பனைத்தரு
குமரிபார்வதிகருங்கணிற்பொலி
கருணையாலறம்விளங்கவைத்தவண் மணவாளா

தெளிவில்சாரணரிகழ்ந்திடத்தின
முழுவெணீறணிதருர்திறத்தினர்
சிவசிவாவெனவிடும்பல்பச்சிலை விழைவோனே
சிறையைநேரிகபரங்கள்கைத்தருள்
விழையுமாதவர்நெருங்கிடத்தகு
திருநிலாவியசிதம்பரத்தமர் பெருமானே. (௱௪)

தந்தனத் தனதானன—தனதானா.

செம்புகர்க்களிறேநிகர்கொங்கையைக்கொடுபோர்பொரு
சிங்கியர்க்கதிமால்கொடு திரியாதே
சிந்தையிற்சிறிதேனுமிரங்கலற்றுளபாதகர்
சென்றபக்கலிலேகியு மிரவாதே
கொம்புடைத்தகரோறியகந்தனுக்கிணையாம்வலி
கொண்டிகத்தினும்வாழ்புகழ் தருமாறே
குன்றெனத்தகுமால்விடையின்புறத்துமையாளொடு
கொஞ்சியெற்கெதிர்வானிடை வருவாயே
கம்புதொட்டசைவார்குழைதுன்றுசிற்பரனேசிவ
கங்கையிற்படிவார்வினை களைவோனே
கந்தரத்தினின்மார்பினிலென்பையிட்டவனேகர
கங்கணத்துடனுழியு மரவானு
யம்புயத்தயனேர்தலைமண்டையிற்பலிதேறியு
மந்தணர்க்கொருகோனென வளர்வோனே
யைந்தொழிற்குறையாவணநின்றுதத்துவமாமுத
லம்பலத்தினிலாடிய பெருமானே. (௱௫)

தனனதானன தந்தனத் தத்தனந்—தனதான.

எகினனாகியதந்தைசொற்றட்டிவந்
தடிபராவியபுங்கவர்க்குப்பகர்ந்
திடுவதாமொருமந்திரத்தைப்புகன் றருள்வாயே
வினையவாசனையைந்துமற்றுச்செழுந்
தமிழினாலுனைமுன்றுதித்திட்டதொண்
டினர்கண்மேவியவென்றிபெற்றுச்சிறந் திடுவேனே
திகில்விடாதிவணுந்தினைத்துப்படுந்
துயருநீதரலென்றுணர்த்திப்பினுந்
திருடர்போன்மறைபண்புனக்குத்தகுந் ததுதானோ
தினமுமாணிணைமுன்பவர்ச்செற்றுநின்
பதசரோருகம்புகர்க்குப்பெருந்
திருவிழாவுதவும்புகழ்க்கிச்சைகொண் டதுவீணோ
சகிகளோடொருகுன்றிடத்திற்றவம்
புரிமனோன்மணிதன்செவிக்குக்கொடுந்
தழலைநேர்மொழிவிண்டுபத்தித்திறந் தெரிவோனே
சகுணயோகமில்வம்புபற்றிப்பரம்
பொருவில்சூனியமென்றிசைத்துக்கெடுந்
தகையுளார்சிறுநெஞ்சகத்திற்புகுந் தறியானே
யகிலமியாவையுமுண்டுகக்கித்தரும்
பவளவாயனுமம்புயத்திற்பிறந்
தவனும்வாதிடுமென்றுவெற்பொத்துயர்ந் திடுவோனே
யரகராவெனுமன்பருக்குச்சுகந்
தருசதாசிவவும்பர்மெச்சப்பிறங்
கனகநாடகமம்பலத்திற்செயும் பெருமானே. (௱௬)

தந்தன தத்தன தானன—தனதான.

குன்றமெனத்திகழ்பூண்முலை
மங்கையருக்கதிமால்கொடு
கொஞ்சுமயற்கடலூடமிழ் வதனாலே
கொஞ்சமதிச்சிறியோர்தரு
பைம்பொன்விருப்பமுமேலிடல்
கொண்டுதவித்துழல்பாழ்வினை யறியாயோ
வென்றன்மனத்திடையோர்கன
வின்கணுதித்தவனாடிய
விங்கிதமெய்ப்பொருணீயல துளதேயோ

வெந்தவிதத்தினிலாகிலு
முன்றன்மலர்க்கழல்சேருமு
னிங்குநினைத்துளவாழ்வுற வருள்வாயே

கன்றதனைக்கனிதோய்விள
வின்றலைவிட்டெறிவாளெரு
கண்புனையத்தகுபூசனை யுடையானே

கஞ்சனடுத்தலையோடுகொ
டெங்குமிரப்பவனேயெதிர்
கண்டமடக்கொடியார்வலை கவர்வோனே

தென்றல்வரைக்குறுமாமுனி
முந்துதவப்பயனாகிய
செந்தமிழ்கற்றவரோவல்கள் புரிவானே

திங்கண்முடிப்பவனேயுமை
பங்கினடிப்பவனேயுயர்
தென்புலிசைப்பதிமேவிய பெருமானே. (௱எ)

தனனதந்தனத் தானன—தனதானா.

அடியார்தங்களுக்காகிய
பணியாவுஞ்செயற்காசைகொ
டயர்வேனெஞ்சகத்தூடிள முலைமானை

ரயில்வேலென்றகட்பார்வையின்
மயலாகுஞ்சழக்கேன்வரு
மதுநீயன்றிமற்றார்செய லறியேனே

விடிபோலுந்தொனிச்சீர்மறை
முடிவூடென்றனக்கோரய
விலையேயென்றசொற்றானிச மலதாமோ

விருபேர்வெஞ்சினத்தோடிடு
மடிதானந்தரத்தோர்முத
லெவர்மேலும்படற்றேறிய மலைவேனே

படியேழும்படைத்தோனெடி
யவன்வானந்தனிற்றேவர்கள்
பலர்தாமுந்துதித்தேதொழு மிறையோனே

பனிசூழ்குன்றிடத்தேவரு
சிறியாள்கொங்கையிற்காமுறு
பழையோனென்பவர்க்காவன புரிவோனே

பொடியூடுந்தழற்போலுரு
வுடையாய்வன்றிறற்முனவர்
புரநீறும்படிக்காமொரு நகையானே
புகழ்தோய்சுந்தரத்தோழமை
பெறுவாய்செந்தமிழ்ச்சீர்திகழ்
புலியூர்மன்றிடத்தாடிய பெருமானே. (௱அ)

தத்ததன தானன—தனதான.

சத்தியமிலாதவர்கைப்பொருளின்மால்கொடு
தட்டழியுமூழ்வினை யொழியாதோ
தத்தைமொழியார்பலர்சுற்றவரும்வேள்கணை
தைத்துருகும்வாதனை தவிராதோ
பத்திநிலையேமுதலுத்தமமதாமெனல்
பற்றியுமிவாறயர் வுறலாமோ
பத்துமுடிராவணனைக்கறுவுதாண்மலர்
பட்சமொடுநீதர நினைவாயே
சத்தியுமையாமளையுத்தமிபராபரை
சற்றுமறவாவழ குடையானே
சட்குணசதாசிவநிட்களநிராமய
தத்துவமெய்வாழ்வருள் குருநாதா
புத்திரனையேவியலைக்கடலில்வாழ்பலர்
பொட்டெனமுன்மாய்வது புரிவோனே
புத்தர்களுநீறுடனக்கணியும்வீறுறு
பொற்பொதுவிலாடிய பெருமானே. (௱௯)

தனத்த தானன—தனதான.

கனைத்தமேதியினிடத்திலேறிய
கறுப்பனுமெம னெதிராதே
கணைக்குநேர்விழியினர்க்குளேவரு
கழைக்கையான்மலர் சொரியாதே
வினைக்குநேருடல்சமைக்கும்வேலைகொள்
விதிக்கென்மேனினை வுதியாதே
விருப்பமாகியபடிக்குமாதொடு
விடைக்கணேறிமுன் வருவாயே
யனைத்துலோகமுநொடிக்குண்மாய்வுற
வழிக்குமாண்மையு முடையானே

யருக்கன்வான்மதிநெருப்பென்றூவகை
யருட்கண்மேவிய பெரியோனே
நினைத்தவாறருள்கொடுத்துநால்வரை
நிசத்திறைடுற விடுவோனே
நிறத்தவாடகசபைக்குணடொறு
நிருத்தமாடிய பெருமானே. (௱௰)

தானதத்ததன தனதனதனதன—தனதானை.

ஞானமிக்குடையபெரியவரையுமிக
மூாணவக்கசடுபெருகியகொடியனை
நாளுநத்தியவரொடுதினமலைவது தவிரேனே
நாண்மலர்க்கமலமதன்விடவனிதையர்
போகமொத்தசுகமிலையெனுமயல்கொடு
நாயெனப்பெரிதுமறுகியபழ்வினை விலகாதோ
பானலொத்தவிழியுமையவளிடமுற
வேலெடுத்தவுணர்குலமறவமர்புரி
பாலன்மத்தியினிலுறவழகியமழ விடைமேலே
பாரவெற்பினினமழவடும்வயிரமு
ளான்முதற்புலவர்வளைதரவகன்முது
பார்மகட்குதவிசெயமுயலுறுமென தெதிர்வாராய்
கூனல்விற்பெரியமலையெனவரிகணை
யாகவைத்துமிகலவர்புரமொருசிறு
கோபமுற்றவிளநகையிடைபொடிபட விடுவோனே
கோவணத்தினிடையெனவொருபெரியவ
னுகமக்கண்மனையவண்முதலியகொடு
கோதறுத்துநொடியிடைபரகதியுற வருள்வோனே
யானறுத்துநிணமயில்பவரடியொடு
மாய்வதற்குரியதவமுயல்பவர்களை
யாகுலக்கடலில்விழுமுனமருளிட வினைவோனே
யானைமிக்குலவுதெருவளமலிபுலி
யூரினிற்சகலபுவனமுநிலைபெற
வாடகச்சபையிலநுதினநடநவில் பெருமானே. ()

தந்ததனதன தனனத்தனனத்—தனதானை.

கொண்டனிகர்குழலவிழ்வுற்றலையக்
கெண்டையெனும்விழிகுவியக்களபக் [போலே
கொங்கைமகிழ்வொடுபொருமக்கருமைக் குயில்

கொஞ்சுநயமொழிகுளறிப்பிறழச்
செங்கைமலர்கொடுவலியத்தழுவிக்
கொன்றுவிடுமவர்புலவிக்கலவிக் கயராதே
யண்டர்வழிபடுமுனையுட்கருதிச்
செஞ்சொல்வனைதருதொழிலைத்தருகைக்
கந்திபகலினும்விடையிற்றிகழ்கைக் கிசைவாயே
லந்தவலிகொடுபுவியிற்கொலையற்
றெந்தமணிதருநலமுற்றிடவிட்
டந்தமடிநடுவறுமுத்தியினிற் புகுதேனோ
சண்டனொருதவமதலைக்கெதிரிற்
கண்களனலுமிழ்தரவுற்றுருமத்
தன்பொனடிகொடுகெறுவிப்புகழ்மிக் கடைவோனே
தங்கநெடுவரையெனும்விற்கொடுசுற்
றும்பர்மனமவர்தமைநக்கிகழத்
தந்தவொளியிடைபுரமுற்றெரியப் புரிவோனே
தொண்டன்விழைவுறுபரவைக்கொடியுட்
கொண்டசினமறவிடுமொற்றெனமுற்
றொங்குகிழவனிலலையச்சிறிதெய்ப் படையானே
தொந்தமுறுபழவினையைத்தொலைவித்
துந்துதிருவருள்வலியைத்தருமுத்
துங்கமிசைவுறுகனகச்சபையிற் பெருமானே. ()

தய்யதன தானத்—தனதானா.

சைவமுதலாகச்சொல்லுநெறியாறுட்
சல்லியமுறாமற் புரவேனோ
தையலர்கண்மோகத்தல்லலிடைமூழ்கித்
தள்ளுபடுமாலைத் தணவேனோ
தொய்வறுமகோரக்கல்லலிகலோரைத்
தொல்லுலகின்மாயக் கறுவேனோ
துய்யவிடைமீதிற்சையமகள்கூடத்
துல்லியமதாகித் திகழ்வாயே
கைவலிமைமீறிப்பல்வகையவூனைக்
கள்ளொடுகொள்வாருக் கரியானே
கைதவமிலாமற்கொல்லலிகழ்மேன்மைக்
கல்வியறிவாளர்க் கெளியோனே

தெய்வமுழுதாகிப்பொய்தவிருஞானச்
செல்வமருண்மோனக் குருநாதா
திவ்வியகலாபப்புள்ளகவுசோலைத்
தில்லைநடராயப் பெருமானே. (௱௰௩)

தனந்தனந்தல தானன—தனதானா.

இயம்பிடும்பலநூல்களின் மயங்கிநின்பதமேகதி
யெனுந்திறன்கருதார்களை மதியாதே
இருந்தையென்றதையேநிக ருடம்புகொண்டிளசாரண
ரிகழ்ந்திடும்படிநீறிடல் வழுவாதே
பயம்பொருந்தியெநேரமும் வருந்துகின்றவெனோடது
பகர்ந்தகந்தனைநேர்வர விடுவாயோ
பதந்தொறும்பெரிதோலிடு சிலம்பணிந்துளமால்விடை
பரிந்திடும்படிநீயெதிர் வருவாயோ
வயன்பெருந்தலையானதி லிரந்தருந்தியமேன்மையை
யறைந்திடும்புலவோர்கலி களைவோனே
யகண்டமென்றறியாதவர் புகன்றிடுஞ்சிலபாடலு
மணிந்துகொண்டவர்நாடிய வரமீவாய்
நயம்பிறங்கியமோகினி தொடர்ந்துகெஞ்சியவேளையி
னறுங்குழம்பணிபூண்முலை புணர்வோனே
நகந்தருஞ்சிறுபார்வதி மகிழ்ந்திடுந்தகைதோய்திரு
நடஞ்செய்தம்பலமேவிய பெருமானே. (௱௰௪)

தனனதன தானனத்தானத்—தனதானா.

அளவறும்வினைதவித்தாரப்
பனுவல்பகர்பாவலர்க்கோர்சற்
றகமகிழ்வினைடளிக்காளைப் புகழாதே
யபிநயம்விடாதசொற்பேசிப்
புணருமதிமோகவுற்சாகத்
தரிவையர்களோதுகுற்றேவற் புரியாதே
இளமயிலைநேர்குறக்கோதைக்
குருகிவழிபாடியற்றூர்வத்
திளையமகனுசையிற்கோடிக் கொருகூறே
யெனினுமடியேனிடத்தேவைத்
தழிவில்சிவயோகியர்க்கூடெய்த்
தினியுடலம்வேறெடுக்காமெய்க் கதிதாராய்

பிளவுபடுமோவடுப்போலக்
குலவும்விழிமாதுமைக்காகப்
பிரமனவமானமப்போதிற் செயுமீசா
பிணம்விரவுகாடதைப்பாடத்
துணியுமுதியாடனக்கேதப்
பிறவிதவிர்பேறளித்தாண்மெய்ப் புகழோனே
களவறிவதாலுளத்தூடிக்
கொளுமொருமினுளிடத்தேகிக்
கவிதைபகர்வானுவப்பாதற் புகல்வோனே
கலிபுருடன்வாழ்வறச்சீறித்
தவமுயல்வலோர்தமிழ்ப்பாடற்
கனகசபைநாடகக்காரப் பெருமானே. (௩௰௫)

தனனத்தன தானனதந்தன—தனதானா.

பயிரைக்களைவாரொனநின்பணி
புரியத்துணிவார்தமைவெந்துயர்
படவிட்டனையேயிதுவுஞ்சரி யெனலாமோ
பசுமுற்பகராருயிர்கொன்றுணு
மடமைக்குரியார்மகிழும்படி
படியிற்செயவேறொருவஞ்சக னுளனேயோ
மயிருச்சியையூணுமிடம்பிறி
தறநிச்சயமாநிறைகின்றதுன்
வளமைப்புகழாகுமெனுஞ்சிலர் பிழையோரோ
மயிலிற்றிரிவானிகருந்திற
முறுதற்கதியாசைகொளுந்தனி
மனமிப்படிறேன்மருவுஞ்செயல் செயலாரோ
தயிர்மத்ததனுலுடைகின்றது
புரையச்சிதருதமனம்பெறு
தவமுற்றவர்பாலிடபந்தனில் வருவோனே
சகளப்பொருளியாவும்விளம்பரு
மொருநிட்களசாரமுமொன்றிய
சரதச்சிவயோகநலந்தரு குருநாதா
வயிரப்படையாளொலும்பொடு
கமலத்துறைவார்தலைமண்டையு
மடிவுற்றிடுமாயவரங்கமு மணிவோனே

வயலிற்கயல்பாயவுகுங்கனி
கதலித்தலைநாளுநிரம்பிய
மருதப்புலியூரினடம்பயில் பெருமானே. (௱௰௬)

தனனதந்தன தத்தனதத்தன—தனதானு.

பரவையென்றவிழிச்சியர்சொற்சுவை
நுகருநெஞ்சமுனைக்கருதிப்பல
பனுவல்விண்டுதுதித்திடுநற்றின முறியாதோ
பசுவருந்தியுவப்புறுதுர்ச்சனர்
குலமழிந்தொழியச்சமர்வெற்றிகொள்
பலர்திரண்டுவிளக்கமுறப்புவி மகிழாதோ
சரவணன்றடையற்றமகிழ்ச்சியொ
டுரைசெயும்பலசத்தியமுத்தமர்
சகலருந்தெரியக்கதிரொப்பென வொளிராதோ
தவளமிஞ்சும்விடைப்பரியிற்சிறு
குமரிபங்கிலிருக்கவுதித்துயர்
சருவதந்திரவித்தைகொடுத்தருள் புரிவாயே
யரவமம்புலிபச்சிலைகொக்கிற
கிதழிதும்பையலைப்புனலொப்பன
வவிர்தருஞ்சடிலத்தொருசெக்கரை யனையானே
யளகையம்பதியிற்குடியுற்றுள
தனதனன்பிலுவப்பதுசெப்பினு
மவர்விரும்புமனைத்தையுமக்கண மருள்வோனே
கரடதந்திமுகத்தொருபுத்திரன்
வரநினைந்துகளிற்றுருவத்தொடு
கரியகுன்றநிகர்த்தவனப்பிடி முலைதோய்வாய்
கருணையங்கடலைப்பொருசித்தமொ
டமரர்கண்டவசப்படவெற்புறழ்
கனகமன்றினடித்தருள்விப்பிரர் பெருமானே. ()

தந்ததத்த தானதந்த—தனதானு.

மண்டலத்தையாளும்வென்றி
கொண்டவர்க்குளேயடங்கி
வண்டமிழ்ச்சினூல்பகர்ந்து நமனாலே
மங்கிமற்றொர்த்தாயர்பண்டி
யின்கணுற்றுமாறியிங்கு
வந்தவற்றையேயிகழ்ந்து புகழ்வார்போன்

முண்டகத்துளான்மனைந்த
மண்சடத்துமாயையின்கண்
முங்கவிட்டிடாமலுன்ற னருளாலே
முந்துபத்தர்நால்வர்வந்த
நின்பதத்திலேகலந்து
மொய்ம்பர்பற்பலோர்வணங்க விடுவாயே

தண்டம்வைத்ததோளுடன்பல்
குன்றிடத்திலாடுமெந்தை
தங்குகைக்குமாரிகொங்கை புணர்மார்பா
சஞ்சலத்தையோதிநின்று
தெண்டனிட்டபாலன்முன்பு
சண்டனுக்கொர்காலனென்று திகழ்வோனே

யண்டர்சுற்றமேருவங்கை
கொண்டெதிர்த்தொனூர்புரங்க
ளன்றெரித்தசீர்விளம்பின் மகிழ்வோனே
யஞ்சடக்கிமாதவஞ்செய்
நெஞ்சமொப்பதாயசெம்பொ
னம்பலத்திலாடுகின்ற பெருமானே. (௱௰அ)

தந்ததன தந்ததந்த—தனதானா.

அம்பெனவிளங்குகண்கொண் மங்கையர்பதம்பணிந்து
னன்மையிகழ்வம்பர்புன்சொல் வினவாதே
யங்கியெதிர்கொன்றுநின்று விண்புகுவமென்றியம்பு
மந்தகருடன்பிணங்க லொழியாதே

பம்புமலயம்புரந்த கும்பமுனிவன்பயந்த
பைந்தமிழ்வனைந்திருந்த தறியாயோ
பண்டுனைவணங்கியுய்ந்த தொண்டர்களுடன்சிறந்து
பங்கமறும்வென்றிதுன்ற வருள்வாயே

கம்பமததந்தியொன்று கொன்றதைவகிர்ந்துரிந்து
கஞ்சுகமணிந்துகொண்ட முதியோனே
கண்களுமிழும்புலிங்க மென்றுவருகந்தனன்று
கஞ்சனைமுனிந்தபண்பின் மகிழ்வோனே

தெம்பொடுபறந்தலைந்த வஞ்சகர்புரங்கள்வெந்து
சிந்திடமுனம்புரிந்த நகையானே
சிம்புளுருவங்கொடங்கொர் சிங்கமதைவென்றபின்பு
செங்கனகமன்றினின்ற பெருமானே. (௱௰௯)

தனனதனதந்த தந்ததந்தன—தனதானு.

சதுமறைகளும்பரந்ததந்திர
வகைகளும்விளம்புகின்றபுங்கவர்
சகலருமுனங்கமென்றுணர்ந்தது பிழையாமோ
சகடுபொடிகண்டிரண்டுவஞ்சக
மருதடர்முகுந்தனென்றிகம்பகர் [வாமோ
தகைதருவனென்றுன்மைந்தன்விண்டசொல் வழு

பதுமமகளென்றவம்பியந்தணர்
முதலினர்வருந்தல்கண்டுமிங்கடு
பசுநிணமருந்திடுங்குணுங்கரொ டுறலாமோ
பரவைகணவன்பகர்ந்தசெந்தமி
ழெனவெனதுபுன்சொலும்புனைந்துயிர்
பதறவென்மனம்படும்பெருந்துயர் களைவாயே

பொதுநிலையறிந்தபின்பும்வந்தெதிர்
பிடகர்தமதந்தணந்தவண்பெறு
புலவனையுடன்கலந்துகொண்டமெ யருளோனே
புழையுறுகரங்கொள்குன்றமொன்றையொ
ருழுவையினுடன்கொலும்பெரும்புகழ்
புகல்பவர்விரும்பிடுந்திறங்களின் முயல்வோனே

கதுமெனவெழுந்துவந்தவந்தக
னுயிர்விடவுதைந்துதொண்டடன்றுதி
கழறுமிருகண்டன்மைந்தனின்புற மிளிர்வோனே
கயிலையிலுயர்ந்ததென்றகண்டந
னிலையுணர்தொழும்பர்கண்டிறைஞ்சிய
கனகசபையின்கணென்றுநின்றுள பெருமானே. ()

தந்ததத்த தந்ததந்த—தனதானு.

கண்டுவெட்குமின்சொல்கொண்ட
மங்கையர்க்குநெஞ்சழிந்து
கங்குலிற்படுஞ்சளங்கள் விலகாவோ
கண்களிற்புலிங்கமென்று
நின்றவத்தில்வந்துயர்ந்த
கந்தன்முற்பகர்ந்தசெஞ்சொல் பலியாதோ

விண்டுவிற்பிறங்கிவண்டர்
தங்கணத்தைவென்றுவென்று
மிஞ்சுபத்தரின்பமொன்ற மிளிரோனே

விந்தவெற்பழுந்தல்கண்ட
செந்தகைக்கரஞ்சொரிந்த
வெண்பொடிப்பயன்றுலங்க வருள்வாயே

தண்டுசக்கரங்கவின்ற
வெண்கைவிப்பிரன்றன்மண்டை
தன்கையிற்கொடிங்கிரந்து திரிவோனே

சஞ்சலப்படுந்தொழும்ப
னெஞ்சுவக்கவன்றெதிர்ந்த
சண்டனைத்தடிந்ததுங்க முடையானே

பண்டுமுப்புரங்களும்பொ
டிந்திடச்சினங்கமழ்ந்த
பண்பினைச்சொலுஞ்சொலன்பர் துணையாவாய்

பைம்பொனிற்சமைந்தவம்ப
லந்தனிற்றினங்குளிர்ந்து
பஞ்சகிர்த்தியம்புரிந்த பெருமானே. (௱உக)

தனதன தனனதனத்—தனதான.

அணிநகைமகளிர்தமக்குருகியதமியனுமிக்
கடியவர்பணிபுரியப் பெறுவேனே

வருளெனன்முழுதுமொழித்துயிர்வதைபுரிபவருக்
கழிவுறகிதமுநினைப் பவனோ

திணிபெறுமறுசமயத்தினர்தமையிகழுநெறிச்
சிதடர்களுவகைமிகக் கொளலாமோ

திருவுளமிசையுமருட்கடனிறைவதிலொரணுத்
திவலையென்மிசைமருவிற் குறைவாமோ

பணியணிமுதலியபொற்பிலகிடவிடைமுதுகிற்
பணிபவர்விழியெதிருற் றருள்வோனே

பகரிருபடியெனுநெற்கொடுபலதருமம்வளர்ப்
பவண்முலைபழகுமுரத் தொருகோவே

பிணிமுகமதிலயில்கைக்கொடுதிரிதருகுகனைப்
பெறும்விழிகுலவுநுதற் குரியோனே

பிரமனுமரியும்வழுத்தியபுகழ்மருவுதலிற்
பிழைதவிர்கனகசபைப் பெருமானே. (௱உஉ)

தனதனதனதன தந்தத்தந்தத்—தனதாண

குலிசமெனொருபடைதன்கைக்கொண்டெக்
கிரியையுமடுமவனன்பிற்றின்றுட்
குளிர்தரலுளதெனநம்பிப்பைம்புற் கமழ்சீர்வாய்
குலவியபசுபலவம்பிற்கொன்றிட்
டனலிடைநிணமிகவெந்துட்கொண்டிக்
குவலயமதினிகழ்வண்டர்க்கஞ்சித் திரிவேனை
புலியதளரவமுடன்கட்டும்பொற்
பரைமழுவுடன்மறியும்பற்றுங்கைப்
புயகிரிதிரிநயனம்பொற்கொன்றைச் சடையோடே
புகல்வனபிறவுமிலங்கப்பங்கிற்
கவுரியுமுருகனுமொன்றச்செங்கட்
பொருவிடையதன்மிசைவந்தெற்கஞ்சற் றருவாயே
பலிநுகர்கலமெனவங்கட்கஞ்சத்
தயனொருதலைகவர்புங்கச்செங்கைப்
பரசிவசெவியணிசங்கத்திங்கட் குழையானே
பனுவல்கள்பகரொருதொண்டற்கின்பக்
கடலுதவிடவெனவன்றைக்குண்கட் [னே
பரவைதன்மனையினுழைந்திட்டஞ்செப் பிடுவோ
கலியெனுமொருகொடியன்சித்தந்துற்
றுளமகிழ்வறுமவசம்பெற்றேறஞ்சக்
கறுவிடுமுனிவரர்செஞ்சொற்சந்தக் கவியோனே
கணகணவெனமணிடுண்டுட்டுண்டுட்
டுடுடுடுவெனமுழவங்கொட்டுஞ்சிற்
கனகசபையினில்விளங்குத்துங்கப் பெருமானே ().

தனனதனதன தனனதனதன
தனனதனதன தனனதனதன
தனனதானன தந்தனதந்தன
தனனதானன தந்தனதந்தன—தனதாண.

பருவமுறுமட மகளிர்நயமொழி
வினவிமயலிடை முழுகியவர்நடு
நிலவுமாரன்விடுங்கணைமிஞ்சவி
னறிவெலாமுமமழுங்கியுழன்றுபி
னவர்களடிமலர் முடியின்மிசைகொடு
மறுகிவழிபடி லிசையவுவகையொ

டிடைவிடாதுபுணர்ந்துபுணர்ந்துபல்
பிணிகளாலுமெலிந்துதளர்ந்துடல்
பழமதெனநரை திரையொடிருமியு
நடையின்மலமொழு கிடலினிளைஞர்கள்
கிழவனொனநொந்துசினந்துயி
ரியமனூர்தம்வசம்புகவம்பினின் மடியாதே

படிறுமொழிசொலி யிரவலரைமிகு
கவலையொடுதின மலையவிடுகிற
கொடியபாதகர்தங்களையிந்திர
னளகையாதிபன்வென்றிமதன்றிரு
மகளுமலைகட லுடைகொள்வனிதையு
மருவுமுகினிகர் நெடியமுரகரி
விசையன்வீமனெனுங்கவிவிண்டுழல்
புலவரோடுதிரிந்துனையன்பொடு
பரவுசதுரர்கண் முதலியவர்பகர்
பதிகமகிமையை யிகழுமடமைகொ
டுயிர்கொல்வார்நிணமுண்பவரொன்கினு
மவர்கையாடகமும்பெறும்வெந்துயர் தழையாதே

பொருவில்வளமுறு பிரமபுரமதி
லொருவனதுதவ முதவுமதலையு
மலர்குலாவுகுருந்தையினின்றிரு
வருள்விலாசமடைந்தவனுஞ்சிலை
யதனொடமணர்கள் கடலினிடையிட
மடிவிலதுவரு பெரியவனுமணம்
விலகியோலைகொடன்றுகொளும்புகழ்
புனைகுவானுமவன்பரவும்பல
புனிதர்களும்விட மருவும்வடைகொடு
மனையிலனலிடு தவனுமவனடி
கருதுசீடனுமங்கவன்முன்பணி
ஞமலியாதியரும்பெறலன்பொடு தருமாறே

பொழியுமழைநிகர் கருணைவிழிதிகழ்
கவுரியொடுகுக னருகிலமர்தர
மதியமாறுகரந்தைநறுந்துண
ரிதழியாதியணிந்தநெடுஞ்சடை

வளைகொள்செவிதிரி நயனமிளநகை
முழுதுமணிதரு தவளமலிபொடி
மழுவுமானுமிருந்தகரஞ்சது
மறையின்மீதுவிளங்குபதங்கரி
புலியினுரிவையொ டனையபிறவும்வெள்
விடையின்முதுகினி லிலகவமரரு
முனிவர்தாமுநெருங்கவெனெஞ்சினும்
விழியினேரினுமென்றும்வரும்படி யிசைவாயே

குருகுமுரல்கர மலர்கொளுமையவ
ளிமயவரைதரு பசியநிறமயில்
விமலையாமளை சங்கரியம்பிகை
கவுரிகோரபயங்கரியந்தரி
சரணபரிபுர மலர்கொடிமகர
னசியமுனிபவள் சகலபுவனமு
முதவுதாய்திரியம்பகிமங்கலை
யிகமும்வானுநிறைந்தசவுந்தரி
கொடியநமபட ரெமதுமிசைவர
நினையிலுடனவருயிரைநுகர்தரு
நெடியசூலமணிந்தவளன்பொடு [னே
புணருமார்பிலெலும்பொடுமெண்டைக ளிடுவோ

குமரகுருபர முருகனடியவர்
பிழையிலொருகடு களவுநினைவிலன்
மலைகடோறுநடம்பயில்கின்றவ
னகிலலோகமுமுண்டுமிழ்கொண்டலின்
மருகனிசிசரர் கலகனருணையி
லொருவனுவல்பல கவியொடெனைநிகர்
சிறுவர்பாடல்களுங்கொள்பெருந்தயை
யுறும்விசாகன்வனந்தனிலன்றமர்
குறமினெதிர்மிக மறுகிவழிபடு
பெருமைமொழிபவர் பிறகுதிரிபவன்
மலயமாமுனிநெஞ்சிடைநின்றவ
னுதயமாமனலம்பகநன்கவிர் நுதலோனே

கருடனெனுமொரு பரியின்மிசைவரு
பகவனலைகடல் கதறவனலுமிழ்

பகழிகோடிசொரிந்தநெடும்புய
னடலிராவணனங்குபடும்படி
பொருதரகுபதி மழையிலலமரு
மளவில்பசுநிரை மகிழவொருவரை
குடையதாகநினைந்துபரிந்தவ
னரவகேதனமங்கமுயன்றருள்
கபடமுடையவன் விசையனதுபரி
நடவுகசையின னளகமவிழ்தர
வழுதுரோபதிநெஞ்சமறிந்துள
வரதன்மோகினியென்றுருவங்கொடு புணர்மார்பா
கயிலைவரைதனி னிலவுபசுபதி
விடமதனையமு தெனமுனுகர்சிவ
னரிகளாகியவண்பரிகொண்டொரு
வழுதிகாணநடந்தவனன்றொரு
புலவன்மகிழ்வுற வொருபெணரசிதன்
மனையிலிருதர நுழையுமழகிய
கிழவனோர்சிறுவண்டனுளன்பொடு
கவிகளாயிரமுஞ்சொலவங்கொரு
கதைமுனடவிய கருணையினனுணர்
பவரையுடலுட னுகர்பொனடியின
னெனவெநேரமுமன்பர்சொலுந்தொனி
பெருகுமாடகவம்பலமொன்றிய பெருமானே. ()

தய்யதாத்தன்னந் தனத்தனனதாந்தனத்—தனதானு.

தொய்வில்சீர்க்கிண்ணங்
கனைப்பொருவதாந்தனத் துருகாதே
தொல்லைநூற்றன்மங்
களைப்பகருமாந்தனைப் பழியாதே
மெய்விடாச்சொன்முந்
துபத்தொடுசேர்ந்துனைப் பணியேனோ
வெள்ளையேற்றின்மிஞ்
சுவப்பொடெதிர்தோன்றிடற் கிசைவாயே
கைவில்வேட்கண்ணின்
றழற்பொறியின்மாய்ந்திடப் புரிவோனே

கல்வினுப்பண்ணின்
புறக்குரியசேந்தனைப் பெறுவோனே
செய்விழாத்தன்னந்
தனிப்பெருமைதேர்ந்தவர்க் கெளியோனே
தில்லையூர்ப்பொன்னம்
பலத்தில்வளர்தாண்டவப் பெருமானே. (௱௨௫)

முற்றிற்று.

ஆக கவி - ௬௭௬.

சிவமயம்.

க-வது அழகியசிற்றம்பலமுடையான் வருப்பு.

தனதனதத்தந் தனதனதத்தந்
தனதனதத்தந்—தனதனதானு.

கடல்புனைபொற்பொன்றியபுவியப்பன்
கணவனிகற்சண் டையினிடைமேனாள்
கனல்வளையிற்சென்றவிர்தருசித்தன்
கலைமதிவைக்குஞ் சடையினன்மீனோர்
கருணைவிழிச்சங்கரியுளுவக்குங்
கலவிவிளைக்குங் கணவனெனுநூர்
கரியநகைக்குந்தவளநகைச்செங்
கடவுளெதிர்க்குங் கரியொடுபொய்மா
வுடலையுரித்துங்கலையிலுடுத்தன்
புடையவர்மெச்சும் படிவளர்வானு
ருரகமெருக்கென்பிதழிமுதற்கொண்
டொளிருமொருத்தன் பெரியகலானூ
டுறைகுருநத்துஞ்சதுரர்தமக்கங்
குதவுசுகத்தன் பரவைமினுடா
னுரிமையுறச்சுந்தரன்மொழியைக்கொண்
டுரைசெயுநட்பன் றனதடியார்தா
மிடர்படுமுற்சென்றருள்பவன்வெப்பொன்
றெரியருள்விற்செங் கரனெதிர்தோலா
வெயினனுருக்கொண்டணுகிவளைத்தங்
கெறுழிவழக்கும் புரிபவனூடே

ரிளையவனைக்குஞ்சரமுகனைத்தந்
திமையவர்துக்கங் களைபவன்வாணு
வியமணிழக்கும்படிமுனுதைத்தன்
பினையளிக்கும் பழையவனேரா

யடன்மிகைசெப்புந்தகுவனுடற்குன்
றதுவகிரத்தந் திரமுயல்கோமா
னமணர்களைச்செங்கழுவிலிடச்சென்
றவனேநிகர்க்குஞ் சிலருணர்தாளா

னறுசமயத்தும்பொலிகருணைச்சிக்
தனையவனெட்டென் றுளவடிவாணு
னருமறைமுற்றும்பரவுமருட்டங்
கழகியசிற்றம் பலமுடையானே. (க)

உ-வது. கனகவம்பலக்காரன்வகுப்பு.

தனனதன தானதன தனனதன தானதன
தனனதன தானதன—தந்தனத்தானன.

அருளுததியீனுமதிமகிமையினதாகியுணர்
வரியதனிவீடுதவு மந்திரக்காரனு
மலகையினமோடவருபிணிபலவுநாசமுற
வடும்வலிமையோடிலகும் வெண்பொடிக்காரனு

மலைதவளவாரிதியில்வருமதியநாணடைய
வவிரும்வளையாயவிரு குண்டலக்காரனு
மறலிதழிதாதகிபுல்விடவரவமாதியவை
யணியும்வியனுர்நெடிய செஞ்சடைக்காரனு

மளவுமிருநாழிநெலிலுலகடையவாழ்வுபெற
வறவகையெணுலுமுயல் பைந்தொடிக்காரனு
மருமறைவலோர்பலர்தமனதுகவர்மோகினிமி
னவசமொடுகூடமுதிர் சுந்தரக்காரனு

மரிவையரனேகர்வளைகலைசிதறிநாணழிய
வவர்மனைகடோறுநுழை யும்பலிக்காரனு
மலரிமதிபூதவகையுயிரொனிருநால்விதமு
மவையுதவுகோவுமென நின்றசொற்காரனும்

வருமமிகுதானவர்கள்குலமழியவேமுயலும்
வயிரமுடையார்களுட லென்பணிக்காரனு

மருமலரில்வாணியொடுகுலவியுலகேழுமறை
வகையுமருள்வார்கள்பலர் தந்தலைக்காரனு

மறிகடலின்மீதுவிழிதுயிலுநெடுமாயவர்கண்
மடியிலவராகமுரி யுர்தொழிற்காரனு

மழுவினொடுமானுமிருகரமலரின்மீதுகொடு
மழவிடையில்வாணிலுல வுந்தகைக்காரனும்

வழிபடுநரியாரெனினுமவர்விழைதலியாதெனினு
மனவலியுளாரெனில்வ ழங்கிசைக்காரனு

மறுவிலொருகோடுகொடொர்மதமலையையாகுவென
வரவருள்செய்வானையுத வுந்தயைக்காரனு

மலைகடொறுமாடியெனதிதயவெளியூடும்வரு
மதலையினையீனுமன லம்பகக்காரனும்

வழுவைபுலிநாகமெலிகரடிமயில்பூனைநிகர்
வனவும்வரமேவவுத வுங்குணக்காரனு

மெருதுவரைகேதனமதுயர்வதுணர்வார்கள்பக
ரினியகவிமாலைபுனை யும்புகழ்க்காரனு

மெவரெவரெவாறுகருதினுமவர்களுடும்வண
மெதிர்நிலவுமோர்பெரிய தந்திரக்காரனு

மிடியனையவோசைதருமுயலகனைமாதவரு
மிமயவரும்வாழ்வுறமு னிந்துமற்காரனு

மிதயமிகவாடுமொருதவசிமிசைபோர்புரியு
மியமனடலாவிகவ ருங்கழற்காரனு

மிகலவர்கள்வேர்களையவழிபடுகிரீடியுட
னெறுழியதனுலமர்செ யுஞ்சிலைக்காரனு

மிதுவதெனவாதமிடுமடமையுடையார்கண்மன
தினுமிடைவிடாதுறையும் வஞ்சகக்காரனு

மிருள்பொருவுதானவருமவர்மருவுமூவெயிலு
மெரியினிடைவேவுறவி யங்குபற்காரனு

மிரசதமதானகிரியசைவதுசெய்தானலறி
யிசைசிறிதுபாடலினி ரங்குளக்காரனு

முருவபரவாதிகளுமருவபரமோனிகளு
மொளிர்பொதுவினேதியரு நம்பருட்காரனு

முலகமுழுதோரடியதெனவளருமான்மகிழ
வொருபடைமுனுளுதவு செங்கரக்காரனு

முததியிடைவானவருமவுணர்களுமோடவர
வுமிழ்விடமருதுறுக ருங்களக்காரனு
முறவர்தமராதியரைவிடுதுறவினோர்குழுவி
லுயரொருவன்விடதில்வ ளர்ந்தமெய்க்காரனு
முரகபடமேயனையகடிதடமினுளடிமை
யுரிமையுறுமாறிருத ரஞ்செல்கைக்காரனு
முயிர்வதைசெய்வார்கள்குலமுழுதுமறுமாறுமுய
லுரமருவுவாருடனு றுந்துணைக்காரனு
முழைநிகர்கணார்மயலின்முழுகுமவர்கோனெனுமெ
னுளையினுமவாவுறுசு தந்தரக்காரனு
முகமுடிவனேகமுணர்முனிவரர்பராவவுமை
யொடுபெரிதுவாழ்கனக வம்பலக்காரனே. (உ)

௩-வது. நடமிடுசபாபதிவகுப்பு.

தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன—தனனதனதானதன.

அறிவுமயமொருசிறிதுமிலதிருளினிடைமறையு
மளவிலுயிர்களுமருளில் வரமுயலநாதியனு
மருமைமிகுதனதுதிருவருளையொருகவுரியென
வருகிலமைதரவருளி யணையுமொருபாதியனு
மகிலமகளொடுகமலமகளுமருகுறவரவி
லலைகடலின்மிசைதுயிலு நெடியவனதாதரனு
மவனுதரநடுவிலலர்கமலமலருதவவரு
மருமறைவலவர்கள்பலர் தலைகுலவுமாலையனு
மமரொடுமுனிவருமெவரும்வழிபடநிலவு
மடல்விடையினுருவம்வரை தருபெரியகேதனனு
மவிர்கயிலைவரைபுவியினடைபயிலவெனவுலவி
யபரிமிதமதவருவி சொரியுமயிராவணனு
மலைதலொடுசிறகுமறவொருவிமலைமுழுமையையு
மசலமுறவிடுமவர்கள் கருதரியமேன்மையனு
மவுணர்களுமவர்மருவுதிரிபுரமுநொடியினிடை
யழியவனலுமிழுமிள நகைபுரியும்வாயினனு
மறியுமழையுமழுவுமலர்கரமிசைகொடுமையினெடு
மழவிடையிலகல்ககன வெளியில்வரும்வானவனும்

வனசமுனிவனதுசதுமுகமலரில்வருசதுரர்
மனமகிழவிணையில்பர சுகமுதவுதேசிகனும்

வகுளமலர்குலவுபுயமதனிலொருகழைகொடலர்
மழைபொழியுமதனனுடல் பொடியவடுயோகினனு

மதுரைவளநகரிலுறுகழகமதிலொருபுலவன்
வயினணுகியளகமண நிலைநிறுவுபாவலனும்

வளைவுபடுகருவியினலிசைபயிலுமொருவனுறும்
வறுமைகெடமுதிர்கவிதை யெழுதிவிடுமோலையனும்

வருபகைவனிரியவெனவிறகுகொடுதளர்கிழவன்
வடிவுடனொரடிமையின தடிமையெனவோதினனு

மகபதிதன்முடியுருளவமர்பொருதபுயவழுதி
மரபில்வருமொருவனெதிர் குதிரைகொடுபோனவனு

மரணமுறுபிணமுழுதுமினியதெனநுகர்பிடகர்
மதமழியமுனியுமவ னுரைசெய்திருவாசகனு

முறிதிருடியிடைமகளிர்முலைபுணருமவன்விழையு
முபமனியுவிரலிலமு தொழுகவருள்கூர்பவனு

முயர்விரதமுறுமிருவர்முதுமையினிலவர்பெருமை
யுலகறியவிமகரனை யவர்களிடமீபவனு

மொருதவசிதனையமணர்சிலையினொடுகடலிலிடி
லுறுகணிலததனெடிய கரையிலுறவாள்பவனு

முரிமைமிகுசடையன்மகனுவல்கவியின்முதலைமுன
முணுமதலையினையுமிழ வுதவுகருணைகரனு

முரகமதிநதியிதழியறுகுவிளவிறகனைய
வுறுசடிலமுடியிலொரு தலைபுனைமயேசுரனு

மொலியரவமணியுமிருசரணமுறுகலைவனிதை
யுடன்வரவெல்பவனனைய ருணர்தருசதாசிவனு

மொளிர்தரளநகைமனைவிமகவினொடுதவமுயலு
முரமுடையன்விறகுவிலை யதுகொடுசெய்கூழினனு

முபயகலையுணருமொருபனவமுனியொருசெடியை
யுபரிடதநுவல்கதியில் விடவினிதுநாடினனு

மெறியலணிகரமுனிவனடமடியுமவர்களுட
னிபமுமெழநொடியளவி லருள்புரிமனோகரனு

மினியநெறிகருமமெனுமவர்புணருமனைவியர்க
ளிடையிலணிகலையவிழ வொருவிதமுலாவினனு

மிரவிலுணவிலதுமனையொடுதளருமொருவனிட
மிடைவிடலின்மழையிறொடு பசியெனமுனேகினனு
மிமையவர்களொடுகொடியமகமுயலுமவன்முடியை
யெரியிலிடும்விசையமொழி பவர்மனதில்வாழ்பவனு
மிரசதமுமணிமுதலியனவுமுயர்திருவெனவு
ளெணியுவகையடையுமவர் சிறிதுமறியாதவனு
மிதுபிரமமதுபிரமமெனமொழிவதலதுதவ
மிறையளவுமுயல்கிலவர் வினையைவிலகாதவனு
மிமயமகளமுதநுகர்தமிழ்விரகனுவல்பதிக
மிடுபுயமதனிலெனது கவியுமிட நாணிலனு
மெதிரினருமரசர்களுமமரரொடுபரவுபுக
ழிசைபுலிசைநகரினிடை நடமிடுசபாபதியே. (௩)

௪ - வது. அயிராவணவகுப்பு.

தனதன தத்தன தனதன தத்தன
தனதன தத்தன—தனனு தனனு.

எழுதருமுத்தமமறைகளினுச்சியி
லிசைவுறுசத்துவ குணமாகுவதே
யிமையவர்முற்பகர்பலரும்வழுத்திய
விடபமதற்கொரு துணையாவதுவே
யிருண்முயலற்றுளமுழுமதியத்திர
ளெனவிலகத்தகு புகழ்தோய்வதுவே
யிகனசியப்பொருமுபயசகத்திர
மெனும்வன்மருப்புறு முகவாகினதே
கழுமலநற்பதிபுரிதவசிற்றிகழ்
கவுணியபுத்திரன் மனநேர்வதுவே
கயிலையெனப்பகரிரசதவெற்பது
கழல்கண்முளைத்துல வுதல்போல்வதுவே
கடல்களனைத்துமொர்திவலையெனத்தகு
கலுழிமதத்தரு விகள்பாய்வதுவே
கருணையொர்சற்றுமில்கொடுமைபடைத்தவர்
களையவிர்சுற்றமொ டறமோதுவதே
பழுதறுசொற்சுவைபொருணயமிக்குள
பதிகவிசைத்தொனி யெனநீடியதே

பருவதபுத்திரிமுலைநுகர்பொற்புறு
பவளநிறக்களி றுடனுடுவதே
பகையவுணர்க்கெமனெனவயில்வைத்தவிர்
பனிருபுயத்திளை யவனுவலதே
பழமறைநிச்சயமறிகிலனைப்பல
பவவுததிக்கிடை விழவீசுவதே
தழுவிவழுத்துமெயடியவருக்கெம
தருமன்வழக்கறு நலமீவதுவே
தழனிகர்கட்பொறிசிதறவிழித்தெணில்
சமயவிகற்பம தனையோவிடுமே
சகளமுநிட்களமெனலுமொருப்படு
சமரசதத்துவ மதில்வாழ்வதுவே
தகைமலிசிற்சபையினினடமிட்டவிர்
தலைவனடத்திய வயிராவணமே. (௪)

௫-வது. இடபவாகனவகுப்பு.

தனதனத் தானதன தனதனத் தானதன
தனதனத் தானதன—தனதன தனன.

துரியநிட்டாபரர்களறிவினுக்கேயினிய
சுருதியிற்கூறுநெறி முழுதுமாகுவதே
சுரர்களுக்காவதெனவுயிர்வதைத்தூனுநுகர்
துரிசடைத்தீயவர்க ளறியொணுததுவே
துணைவிழிப்பார்வைநடுவிலகருட்சோதியிடை
துகளில்சித்தாதியர்கள் பலருநாடுவதே
தொடுகடற்பாருலகினுயிர்கடைத்தேறுநிலை
சொலுமொழித்தேசிகர்க ளெனநிலாவுவதே
யரியுயிர்ப்பூடுழலவிடுதிறற்றேறுமவ
ரளவின்மெய்ப்பேறடைய வுதவுநீர்மையதே
யகிலமுற்றோர்நொடியிலுலவுமற்றேயும்வளி
யதுபடப்பார்வையினின் முனியுமேன்மையதே
யமரர்முற்கூறுமவரொவருமுட்போவதெணி
லடிதொழக்கோயிலதன் முனையின்மேவியதே
யசமுகத்தீனமுறும்விதியுடைத்தீயனுண
வயில்பவர்க்கானதுயர் விளையவோதியதே

பெரியமற்றோர்கொடொருமலையெடுத்தான்மருவு
பெருமைகெட்டாகம்விடும் விதமுமோர்வதுவே
பிழையுடைச்சாரணர்கள்விடுபசுப்போலவரு
பிரபலப்பேயினுயர் கவருமாண்மையதே

பிடகரொப்பாயசிலசமயநிட்டேர்தலை
பிளவுறச்சாடும்வலி கருதுவாருறவே
பிணிமிடிக்கேனுமயர்விலதுபொய்ப்போதமொழி
பிரமையுற்றோர்கண்முத லியபொலார்பகையே

நரிகளக்காலமிகுபரியெனக்கூடுகையி
னடுவினிற்றுனுமொரு குதிரையாகியதே
நகுடனப்போதுபணியுருவுறச்சாபமொழி
நவின்முனிக்கோனனையர் பெரிதுபேணுவதே

நரைமுழுக்கோலமுறுமிளமையிற்சீரியது
நடலையற்றூர்கடவ முடிவினோர்வதுவே
நகமகட்சேயினெடுகொடுவனப்பார்புலிசை
நகரிடத்தானிவரு மிடபவாகனமே. (௫)

௯-வது சூலப்படைவகுப்பு.

தானத்தனதன தானத்தனதன
தானத்தனதன—தானத்தனனு.

ஆதிப்பிரணவமூடுற்றுளபிரி
வாமுத்தலைகொடு நீடுற்றதுவே
யாவித்திரள்பதிபாசப்பொருளென
லாகப்பலபல நூல்செப்புவதே

யாடற்குறுதுணையாகிப்பொருவில
நாதிச்சுருதியு மார்முக்குணமே
யாணிக்கனகமகாவிற்பனமரு
ளார்வப்பொலிவருள் சீலத்தினதே

யாசைப்பிறவியினுன்முப்பிணிவளை
யாமற்செயுமருண் ஞானச்சுடரோ
யாளித்திரிபுரையாமப்பொழுதுமை
யாள்கைத்தலமதின் மேவுற்றிடுமே

யாணைப்படிநடவாமற்பிழைசெயி
லாய்சொற்பிரமனை மாலைக்கொளுமே

யான்மைத்தகுவரின்மேன்மைபடுமெவ
ராகத்துறுகுடர் குடிக்கொளுமே

பாதிக்கலைமதிவேணிக்கணிதரு
பாரப்புகழ்பகர் வாருக்குறவே
பாலைப்பொருதிருநீறிட்டிலாது
பாழ்நெற்றியிலிடி போலப்புகுமே
பாவத்தொழின்முயல்வாரைப்புகல்பல
பாடற்புலமையு ளாருக்கிகலே
பானற்கருவிழியார்சுற்றினன்விடு
பாணத்தயர்கையு றுமற்செயுமே
பாழிக்கரமதவேழத்தினையெதிர்
பாய்மற்புலியொட ஈாளட்டதுவே
பாவித்தொருமைபடாமற்சிதறிய
பான்மைச்சிறுமன தார்ஙத்தரிதே
பானுப்புரைவதெனுமெய்ச்சதுமறை
பாடிப்பரவுகு ஞலத்தினதே
பாசக்கடலொடுநீலக்கடல்விடு
பாகக்கவிமுனி தோள்பெற்றிடலே

நீதிக்குறைசெயுமூடப்புரவலர்
நீறிக்குலமொடு மாயச்சுடுமே
நீபப்புயமுருகோனுக்கெனவொரு
நேர்மைக்கதிர்வடி வேலைப்பெறுமே
நேயத்தொடுபணிவாரைச்சினவிடு
நீசர்க்கெமன்வடி வாமுற்படுமே
நீலக்கலிவலிமாறக்கருதுந
னீர்மைத்தவசிகள் கூர்மைக்கிணையே
நேமத்திடைநிலையாமற்றவறுமெ
னேர்சிற்சிலரையும் வாழ்விப்பதுவே
நேடிப்பழவடியார்சொற்படிசெய
னேகர்க்கொருதுணை யாநிற்பதுவே
நீடப்பிரபலமாநற்பெயர்நவ
நீதத்திருடன ஞருக்கிடுமே
நீருட்புகுமொருதாதைக்கழுதவ
னேசற்குருவெனும் வீரர்க்குயிரோ

காதித்தசைநுகர்தீமைக்கொடியவர்
காயத்துதிரமெ லாமுற்றுணுமே
காரிப்பெயர்கொடுநோயிற்றிரிதரு
காலத்தரிவச மாறச்செறுமே
காவிக்கலைபுனைவான்மெய்ப்பொருள்வதை
காணற்றுறையில்வெகு ளாதுற்றதுவே
காதற்கபடவெணீறிட்டதுசெயல்
காமுற்றவனொடு கூடிக்கொளலே
காரிற்பொலமலைநேரிற்றிகழிரு
காமர்க்கடவுளர் வாழ்விற்கரணே
காசைத்துணரனையான்மெய்த்தவமுயல்
காவிற்கணமொரு கோலொத்ததுவே
காசிற்பிரமைகொடேர்சுற்றியமுதிர்
காமக்களவுடை யேனிச்சையதே
காசிக்குயர்புலியூருட்சபையிலொர்
கால்வைத்தவனணி சூலப்படையே. (சு)

எ-வது மழுவாயுதவகுப்பு.

தனனதனதன தனனதனதன
தனனதனதன—தனனதனன.

ஒருநாளினுமலைமகளார்விழிநிக
ருழையானதனுற வகலாததுவே
யுணர்வோடுளபடிநிசமாகியதவ
முடையாரொவர்களு மறவாததுவே
யுயர்மால்விடைமிசையகல்வானிடையினி
தொளிர்கால்வலதுகை யினின்மேவுவதே
யுலகாமவைபொடிபடுநாளையிலல
துரமோடமர்செயல் விழையாததுவே
திருமாலயன்மகபதியாதியர்பலர்
தினநாடியபுகழ் மிகைதோய்வதுவே
திதிபாலகருமதிதிசேயினரொடு
சிலமானிடர்களு மறிசீரினதே
திகழ்சூரியர்கள்பனிருகோடியருமொர்
திரளாவரினுமொல் கிடுதேசினதே

தெளியாமுரண்மனமுறுசாரணர்விதி
தெரிவார்கவிகொடு துதியாததுவே
யருளோர்சிறிதுமிலெமதூதுவர்கையி
னகமாம்விதியினர் மதியாததுவே
யயில்வேலவனொருதுணையாநினையுமெ
ய்யடியாரறிவினை நிகர்கூர்மையதே
யரிமாமதகரிபுலியாதியவிக
லடுநாளினுநிணை மருவாததுவே
யருமாமறைநெறிமுழுதோர்முனிவர
னனையார்கொளுமுத லடையாளமதே
மருவார்கழுமரமிசையேறிடவெலு
மகவாதியசிலர் கவிசூடியதே
மதியீனியமரபினரோரிருவர்செய்
வசையாரடியினு முனியாததுவே
மடவார்மயலெனும்வலைசூழ்தரமன
மலைவேனதுமொழி யையுநாடியதே
வயல்சூழ்வளமலிபுலியூர்நடநவின்
மறைநாயகனணி மழுவாயுதமே. (எ)

அ - வது. சுந்தரத்தோழன்வகுப்பு.

தந்தனத் தானதன தந்தனத் தானதன
தந்தனத் தானதன—தந்தனத்தானனு.

அந்தரத்தோர்முனிவர்மைந்தரொப்போர்பலரு
மஞ்செழுத்தால்வழிப டுந்தலைத்தேவனே
வஞ்சகப்பேடனையவின்சொல்வித்தாரமுறு
மஞ்சனச்சிரமலை தங்கிடப்பாகனே
வங்கியைத்தாமரைவனந்தனைச்சூரியனை
யந்தியைத்தாழ்வுறவெ லுந்தகைத்தேவனே
வங்கமுற்றூயபெருவஞ்சகச்சாரணர்க
ளங்கறற்காவனசெய் வெண்பொடிப்பூசியோ
வண்டலர்க்கேமனிகர்சங்கெடுத்தூதுமரி
யம்பகப்பூவணித ருந்திருத்தாளனே
வம்புலிக்கூறிதழிதும்பைநச்சாடரவ
மம்புபுற்கூவிளமு றுஞ்சடைக்காடனே

வம்புயத்தார்கள்சிரமிந்திரச்சேனையின
தங்கமுற்கூறுவகொ ளுந்திறற்றோளனே
வன்பர்சொற்பாடலினறுஞ்சுவைக்கார்வமத
டைந்துபொற்பார்வளையி டுங்குழைக்காதனே

கந்தரக்காடெனவெழுங்கடுத்தீமருவு
கண்டமட்டேயவிர்த ருங்கறைக்கோலனே
கங்கையைப்பார்வதியைமுன்றொடற்கானகர
கங்கணத்தாடரவ ணிந்தசித்தேசனே
கன்றுடைக்காலியெனவன்றெழிற்சோழனெதிர்
கண்களிற்றுணையொடு நின்றபொய்ச்சாலனே
கந்துகத்தேறியொருதொண்டனுக்காகவுல
கம்பழிப்போதிடல்பு ரிந்தவுற்சாகனே

கண்டெனப்பேசுமொருபெண்டனைச்சேரும்வணி
கன்கண்முற்சீர்பெறவி ரங்கருட்போதனே
கங்குணற்காவனதினுஞ்சழக்காளர்மிரு
கங்களிற்சேரவொரு வுங்கனற்கோபனே
கண்டிகைச்சீரொடுமிகும்பொடிப்பூசுமவர்
கஞ்சமொப்பாமனதி லொன்றுநட்பாளனே
கங்குலிற்பாடல்பகரும்பசிக்காரனுள
கங்களிப்பாவதுசெ யுங்குணத்தீசனே

விந்தனத்தோடொருதொழும்பனுக்கார்வமுற
வென்றிசைப்பாடல்பயி லுந்தனிச்சூதனே
வென்றினைத்தூயமதியந்தனைத்தீயைவிழி
யின்கண்வைத்தாடியதி கம்பரச்சோதியோ
வென்பினிற்பாவையுருவஞ்செய்சொற்பாவலனி
ளங்கையிற்றுளமுத வுங்கொடைச்சீலனே
வெண்பதிற்றோர்வயதிருந்தசொற்கோவினையி
லங்குபற்சீயமென வுண்டநிட்டூரனே

வெங்கிருப்பாரொவணினைந்திசைத்தாலுமவ
ரின்புறப்போயருள்செ யுந்தொழிற்காரனே
வெஞ்சலற்றியாவினுநிறைந்துமப்பாதபமி [கோளனே
டங்கொடுற்றோர்கொடியொ டுஞ்சொல்பொய்க்

விண்டைமுற்கூறுவனசிந்துகைக்கார்வணாயி
றந்திடச்சாடினன்மு னங்கெழுப்பாதியோ
வெந்திரத்தோடுபுணாயும்பிறப்பானசுழ
லின்றிமெய்ப்பேறுதவும் வண்புகழ்ப்பேரனே

மந்தரத்தாலுததிதந்ததைத்தேவருண
வஞ்சகத்தாலிடுமி னன்புடைக்கேள்வனே
வன்குரற்றனவன்முனைந்தெதிர்த்தேபொரமுன்
வந்திடிற்றுளடியி டங்கொளுற்பாதனே
மண்டலத்தேர்கொடுநடந்தெயிற்காரர்குல
மங்கிடற்கோர்நகைந குஞ்செயற்சோரனே
மந்திரத்திதியெனுமைங்கரத்தானையொரு
வண்பிடிப்பாலுதவி டுங்களிற்றுகனே
வந்தியர்க்காசைமொழிவிண்டியற்பாடல்கவர்
வம்புடைப்பாலனுத வுந்தழற்பாலனே
மங்களச்சீர்குலவுசங்கரப்பேர்முனிவன்
மந்தணத்தேயுரிமை தந்தவுத்தேசனே
மங்கையர்க்காசைகொடுநெஞ்சிளைத்தாலுநல்வ
ரங்குறித்தேதுதிவி ளம்பவைத்தாள்வதோ
வண்டிசைச்சோலைகொள்சிதம்பரத்தேகனக
மன்றிலெக்காலும்வளர் சுந்தரத்தோழனே. (அ)

கூ - வது. திருவருட்சத்திவகுப்பு.

தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத்—தனதனத்தத்தன.

அகிலமித்தனையெனப்பிரமனெப்பவர்களுக்
கறிவதற்கரியபற் பலவமைத்திட்டதே
யரியினுக்கருணெறித்தவசிகட்குவகையிட்
டறமனைத்தையுமுயர்த் திடுகினைப்புற்றதே
யடல்விடைக்கொடியினைப்புகழ்தமிழ்ப்புலவருக்
களவில்சித்திகள்கொடுத் திறுதியிற்றுய்க்குமே
யருமறைத்தொகைமுதற்றிகழுமெய்ச்சுருதிகட்
கரணெனத்தகுதிறற் கொடுதனக்கொத்ததே
சகிகள்பற்பலர்தொழக்கொடைவலித்துணர்மலர்த்
தருநிழற்கிடைசசிப் பிடியெனத்துற்றதே
தவளமிக்குறுசகத்திரவிதழ்ப்பரிமளத்
தனிமலர்த்தவிசினிற் குடியிருப்புய்த்ததே
தமநியப்புதுமலர்க்கமலமத்தியின்மொழிச்
சரதர்சுற்றிடவசித் துலகையிச்சிப்பதே

சகுணமத்தனையுமுற்றரும்வயிற்றெருடமலைத்
தலையினிற்றவமுடித் திடவரத்தக்கதே
திகில்படப்பலவுயிர்த்திரள்வதைத்துடல்களைத்
தினும்வினைக்குரியனைக் கறுவுகொற்றத்ததே
செகதலத்தினர்முழுக்கவுமழத்திரியுமத்
திரிபுரத்தினர்தமைச் சுடுநகைப்பொற்பதே
